# JOURNAL OF TAMIL PERAIVU

*Volume 3*


**Chief Editors:**

Professor Dr. M. Rajantheran
Kizhambur S.Sankara Subramanian

**Editors:**

Dr. Mohanadass Ramasamy (Malaysia)
Dr. K.Srinivasan (Trichy)
Dr. Jeevendiren Chemen (Mauritius)
Mr. Raja Ganesan Viknarasah (Australia)
Dr. Seethalakshmi (Singapore)
Prof. V.Maheshwaran (Sri Lanka)
Mr.Vasu Aranaganathan (Pennsylvania)



July 2016

Department of Indian Studies,
Faculty of Arts and Social Sciences,
University of Malaya,
50603 Kuala Lumpur, Malaysia.

ISSN: 2289-8379

**தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்**
**தொகுதி 3**

**முதன்மை ஆசிரியர்கள்** : பேராசிரியர் முனைவர் மு. இராசேந்திரன்
கீழாம்பூர் சி.சங்கரசுப்பிரமணியன்

**வெளியீடு** : இந்திய ஆய்வியல் துறை
கலைப் புலம் மலாய்ப் பல்கலைக்கழகம்
50603 கோலாலும்பூர், மலேசியா.

© இந்திய ஆய்வியல் துறை மலாயாப் பல்கலைக்கழகம்.
இந்த ஆய்விதழ் மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையின் பதிப்புரிமைக்குட்பட்டது. இந்த ஆய்விதழையோ அல்லது அதன் எந்த ஒரு பகுதியையோ இந்திய ஆய்வியல் துறையின் அனுமதி இல்லாமல் எந்த ஊடகத்திலும் எவ்வகையிலும் மறுபதிப்பு செய்தல் அல்லது படியெடுத்தல் கூடாது.

**அச்சுப்பதிப்பு** : மாஸ் டைப்போகிராபிக், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**கட்டுரைகள் சேகரிப்பு** : தேஜஸ் ஃபவுண்டேஷன், சென்னை - 61.
**விலை** : USD 5

**JOURNAL OF TAMIL PERAIVU**
*Volume 3*

Chief Editors : Professor Dr. M. Rajantheran
Kizhambur S.Sankarasubramanian

Publisher : Indian Studies Department,
Faculty of Arts and Social Science's,
University of Malaya,
50603, Kuala Lumpur, Malaysia.

© Department of Indian Studies, University of Malaya.
All rights reserved. No part of this Journal may be reproduced in any form or by any means without publisher's permission.

Printed at : Mass Typographic, Chennai,
Tamilnadu, India
Collection of Articles : Thejas Foundation, Chennai -61.
Price : USD 5

பொருளடக்கம் பக்கம்


1. பாரதிதாசனாரின் கவிதைகளில் தமிழ்க்கட்டளைகளும்.....................................7
அவற்றின் வன்மைத்தன்மைகளும்
முனைவர் மோகனதாஸ் ராமசாமி

2. பாவேந்தர் பாரதிதாசனின் பெருவாழ்வு........................................................... 19
பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்

3. பாரதிதாசனின் தலைமைத்துவப் பண்புகள்.......................................................35
முனைவர் க.சில்லாழி

4. திரைவானில் பாவேந்தர்.......................................................................................... 49
க.துரியானந்தம்

5. மொரீசியசில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப்
பாவேந்தர் பாரதிதாசனின் தொடர்பும் தாக்கமும் - ஒரு பார்வை......................54
முனைவர் கே.சொர்ணம்

6. புரட்சியாளராய் வாழ்ந்த பாவேந்தர்.................................................................... 64
ச.கருத்தான்

7. திரையிசைப் பாடல்களில் பாவேந்தர்...................................................................70
முனைவர் இரா.இளையராஜா

8. பாரதிதாசன் கவிதைகளில் பொருளியல் வாதம்............................................... 76
கிங்ஸ்டன் பால் தம்புராஜ் - கார்த்திகேஸ் பொன்னையா

9. பாரதிதாசனின் பொதுவுடைமைச் சிந்தனைகள்.................................................83
இராஜேந்திரம் பெருமாள்

10. பாரதிதாசனின் பெண்கல்விச் சிந்தனையும் இன்றைய பெண்களின்
கல்விச் சிந்தனையும் ஓர் ஆய்வு..............................................................................89
பார்வதி வெள்ளைச்சாமி

11. பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்த் தேசியம்.....................................................100
டாக்டர் வே.சபாபதி

# Preface

The Department of Indian Studies, University of Malaya, releases the third Volume of Tamil Peraivu which hovers around the works of Pavender Bharathidasan by researchers.

Poets are not made but born. The Poetical instinct ought to be the fundamental element of a poet according to Bharathidasan. When Bharathi said, "Create Poetry", Pavender started saying, "Shakthi is the ever permeating energy and the seven seas are her hue" and praised by Mahakavi Bharathi.

Pavender toed the line of the great Poet Kambar insisting Discipline, Money and Ecstasy in his Poetry. His poems manifest deep insight of knowledge to the readers.

The present volume consists of Eleven Articles from multifaceted personalities with suitable connections.

The literary world of Pavender imbibed into it Poetry, Prose, Novel, Short Stories, Cine Songs, etc. The relentless works of Pavender have been analysed by various scholars in their Articles. This volume is the first of its kind in culling out the literary merits of Pavender Bharathidasan.

Dr. Mohanadass Ramasamy is of the view that the imperative style of Pavender in Tamil language makes the readers accept his ideas. In fact, he smuggles what he want to say into the minds of the readers without the pain of receiving it.

Dr. K Silllalee deals with the leadership qualities of Pavender saying that he practised what he preached. Dr. K Sornam discusses how Pavender influences Tamil in Mauritius. Dr. V. Sababathu hails Pavender for his Tamil Nationalism. Dr. Kingston Paul Thamburaj lists down Bharathidasan's reflections on Social Ethics, Law, Morality. Rajendram Perumal analyses Pavender's concern for Socialism. Dr. Illayaraja appreciates the great poet's role in the field of Cinema. Prof Dr. M. Rajantheran lauds the lofty life of Pavender. All these researchers view Bharathidasan as a Poet, Humane, Reformer and Philosopher.

No doubt, this third volume is a treasure house on Bharathidasan. We record our earnest thanks for all those who rendered their help in the sucessfull release of this journal.

Chief Editors

**Prof Dr. M. Rajantheran**

**Kizhambur S.Sankarasubramanian**

# முகவுரை

**த**மிழ்ப் பேராய்வு ஆய்விதழின் மூன்றாம் தொகுதியாக இவ்விதழை இந்திய ஆய்வியல் துறை வெளியீடு செய்கிறது. பாரதிதாசன் படைப்பிக்கிலயங்கள் பற்றி ஆய்வாளர்களின் கட்டுரைகளைத் தொகுத்து இவ் ஆய்விதழைத் தயார் செய்துள்ளோம்.

உலகில் பொதுவாகக் கவிஞர்கள் தோற்றுவிக்கப் படுவதில்லை. கவிஞர்கள் தோன்றுகிறார்கள். ''கவிதை பாடு'' என்ற உடனே பாடுபவன்தான் கவிஞன் - என்பது பாவேந்தரின் கூற்று. கனகசுப்புரத்தினம் ''கவிதை பாடு'' என்று பாரதி சொன்னவுடனே ''எங்கெங்கும் காணினும் சக்தியடா! தம்பி ஏழு கடல் அவள் வண்ணமடா!'' என்று தொடங்கும் பாடலைப் பாடிக் காட்டி பாரதியின் பாராட்டுதலைப் பெற்றவர்.

கம்பனின் கவிதைகள் அணி அழகு உடையதாக சிறந்த அறம் - பொருள் - இன்பம் என்னும் உறுதிப் பொருள்களின் திறத்தை உணர்த்துவதாக அமைந்தவை. அதன் வழியில் பாவேந்தரின் கவிதைகளும் கற்போர்க்கு நுண்ணறிவை வளர்ப்பதாகவும் அறிவைக் கொண்டு ஆராய்ச்சி செய்யச் செய்ய ஆழ்ந்த கருத்துக்களைப் புலப்படுத்துவதாகவும் அமைந்திருப்பவை!

இவ் ஆய்விதழில் மொத்தம் 11 கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. பன்மொழிப் பேராசிரியர்களிடம் இவ் ஆய்வுக் கட்டுரைகளை அனுப்பி மிகச் சரியான திருத்தங்கள் செய்து இவ் ஆய்விதழில் கட்டுரைகளை வெளியிட்டுள்ளோம்.

கவிதை, உரைநடை, புதினம், திரைப்பாடல்கள் என பாரதிதாசனின் சாம்ராஜ்யம் விரிகிறது. துணிச்சலுடன் கருத்துக்களைத் தெரிவித்த பாரதிதாசனின் படைப்பிலக்கியங்களை அறிஞர் பெருமக்கள் தக்கபடி ஆய்வு செய்து கட்டுரைகளாக எழுதியுள்ளார்கள். பாரதிதாசனின் படைப்பிலக்கியங்கள் பற்றி இவ்வளவு விரிவாக ஆய்வு மேற்கொண்டு தமிழகம் தாண்டி ஆய்விதழ் ஒன்று வெளிவருவது இதுதான் முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசனாரின் கவிதைகளில் தமிழ்க் கட்டளைகளும் அவற்றின் வன்தன்மைகளையும் பற்றி முனைவர் மோகனதாஸ் ராமசாமி சிறப்பானதொரு கட்டுரையைத் தந்துள்ளார். அறிமுக விளக்கம் பாவேந்தருக்குத் தேவையில்லை என்று சொல்லும் கட்டுரையாளர் தமிழ் கூறும் நல்உலகம் சட்டத்தின் துணை கொண்டு தமிழ்க் கட்டளைகளை இனம் காணும் என்கிறார்.

புரட்சியாளராய் வாழ்ந்த பாரதிதாசனாரைப் பற்றி ச.கருத்தான் எழுதிய கட்டுரையும், திரைப்படங்களுடன் சம்பந்தமுடைய பாரதிதாசன் பற்றி க.துரியானந்தம் எழுதிய கட்டுரையும், பெண்களின் கல்விச் சிந்தனையை பாரதிதாசனின் சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்வதி வெள்ளைச்சாமி எழுதிய கட்டுரையும் விரிவாகப் பல தகவல்களைப் பேசுகின்றன.

பாரதிதாசனின் தலைமைத்துவப் பண்புகள் பற்றி முனைவர் க.சில்லாழியின் சிந்தனை பாராட்டத்தக்கது. தமது சிந்தனைகளை எழுத்தில் மட்டுமல்லாது வாழ்க்கையிலும் வாழ்ந்து காட்டியவர் பாவேந்தர் என்கிறார் முனைவர் சில்லாழி. மொரீசியசில் பாவேந்தரின் தொடர்பும் தாக்கமும் ஒரு பார்வை என்கிற கட்டுரையை முனைவர் கே.சொர்ணம் சுவைபடப் படைத்துள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்த் தேசியம் என்னும் முனைவர் வே.சபாபதியின் கட்டுரை தமிழை வெறும் தொடர்பு மொழியாகப் பார்க்காமல் தமிழை வாழ்க்கையாகப் பரந்து விரிந்த நிலையில் பார்த்தவர் பாவேந்தர் என்று விவரிக்கிறது. கிங்ஸ்டன் பால் தம்புராஜ் கார்த்திகேஸ் பொன்னையா சமூக ஒழுக்கம், சட்டம், நீதி, வழமை போன்ற கருத்துக்களைத் தன் கட்டுரையில் நன்கு வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்குப் பொதுவுடைமைச் சிந்தனைகளை பாரதிதாசன் எப்படி ஊட்டினார் என்பதை இரோஜந்திரன் பெருமாளின் கட்டுரை படம்பிடித்துக் காட்டுகிறது. திரை இசைப் பாடல்களில் – பாவேந்தர் என்னும் முனைவர் இரா.இளையராஜாவின் கட்டுரை பல திரை இசைப்பாடல்களை விளக்குகிறது.

பாவேந்தர் பாரதிதாசனின் பெருவாழ்வு என்னும் தலைப்பில் பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன் கட்டுரை ஒன்றை வழங்கியுள்ளார். பாரதிதாசனின் தமிழ் இலக்கியப் பணிகள், பாரதியும் பாரதிதாசனும், பாரதிதாசனின் தேசியப்பற்று உள்பட பாரதிதாசனின் இறுதிக்காலம் வரை அவரின் பெருவாழ்வு அலசப்படுகிறது. தமிழை அமுது என்று மட்டும் எண்ணாமல் உயிராகவும் கருதிய பாரதிதாசனைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இக்கட்டுரை வழிசெய்கிறது.

பாரதிதாசனின் பெருமைகளைப் பேசும் இவ் ஆய்விதழ் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பெட்டகமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. இவ் ஆய்விதழ் வெளிவரத் துணை நின்ற அத்தனை நல்இதயங்களுக்கும் நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**

**கீழாம்பூர் சி.சங்கரசுப்பிரமணியன்**

முதன்மை ஆசிரியர்கள்

# பாரதிதாசனாரின் கவிதைகளில் தமிழ்க்கட்டளைகளும் அவற்றின் வன்மைத்தன்மைகளும்

முனைவர் மோகனதாஸ் ராமசாமி / Dr.Mohana Dass Ramasamy[1]

***Abstract***

*The centenary poet Bharathidasan is well-known among the Tamil beloveds' as a poet who has heightened the status of Tamil among its users. Through his substantive words and sternum orders in various forms, he has placed a number of callings among the targeted youngsters to fight for own rights as well as for their maternal language, Tamil. Along this, he also has sent sternum plights to respect the rights of the feminine. As far as sternness is concerned, these plights and orders have been placed in more than one way. Some of them were direct, while others were indirect in nature. The nature of this reality is yet to be undisclosed. Most of the available studies related to Bharathidasan somehow in more than one way were very useful to understand his noble aims, themes and help to interpret them easily, but it is yet known anyone of them as shown initiative in analyzing the pattern of the plights according to their height of the sternness. This Paper has formulated a proto-type form of conceptual framework to analyze and understand the poet's stress in issuing sternum plights.*

*Key words : Stylistics, Bharathidasan Poems, Degree of Stress in Poems*

## முன்னுரை

தமிழ்கூறு நல்லுலகில் தமிழ்ப்படைப்புகளின் வழியே புதிய வரலாற்றுப் பாதைகளை நமக்குச் செதுக்கிக் கொடுத்த தமிழ் வள்ளல்கள் பலர்; அவர்களுள் அறிமுக விளக்கம் இல்லாதவர் பாரதிதாசன். தாசன் எனத் தன்னை முன்னம் தமிழ் வடித்த அரும்கவிக்குப் படையலாக்கி, பாரதியின் புதுமைகண்ட புரட்சிச் சீடர்களின் வரிசையின் தலைமாணாக்கர் இன்னார். இவரது தமிழ்ப் படைப்புகள் தேனூறும் சொற்கற்கண்டுகள். அதனைக் காண்பாரும் வியப்பார்; கற்றாரும் வியப்பார்.

தமிழ்மொழியினைக் கொண்டு ஏற்றமிகு கவிதைகளை ஏற்றமுறப் பாடிக்காட்டியவர் இவர்தான். இவரது பாடல்கள் என்றாலே தமிழுணர்வு கட்டிலாமல் கரைபுரண்டு ஓடும், சமுதாயச் சிந்தனை அணியில்லாமலேயே அழகுறும், சுயமதிப்பு வலிமைபெறும், பெண்ணுரிமைச் சிந்தனை வன்மையடையும். இத்துணையும் தமிழாலே பாடச் செய்து சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட மாபெரும் கவியருவி, புரட்சிக்கவி, பாரதிதாசன். இதுவே இன்னாரைப் பிற கவிஞர்களின் படைப்புகளில் இருந்து மாறுபடுத்திக்காட்டுகின்றது என்பதனையும் அறியலாம்.

---

[1]The author is a Senior Lecturer in The Department of Indian Studies, University of Malaya, Malaysia. Mohana_dass@um.edu.my

தமிழ் மொழிக்கு அரும் தமிழ்ச்சொற்களை மகுடங்களாக மாற்றிக்கொடுத்த அருந்தமிழ்க் கவிஞனும் இவர்தான் என்றால் வியப்பாரில்லை; மறுப்பாரும் இருக்க இயலார். தாய்த்தமிழ் தாயெழில் தமிழ்; இளந்தமிழ் இனிமைத் தமிழ்; செந்தமிழ் அமுதுத்தமிழ்; இன்பத்தமிழ் அது எங்கள் வாழ்க்கைக்கு நேர் எனத் தமிழை உருவகப்படுத்தவில்லை; மாறாக, தமிழருக்குக்கு உரிமை ஊட்டிய தமிழ்க்காவலர்; தமிழ்ப்பாக்களுக்கு வேந்தர்; நற்றமிழ்த் துணைவன்; இன்தமிழ் சொல்வேந்தர் எனப் புகழ்மாலைக்கு உரிய உயர்ந்தோன்; இக்கட்டுரைச் சாரங்களின் நாயகன்; பாரதிதாசன்.

தமிழ் மொழிக்குப் புதிய பரிணாமத்தை வழங்கியதோடு, அதனுள் இழையோடும் தமிழுணர்வுக்கும் தகுந்ததோர் வன்மையினைக் காட்டி, அதனைத் தமிழ்ச்சொல்லோடு குழைத்து, இளைய உள்ளங்களுக்குச் செய்திகளைச் சொல்லும்போது, எத்தகைய வன்மையும் அதனுள் கண்டிப்பும் வேண்டுமென உறுதிப்படக் கூறிய மாண்பு தமிழுலகம் அறியத்தக்கது. அச்சிறிய கடமையினைச் செய்திடலே இந்தக் கட்டுரையின் அடிப்படை நோக்கம்.

## ஆய்வுப்பின்புலம்

பாரதிக்குப் பின், பாரதிதாசனின் தமிழ்ப்படைப்பாளர்க்குப் பின் தமிழ் மண்ணுக்கும் தமிழ் மானத்திற்கும் உரமிட்ட உயர்கவிஞர் குழாமில் மூத்த புலவர்கள் பலர்; அவருள் இன்னார் தமிழ்த் தாய்க்குப் பெருமையைக் காட்டிய பாக்கள் பல இருக்க, தமிழ் இளவல்களுக்குக் கட்டளை வழங்கிய பாக்கள் பலவுண்டு. இனிமைத் தமிழின் தரமும் மானமும் எந்நாளும் காக்கப்பட வேண்டுமெனும் கருத்தில் பாடப்பட்ட பாக்களும் இவற்றுள் அடங்கும்; அடங்கி ஒடுங்கியிருந்த தமிழ் இளவல்களின் இரத்த நாளங்களில் சூட்டினை மீண்டும் ஏற்றி, கொலைவாளினை எடடா எனத் தூண்டல் செய்த சக்திமிகு வரிகளையும் காண்கின்றோம்; இதனைச் செய்மின், அதனை எடுமின் என அன்புசால் கலந்த பாசமிகு வரிகளின் வரிகளாகச் சொன்ன செய்திகளும் காணக்கிடக்கின்றன. இவ்விருவகை வரிகளும் இருவகைச் செய்வினைகளை நம்முன் நிழலாட வைக்கின்றன, இவற்றையே இக்கட்டுரை தமிழ்க் கட்டளைகள் எனச் சுரம்பிரிக்கின்றது; அவற்றை இனம்பிரிக்கின்றது; அவற்றின் தரத்தினைப் புடம்போடுகின்றது.

பாரதிதாசனாரின் பாடல்களை ஆய்வுசெய்த முன்னோடிகள் பலர்; அவர்களின் பார்வை முழுமையாக பாடல்வரிகளின் மூலம் அன்னார் இந்நாள் தமிழுலகப் பிரஜைகளுக்குச் சொன்ன செய்திகளையும் அவற்றின் தமிழ்ச்சிறப்புகளையுமே ஆராயும் பாங்கினில் காண்கின்றோம். பாரதிதாசன் பாடல் வரிகள் என்றாலே தமிழ்மணம், தமிழரின் வீரம், பெண்ணியம் எனப் பாகுபடுத்திக் காட்டும் கட்டுரைகளையும், ஆய்வுரைகளையுமே நாம் காண நேர்கின்றது; அதற்கு மாறாக, இக்கட்டுரை பாரதிதாசனாரின் கட்டுரைகளில் அமிழ்ந்து கிடக்கும் தமிழ்க்கட்டளைகள் யாவை, அவற்றின் வன்மைதரம் யாவை என்பதனை அடையாளம் காட்ட முற்பட்டுள்ளது.

## ஆய்வுமுறை

இச்செயலினை நன்றே செய்திட, பாரதிதாசனாரின் கட்டுரைகளின் காணப்படும் வரிகளின் ஊடே புதைந்து கிடக்கும் கவிவரிகளின் கவனம் செலுத்தப்பட்டது. அவ்வரிகளின் வழி புரட்சிக்கவி சொல்லத் துணிந்த செய்தி யாது, அவற்றின் வன்மை யாது என்பதனையும் அளவிட வாய்ப்பு ஏற்பட்டது. புரட்சிக்கவியின் தமிழ்க் கட்டளைகள் இருவகைகளில் இருந்து பெறப்பட்டன; ஒன்று புரட்சிக்கவியின் தனிக்கவிதைகளில் இருந்து எடுக்கப்பட்ட தனித்தமிழ்க்கட்டளைகள்; மற்றொன்று, அவரது காவியப்படைப்புகளில் இருந்து பெறப்பட்ட

பொதுத் தமிழ்க்கட்டளைகள். இவை இரண்டின் கலவைகளே இந்தக் கட்டுரைக்கு அடித்தளம் வழங்கின. எனினும், வன்மைத் தன்மை இருவகைச் சான்றுகளுக்கும் பொதுவாகவே வழங்கப்பட்டுள்ளன.

பாவேந்தரின் கவிதைகளில் தமிழுணர்வு, பெண்ணுரிமை, இளைஞர் எழுச்சி என செய்திகளை வழங்கும் மூன்று கவிதைகளும், ஒரு கவிதைத் தொகுப்பும் இவ் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

## தமிழ்க்கட்டளைகள் என்றால் என்ன?

தமிழ் மொழியும் தமிழ் இலக்கியமும் இணையும் ஒரு புள்ளியே இந்தக் கட்டுரையின் ஆய்வுநிலைப் புலம். மொழியமைப்பு இலக்கிய வாய்மொழியின் வாயிலாக எவ்வாறு சொல்லப்படுகின்றது என்பதனை எடுத்துக்கூறிடலே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம். எனவே, இலக்கியம் கூறிடும் செய்திகளை இலக்கியப் பார்வை ஒன்றில் மட்டுமே நின்று விளக்கிடுந்தொழில் இவ்விடத்தில் நடைபெறவில்லை. இலக்கியத்தின் வன்மை, தமிழ்மொழியின் சான்றுகளை அடிப்படையாக் கொண்டு எங்ஙனம் அளவிட இயலும் என்பதனை உணர்வதும் உணரவைப்பதுமே எமது நோக்கம். இதனை நன்முறையில் செய்திட சில அடிப்படைச் செய்திகளை அறிந்து கொள்வது முக்கியம்; அதன் வாயிலாகவே, எவை எதனால் தமிழ்க்கட்டளைகள் என அறியப்படுகின்றன என்பதனை அறிந்துணர இயலும்.

## தமிழ்க் கட்டளை என்றால் என்ன?

தமிழ்க்கட்டளைகள் என இக்கட்டுரையின் வழி அடையாளம் காட்டப்பட்ட பாரதிதாசனாரின் கவிவரிகள் யாவும் தமிழ் இலக்கணப் பார்வையின் அடிப்படையில் இருநிலைப்புள்ளிகளில் இருந்து எடுக்கப்பட்டவை. ஒன்று கட்டளைச் சொற்களை உள்ளடக்கிய கட்டளை வாக்கியங்கள்; மற்றொன்று கட்டளை எனும் சொல்லினைக் கையாளாமலேயே கட்டளையினை விதந்து சொல்லும் பாங்கு; வியங்கோள் வினைமுற்றுகள் என தமிழ் இலக்கணம் இதனை அடையாளம் காட்டும்.

## கட்டளை அல்லது ஏவல்

கட்டளை அல்லது ஏவல் எனத் தமிழ் இலக்கணம் முன்வைக்கும் தகவல்கள் நமக்குப் புதிதல்ல. ஏவல் என்பது ஏவுதல் அல்லது ஆணையிடுதல் என்று பொருள்படும். முன்னிலையில் இருப்பவரை ஒரு செயலைச் செய்ய ஏவுதல் அல்லது மற்றொருவரைத் தன் கட்டளையின்படி ஒரு செயலினைச் செய்யத்தூண்டுவதால் அதனை ஏவல் என்கிறோம். ஏவலைக் குறிக்கும் வினைச்சொல்லினை ஏவல் வினை என்போம், இச்சொற்கள் இடம்பெறும் வினைத்தொடர்களையே தமிழ்க்கட்டளைகள் எனும் இனத்தில் பொருத்திக் காண்கின்றோம். கீழ்க்காணும் அடிப்படைச் சான்றுகள் இதனை உணர்ந்திட வழிசெய்யும்.

எ.டு.

*நீ நட!* - ஏவல் ஒருமை வினைமுற்று

*நீ நடவாதே!* - எதிர்மறை ஏவல் ஒருமை வினைமுற்று

*நீங்கள் வாருங்கள்!* - ஏவல் பன்மை வினைமுற்று

*நீங்கள் வாராதீர்கள்!* - எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று (மோகன தாஸ், **2005**)

## வியங்கோள் வினைமுற்று

இவ்வகை வினைமுற்றுகள் எப்பொழும் க, இய, இயர், என்னும் எழுத்துகளை ஈற்றில் பெற்றுவரும். இவை பின்வரும் நான்கு நிலைகளில்; வாழ்த்துதல், விதித்தல், வேண்டுதல், வைதல் எனப் பயன்படுத்தப்படுகின்றன. பின்வரும் எடுத்துக்காட்டுகள் சான்று விளக்கம் பயப்பனவாகும்;

எ.டு.

வாழ்த்துதல் - வாழ்க! அரசர்., வாழிய! அரசு. வாழிய வாழியர்!

விதித்தல் - செல்க! நீ.

வேண்டுதல் - தருக! நீர்.

வைதல் - ஒழிக! கயவன். (மோகன தாஸ், 2005)

வியங்கோள் என்பவை எங்ஙனம் கட்டளையாகுமென வினவத் தோன்றும்? கட்டளை என்பது நேரடியாக ஒரு செயலினைச் செய்யத் தூண்டும் முதன்மைச் சொற்களாகும்; வியங்கோள்கள் அவ்வாறு நேரடியான கட்டளையினைத் தராச் சொற்களாக இருந்தாலும், உணர்வுநிலைகளின் கட்டுகளுக்கு அப்பால் செல்லாமல், அதன் உச்சத்தில் நின்று தனது மனதில் தோன்றும் எண்ண வெளிபாடுகளை இதமாக, நயமாக பிறர் மனதில் ஏற்றிக் கூறிடும் இயல்பாகவே பார்க்கின்றோம். இதனைப் பாவேந்தரின் பாடல்களில் அதிகமாகக் காண்கின்றோம். அவ்விடங்களில் ஒரு கருத்தினையோ செய்தியினையோ விதந்து கூறிட இவற்றைப் பயன்படுத்தியதாகப் பார்க்க இயலவில்லை; மறைநிலையில், ஆழமாகவும் உறுதிப்படவும் சொன்ன கட்டளைகளாகவே இவற்றைக் காணமுடிகின்றது. பாவேந்தரின் கவிவரிகளை ஆழ்ந்துணர்ந்து கற்ற தமிழ் உள்ளங்கள் இதனை நன்கறியும்.

## வன்மைத்தன்மைகளும் அளவுக்கோலும்

வன்மை என்பது கடினம் எனப் பொதுப்படக் கூறிடலாம். இருப்பினும், கையாளப்பட்ட ஒரு சொல்லில் இருந்து மற்றொன்று எவ்வாறு மாறுபடுகின்றது என்பதனை உணர்ந்துகொள்ளது எங்ஙனம் என்பதனைக் காண்போம். கீழ்த்தொடரும் பாவேந்தரின் வரிகளின் அடிப்படையிலேயே மேற்காணும் வினாவிற்குப் பதில் காண முற்படுவோம்.

**ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்**
**உதையப்ப ராகிவிட்டால்,**
**ஓர்நொடிக்குள் ஓடப்பர் உயரப்பர் எல்லாம்மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!** ***(53. உலகப்பன் பாட்டு)***

இப்பாடலில் இடம்பெற்றுள்ள உணரப்பாநீ! எனும் தொடரே இங்கு நோக்கத்தக்கது. உணரப்பாநீ எனும் போது வெளிப்படும் கட்டளை வினையின் தன்மை யாது? இவ்வினாவிற்குப் பதில் காணுமுன் எடுத்தாண்ட தொடரின் தன்மையினைச் சற்றுக் காண்போம்.

மேற்காணும் அமைப்புகளின் அடிப்படையில் வன்மையினைக் காண முற்படுவோமானால், வழங்கப்பட்ட ஒவ்வொரு வரியும் அதன் தன்மையில் மாறுபடுவதை உணரமுடியும். இதனை உணர்வின் அடிப்படையில் 1 முதல் 5 வரை வரிசைப்படுத்தினால் பின்வரும் படிநிலைகளில் அமைத்துக் காண, பின்வரும் படிநிலைகள் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| உணரப்பாநீ! | - வன்மையும் தன்மையும் கலந்த கட்டளை | சற்றுக் கடினம் | |
| நீ உணர்! | - நேரடியான கட்டளை | வன்மை அதிதி | 5 |

| | | |
|---|---|---|
| *உணர்!* | - நேரடியான கட்டளை வன்மை அதிதி | *4* |
| *உணரப்பா!* | - கட்டளையும் தன்மையும் | *3* |
| *நீ உணர் அப்பா!* | - நேரடியான செய்தி கட்டளை இல்லை | *2* |
| *அப்பா உணர் நீ* | - கட்டளை வன்மை இல்லை | *1* |

ஆனால், அதனைச் சான்றின் அடிப்படையில் விளக்கிடல் அத்துணை இலகுவான செயலல்ல. கீழ்க்காணும் அமைப்பு ஒரு வழிகாட்டி முயற்சி.

## தமிழ்க்கட்டளைகளும் வன்மைத்தன்மைக் கோட்பாடும்

தமிழ்க்கட்டளைகளின் வன்மைக் கோட்பாடு அவற்றின் பிறப்பிடம் மற்றும் பிறப்பு முயற்சியின் வன்மைத் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டுள்ளன. இதன் அடிப்படையினை அறிந்துகொள்ளத் தமிழ் எழுத்துகளின் வரன்முறை இயல்பு, குறிப்பாக, ஈற்றெழுத்து வரன்முறையினையும் அவற்றின் பிறப்பிடத்தையும் இணைக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

சொல்லிறுதி உயிர் எழுத்துகள்: அ, ஆ, இ, ஈ, உ, (ஊ), (எ), (ஏ), ஐ, (ஒ), ஓ, (ஔ)

(x) உள்ள எழுத்துகள் சொல்லில் இடம்பெறுவதைக் காண இயலவில்லை

(ஊ) ஓரெழுத்து ஒரு மொழியில் மட்டுமே காண முடிகின்றது

**சொல்லிறுதி மெய் எழுத்துகள்:**

அ. வல்லினம் (க்,ச்,ட்,த்,ப்,ற்) + (அ, ஆ, இ, ஈ, உ, (ஊ), (எ), (ஏ), ஐ, (ஒ), ஓ, (ஔ)

இ. மெல்லினம் ண்,ந்,ம்,ன் + (அ, ஆ, இ, ஈ, உ, (ஊ), (எ), (ஏ), ஐ, (ஒ), ஓ, (ஔ)

ஈ. இடையினம் ய்,ர்,ல்,வ்,ழ்,ள் + (அ, ஆ, இ, ஈ, உ, (ஊ), (எ), (ஏ), ஐ, (ஒ), ஓ, (ஔ)

இதழொலி பல்இதழொலி பல்லொலி அண்பல்லொலி இடையண்ண ஒலி கடையண்ண ஒலி

ப்,ம் வ் த், ந் ல்,ன்,ற், ய் ச்,ஞ் ள், ண், ட் ர், ழ் க், ங்

*1 2 3 4 5 6*

முன்னொலிகள் இடையொலிகள் பின்னொலிகள்

இதழொலி பல்இதழொலி பல்லொலி அண்பல்லொலி இடையண்ண ஒலி கடையண்ண ஒலி

இ, ஈ ஐ ஔ உ, ஊ

எ, ஏ ஒ, ஓ

அ,ஆ

*1 2 3 4 5 6*

மேற்காணும் அட்டவணையின் அடிப்படையில் வன்மைத் தன்மையினை அலகிடுவோமானால், சற்று கடின முயற்சியோடு உருவாக்கம் காணப்படும் எழுத்துகளின் வன்மைத் தன்மை அதிகம் என அறியலாம். மேற்காணும் அட்டவணை தனிமெய் தனி உயிர் எழுத்துகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளன; எனவே, உயிர்மெய்யாக வருமானால், அவற்றையும் பிரித்து, தனிமெய் தனி உயிர் என அடையாளம் காணல் வேண்டும். அவ்வரிசையில் கீழ்க்காணும் அடிப்படை நமக்குக் கிடைக்கும்.

## தமிழ் எழுத்துகளின் வன்மைத்தன்மை படிநிலைக் கோட்பாட்டு அட்டவணை

| வன்மைத் தன்மை படிநிலை | | | உயிர் எழுத்துக்கூறுகள் | மெய் பயிர் எழுத்துக்கூறுகள் |
|---|---|---|---|---|
| மேல் அதிநிலை | - | 6 | உ, ஊ, ஒ, ஓ | க்,ங் |
| கீழ் அதிநிலை | - | 5 | அ, ஆ, ஐ | ச்,ஞ் ள், ண், ட் ர், ழ் |
| மேல் மிதநிலை | - | 4 | ஐ | ல்,ன்,ற்,ய் |
| கீழ்மிதநிலை | - | 3 | எ, ஏ | த், ந் |
| மேல் இதம்நிலை | - | 2 | இ | வ் |
| கீழ்இதம்நிலை | - | 1 | ஈ | ப், ம் |

## தமிழ்க்கட்டளைகள் வன்மம் கோட்பாடும் பாரதிதாசன் பாடல்களும்

தமிழ் எழுத்துகளின் வன்மைத்தன்மை கோட்பாட்டினை எவ்வாறு பாரதிதாசன் பாடல்களோடு பொருந்தும் எனக் காண்பது நன்மை பயக்கும். இதற்கு முன்னம் கண்ட பாடல் வரிகளையே மீண்டும் காண்போம்.

| சான்று வரி: உணரப்பாநீ! | ஈற்று மெய்உயிர் | உணர்வுநிலை வன்மைப்படிநிலை | கோட்பாட்டுநிலை வன்மைப்படிநிலை |
|---|---|---|---|
| நீ உணர்! | ர் | 5 | 5 |
| உணர்! | ர் | 4 | 5 |
| உணரப்பா! | ஆ | 3 | 5 |
| நீ உணர் அப்பா! | ஆ | 2 | 5 |
| அப்பா உணர் நீ! | ஆ | 1 | 2 |

மேற்படி அட்டவணை பாவேந்தரின் பாடல்களில் நாம் அடையாளம் காணக்கூடிய வன்மைத் தன்மைகளை நன்முறையில் அடையாளம் காண ஏதுசெய்யும். உணர்வுநிலையில் காணப்படும் தரவரிசைக்கும், மொழித்தன்மைக் கோட்பாட்டு அடிப்படையில் உருவாக்கம் கண்ட அட்டவணைக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை நன்கு காணலாம்.

பாவேந்தரில் சொல்லாடலும் சொற்தேர்வும் காரணத்தோடே நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதற்கு இவை சான்று பகர்கின்றன. இந்த அட்டவணையின் துணையோடு, புரட்சிக்கவியின் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்க்காணும் கவிதைத் தலைப்புகளில் இடம்பெற்றுள்ள தமிழ்க்கட்டளைகளின் வன்மைத் தன்மைகளை இனம்பிரித்து, குழுமம் செய்யப்பட்டுள்ளது.

பாரதிதாசன் பாடல்களில் காணப்படும் தமிழ்க்கட்டளைகளின் வன்மைப்படிநிலைகள்

6. மேல் அதிநிலை (6) தமிழ்க்கட்டளைகள்
5. கீழ் அதிநிலை (5) தமிழ்க்கட்டளைகள்
4. மேல் மிதநிலை (4) தமிழ்க்கட்டளைகள்
3. கீழ்மிதநிலை (3) தமிழ்க்கட்டளைகள்
2. மேல் இதம்நிலை (2) தமிழ்க்கட்டளைகள்
1. கீழ்இதம்நிலை (1) தமிழ்க்கட்டளைகள்

இவற்றின் முழு அமைப்பினைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| படிநிலை | கவிதைத் தொகுப்பு | |
|---|---|---|
| 6 | பாரதிதாசன் கவிதைத் தொகுதி 1 1 | (2/81%) |
| | நினைப்பை யகற்றிவிடு!<br>நத்தாமல் நின்றுவிடு!<br>போபோ மறைந்துவிடு!<br>மட்டும் உரைத்து விடு!<br>செயப்போவ தென்ன மொழிந்துவிடு!<br>நீ சொன்னதுபோல் செய்துவிடு<br>மாடுவுளை மேய்க்கவுடு!<br>மாந்தோப்பில் ஆடவுடு!<br>காடுவுளே சுத்தவிடு!<br>லட்சி யத்தைப் பற்றிவிடு!<br>வரும்வரைக்கும் பத்திரமாய் இரு!<br>பரிசு தன்னைக் கொடுத்துவிடு!<br>கொடுத்துவிடு!<br>ஒருகையில் உடைவாளும் இடது கையில்<br>ஓடிப்போ!<br>அவர்எதிர் சென்றால், நீபோ!<br>மகிழ்வோடு தார்சூடு - நலம்தேடு!<br>என் செந்தமிழே கண்ணுறங்கு!<br>கண்கள் உறங்கு!<br>நாணி உறங்கு;<br>நகைத்துநீ கண்ணுறங்கு!<br>கடவுளென் பார்! | இரு காதையும் மூடு!<br>முன்னேறு!<br>ஏறுநீ! ஏறுநீ! ஏறுநீ! ஏறே.<br>சமூகமே ஏறுநீ,<br>தலையைத் தாழ்த்து!<br>முகத்தைத் தாழ்த்து!<br>உயிரைச் சுருக்கு!<br>நாயினும் தாழ்ந்துபோ!<br>அடங்கி ஒடுங்கு!<br>அழு!<br>அஞ்சு!<br>பிதற்று!<br>தோளை உயர்த்து!<br>சுடர்முகம் தூக்கு!<br>மீசையை முறுக்கி மேலே ஏற்று!<br>நகைப்பை முழக்கு!<br>இணைத்து மேலே ஏறு!<br>ஏறு மேன்மேல்!<br>அகண்ட மாக்கு!<br>விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை!<br>மானிட சமுத்திரம் நானென்று கூவு!<br>புவியை நடத்து!<br>பொதுவில் நடத்து! |
| | | |
| | இளைஞர் இலக்கியம் | (4.45%) |
| | ஆராய்ந்து பார்த்தபின் வாங்கு.<br>உனக்கு உகந்ததென் றால் அதை வாங்கு.<br>மிக ஆராய்ந்து பார்த்தபின் வாங்கு<br>அதைப் பாழாக்கக் கூடாது தம்பி.<br>தீமையான செய்கைகளைச் செய்யவுங்கூ<br>டாது;<br>செய்வோரிடம் எப்போதும் சேரவும்கூ<br>டாது.<br>திண்ணையிலே கோழி-வந்து திரிந்தாலும்<br>ஓட்டு.<br>யானைக் கன்றே தூங்கு-<br>நீ யாதும் பெற்றாய் தூங்கு!<br>தேனே தமிழே தூங்கு-<br>என் செங்குட்டு வனே தூங்கு!<br>உன் அழகிய இமையால் சாத்து. | காரியத்தில் கண்ணாயிரு!<br>கைகாரப் பெண்ணாயிரு!<br>கைவீ சம்மா கைவீசு!<br>கடலை வாங்கலாம் கைவீசு!<br>நெய் உருண்டை கைவீசு!<br>நிறைய வாங்கலாம் கைவீசு!<br>பொய்யா சொல்வேன் கைவீசு!<br>போளி வாங்கலாம் கைவீசு!<br>வெய்யில் போகும் கைவீசு!<br>வெளியில் போகலாம் கைவீசு! |
| | | |
| | தமிழச்சிக் கத்தி | (3.83%) |
| | பெருந் தூணைஒத்த தாய்இரண்டு வாங்கு;<br>வண்டியினை அமர்த்து<br>பிறன்பால் வால்கு ழைக்கப் போ!<br>அடிமைக் குழிதன்னில் வீழ்ந்தி டப்போ!<br>போ! | தமிழர் மானம் போக்கப்போ!<br>இந்தா இதைப்போடு!<br>இன்னும் இந்தா இடைக்கச்சை! கட்டு!<br>வந்துபோ என்னோடு திம்மா!<br>உண்டு காத்திரு<br>சுப்பம்மா எழுந்திரு விரைவாய்<br>பாட்டொன்று பாடு! |
| | | |
| | தமிழ் இலக்கியம் | **(1.34%)** |
| | தமிழ்காக்க எழுந்திரு!<br>எழுந்திரு நீ!<br>எழுந்திரு நீ! இளந்தமிழா, | எழுந்திருநீ இளந்தமிழா!<br>பிணிநீக்க எழுந்திரு நீ இளந்தமிழா, |
| | | |
| 5 | பாரதிதான் கவிதைத் தொகுதி 1 | **(2.99%)** |
| | அன்னது நீக்கி யருள்க'<br>சிலபேச்சுப் பேசிடுக' | அழுந்துக!<br>இமைதிற! |

| | | |
|---|---|---|
| | வரவிருப்பம் உடையவர்கள் வருக!<br>சொன்னபடி செய்க<br>ஆதர வளிக்க அனைத்தும் புரிக!<br>சகலமும் புரிகநீ!<br>இன்னலெலாம் நேர்க!<br>நீஆள ஒண்ணுமோ சொல்லடா!<br>எல்லார்க்கும் கல்வி சுகாதாரம்<br>வாய்ந்திடுக!<br>எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!<br>வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை<br>போயொழிக!<br>உதயசூ ரியன்வாழ்க நன்றே!<br>என்றறிக.<br>நன்று தமிழ்வளர்க! எ<br>தமிழ் நாட்டினில் எங்கனும் பல்குக!<br>பல்குக!<br>என்றும் தமிழ்வளர்க!<br>விளைந் தோங்குக!<br>எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!<br>அன்பினைச் சித்திரம் செய்க<br>நம்நிலை இயம்பவும் வேண்டா!<br>மண்ணாய்ப் போக! மண்ணாய்ப் போக!<br>கூடித் தொழில் செய்க<br>ஆடுகின்றாய் உலகப்பா!<br>தேடப்பா ஒருவழியை<br>ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!<br>அடிப்புறம் நோக்கி அழுந்துக! | ஏறி நின்று பாரடா எங்கும்!<br>எங்கும் பாரடா இப்புவி மக்களை!<br>பாரடா உனது மானிடப் பரப்பை!<br>பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!<br>பிரிவிலை எங்கும் பேத மில்லை உலகம்<br>உண்ணஉண்!<br>கூறடா தோழனே!<br>நடத்துக!'<br>வண்டி கொண்டுவாகூடித் தொழில் செய்க<br>ஆடுகின்றாய் உலகப்பா!<br>தேடப்பா ஒருவழியை<br>ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பாநீ!<br>அடிப்புறம் நோக்கி அழுந்துக! அழுந்துக!<br>இமைதிற!<br>ஏறி நின்று பாரடா எங்கும்!<br>எங்கும் பாரடா இப்புவி மக்களை!<br>பாரடா உனது மானிடப் பரப்பை!<br>பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்!<br>பிரிவிலை எங்கும் பேத மில்லை உலகம்<br>உண்ணஉண்!<br>கூறடா தோழனே!<br>நடத்துக!'<br>வண்டி கொண்டுவா |
| | | |
| | இளைஞர் இலக்கியம் | **(12.31%)** |
| | தமிழே வாழ்க!<br>தாயே வாழ்க!<br>அமிழ்தே வாழ்க!<br>அன்பே வாழ்க!<br>வாழ்வின் அழகே வாழ்க!<br>வளர்த்த ஆயே வாழ்க!<br>அறியச் செய்தாய் வாழ்க!<br>எழுத்தே பேச்சே இயலே வாழ்க!<br>இழைத்த குயிலே இசையே வாழ்க!<br>தழைத்த மயிலே கூத்தே வாழ்க!<br>ஒழுக்க வாழ்வின் உயிரே வாழ்க!<br>தமிழே ஆதித் தாயே வாழ்க!<br>தமிழர்க் கெல்லம் உயிரே வாழ்க!<br>அம்மா வாழ்க!<br>சீரைத் தந்த தமிழே வாழ்க!<br>ஓரா உலகின் ஒளியே வாழ்க!<br>எனக்குண்டு பார் பார் பார்!<br>தமிழ்நா டேநீ வாழ்க! வாழ்க!<br>முத்தமிழ் அன்னாய் வாழ்க! வாழ்க!<br>வாழ்க அன்னாய் வாழ்க! வாழ்க!<br>தமிழை யும்பார் என்னை யும்பார்<br>வானத்தி லேபிறந்த மழையே வா!<br>வாழவைக்க மழையே வா!<br>கரும்பு தர மழையே வா!<br>செந்நெல் செழிப்பாக்க மழையே வா!<br>கானல் தணிக்க நல்ல மழையே வா!<br>நல்ல காடு செழிக்க வைக்க மழையே வா! | அழகுப டுத்தநல்ல மழையே வா!<br>முத்துக் கடலே வாழ்க! எ<br>இசை முழங்கும் கடலே வாழ்க!<br>வந்து தாவும் கடலே வாழ்க!<br>மேல் மிதக்கும் கடலே வாழ்க!<br>மீன் உண்ணும் கடலே வாழ்க!<br>நீ தந்தாய் கடலே வாழ்க!<br>நீ வாழ்க! வாழ்க! வாழ்க!<br>நீலக் கடலே வாழ்க!<br>ஒளி நெளியும் கடலே வாழ்க!<br>தலை காட்டும் கடலே வாழ்க!<br>தங்கத் தட்டே வாவா!<br>ஒரு தனித்த அழகே வாவா!<br>பொங்கும் சுடரே வாவா!-<br>பசும் பொன்னின் ஒளியே வாவா!<br>எங்கும் இருப்பாய் வாவா!-<br>நீ எவர்க்கும் உறவே வாவா!<br>சிலிர்த்த கதிரே வாவா!<br>இன்னது வேண்டும் என்றுகேள்!<br>அவர் வாழ்க வாழ்க வாழ்க!<br>வாழ்க! தமிழ் மொழி<br>வாழ்க! தமிழர் வாழ்க! |
| | | |
| | தமிழச்சிக் கத்தி | **(1.69%)** |
| | பார்த்துவா | |

| | | |
|---|---|---|
| | வாநீ<br>தந்தோம்எம் தங்கச்சி வெல்க! வெல்க!<br>தமிழச்சி உன்கத்தி வெல்க!'<br>வெம்பசி தீர்ப்பா யம்மா.<br>சென்று வருவா யம்மா<br>நீவிர் செல்க! | |
| | | |
| | தமிழ் இலக்கியம் | **(4.96%)** |
| | வாழியநீ!<br>உணர்ந்திடுக<br>அதிர்ந்தெழுக!<br>எழுக நன்றே.<br>மங்கையர் முதியோர் எழுக!<br>உயர்தமிழப்பெண்களெலாம் எழுக!<br>சிறுமையினைத் தீர்ப்பதென எழுக! நீவிர்,<br>'மாணுயர்ந்த செந்தமிழால் வரைக'<br>சேர்ந்து தொண்டு புரிக<br>உமிழ்ந்திடுக!<br>தூய்தின் வாழ்க! | வாழ்க அன்னார்!<br>செந்தமிழ்க்கு மெய்யுளத்தால் செல்வம் ஈக<br>அடைந்தவரும் அறிந்திடுக!<br>தமிழ்வாழ்க! தமிழ்வெல்க!<br>கடல்போலும் எழுக!கட<br>தலையிட்டுக் கிளர்ச்சி செய்க!<br>தென்னாட்டுச் சிங்கங்காள்! எழுக!<br>தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!<br>மொழிப்போர் வெல்க! |
| | | |
| 4 | பாரதிதான் கவிதைத் தொகுதி 1 | **(5.60%)** |
| | ஆக்கிப்பார்'<br>உதாரனைப்போய் அழைப்பீர்'<br>தாள்பிடித் தேகிடப்பார்!<br>பேச்சை மறந்திடச் சொல்லிடுவீர்! -<br>தன்னில் போய்அடைப் பீர்!<br>கொலைசெய்யக் கூட்டிச் செல்வீர்!'<br>கடிதுசெல்வீர்! கடிதுசெல்வீர்!'<br>என்காதல் துரையே கேளாய்!<br>உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!<br>அவளைக் காப்பீர்!<br>எவ்வாறா னாலும்கேள்!<br>இந்த இரகசியம் நீயறியாய்!<br>விரைவில் நிகழ்விப்பாய்!<br>விரைந்தேற்றித் தெறித்துப்பார்!<br>லாவகத்தில் தேர்ச்சி கொள்நீ!<br>பின்னாளில் அறிந்திடுவாய்!<br>ஊர்தோறும் அலையாதீர்!<br>சஞ்ச ரிக்க அனுமதிப்பீர்!<br>ஓடி மறைவாய்!பார்!<br>என்வார்த்தை கேட்டிடுவீர்!<br>தகத்தகா யம்பார்!<br>நதி -யற்கைஎழில் கள்பார்!<br>தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்!<br>நானும் மெய்யாய் உடலுயிர் கண்டீர்!<br>தமிழ்என் அறிவினில் உறைதல் கண்டீர்!<br>கெட்ட தீர்! - ஒரு சேர்ந்திடச் தீர்!<br>அவர் ஞாயம் தராவிடில் விடுதலை<br>மேற்கொள்!<br>கனியே உறங்கிடுவாய்!<br>திக்கில் முழங்கிடுவாய்!<br>செகம் முழங்கிடுவாய்!<br>தொழிலாள ராம்எங்கள் நிலைமையைக்<br>கேளீர்.<br>செப்புதல் கேட்பீர்! - | வாழ்வில் உயர்வுகொள்!<br>பயமின்றி நீதிருந் தச்சொல்!<br>ஆய்ந்து பார்!<br>வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய்!<br>வான்திசை எங்கணும் நீபார்!<br>யோசித்துப்பார்!<br>பள்ளம் பறிப்பாய்,<br>தோளையும் உதட்டையும் தொங்கவை!<br>அதை நல்லதென்று சொல்!<br>மேதினிக் கொளிசெய்!<br>பார்த்து மகிழ்ச்சிகொள்!<br>அறிவை விரிவுசெய்!<br>அணைந்துகொள்!<br>உடுத்த உடுப்பாய்!<br>பலி பீடத்தை விட்டினி நீங்குவீர்<br>நமக்கென்று வாங்குவீர்<br>மாசற்ற தொண்டிழைப்பீர்!<br>கண்டதென முழக்கஞ் செய்வீர்!<br>உயிர்ǎல்உரை நிசǎல்மிக வரைவாய்!<br>விதமேயுன ததிகாரம் நிறுவுவாய்!<br>சரிநீதி யுதவுவாய்!<br>எனவேமுர சறைவாய்!<br>சறைவாய் முரசறைவாய்!<br>கனவில் நடந்தது கேளீர்:<br>ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்!<br>குறுகிய செயல்கள் தீர்த்துக் குவலயம் ஓங்கச்<br>செய்வாய்!<br>கொண்டார்க்குக் கொண்டு போவாய்!<br>கறையுளம் தூய்மை செய்வாய்!<br>களைப்பிலே ஊக்கம் பெய்வாய்!<br>ஓவியம் தருவாய்!<br>சிற்பம் உணர்விப்பாய்!<br>கவிதை யூட்டக் காவியம் தருவாய்!<br>சிரிப்பு மேவிடும் விகடம் சொல்வாய்!<br>மின்னிடும் காதல் தந்து கூவுவாய்!<br>வீரப் பேச்சுக் கொட்டுவாய் கோலத் தாளே! |

| | |
|---|---|
| இளைஞர் இலக்கியம் | (4.71%) |
| வரும் மக்கட் கின்பம் தருவாய்!<br>மெல்ல இங்கு வாராய்! வெண்ணிலாவே நேராய்!<br>மலைவாழை செவ்வாழை வங்காளவா ழைபார்!<br>பச்சைவாழை பார்பார்!<br>இருக்க வேண்டிக் கொள்வாய்.<br>அருந்தச் சுவைநீர் தருவாய்-<br>நீ அடைகாய்த் தட்டும் வைப்பாய்.<br>பசியை நீக்க முயல்வாய்.<br>போவதைப் பாருங்கள். | சரக்கேற்றும் பொறிஇயங்கி பார்பார்!<br>தடதடென்றே ஓடுவதைப் பார்பார்!<br>தடதடென்றே ஓடுவதைப் பார்பார்!<br>சரக்குகளை இறக்குகின்றார் பார்பார்!<br>எண்ணிஎண்ணிப் பார்பார்.<br>வேடிக்கை பார்<br>நிறையப் பெண்கள் தெருவில் பார்! |
| | |
| தமிழச்சிக் கத்தி | (5.32%) |
| 'தங்கமயி லேஇதனைக் கேட்பாய்<br>இட்டுவை குழம்பு!<br>இதைநீயே 10 கூறுவாய்'<br>நல்லதொரு தொண்டுசெய்வாய்<br>வெல்லஒரு தொண்டு செய்வாய்<br>ஒன்றுசொல்வோம் அதையேனுங்கேள்<br>அமைதியாய் இருந்திடுவீர்<br>தொங்க வைப்பாய்!<br>இப்படி வா! | நான் செப்புவ தைக்கேள்.<br>சொல்வதைக் கேள்'<br>மாற்றிக்ஶ் கொள்ளுவீர்;<br>அடாதது செயாதீர்;<br>நீர்குடிப்பீர்; நில்லாதீர்;<br>அமைதி கொள்வீர்;<br>சுப்பம்மா எழுந்திரு விரைவாய்.<br>'உண்மையைச் சொல்லிடுவாய்! |
| | |
| தமிழ் இலக்கியம் | (4.06%) |
| உன்முன் னேற்றம்! கண்டறிவாய்!<br>கண்விழிப்பாய்!<br>அனைத்தையும்நீ படைப்பாய்!<br>இந்நாள் தொண்டுசெய்வாய்!<br>அறஞ்செய்வாய்!<br>தாழ்மையினைத் துடைப்பாய்.<br>இந்நாள் செயல்செய்வாய்<br>குறைத விர்க்க ஆழிநிகர் | படைசேர்ப்பாய்!<br>பொருள்சேர்ப்பாய்!<br>இன்பத்தை ஆக்கு விப்பாய்!<br>ஊழியம்செய் பிற்றை நாளுக் கணிசெய்யும்<br>இலக்கியம்செய்!<br>அறத்தைச்செய்!<br>பணிசெய்வாய்<br>புதுநாளை உண்டாக்கித் தமிழ்காப்பாய்<br>புத்துணர்வைக் கொணர்வாய் |
| | |
| பாரதிதான் கவிதைத் தொகுதி 1 | (0.94%) |
| பதைக்கஉயிர் வாங்காதே!<br>உன்நாடு சாக்கடே!<br>ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே!<br>புகுந்துகொள்வாய்! நிற்காதே!'<br>உன் கதிதன்னை நீநிச் சயம்செய்க கண்ணே! | கனத்தஉன் பெற்றோரைக் கேளே!<br>பறந்து வாடி அழகிய மயிலே!<br>கொதிப்பேறு முன்பே ஒப்படைப்பீரே!<br>உங்களின் சொத்தை ஒப்ப டைப்பீரே |
| | |
| இளைஞர் இலக்கியம் | (3.56%) |
| போய் இனியும் வருவோம் குளமே!<br>சுண்ணாம்புக் கட்டியை நறுக்காதே<br>நல்ல சுவரிலும் கதவிலும் கிறுக்காதே.<br>பண்ணோடு பாடநீ கூசாதே<br>உன் பள்ளியில் எவரையும் ஏசாதே<br>மண்,ஓடு,ஆணி, துணி கடிக்காதே-<br>மற்றவர் பொருளை நீ எடுக்காதே.<br>கண்ட இடத்திலே துப்பாதே!<br>காலிலே சேற்றை அப்பாதே! | துண்டு துணிகளைக் கிழிக்காதே!<br>துடுக்காய் எவரையும் பழிக்காதே!<br>பண்டம்எ தையும்பா ழாக்காதே!<br>பாலைத்த லையிலே வார்க்காதே!<br>நொண்டியைக் கண்டு சிரிக்காதே!<br>நொளநொளப் பழத்தை உரிக்காதே.<br>தமிழர் பண் பாடு தழைந்துவா ழியவே! |
| | |
| தமிழச்சிக் கத்தி | (0.45%) |
| 'வாஇங்கே | |

| | | |
|---|---|---|
| | 'நன்றுநீ சொன்னாய் பெண்ணே! | |
| | | |
| | தமிழ் இலக்கியம் | (6.90%) |
| | துறைதோறும் துடித்தெ முந்தே!<br>உன்றன் வெற்றி! அயராதே!<br>தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும்<br>சீறி வந்தே.<br>பெண்களெலாம் பறந்து வாரீர்!<br>தவிர்ப்பதற்குக் குதித்து வாரீர்!<br>தவிர்த்திடநீர் எழுச்சி கொள்வீர்.<br>வையாமே வரிசையுற முடுகு வீரே!<br>அவண்சென்று முழங்கிடுவீர்!<br>வீதியெல்லாம் வரிசையுற உலவா நிற்பீர்!<br>பைந்தமிழ்க்குச் செயும்தொண்டு பருக<br>வாரீர். | இனித் திருந்து வீரே.<br>கைக்கொண்டு வாழ்ந்திடுவீர்<br>பார்ப்பான்பால் படியாதீர்;<br>சொற்குக்கீழ்ப் படியாதீர்;<br>மானத்தை ஒருசிறிதும் இழக்காதீர்.<br>தமிழ்பாடித் தமிழ்மானம் காப்பீர் நன்றே.<br>கேட்டபடி உயிர்வா ழாதீர்!<br>பார்ப்பானை நம்பாதீர் திறமை கொள்வீர்!<br>போய்ப்பாரீர்<br>தொடக்கஞ்செய் வீர்வெல்வீர்!<br>மொழிப்போர் வெல்க! |
| | | |
| 2 | **பாரதிதான் கவிதைத் தொகுதி** | 1(0.09%) |
| | படபடெனச் சரமரரி பொழி! | |
| | | |
| | தமிழச்சிக் கத்தி | (1.08%) |
| | மோரெடுத்துக் காயமிட்டுத் தாளி<br>நீ பேசாது போடி.<br>உண்ணக் கொடுத்து விடடி!<br>சோற்றில் இடடி! | |
| | | |
| 1 | கிடைக்கப் பெறவில்லை | |

## உள்ளுரைச் செய்தியும் விளக்கமும்

*பாவேந்தரின் பாடல்கள் தமிழ் மொழிக்குப் புதிய பரிணாமத்தை வழங்கியதோடு, அதனுள் இழையோடும் தமிழுணர்வுக்கும் தகுந்ததோர் வன்மையினைக் காட்டி, அதனைத் தமிழ்ச்சொல்லோடு குழைத்து, இளைய உள்ளங்களுக்குச் செய்திகளைச் சொல்லும்போது, எத்தகைய வன்மையும் அதனுள் கண்டிப்பும் வேண்டுமென உறுதிப்படக் கூறிய மாண்பு தமிழுலகம் அறிந்த ஒன்று. தமது தமிழ்த் திறத்தால் தமிழ் மக்களுக்கு வழங்கிய தமிழ்க் கட்டளைகள் யாவை அவற்றின் தன்மைகள் யாவை என்பதனைக் கண்டோம். சொல்ல வேண்டிய கருத்துகளை சொல்வதோடு, அதனை உறுதிபடக் கூறிட பாவேந்தர் கையாண்ட தமிழ்க்கட்டளைகள் வழிசெய்துள்ளன. சில கட்டளைகள் வன்மையின் உச்சத்தை வெளிப்படுத்தின, இன்னும் சில அன்பின் வெளிப்பாட்டினை உறுதிப்படுத்தின.*

*சில இடங்களில் புரட்சிக் கவிஞர் வழங்கிய கட்டளைகள் இன்னும் உறுதியாக செம்மையாக சென்று சேர வேண்டுமென இரட்டைச் சொல்லாடலையும் வழங்கியிருப்பது கட்டளையின் கட்டளை என ஏற்றுக் கொள்ளலாம். பாரதிதாசன் கவிதைத் தொகுதி 1, இளைஞர் இலக்கியம், தமிழச்சிக் கத்தி, தமிழ் இலக்கியம் ஆகிய கவிதைத் தலைப்புகளில் காணப்பட்ட கவிதைகளின் வன்மைத் தன்மை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் வன்மையும் தெளிவும், பாவேந்தரின் தமிழ்த் தாகமும் ஏக்கமும் அவற்றின் ஊடே காணவும் முடிகின்றது.*

## முடிவுரை

இந்தக் கட்டுரையின் வழி பாரதிதாசனாரின் தமிழ்மரபு அவரது கட்டளைகளின் வன்மைகளையும் அளவுகாண முடியும் எனக் கண்டோம். தமிழ்க் கவிஞர்கள் தங்களது மனக்குமுறல்களை மட்டும் வழங்கிடவில்லை, மாறாக அவற்றினூடே சொல்ல வந்த கருத்துகளைக் கட்டளைகளாக்கி தமிழ் உள்ளங்களுக்குத் தெளிவுபடச் செய்திடல் வேண்டுமெனக் கூறிடும் கருத்துகளையே தலையாய செய்திகளாக் காண்கின்றோம். தமிழ்மனங்களுக்குச் சொல்ல வேண்டிய கருத்துகளைச் சொல்ல வேண்டிய பல்வகை வன்மைத்தன்மைகளோடு சொல்லியும் சென்றுள்ளனர் என்பதனைக் கட்டுரையின் வழி காண்கின்றோம்.

இக்கட்டுரை முன்வைத்துள்ள முதன்மைக் கருத்துகளோடும், சட்டகத்தின் துணையோடும் தமிழ்கூறு நல்லுலகம் கண்ட தமிழ்க்கட்டளைகளையும் அவற்றின் வன்மைகளையும் இனம்காண வழிசெய்யும் என நம்பலாம்.

## Bibliography

http://www.tamilagaasiriyar.com/p/tamil-e-books.html

*I7aiñar Ilakkiyam. PâratitâcaI Kavitaika7,* Maturai Tami; Ilakkiya Mintokupput Timmam.

Mohanadass Ramasamy. (2006). *Amippamait Tami; IlakkaGam.* Kuala Lumpur: Universiti Malaya.

PâratitâcaI Kavitait Tokuti 1. PâratitâcaI Kavitaika7, Maturai Tami; Ilakkiya Mintokupput Timmam.

*PâratitâcaI Nû__âGmu NiIaivuk KaruttaraEka Malar.* (1990). Department of Indian Studies, University of Malaya. Kuala Lumpur: Uma Publication.

*Tami;accik Katti. PâratitâcaI Kavitaika7, Maturai* Tami; Ilakkiya Mintokupput Timmam.

# பாவேந்தர் பாரதிதாசனின் பெருவாழ்வு

## The great life of Paventhar Bharathidasan

**பேராசிரியர் முனைவர் மு.இராசேந்திரன்**

Professor Dr.M.Rajantheran[1]

***Abstract***

In the history of Tamil Literature, Bharathidasan's poetry is in the limelight. His poetic sensibility is natural and par excellence. Drawn towards the ideology of Dravidian culture, Bharathidasan centred his focus on the socialist ideas and independence struggle. He had a good access to Poetry, Novel, Short Story and Drama. He also gained momentum in the Tamil Cine field, the growth and development of Tamil language and the victorious life of the Tamils. Pavender had all these aspects as the base and his missions of life which this Paper tries to probe.

Key Words : Bharathidasan, Bharathiar, Patriotism, Periyar, Cine Field

### முன்னுரை

*இயற்கையாகவே கவிதை இயற்றும் தனிப்பெரும் புலமையுடன் ஆழ்ந்த தமிழறிவு, தமிழ் உலகின் தன்னிகரற்ற மகாகவி பாரதியின் வழிகாட்டுதல் பண்பட்ட கவிதைப் பின்புலம், தமிழாசிரியர் பணியில் தோய்ந்த உள்ளம், தேசப்பற்றில் திளைத்த மாண்பு, திராவிடக் கொள்கையில் அசைக்க முடியாத ஆழ்ந்த பற்று, தமிழ்ப் பகைவர் யாராயினும் அவர்களை அஞ்சாது எதிர்கொள்ளும் வீரம், எத்தகைய சூழ்நிலையிலும் தான் கொண்ட கொள்கையில் இருந்து மாறாத நெஞ்சுரம் எனச் சீர்மிக்க பண்புகளின் ஒட்டுமொத்த வடிவம்தான் பாவேந்தர் பாரதிதாசன்.*

*'தமிழுக்கும் அமுதென்று பேர்', 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு', 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' எனத் தமிழுக்காகவே வாழ்ந்தவர். பாவேந்தரின் பெருவாழ்வானது தொடக்கத்தில் பாரதியாரின் துணை நலத்தால் தேசியத்தின் மீது பற்றுடையதாக அமையப்பெற்ற போதும் இவரது வாழ்க்கையின் பெரும் பகுதி திராவிடக் கொள்கையில் தோய்ந்ததாகவே இருக்கின்றது. ஆனால் பாரதிதாசனின் ஒட்டுமொத்த வாழ்க்கையை காணுங்கால் அது தமிழுக்காக வாழ்ந்த பெருவாழ்வாகவே அமையப்பெற்றுள்ளதை யாரும் மறுக்க இயலாது (செயலாபதி, 2004, ஜீ.36).*

### பாவேந்தர் பிறப்பும் வளர்ப்பும்

*பாரதிதாசன் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் தேதி இரவு 10.15 மணிக்கு புதுவையில் பிறந்தார். இவரது தந்தை கனகசபை முதலியார். இவர் அவ்வூரில் புகழ்பெற்ற வணிகர். பாவேந்தரின் தாயார் இலக்குமி அம்மாள். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர்*

---

[1]The author is a Professor in The Department of Indian Studies, University of Malaya, Malaysia.
rajantheran@gmail.com

சுப்புரத்தினம். இவரது தந்தையின் முதல் பாதி பெயரும் இவருடைய பெயரில் இணைக்கப்பட்டு கனகசுப்புரத்தினம் என்று அழைக்கப்பட்டார். இவரின் தமையனார் சுப்புராயன், தமக்கை சிவகாமசுந்தரி, தங்கை இராசம்மாள் (கோவேந்தன், 1994, ஜீ.207).

பாரதிதாசனின் தொடக்கக்கல்வி புதுவையில் இருந்த பிரஞ்சுப் பள்ளியில் தொடங்கியது. இவர் தமது தொடக்கக் கல்வியை ஆசிரியர் திருப்புளிசாமி அய்யாவிடம் கற்றார். பின்னர் தமிழ்ப்பள்ளியில் பயிலும் வாய்ப்புக் கிடைத்தவுடன், தமக்கு விருப்பமான தமிழ்மொழியை நன்கு கற்றுத் தேர்ந்தார். அதுமட்டுமன்றி தமது பத்தாவது வயதிலேயே கவிதை புனைவதில் வல்லமை பெற்றவராகவும் விளங்கினார். இதனால் புதுவை மக்களிடையே இவருக்கு நற்பெயரும் புகழும் கூடியிருந்தது (செயலாபதி, 2004, p.32). பின்னர் தமது 16 வது வயதில் கால்வே கல்லூயியில் பயின்று தமது தமிழ்ப் புலமையை மேலும் வளப்படுத்திக் கொண்டார். பாரதிதாசன் தமது ஆழ்ந்த தமிழறிவினாலும், கல்வியின்பால் உள்ள நாட்டத்தினாலும் மூன்று ஆண்டுகள் பயில வேண்டிய இளங்கலைப் பட்டப்படிப்பை இரண்டு ஆண்டுகளிலேயே நிறைவு செய்தார். அதுமட்டுமன்றி, அந்தக் கல்லூரியில் முதன்மை மாணவராகவும் தேர்ச்சி பெற்றார் (முருகுசுந்தரம், 2014, p.9).

பின்னர் தமது தமிழ்ப்புலமையை மேலும் விருத்தி செய்து கொள்வதற்காக 1908ஆம் ஆண்டு முதுபெரும் புலவர் மகாவித்துவான் பு.அ.பெரியசாமி அய்யாவிடமும், பின்னர் பெரும்புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சித்தாந்தம், வேதாந்தம் முதலியவற்றையும் கற்றுத் தேர்ந்தார் (செயலாபதி, 2004, p.32). 1909ஆம் ஆண்டு நிரவியில் தமிழாசிரியராகத் தமது தமிழ்ப்பணியைத் துவக்கினார். அப்போது பாரதிதாசனுக்குப் பதினெட்டு வயதே நிறைவுற்றிருந்த காரணத்தால் நிரவி ஊர் மக்கள் இவரை ஒரு பொருட்டாக மதித்ததே கிடையாது. ஆயினும் அதற்காக பாரதிதசன் ஒருபோதும் வருந்தியது இல்லை. ஒருமுறை அவ்வூரில் தமிழில் ஆழ்ந்த புலமையுடைய இராமசாமிப் புலவர் என்பவர் பாரதிதாசனை ஏளனமாக எண்ணி அவரின் தமிழ்ப்புலமையைச் சோதித்துள்ளார். ஆனால் பாரதிதாசன் அவர் கேட்ட கேள்விக்குத் தக்க பதிலும் அதற்கான விளக்கமும் அளித்து அவரை வியப்பில் ஆழ்த்தினார். பரதிதாசனுக்கு இளம் வயதில் இருந்த தன்னம்பிக்கையும், தமது புலமையின்பால் உள்ள நம்பிக்கையும் திடமாக இருந்தது (முருகுசுந்தரம், 2014, p.10).

1919ஆம் ஆண்டு பாரதிதாசன் திருபுவனையில் ஆசிரியராகப் பணியாற்றினார். இந்தக் காலகட்டத்தில் பிரஞ்சு அரசுக்கு எதிராகச் செயல்பட்டார் என பாரதிதாசன் ஆசிரியர் பணியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டதோடு ஒன்றரை ஆண்டுகள் சிறைபிடிக்கப்பட்டார். பின்னர் பிரஞ்சு அரசு தனது தவற்றை உணர்ந்து அவரை விடுதலை செய்தது. மேலும் பாரதிதாசன் தனது வேலை நீக்க வழக்கில் வென்று மீண்டும் பணியில் அமர்ந்தார். அதற்கு அடுத்த ஆண்டு பழனி அம்மையாரைத் தமது வாழ்க்கைத் துணைநலமாகத் திருமணம் செய்து கொண்டார். பாரதிதாசன் தம்பதிகளுக்கு மன்னர்மன்னன் எனும் மகனும் சரஸ்வதி, வசந்தா, ரமணி எனும் மூன்று மகள்களும் பிறந்தனர் (கோவேந்தன், 1994, p.208).

## பாரதியாரும் பாரதிதாசனும்

பாரதி எனும் மகாகவிஞர் பாரதிதாசனின் வாழ்க்கையில் ஒரு மைல்கல். பாரதியாரைச் சந்தித்த பின்னர்தான் கனகசுப்புரத்தினம் பாரதிதாசனாக மாறினார். பாரதியார் 1908ஆம் ஆண்டுதான் புதுவைக்கு வந்தார். அவர் புதுவைக்கு வந்து ஓரிரண்டு ஆண்டுகள் சென்ற பின்னர்தான் பாரதிதாசன் அவரை இன்னார் என அடையாளம் கண்டு கொண்டு தமது நட்பை வளர்த்துக் கொண்டார். பாரதிதாசனுக்கு பாரதியாருடனான சந்திப்பும் கூட கவிதையின் வாயிலாகவே தோன்றியது (முருகுசுந்தரம், 2014, p.19).

ஒரு முறை பாரதிதாசன் வேணு (வல்லூறு) நாயக்கர் வீட்டுத் திருமணத்தில் பங்கேற்ற போது, வேணு நாயக்கர் பாரதிதாசனைப் பாடச் சொல்லிக் கேட்டுக் கொண்டனர். பாரதிதாசனும் தமக்குப் பிடித்த பாரதியாரின் 'வீரசுதந்திரம் வேண்டிநின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ?' எனும் பாடலை மிக அருமையாகப் உள்ளுணர்வுடன் பாடினார். அதே திருமணத்தில் பாரதியாரும் இருந்துள்ளார். அதற்கு முன்னர் பாரதியாரை பாரதிதாசன் பார்த்திருந்தாலும் கூட அவரை இன்னார் என்று அறிந்ததில்லை. வேணு நாயக்கர் பாரதிதாசனிடம் அவர் பாடிய பாடலுக்குச் சொந்தக்காரர் இவர்தான் என பாரதியைச் சுட்டி அவருடன் அறிமுகம் செய்து வைத்தார் (http://www.dinamani.com/editorial_articles).

பாரதிதாசன் தனது பாடலை மிக அருமையாகப் பாடியது கண்டு உவகையுற்ற பாரதியார் பாரதிதாசனின் தமிழறிவு கவிதாவிலாசத்தினால் ஈர்க்கப்பட்டுத் தனது அன்பைப் பரிமாறிக்கொண்டார். இதன் பின்னர் பாரதியாருக்கும் பாரதிதாசனுக்கும் இடையிலான நட்பு வளந்தோங்கியது. அன்று தொடங்கி பாரதியார் இயற்கை எய்தும் வரையில் சுமார் பத்து ஆண்டு காலம் பாரதியாருக்கு பாரதிதாசன் பக்கபலமாக இருந்து பல வகையிலும் தோள்கொடுத்துச் சேவகம் புரிந்துள்ளார் (கோவேந்தன், *1994*, p.*208*).

பாரதியாருக்கு பாரதிதாசனின் கவி வளம் பற்றி நன்கு தெரியும். பாரதிதாசன் தமக்கு நிகரான கவிஞன் என்பதைத் தன் நண்பர்களுக்கு உணர்த்தும் பொருட்டு ஒரு நாள் பாரதிதாசனைக் கவிதை ஒன்றைத் தமக்காகப் புனையக் கூறினார் பாரதி. பாரதிதாசனும் 'எங்கெங்கு காணினும் சக்தியடா' எனும் பதினாறு வரி கொண்ட பாடலை எழுதிக் கொடுத்தார். பாட்டின் பண்ணும் பொருளும் தமது கவிதையை ஒத்தே அமையப் பெற்றிருந்ததைக் கண்டு பாரதிதாசனை வெகுவாகப் பாராட்டிய பாரதியார், பின்னர் அந்தப் பாடலைத் தம் கையாலேயே பெயர்த்து எழுதி, 'ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது' என்று குறிப்பொன்றை எழுதிச் சுதேசமித்திரன் நாளிதழுக்கு அனுப்பி வைத்தார் (முருகுசுந்தரம், *2014*, p.*23*).

பாரதியாரின் தமிழ்ப் பற்று, கவி வளம், பொதுநலப் பார்வை, சாதிய எதிர்ப்பு போன்ற கொள்கைகளினால் கவர்ந்திழுக்கப்பட்ட இவர், தமது கனகசுப்புரத்தினம் எனும் இயற்பெயரை பின்னாளில் பாரதிதாசன் என்றே மாற்றிக் கொண்டார். தொடக்கத்தில் கே.எஸ்.ஆர், கண்டெழுதுவோன் கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ் போன்ற புனைப்பெயர்களில் எழுதிக் கொண்டிருந்த இவர் பாரதியாருடன் நட்பு மலர்ந்த பின்னர் பாரதிதாசன் என்ற பெயரிலேயே எழுதத் தொடங்கினார் (வரதராசன், *1992*, p.*349*).

பிற்காலத்தில் இதுவே இவரின் பெயராக நிலைபெற்றது. பாரதிதாசன் திராவிடக் கழகத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த போது இவருடைய பாரதிதாசன் எனும் பெயர் குறித்து திராவிடக் கழகத்தாரால் விமர்சிக்கப்பட்டது. பாதிதாசன் என்றால் பாரதி என்ற பார்ப்பனனுக்கு அடிமை எனப் பொருளாகின்றது. இதனை ஏற்க முடியாது எனத் திராவிடக் கழகத்தவர் சிலர் விமர்சனம் செய்தனர். ஆனால் பாரதியைப் போல சாதியத்திற்கு எதிப்புக்குரல் கொடுத்தவர் யாருமில்லையாகையால் அவரது பெயரை முன்னிருத்தித் தம்மை அழைப்பதுவே தமக்குப்பெருமையென பாரதிதாசன் அந்த எதிர்ப்பையும் விமர்சனங்களையும் முறியடித்தார் (http://www.dinamani.com/editorial_articles).

பாரதிதாசனுக்குப் பாரதியாரின் மீது இருந்த பற்றுதல் அளவிட முடியாதது. பாரதியாரைப் பற்றிய தமது பார்வையை பாரதிதாசனின்,

**"நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா**
**காடு கமழும் கற்பூரச் சொற்கோ!**

***கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்***
***திறம் பாட வந்த மறவன் புதிய***
***அறம் பாட வந்த அறிஞன் நாட்டிற்***
***படரும் சாதிப் படைக்கு மருந்து!***
***மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்***
***அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்***
***என்னென்று சொல்வேன் என்னென்று சொல்வேன்***
***தமிழால், பாரதி தகுதி பெற்றதும்***
***தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்***
***எவ்வாறென்பதை எடுத்துரைக் கின்றேன்"***

(*பாரதிதாசன், பாரதியார் பாமாலை: **718**,* http://www.sangatham.com)

*எனும் கவிதை வரிகளே மிகச் செறிவாக உரைப்பதைத் காணலாம்.*

*பாரதியாருடன் இருந்த காலத்தில் பாரதிதாசனிடம் தேச விடுதலைக்கான தாகம் மிகுந்திருந்ததைக் காண முடிகின்றது. பாரதியுடனான சந்திப்பிற்கு முன்னர் பக்திப் பாடல்களும், கதர்ப் பாடல்களும் இயற்றிக் கொண்டிருந்த பாரதிதாசன் அதன் பின்னர் தேசப் பற்றுப் பாடல்களுடன் பகுத்தறிவுப் பாடல்களையும் புனையத் தொடங்கினார். பாரதியே தனது பாடல்களுக்கு புதிய வழித்துறையை ஏற்படுத்திக் கொடுத்ததாக பாரதிதாசன்*

***"பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்***
***காடு முழுதும் கண்டபின் கடைசியாய்***
***சுப்பிர மண்ய பாரதி தோன்றிஎன்***
***பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்"***

(*பாவேந்தர் பாரதிதாசன் தம்மைப் பற்றி எழுதிய பாடல்: **3942**,* https://groups.google.com)

*எனும் கவிதையின் வழி கூறுவது இவ்விடம் சுட்டத்தக்கது. பாரதியாரைக் காட்டிலும் பாரதிதாசனின் இலக்கண வளமை சிறப்புற்றிருந்த போதும் பாரதியின் கவிதை வளம் அளப்பரியது. ஒருமுறை பாரதியின் கையெழுத்துப் பிரதியில் பாஞ்சாலி சபதம் கவிதைத் தொகுப்பினைப் பாரதிதாசன் படிக்க நேர்ந்தது. அதைப் படித்த பின்னர் தமிழில் இவ்வளவு எளிமையாக, யாவரும் புரிந்து கொள்ளும் வண்ணம், இனிமையான கவிதையைப் படைக்க இயலுமா எனும் வியப்பு பாரதிதாசனை ஆட்கொண்டதாகவும் அதன் பின்னரே தமது கவிதை நடையில் மாற்றம் கொண்டுவந்தார் என பாரதிதாசன் கருத்துரைத்ததாகக் கூறப்படுகின்றது. பாரதியின் கவிதாவிலாசத்தால் கவரப்பட்டதால் பாரதிக்கு நிகராக பாரதிதாசனும் கவிதைப் படைப்பில் மிளிரத் தொடங்கினார் (முருகுசுந்தரம், **2014**, p.**27**).*

*இவ்வாறு பாரதிதாசனின் கவிதா ஞானம் விருத்தி அடைவதற்கு பாரதியே தூண்டுகோலாக அமைந்தார் எனப்பட்டபோதிலும் பாரதிதாசனின் கவிதைகளை ஆய்வுக்கு உட்படுத்திப் பார்க்கும் போது பாரதியாரின் சிந்தனைகளிலிருந்து பாரதிதாசனின் சிந்தனைகள் முரண்பட்டிருப்பதை மறுக்க இயலாது. பாரதியார் இந்திய தேசியத்திற்கு முக்கியத்துவமளித்தவர். பாரதிதாசனோ திராவிட தேசியத்தை முன்னிருத்தியவர். பாரதியார் திராவிடத்திலும் சமஸ்கிருதத்திலும் மறுப்புக் கொள்கையற்றவர். பாரதிதாசனோ சமஸ்கிருதத்திற்கு எதிர்ப்புக் குரல் கொடுத்தவர். பாரதி கடவுள் பக்தியில் இன்புற்றவராக விளங்கியவர். பாரதிதாசன் இறைமறுப்புக் கொள்கையாளர் (ஞானசேகரன், **2005**, p.**9**). இவ்வாறு பல்வேறு கொள்கைப் பிடிப்புகளில் பாரதியாரிடமிருந்து பாரதிதாசன் முரண்பட்டிருந்த போதும் தம்மை பாரதியின் சிந்தனையில் இருந்து மாறுபட்டவராக*

பாரதிதாசன் எண்ணியதே கிடையாது. 'அன்றைக்குப் பாரதியார் என்ன கொள்கையைக் கொண்டிருந்தாரோ அதைத்தான் இன்றைக்குப் பாடல்களாக எழுதிக் கொண்டிருக்கிறேன். பாரதியார் இன்றைக்கிருந்தால் என்னைப்போல் ஏன் என்னைவிடவும் சிறப்பாக எழுதியிருப்பார்' என்று 1961ஆம் ஆண்டு வெளிவந்த குயில் ஏட்டில் பாரதிதாசன் குறிப்பிட்டிருக்கிறார் (http://www.dinamani.com/editorial_articles). இதன் வழி பாரதிதாசன் பாரதியாரின் மனதை எந்த அளவிற்குப் புரிந்து வைத்திருந்தார் என்பது தெரிகின்றது.

மேலும் பாரதியின் சிந்தனையின் பெரும் வீச்சுதான் தமது எழுத்துகள் என்பதில் பாரதிதாசன் மிகுந்த பிடிப்புள்ளவராக இருந்துள்ளார். பாரதி திராவிட இயக்கக் கொள்கைக்கு மாறானவர் எனத் திராவிட இயக்கத்தினர் கருதிய போதும் பாரதியின் சிந்தனைகளை பாரதிதாசன் உயர்த்தியே பேசியுள்ளார். 'சென்னையில் பாரதி இறந்தார். ஆனால் என்னுள் வளர்ந்து வந்த பாரதி அன்பு இறந்ததா? இல்லை. பாரதியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறத் தயங்குவதில்லை. அதனால் ஒரு சாராரின் எதிர்ப்பு இன்று வரை நீங்கியதில்லை. இதற்காக நான் அஞ்சியதும் இல்லை. அஞ்சப்போவதும் இல்லை. பாரதி பற்றிப் பேச எனக்குத்தான் தெரியும். அவரைப் பற்றிப் பேச என்னை விடத் தகுதி இந்த நாட்டில் எவனுக்கும் இல்லை' என பாரதிதாசன் எழுதியுள்ளார் (தினத்தந்தி, 651963 & http://ilakkiyapayilagam.blogspot.my). இதுவல்லாது 1963ஆம் ஆண்டு பாரதியாரின் வாழ்க்கையைத் திரைப்படமாக எடுப்பதற்கான முயற்சியிலும் பாரதிதாசன் ஈடுபட்டார். ஆனால் அம்முயற்சி நிறைவெய்தவில்லை (முருகுசுந்தரம், 2014, p.96).

பாரதிதாசனும் பாரதியாரும் அவர் அவர் பாங்கில் இணையற்ற மகாகவிகள் என்பதில் ஐயமேதும் இல்லை. மேலும், பாரதிதாசனின் எண்ண எழுச்சிக்கும் சிந்தனை மாற்றத்திற்கும் பாரதியே பெரும்பங்காற்றியவர் (அருணாசலம், 2004, p.99). ஆனால் பாரதியை விட பாரதிதாசனுக்குத் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் அதிகப் புலமை உண்டு. ஒருமுறை புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் இருந்த போது பிரஞ்சு மொழியில் உள்ள இலக்கிய வளமையைப் போலத் தமிழில் உள்ளதா என பாரதியாரைக் கேட்ட போது, பாரதியாரால் இதற்குச் சரியான விளக்கம் கொடுக்க இயலாமல் போனது. இதனைப் பாரதிதாசனிடம் பாரதியார் கூறிய போது, பாரதிதாசன் தமிழில் பிரஞ்சு மொழியை விட அதிகமான இலக்கியச் செல்வங்கள் உள்ளனவென்று கூறி சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் ஆகியவற்றிலிருந்து உதாரணங்களை எடுத்துக் காட்டி பிரஞ்சு இலக்கியவாதிகளின் வாதத்தை முறியடித்துக் காட்டினார். இதனால் பாரதியாரின் தமிழ் இலக்கிய அறிவு பாரதிதாசனால் மேலும் வளம் பெற்றது (http://www.dinamani.com/editorial_articles).

பாரதிதாசன் எனும் கவிஞருக்குள் புதைந்திருந்த சமுதாய எழுச்சி மனப்பான்மையை வீறு கொண்டு எழச்செய்வதற்கான தூண்டுகோல் பாரதியிடம் இருந்தது. பாரதியாரின் கவிதையில் வரும் அக்கினிக் குஞ்சுக்கு நிகரானவர் பாரதிதாசன். அந்த அக்கினிக் குஞ்சைத் தூண்டி விட்டுக் கொழுந்துவிட்டெரியச் செய்த பெருமை பாரதிக்கு உண்டு. இவ்வாறு பாரதியால் தூண்டிவிடப்பட்ட பாரதிதாசனின் கவிதாவிலாசம் தேசப்பற்றாக, சமுதாய மறுமலர்ச்சியின் குரலாக உருமாற்றம் கண்டு பின்னர் பெரியாரின் துணையினால் திராவிடக் கொள்கையின் முழக்கமாக ஓங்கி ஒலித்தது. அந்த வகையில் பாரதிதாசன் எனும் புரட்சிக்கவியை வெளிக்கொணர்ந்த பெருமை பாரதியையே சாரும்.

## பாரதிதாசனின் தேசியப் பற்று

பாரதியின் நட்பு மலர்வதற்கும் முன்னமே தேசியத்திலும் தேச விடுதலையிலும் பாரதிதாசனுக்கு ஆர்வமிருந்த போதிலும், பாரதியாரின் தொடர்பிற்குப் பிறகே பாரதிதாசன் இதில் மிகுந்த ஆர்வம் கொள்ளத் தொடங்கினார். 1909ஆம் ஆண்டு கப்பலோட்டிய தமிழன்

வ.உ.சியின் தேச விடுதலைப் போரட்டத்தால் ஈர்க்கப்பட்ட பாரதிதாசன் தேச விடுதலைத் தொண்டில் தம்மை வெகுவாக ஈடுபடுத்திக் கொண்டார். தமது போராட்டத்தைப் படைப்பிலக்கியங்களின் வாயிலாக மட்டும் அல்லாமல் செயல்முறையிலும் காட்டிய செயல்வீரார் பாரதிதாசன் (கோவேந்தன், *1994*, p.*208*).

ஆங்கிலேய ஆட்சி காலத்தில் பிரிட்டீசாரின் அரசுக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மக்களிடையே சுதந்திர வேட்கையைத் தூண்டிய பாரதியார், வ.வே.சு., பா்.வரதராசுலு, அரவிந்தா் போன்றோர் புதுவையில் மறைந்திருந்த போது அவர்களுக்குப் பாரதிதாசன் புகலிடம் அளித்தார். அவர்களுக்கான உணவை ஏற்பாடு செய்தல், அவர்கள் மறைந்து வாழ உதவுதல், காவலர்களின் தேடுதல் வேட்டை குறித்த தகவல்களை அவர்களுக்குத் தந்து காப்பாற்றுதல், பொருளுதவி வழங்குதல், பாரதியாரின் 'இந்தியா' எனும் பிரசுரத்தை பிறா் அறியாதவாறு அச்சிட்டுத் தருதல் போன்ற பல உதவிகளைச் செய்துள்ளார் பாரதிதாசன். மேலும், ஆங்கில அரசின் ஆட்சித் தலைவா் ஆஷ் துரையைச் சுட்டுக் கொல்வதற்காக வாஞ்சிநாதன் பயன்படுத்திய துப்பாக்கி பாரதிதாசன் அனுப்பியதுதான் என்ற ஒரு கருத்தும் உள்ளது (https://ta.wikibooks.org/wiki).

இதுவல்லாது, காந்தியடிகள் ஏற்படுத்திய சத்தியாகிரகப் போராட்டத்திலும் பங்கேற்ற பாரதிதாசன் அந்நியர்களின் ஆடைகளைப் புறக்கணிக்கும் கதராடைப் போராட்டத்திலும் பங்கேற்றுத் தமது தேசப்பற்றினை வெளிப்படுத்தியுள்ளார் (http://www.tamilheritage.org). மேலும் தங்கள் குடும்பத்தினரிடையேயும் கதராடை உடுத்தும் பழக்கத்தை நடைமுறைபடுத்தியதோடு, மக்களிடையேயும் கதராடையைப் பயன்படுத்தும் தொண்டில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

***'கதரணிவீர்' என்றுரைத்த***
***காந்தியண்ணல் ஆணை எழிற்***
***காந்தியண்ணல் ஆணை அதைக்***
***கருதிடுவீர் அதுஉமக்கு***
***நாரதனார் வீணை...***

***விதிநமக்கு வாய்த்துண்டோ***
***வேற்றுவர்கை பார்க்க நாம்***
***வேற்றுவர்கை பார்க்க***
***விளையும்பஞ்சில் விரல்பொருத்த***
***விடுதலை நீர்காண்பீர்***

(கதர் இராட்டினப்பாட்டு: ***102–106 – 1261–30***)

என்று காந்தியடிகளின் வழியில் தேச விடுதலைக்கான போராட்டத்தில் கதராடை அணிதல் தேச விடுதலைக்கு வித்திடும் எனும் கொள்கையில் நின்று மக்களிடையே சுதந்திர உணர்வைத் தோற்றுவித்துள்ளார்.

ஆங்கிலேயருக்கு எதிரான காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கைகளை பரப்பச் செய்யும் வகையில், 'தேசிய உபாத்தியாயர்', 'கவியின் பெருமை', 'தொண்டர் நடைப்பாட்டு', 'கதர் இராட்டினப் பாட்டு', போன்ற கவிதைகளைப் புனைந்துள்ளார் (அருணாசலம், *2004*, p.*116*). இதுவல்லாது பள்ளிப் பிள்ளைகளிடையே தேசப்பற்றைத் தோற்றுவிக்கும் வண்ணம் 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'சிட்டுக்குருவிப் பாட்டு', நிலாப்பாட்டு', 'தாலாட்டு' போன்ற பாக்களையும் புனைந்து தேசிய விடுதலையில் தமது பங்களிப்பைச் செய்துள்ளார் (செயலாபதி, *2004*, p.*271*). பாரதிதாசன் காந்தியத்தின் வழியில் நின்ற காலத்தில் பாரத தேசத்தின் ஒட்டுமொத்த அடைவின் ஒரு பகுதியாகவே

தமிழ்ப் பண்பாட்டையும் தமிழ்மண்ணையும் போற்றினார். இது பாரதியாரின் பார்வையை ஒத்தே அமையப்பெற்றது. அந்த வகையில் பாரதிதாசனின் தேசப்பற்றும் தொண்டும் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கியமானதாக வைத்துப் பார்க்கத் தக்கது ஆகும்.

## பாரதிதாசனும் திராவிட இயக்கமும்

தொடக்கக் காலத்தில் தேச விடுதலையிலும் காந்தியக் கொள்கைகளிலும் முனைப்புக் காட்டிய பாரதிதாசன் பின்னாளில் தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின்பால் பெரிதும் ஈடுபாடு கொண்டார். தொடக்கத்தில் காங்கிரஸ் கட்சியில் முக்கிய பங்கு வகித்த தந்தை பெரியார் அங்கு நிலவிய சாதியப் பாகுபாட்டினால் அதனின்று வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் (1925) தோற்றுவித்தார் (http://www.yarl.com). மேலும் பெரியாரால் பதிப்பிக்கப்பட்ட குடி அரசு இதழானது சாதிய எதிர்ப்பு, கடவுள் மறுப்பு, வருணாசிரமதர்ம மறுப்பு, தீண்டாமை போன்ற கொள்கைகளை முன்னிறுத்தி வெளிவரத் தொடங்கியது. பெரியாரின் இத்தகைய தீவிர சமத்துவக் கொள்கைகளால் ஈர்ப்புக் கொண்ட பாவேந்தர் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் தம்மை முழுமையாக அர்பணித்துக் கொண்டார். இது தொடங்கி பாரதிதாசனின் படைப்புகள் யாவும் பெரியாரின் கொள்கைகள், தமிழ், தமிழரின் மேம்பாடு எனும் புதிய பாதையில் செல்லத் தொடங்கியது (கோவேந்தன், 1004, p. 209).

**சாதி ஒழிந்திடல் ஒன்று நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று**
**பாதியை நாடு மறந்தால் மற்ற**
**பாதி துலங்குவதில்லை**

(பாரதிதாசன் கவிதைகள், பாரதி உள்ளம்: 1-4)

எனும் பாடல் வரிகள் பாரதிதாசன் பெரியாரின் கொள்கைகளையும் தமிழ், தமிழரின் பெருவாழ்வைப் பேணுதல் என்பதற்கு முதன்மை அளித்தமையையும் வெளிப்படையாகச் சுட்டுகின்றது.

1928ஆம் ஆண்டு தொடங்கி, பெரியாரின் திராவிட இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டதோடு தனது குடும்பத்திலும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை கடைபிடிக்கத் தொடங்கினார். இதனால் தமது குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்க்கும் போக்கினையும் துணிந்து செயல்படுத்தினார். 1929ஆம் ஆண்டு பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளை பாடல், கட்டுரை, கதை போன்ற படைப்பிலக்கிய வடிவில் பகுத்தறிவு ஏடுகளில் எழுதிய முதல் பாவலர் எனும் சிறப்பினைப் பெற்றார். அதோடு 1933 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 31ஆம் தேதி நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் வைக்கப்பட்டிருந்த வருகையாளர் பதிவேட்டில் 'நான் ஒரு நிலையான நாத்திகன்' எனப் பதிவு செய்து கையெழுத்திட்டார் (கோவேந்தன், 1994, p.210). இதுவே பாரதிதாசன் பெரியாரின் கொள்கைகளில் எத்தகைய ஆழ்ந்த பிடிப்புக் கொண்டிருந்தார் என்பதற்குச் சிறந்த சான்றாக அமைந்தது.

பாரதிதாசன் பெரியாருடன் இணைந்த பின்னர் இவரது படைப்புகள் யாவும் பெரியாரின் பகுத்தறிவை வெளிப்படுத்தும் ஆயுதங்களாயின. மேலும் பெரியாரின் மீது அளவிடமுடியாத நன்மதிப்புக் கொண்டிருந்த பாரதிதாசன் பெரியாரை

**"தொண்டு செய்து பழுத்த பழம்தூய**
**தாடி மார்பில் விழும்**

**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
**மனக்குகையில் சிறுத்தை எழும்"**

எனப் புகழ்ந்துரைத்துள்ளார்.

திராவிடக் கொள்கைகளை வலியுறுத்தும் படைப்புகள் பாரதிதாசனின் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற எல்லா இலக்கியங்களிலும் வெளிப்படத் தொடங்கின (வரதராசன், *1992*, p.*352*). இவற்றுள் *1930*ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் கவிதை நூலானது முழுக்க முழுக்கப் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளைப் பிரதிபலிப்பனவாக அமையப் பெற்றது. இக்கவிதை நூலில் பார்ப்பன எதிர்ப்பு, புராண இதிகாச மறுப்பு, சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கைகளுக்கு எதிர்ப்பு போன்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம் (அருணாசலம், *2004*, p.*199*). இதுவல்லாது இந்திய தேசத்தின் விடுதலைக்குச் சாதியப் பாகுபாடுகளும், அதற்குப் பக்கபலமாய் விளங்கும் புராண இதிகாசங்களுமே தடைகளாக விளங்குவதாகவும் தமது கருத்தை முன் வைக்கின்றார் பாரதிதாசன்.

பெரியாருடன் இணைந்து சுயமரியாதைக் கொள்கைகளைத் தமிழகமெங்கும் விதைத்த பாரதிதாசன் தாம் பிறந்த மண்ணில் தந்தை பெரியாரின் கொள்கைகளை நிறுவுவதில் ஆணிவேராகத் திகழ்ந்தார். இதனால் அங்குள்ள மக்களின் எதிர்ப்பையும் சந்தித்தார். ஆயினும் தமது கருத்தில் சற்றும் பின்வாங்காமல் முன்னோக்கிச் சென்றார். அதற்குத் தமது எழுத்தை ஆயுதமாக்கிக் கொண்டார். மேலும், புதுவையில் சுயமரியாதை இயக்கத்தை நிலைபெறச் செய்வதில் முக்கியப் பங்கு வகித்த ம.நோயேல் எனும் செல்வந்தர் இவருக்குப் பக்கபலமாக விளங்கினார். ம.நோயேல், *1929*ஆம் ஆண்டு பாரதிதாசனால் இயற்றப்பட்ட தாழ்த்தப்பட்டார் சமத்துவப் பாட்டு எனும் நெடுங்கவிதை நூலைத் தமது சொந்தச் செலவில் *1930*ஆம் ஆண்டு பதிப்பித்தார். பாரதிதாசன் ஆசிரியராகப் பணியாற்றிய புதுவை முரசு எனும் இதழுக்குப் புரவலராக விளங்கிய ம.நோயேல் பாரதிதாசனின் தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு கவிதை நூலானது ஆத்திச் சூடி, கொன்றை வேந்தன் போன்ற இலக்கியங்களுக்குச் சமமாக மக்களிடம் சென்று சேர்ந்து அதனால் மக்களிடையே சுயமரியாதை விழிப்புணர்வு ஏற்பட வேண்டும் எனப் பெரிதும் பாடுபட்டார் (http://keetru.com).

சுயமரியாதை இயக்கத்தில் பாரதிதாசன் ஒப்பற்ற பாவலராகப் போற்றப்பட்டார். பெரியாரின் அன்பிற்குப் பாத்திரமானார். மேலும் அறிஞர் அண்ணா, கருணாநிதி, நெடுஞ்செழியன் போன்றோருடனும் நட்பை வளர்த்துக் கொண்டார். சுயமரியாதைக் கூட்டம் தோறும் பாரதிதாசனின் கவிதைகள் ஒலிக்கத் தொடங்கின. இதனால் இதற்கு முன்னர் கற்றோர், பாவலர்கள் மத்தியில் புகழ் பெற்றிருந்த பாரதிதாசன் இதற்குப் பின்னர் மக்கள் கவிஞராக வலம் வரத் தொடங்கினார்.

திராவிட இயக்கத்தின் பெரும் பாவலராக விளங்கிய பாரதிதாசனைச் சிறப்பிக்கும் வண்ணம் அவருக்குப் பொற்கிழி வழங்கும் திட்டம் தீட்டப்பட்டது. இதற்காக அறிஞர் அண்ணா தலைமையில் நாடு முழுவதும் நிதி திரட்டும் பணி முடுக்கிவிடப்பட்டது. தமிழகம் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்தும் நிதி சேர்ந்தது. பாரதிதாசனுக்குப் பொற்கிழி வழங்கும் நிகழ்ச்சி *1946*ஆம் ஆண்டு, சென்னை பச்சையப்பன் திடலில் நடைபெற்றது. நாவலர் ச.சோமசுந்தர பாரதியார் பாரதிதாசனுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பு செய்தார். இருபத்தைந்தாயிரம் ரூபாய் நிதி திரட்டப்பட்டது. அறிஞர் அண்ணா பாவேந்தரிடம் 'நான் கொடுக்க நீங்கள் வாங்கக் கூடாது' என்று கூறி அதனைத் தம் கையில் ஏந்தி நிற்கப் பாவேந்தர் பாரதிதாசன் அதனை எடுத்துக் கொண்டார்.

*இவ்விழாவில் பாரதிதாசனுக்குப் புரட்சிக்கவி எனும் பட்டம் வழங்கப்பட்டு அதுமுதல் பாவேந்தர் 'புரட்சிக்கவி பாரதிதாசன்" என்று அழைக்கப்படலானார் (முருகுசுந்தரம், 2014,* pp.*106107).*

*பாரதிதாசனின் வாழ்க்கையைப் பார்க்கும் போது, பாரதியாருக்குக் கிட்டாத சமூகப் பின்புலம் பாரதிதாசனுக்குக் கிட்டியது என்றே கூற வேண்டும். பாரதியாரின் காலத்தில் அரும்பிக்கொண்டிருந்த பொதுவுடைமை இயக்கமும் பகுத்தறிவியக்கமும் பாரதிதாசனின் காலத்தில் விழிப்பும் வளர்ச்சியும் பெற்ற நிலையில் இருந்தது. இத்தகைய சூழல் பாரதிதாசனுக்குப் புதிய தூண்டுதலையும் உத்வேகத்தையும் அளித்தது. பெரியாரின் தலைமையும், அண்ணாவின் தோழமையும், திராவிட இயக்கத்தின் வளர்ச்சியும் பாரதிதாசனின் கவிதை ஆளுமையை மேலும் விரிவடையச் செய்தன. பாரதிதாசனின் கவிதாஞானம் எட்டையபுரத்து பாரதியால் விசாலம் பெற்றது. ஆனால் இவருக்கான கருத்துகள் திராவிடக் கூடாரத்தில் விளைவிக்கப்பட்டன. இவ்விரண்டும் சேர்த்து பாரதிதாசனைப் பார்புகழும் கவிஞனாக்கியது.*

## பாரதிதாசனின் தமிழ் இலக்கியப்பணிகள்

*தமிழ் இலக்கிய வரலாறு எழுதும் யாரும் பாரதிதாசனின் படைப்பிலக்கியத்தைத் தொடாமல் அதனை நிறைவு செய்ய இயலாது என்று கூறும் வகையில் பாரதிதாசனின் தமிழ்ப்பணி அளப்பரிய பங்கினை வகித்துள்ளது. பாவேந்தரைப் பொருத்த வரையில் தமிழும் தமிழர் வாழ்வும் அவருக்கு முதன்மையானவை. 'தமிழுக்கும் அமுதென்று பேர்*

*அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' எனும் வரிகளின் வழி தமிழின் எஞ்ஞான்றும் நிலைத்திருக்கும் தன்மையைக் கூறியவர். கவிதை, சிறுகதை, நாடகம், புதினம், நாடகம் என எல்லாப் படைப்பிலக்கியங்களிலும் தன்னிகரற்று விளங்கியவர் பாவேந்தர். கவிதைக்காகவே குயில் என்ற பத்திரிகையை அவர் நடத்தினார் (வரதராசன், 1992,* p.*349).*

*பாரதிதாசன் பாரதியாரோடு இருந்த காலத்தில் அவர் இயற்றிய சிறுவர் சிறுமியர் தேசியப் பாடல், தொண்டர் நடைப்பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு போன்ற கவிதைகள் 1930ஆம் ஆண்டு, நூல் வடிவம் பெற்றன. இதுவல்லாது சஞ்சீவி பர்வதத்தின் சாரல், தாழ்த்தப்பட்டோர் சமத்துவப் பாட்டு ஆகியனவும் நூலாக்கம் கண்டன. இதில் சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் நூலில் பார்ப்பன எதிர்ப்பு, புராணஇதிகாச எதிர்ப்பு, சாதிய மறுப்பு போன்ற கருத்துகள் வெகுவாக இடம்பெற்றுள்ளன (செயலாபதி, 2004,* p.*271). தொடர்ந்து இதே ஆண்டு டிசம்பர் மாதம் பாரதிதாசன், புதுவை முரசு ஏட்டின் ஆசிரியராகவும் பொறுப்பேற்றார். இந்தக் கால கட்டத்தில் செவ்வாய் உலக யாத்திரை எனும் கட்டுரையை எழுதியது, சுயமரியாதைச் சுடர் எனும் 10 பாடல்கள் அடங்கிய தொகுப்பு நூலை பதிப்பித்தல், சிந்தாமணி எனும் நாடகத்தை எழுதி இயக்கியது, வாரிவயலார் வரலாறு அல்லது கெடுவான் கேடு நினைப்பான் எனும் புதினத்தை (1932) வெளியீடு செய்தது போன்ற இலக்கியப் பணிகளையும் பாரதிதாசன் செய்துள்ளார் (கோவேந்தன், 1994,* p.*210).*

*1934 மாமல்லபுரத்திற்கு முழுநிலா இரவில் தோழர் ப.சீவானந்தம், குருசாமி, குஞ்சிதம், நயினா சுப்பிரமணியம், மயிலை சீனி.வேங்கடசாமி, மாயூரம் நடராசன், சாமி சிதம்பரனார், எசு.வி. லிங்கம், நாரண துரைக்கண்ணனுடன் படகில் செல்லும் போது மாவலிபுரச் செலவு எனும் பாடலைப் புனைந்தார். இதே ஆண்டு இரணியன் அல்லது இணையற்ற வீரன் எனும் நாடகத்தையும் இயற்றினார். இந்நாடகம் பெரியார் தலைமையில் அரங்கேற்றம்*

கண்டது. இந்த நாடகம் 1939ஆம் ஆண்டு நூல் வடிவம் பெற்றது. மேலும் 1937ஆம் ஆண்டு குறுப்பாவியம் நூலை வெளியீடு செய்தார். அதற்கு அடுத்த ஆண்டு பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியைக் குத்தூசி குருசாமி, குஞ்சிதம் குருசாமி ஆகியோர் கடலூர் தி.கி.நாராயணசாமி அவர்களின் பொருளுதவியால் வெளியீடு செய்தனர் (செயலாபதி, 2004, p.68).

இதனைத் தொடர்ந்து எதிர்பாராத முத்தம் பாவியம் (1941), குடும்ப விளக்கு 1 (1942), பாண்டியன் பரிசு பாவியம் (1943), இருண்ட வீடு, காதல் நினைவுகள், நல்ல தீர்ப்பு, அழகின் சிரிப்பு, குடும்ப விளக்கு 2 (1944) ஆகிய நூல்கள் வெளியீடு கண்டன. 1945ஆம் ஆண்டு தமிழியக்கம் என்ற கவிதை நூல் வெளியீடு கண்டது. இதனைப் பாவேந்தர் ஒரே இரவில் இயற்றினார் என்பது இதன் தனிச் சிறப்பு (வரதராசன், 1992, p.349). தமிழின் மேன்மையையும், பிறமொழி ஆதிக்கத்தை எதிர்க்கும் வகையிலும் பாவலரால் படைக்கப்பட்ட இந்நூல் பாவலரின் படைப்புகளுள் முக்கியத்துவம் உடையது (ஞானசேகரன், 2005, pp.17-24). இதற்கு அடுத்த ஆண்டு அமைதி, ஊமை நாடகம் ஆகியன வெளியீடு கண்டது (செயலாபதி, 2004, p.272).

1947ஆம் ஆண்டு பாரதிதாசன் குயில் மாத இதழைத் தொடங்கினார். கவிதைக்காகவே உருவாக்கப்பட்ட இதழ் இது (வரதராசன், 1992, p.349). ஆயினும் இதன் நிர்வாக ஆசிரியர் டி.எம்.ராமன் அவ்விதழைப் பாரதிதாசனின் குரலாகப் பதிப்பிக்காமல் தனது எண்ணப்படி பதிப்பித்ததால் குயில் இதழ் கவிதை இதழ் எனும் நிலைப்பாட்டிலிருந்து மாற்றம் கண்டது. மேலும் ஜூலை மாதம் 1947ஆம் ஆண்டு வெளியீடு கண்ட இதழில் பாரதிதாசனின் பங்களிப்பு தவிர்க்கப்பட்டு டி.எம்.ராமன் தனக்கான முக்கியத்துவத்தை நிலைநிறுத்தும் வண்ணம் வெளியீடு கண்டது. இந்தக் கருத்து வேறுபாடு காரணமாக டாக்டர் ஏ.கிருஷ்ணசாமியின் உதவியுடன், பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னனின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் குயில் புதிய இதழாக முழுக்க முழுக்க பாரதிதாசனின் குரலாகப் பதிப்பிக்கபட்டது (சபீதாஜோசப், 2009, pp.114-115). இதே ஆண்டில் இவரின் சவுமியன் நாடகம், பாரதிதாசன் ஆத்திச்சூடி ஆகியனவும் வெளியீடு கண்டன. இதனைத் தொடர்ந்து 1948ஆம் ஆண்டு காதலா? கடமையா? பாவியம், முல்லைக்காடு, இந்தி எதிர்ப்புப் பாடல்கள், படித்த பெண்கள் எனும் உரை நாடகம், கடற்மேற் குமிழிகள் எனும் பாவியம், குடும்ப விளக்கு 3, திராவிடர் திருப்பாடல், அகத்தியன் விட்ட கரடி ஆகிய நூல்களும் வெளியீடு கண்டன (செயலாபதி, 2004, p.273).

பாரதிதாசன் கவிதைகள் 2ஆம் தொகுதியானது 1949ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இதற்கு அடுத்த ஆண்டு குடும்ப விளக்கு 4 - 5 ஆகிய நூல்களும் வெற்றிகரமாக வெளியீடு கண்டன. 1952ஆம் ஆண்டு இசையமுது இரண்டாம் தொகுதி வெளியிடல். 1951ஆம் ஆண்டு அமிழ்து எது?, கழைக் கூத்தியின் காதல் ஆகியன வெளியீடு கண்டன (முருகுசுந்தரம், 2014, p.116). இதனை அடுத்து 1956ஆம் ஆண்டு தேனருவி இசைப்பாடல்கள் வெளியீடு கண்டது. தொடர்ந்து தாயின் மேல் ஆணை, இளைஞர் இலக்கியம் ஆகிய நூல்கள் 1958ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. இதே ஆண்டு பாவேந்தர் தமிழகப் புலவர் குழுவின் சிறப்புறுப்பினரானார். இதற்கு அடுத்த ஆண்டு பாரதிதாசன் நாடகங்கள், குறிஞ்சித் திட்டு பாவியம் ஆகியன நூல் வடிவம் பெற்றன. இந்தக் கால கட்டத்தில் பாவேந்தர் பிசிராந்தையார் முத்தமிழ் நாடகம் எழுதத் தொடங்கியதோடு, திருக்குறளுக்கு, வள்ளுவர் உள்ளம் என்ற உரை விளக்கமும் எழுதத் தொடங்கினார் (கோவேந்தன், 1994, p.214).

*1961ஆம் ஆண்டு சென்னைக்குக் குடிபெயர்ந்தார் பாவேந்தர். இந்தக் காலத்தில் செக் நாட்டு அறிஞரான கமில்சுவலபில் பாவேந்தரின் பாடல்களைச் செக் மொழியில் மொழிபெயர்த்துப் பதிப்பித்து அதனை பாவேந்தருக்குப் பரிசளித்தார். இது போல பாரதிதாசனின் மறைவிற்குப் பின்னர் அவர் இயற்றிய கடற்மேற் குமிழிகள் எனும் பாவியம் 1979ஆம் ஆண்டு பிரஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டு புதுவையில் வெளியிடப்பட்டது (கோவேந்தன், 1994,* p.*214).*

*பாவேந்தர் சென்னைக்குக் குடிபெயர்ந்த பின்னர் அவர் புதுவையில் பதிப்பித்து வந்த குயில் கிழமை ஏடு மீண்டும் 1962ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் தேதி தொடங்கி சென்னையில் வெளிவரத் தொடங்கியது. அதோடு பாரதிதாசன், கண்ணகி புரட்சிக் காப்பியம், மணிமேகலை வெண்பா ஆகிய தலைப்புகளில் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் தமிழரின் பண்பாட்டுக்கு ஒப்ப இயற்றி வெளியீடு செய்தார். இதன் இலக்கியச் சுவையையும் கருத்துருவையும் கண்டு வியந்த இவரது நண்பர்கள் இவற்றோடு மற்ற மூன்று காப்பியங்களையும் படைக்கக் கோரினர். ஆனால் பாரதிதாசன் அம்முயற்சிகளில் ஈடுபடவில்லை. ஆனால் பாரதிதாசனின் கைவண்ணத்தில் வளையாபதி காப்பியம் நாடக இலக்கியமாகப் படைக்கப்பட்டது* (http://www.koodal.com).

*இதே ஆண்டு ஜனவரி 26ஆம் நாள் பாரதிதாசன் குடியிருந்த தியாகராயநகரில் அனைத்துலகக் கவிஞர் மன்றம் தோற்றம் கண்டது. இதன் தலைமைப் பொறுப்பேற்ற பாரதிதாசன், உலக நாடுகளில் வாழும் கவிஞர்களை ஒன்றிணைத்துச் செயல்படத் திட்டமிட்டுச் செயலாற்றினார். பாரதிதாசனின் மறைவிற்குப் பின்னர் இம்மன்றம் கவிஞர் சுரதா போன்றோரால் பேணப்பட்டு இன்றுவரை செயல்பட்டு வருகின்றது. மேலும் இதே ஆண்டு தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட விழாவில் பாரதிதாசன் இராஜாஜி அவர்களால் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டார் (முருகுசுந்தரம், 2014,* p.*107).*

*1963ஆம் ஆண்டு தோழர் ப.சீவானந்தம் மறைந்தார். அவரின் மறைவுக்காகாப் பாவேந்தர் புகழ் உடம்பிற்குப் புகழ் மாலை எனும் பாடலைப் புனைந்து அவருக்குச் சமர்ப்பணம் செய்தார். இதுவல்லாது இந்திய நாட்டின் மீது சீனாவின் படையெடுப்புக் குறித்து வெகுண்ட பாவேந்தர் அதனை எதிர்த்து பாரத மக்கள் அனைவரையும் வீறுகொண்டு எழச் செய்யுமாறு பாடல்கள் எழுதினார் (அருணாசலம், 2004,* p.*121). திராவிடக் கொள்கைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பின்னர் தமிழ், தமிழர் வாழ்வு என்பதற்கே முக்கியத்துவம் அளித்து வந்த பாரதிதாசன் தம்முடைய இந்தக் கவிதையின் வழி தமது தேசிய உணர்வு பழுதில்லாமல் அப்படியே இருக்கிறது என்பதை நிரூபித்தார்.*

## பாவேந்தரின் திரைப்பிரவேசம்

*மக்களிடம் கருத்துகளை எளிதில் கொண்டு சேர்க்கும் சாதனமாகத் திரைப்படத்துறை வளர்ந்து வருவதைப் பாரதிதாசன் நன்கு அறிந்து வைத்திருந்தார். இதனால் தமது கருத்துகளைப் பாடல், வசனம் போன்றவற்றின் மூலமாக மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகத் திறைப்படத்துறையிலும் பாரதிதாசன் ஈடுபட்டார். இதுவல்லாது இயற்கையாகவே பாடுவது, கதை எழுதுதல், இசைத்துறை நாட்டம் எனக் கலைத்துறையில் பாவேந்தருக்கு இருந்த ஆர்வமானது அவரைத் திரைப்படத்துறையில் ஈடுபாடு கொள்ளச் செய்தது (முருகுசுந்தரம், 2014,* p.*92).*

*பாவேந்தர் 1937 முதல் 1953ஆம் ஆண்டு வரை திரைப்படத்துறையில் தீவிரமாக ஈடுபட்டார். இவர் முதன் முதலில் பாலாமணி அல்லது பக்காத் திருடன் என்கிற*

*திரைப்படத்திற்கு பாடல்களைப் புனைந்தார். இத்திரைப்படத்தில் டி.கே.சண்முகம் கதாநாயகனாக நடித்திருந்தார். அடுத்து 1938ஆம் ஆண்டில் வெளிவந்த இராமானுஜர் எனும் திரைப்படத்திலும் பாவேந்தர் பாடல்களை இயற்றினார். இத்திரைப்படத்தில் தீண்டாமைக்கு எதிரான பாடல்களைப் புனைந்திருந்தது பிரபலமாகப் பேசப்பட்டது. பின்னர் 1940ஆம் ஆண்டு வெளிவந்த காளமேகம் திரைப்படத்தில் பாடலாசிரியராக மட்டும் அல்லாமல் வசனகர்த்தாவாகவும் பணியாற்றினார் பாவேந்தர். இதைத் தொடர்ந்து சுலோசனா (1944), சுபத்திரை (1946), ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி (1947), பொன்முடி (1950), வளையாபதி (1952) ஆகிய திரைப்படங்களிலும் பாரதிதாசன் பாடல், வசனம் ஆகியவற்றைப் புனைந்தார்* (http://tamil.thehindu.com).

*இவற்றுள் பொன்முடி எனும் திரைப்படம் என்.எஸ்.கேவுக்காக இவர் நாடகமாகத் தீட்டிய கதையாகும். அந்தக் காலத்தில் இத்திரைப்படத்தில் கதாநாயகனும் கதாநாயகியும் மிகவும் நெருக்கமாக நடித்திருந்தது மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. மேலும், வளையாபதி திரைப்படத்தில் தமக்குத் தெரியாமல் தாம் எழுதிய சில வசனங்களை மாற்றியதற்காக மாடர்ன் தியேட்டர்ஸ் தமக்களித்த நாற்பதாயிரம் ரூபாய் பணத்தைத் திருப்பிக் கொடுத்ததோடு அவர்களுடன் ஒப்பந்தமாகியிருந்த மேலும் நான்கு படங்களையும் உதறித் தள்ளிவிட்டு வந்தவர் பாவேந்தர். பணத்தை ஒரு பொருட்டாகப் பாரதிதாசன் எண்ணியது கிடையாது என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.*

*தமிழ்த் திரைப்படங்களின் தரமற்ற நிலையைப் பற்றி பாரதிதாசன் அன்றே வருந்தியதுண்டு. தரமான திரைப்படம் எடுக்க வேண்டும் எனும் எண்ணத்துடன்தான் பாரதிதாசன் 1961ஆம் ஆண்டு சென்னைக்குக் குடிபெயர்ந்தார். அதற்காகப் பாரதிதாசன் பிக்சர்ஸ் என்ற பெயரில் நிறுவனம் ஒன்றையும் தொடங்கினார். அதன் பின்னர் பாண்டியன் பரிசு எனும் காப்பியத்தைத் திரைப்படமாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொண்டார். இத்திரைப்படத்தில் சிவாஜி கணேசன், சரோஜா தேவி, எம்.ஆர்.ராதா போன்ற கலைஞர்கள் நடிப்பதற்காக ஒப்பந்தம் ஆகினர். ஆனால் இதற்கான படப்பிடிப்பு தொடங்கவே இல்லை* (http://tamilengine.forumta.net). *இதனை அடுத்து பாரதியாரின் வாழ்க்கையைத் திரைப்படமாகத் தயாரித்துவிட வேண்டும் எனப் பாவேந்தர் பெரிதும் முயற்சிகள் மேற்கொண்டார். இதற்கான கதை, வசனம் ஆகியவற்றையும் எழுதி வைத்திருந்தார். ஆனால் இந்த முயற்சியும் வெற்றியடையவில்லை (கோவேந்தன், 1994,* p.*215).*

*திரைப்படத்துறையைப் பொருத்த வரையில் பொருளீட்டுவது என்பது பாரதிதாசனின் நோக்கமல்ல. இத்துறையின் வாயிலாகத் தமிழையும் நல்ல அறிவார்ந்த செய்திகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்பதற்காகவே அவர் இதில் தொடர் முயற்சிகள் மேற்கொண்டார். ஆனால் அவருக்கு இத்துறை கைகொடுக்கவில்லை. மாறாக இதில் ஓய்வின்றி ஈடுபட்டதால் உடல்நலக் குறைவுக்கும் மன உளைச்சலுக்கும் இலக்கானார்.*

## பாரதிதாசனின் இறுதிக் காலம்

*புரட்சிக்கவி பாரதிதாசன் தமது வாழ்நாளில் துணிவு மிக்கவராகவும் எதையும் சாதித்துக் காட்டும் நெஞ்சுரம் கொண்டவராகவுமே வாழ்ந்தார். எதிலும் வெற்றி காணும் ஆற்றலுடையவர். ஆனாலும் கூட அவரது இறுதிக் காலமானது அவருக்குப் பலவகையிலும் சோதனைகள் நிறைந்த காலமாகவே அமைந்திருந்ததாகத் தெரிகின்றது. இக்காலத்தில் பாவேந்தர் பல நெருக்கடிகளைச் சந்தித்துள்ளார். இக்காலகட்டத்தில் பாரதிதாசன் மேற்கொண்ட பாண்டியன் பரிசு, பாரதியாரின் வாழ்க்கை வரலாறு ஆகிய இரண்டு திரைப்படங்களுக்கான முயற்சிகளும் ஈடேற்றம் காணவில்லை (கோவேந்தன், 1994,* p.*215). இதுவல்லாது தாம் நேசித்த திராவிட இயக்கங்களுடன் மோதல், பொதுவுடைமை*

இயக்கத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு எனப் பாவேந்தர் பல சிக்கல்களுக்கு ஆளானார். இந்தச் சூழலில்தான் பாவேந்தர், ‘பொதுவுடைமைக்குப் பகைவனா? நான்’, என்ற கவிதையை இயற்றினார். இக்கவிதையின் வழி தமது நிலைப்பாட்டைப் பாரதிதாசன் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டினார்.

***“பொது வுடைமைக்குப் பகைவனா? நான்?***
***பொதுவுடைமைக் காரர் எனக்குப் பகைவரா?***
***இல்லவே இல்லை, இரண்டும் சரியில்லை.***

***பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத் தீ***
***என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து***
***கொழுந்துவிட் டெரிந்து தொழிலாள ரிடத்தும்***
***உழைப்பாள ரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்***
***மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரோ?***

***சிங்கார வேலர் முதல் சீவா வரையில்***
***அங்காந் திடுவர் என் பாட்டினுக்கே***
***சுப்பையாவின் தொடர்பும் தோழமையும்***
***எஸ்.ஆர்.சுப்பிர மணியம் இணைப்பும் பிணைப்பும்***
***எப்பொழுதும் எனை லெனினால் ஸ்டாலினால்***
***புதுமை கொணர்ந்த பொதுமை நாட்டை***
***மதுத் தமிழாலே மடுக்கும் என்பாட்டு”***

இப்பாடல் வரிகளின் மூலம் பொதுவுடைமைக்கும் தமக்கும் உள்ள ஆழமான பிணைப்பைக் கவிஞர் வெளிப்படுத்துவதோடு தமது மனதில் உள்ள கோபத்தையும் உணர்த்துகின்றார். மேலும் சிங்கார வேலர், ஜீவா, சுப்பையா, எஸ்.ஆர்.சுப்பிரமணியம் ஆகியோர் மீது பாவேந்தர் எந்த அளவிற்கு மதிப்பு வைத்திருந்தார் என்பதை இப்பாடல் காட்டுகின்றது. இக்கவிதையின் மூலம் எமது வழி பொதுவுடைமையே, அதில் எவ்வித மாற்றமும் கிடையாது என்பதான தனது கொள்கையைப் பிரமாணமாகவே பதிவு செய்துள்ளார் (http://nagailango.weebly.com).

இவ்வாறு தமது இறுதிக் காலத்தில் பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளான பாவேந்தரின் உடல் நலம் 1964ஆம் ஆண்டு பெரிதும் பாதிக்கப்பட்டு அதனால் அவர் சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஏப்ரல் 21ஆம் நாள் பாரதிதாசன் உடல்நலக் குறைவினால் இயற்கை எய்தினார். இதற்கு மறுநாள் புதுவைக் கடற்கரையில் உள்ள பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசனின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. பாரதிதாசன் மறைவு குறித்துத் தமிழக நாளேடுகள் முதற்பக்கச் செய்தி வெளியிட்டன (கோவேந்தன், 1994, p.215).

இவருடைய இறுதி ஊர்வலம் காலை பத்து மணிக்கு அவரது இல்லத்திலிருந்து துவங்கியது. அவரது இறுதி ஊர்வலத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். அதோடு அப்போதைய புதுவை முதலமைச்சர் குபேர் பாவேந்தரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு பாவேந்தரின் உடலுக்கு மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினார். பாவேந்தரின் உடல் எவ்விதச் சடங்குகளும் இன்றி அடக்கம் செய்யப்பட்டது. அதன் பின்னர் அங்கு ஓர் இரங்கல் கூட்டமும் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் ம.பொ.சிவஞானம், ஈ.வி.கே.சம்பத், இரா.நெடுஞ்செழியன், மு.கருணாநிதி, என்.வி.நடராசன், கண்ணதாசன், சுப்பையா (புதுவை பொதுவுடைமைக் கட்சித் தலைவர்), கவி கா.மு.ஷெரிஃப், குத்தூசி குருசாமி, ஆகியோர் பேசினர். அவ்வை டி.கே.சண்முகம்

'துன்பம் நேர்கையில்', 'உலகப்பம்' ஆகிய பாவேந்தரின் பாடல்களைப் பாடினார் (முருகுசுந்தரம், 2014, p.110).

இதனைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டு ஏப்ரல் 21 நாள் புதுவை கடற்கரையைச் சார்ந்த பாப்பம்மா கோயில் இடுகாட்டில் பாரதிதாசன் நினைவு மண்டபம் புதுவை நகராட்சியினரால் எழுப்பப்பட்டது (கோவேந்தன், 1994, p.215). மேலும், 1968ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது சென்னைக் கடற்கரையில் பாவேந்தர் உருவம் நாட்டப் பெற்றது. 1971 ஆம் ஆண்டு தொடங்கி புதுவை அரசு பாவேந்தரின் பிறந்த நாள் விழாவை, அரசு விழாவாகக் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாட ஆணை பிறப்பித்தது. இதுவல்லாது பாவேந்தர் வாழ்ந்த பெருமாள் கோயில் தெரு, 95ஆம் எண் கொண்ட இல்லம் அரசுடைமையாயிற்று. அங்கே புரட்சிப் பாவலர் நினைவு நூலகம், காட்சிக் கூடம் ஆகியனவும் நடந்து வருகின்றன. அதற்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் 29ஆம் நாள் பாவேந்தரின் முழு உருவச் சிலை புதுவை அரசினரால் திறந்து வைக்கப்பெற்றது (செயலாபதி, 2004, p.233).

## பாரதிதாசன் வாழ்க்கையில் பிற குறிப்புகள்

பாரதிதாசன் தமது சிறு வயது முதலே தலைமைத்துவப் பண்புகள் நிறைந்தவராகவே இருந்துள்ளார். ஆசிரியராகப் பணியாற்றும் காலத்தும் இவரது தலைமைத்துவப் பண்புகள் செவ்வனே வெளிப்பட்டன. ஆகவேதான் திராவிடக் கழகத்தில் இருந்த காலத்தில் அவ்வியக்கத்தின் முக்கிய நபர்களுள் ஒருவராக விளங்கினார். 1955ஆம் ஆண்டு புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டுச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் (கோவேந்தன், 1994, p.214). ஆயினும் அரசியல் அவரை விழுங்கிவிடவில்லை. இறுதிவரை அவர் பாவேந்தர் எனும் சிறப்பிலேயே வாழ்ந்தார்.

பாரதிதாசனுக்குப் புத்தகங்களை இரவல் வாங்கும் பழக்கம் கிடையாது. ஒருவரிடம் இருக்கும் புத்தகமானது அவரின் மனைவிக்கு ஒப்பு என்றும், மற்றவருடைய புத்தகத்தை இரவல் வாங்குவது பிறனில் விழைவதற்குச் சமம் என்றும் கருதியவர் பாரதிதாசன். அதோடு மற்றவரின் நூல் தமது கையில் இருந்தால் அதில் உரிமை பாராட்ட முடியாது என்றும், அதனால் திருப்தியான அறிவைப் பெறுவதோ அல்லது அப்புத்தகத்திலிருந்து ஒரு நிறைவோ அடைய இயலாது என்பதுவும் பாரதிதாசனின் ஆழ்ந்த கருத்தாக இருந்துள்ளது (கோவேந்தன், 1994, p.174).

சோழமன்னர்களின் தலைசிறந்த நகரமாக விளங்கிய தஞ்சையில் கரந்தைத் தமிழ்ச் சங்க வளாகத்தில் தமிழகப் புலவர்களின் சிறப்புக் கூட்டமும் ஊர்வலமும் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் 48 புலவர் பெருமக்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவரும் ஊர்திகளில் பின்வர இவர்களுக்குத் தலைமை தாங்கிய பாரதிதாசன் யானையின் மீது அமர்ந்து முரசு, சங்கு, துந்துபி போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்பட ஊர்வலமாகச் சென்றார். இது தமிழகத்தின் மற்ற புலவர்களுக்குக் கிடைக்கபெறாத பெரும் பேறாகும். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியபோது அனபாயச் சோழமன்னனால் அவருக்கு இத்தகைய பெரும் பேறு கிட்டியது. இந்நிகழ்வும் அத்தகைய பெருமைக்கு உரியதாகப் போற்றப்படுகின்றது (சபீதாஜோசப், 2009, pp.108-109).

புரட்சிக்கவி பாரதிதாசனுக்கு இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான ஞானபீடம் விருது வழங்கப் பரிந்துரைக்கப்பட்டது. முதன் முதலில் தமிழ் நாட்டில் இவ்விருது பெறும் நபராகப் பாவேந்தர் அறியப்பட்டார். ஆனால் அவ்விருது பாரதிதாசனை வந்து அடையும் முன்னரே பாரதிதாசன் இயற்கை எய்திவிட்டார். அதனால் அந்த விருது மலையாளக்

*கவிஞர் குரூப்பிற்குச் சென்றது (முருகுசுந்தரம், 2014,* p.*110). பாவேந்தருக்கு அவ்விருது கிடைத்திருந்தால் அதனால் கிடைக்கப்பெறும் ஒரு லட்சம் ரூபாயையும் கவிஞர் நிச்சயம் தமிழ்ப்பணிக்கே செலவிட்டிருப்பார். ஏனெனில் பாவேந்தரின் உள்ளம் அவ்வாறு. அவருக்கு மகிழ்ச்சி தரக்கூடியது தமிழைத் தவிர வேறு எதுவாக இருக்க முடியும்?*

*பாரதிதாசனின் மறைவிற்குப் பின்னர் 1969ஆம் ஆண்டு அவரது பிசிராந்தையார் எனும் நாடகத்திற்கு சாகித்ய அகாடமி விருது வழங்கிச் சிறப்புச் செய்யப்பட்டது. மேலும் பாரதிதாசனின் படைப்புகள் யாவும் தமிழக அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டன. தமிழ் நாட்டிலும், புதுவையிலும் பாரதிதாசன் பெயரால் தெருக்கள் ஊர்கள், அமைப்புகள் போன்றவை தோற்றுவிக்கப்பட்டன. மேலும், இவ்விரண்டு அரசுகளாலும் பாரதிதாசன் பெயரால் பல விருதுகள் வழங்கப்பட்டன (முருகுசுந்தரம், 2014,* p.*111).*

*1982ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் பாவேந்தரின் பெயரால் பாரதிதாசன் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. இவரது பெயரில் பல கலைக்கல்லூரிகளும் பொறியியல் கல்லூரிகளும் தோன்றம் கண்டன. இதுவல்லாது பாவேந்தரின் அடியொற்றி அவரைக் குருவாகக் கொண்டு கவிஞர் சுரதா (பாரதிதாசன் மீதுகொண்ட பற்றால் இராசகோபால் எனும் தன் இயற்பெயரை சுரதாசுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார்), வாணிதாசன், சாலை இளந்திரையன், குருவிக்கரம்பை சண்முகம், பொன்னடியான் போன்ற கவிஞர்கள் பலர் தோன்றிப் புகழ் பெற்றனர்.*

**முடிவுரை**

*வீழ்ச்சியுற்ற தமிழ்ச்சமுதாயம் மறுபடியும் மீட்சி கொள்ளவும், அமுதாம் தமிழ் மொழி தழைத்தோங்கவும், தமிழால் தமிழினம் மேம்படவும் பாடிய பாவலர்களுள் முதன்மையில் வைத்துப் போற்றத் தக்கவர், போற்றப்படுபவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ் இனத்தில் தமிழ் உணர்வு மேலோங்கிடில் தமிழர்க்கு வீழ்ச்சி இல்லை. தமிழ்க் கல்வி மட்டுமே இந்த உணர்வை நிலைநிறுத்த முடியும் எனும் கருத்துடையார் பாரதிதாசன். எனவே, தாழ்ந்திருந்த தமிழையும் தமிழர் மத்தியில் வீழ்ந்திருந்த தமிழ் உணர்வையும் உயர்த்தும் பொருட்டு வீறுமிக்க பாடல்களைப் பாடி விழிப்புணர்ச்சியை விசையோடு விதைத்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.*

*வாழ்நாள் முழுவதும் தமிழ் வாழ்ந்தால் தமிழன் வாழ்வான், தமிழ் மீண்டால்தான் தமிழ்நாடு மீளும், தமிழ் அல்லாமல் தமிழர் முன்னேற்றம் அமையாது எனும் கருத்துகளில் உறுதியான நம்பிக்கையுடன் வாழ்ந்தார். எனவேதான் இவர் தமிழை அமுது என்று மட்டும் எண்ணாமல் உயிராகவும் கருதினார். தமிழ் உடல் இயக்கும் நல்லுயிராய், உயிரை இயக்கும் நுண்கலையாய், வாழ்வை இயக்கும் சுவைப்பாட்டாய்க் கண்டார் பாரதிதாசன். அவர் கண்ட அந்த இனிமை இன்று உலகில் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் அறிந்தோர் மத்தியில் முழங்கிக் கொண்டுதான் இருக்கின்றது.*

## Bibliography

Arunasalam,Mu. (2004). *Rucôvum PâratitâcaIum*. Chennai: The Parker Publications.

Bharathidasan**.** (2006). *Pâratitâcal kavitaika7*. Vol.2. Chennai: Manivasagar Publications.

http://ilakkiyapayilagam.blogspot.my.

http://keetru.com - Putuvai muracum puramcik kaviñarum

http://nagailango.weebly.com - Pâvçntarum potuvumaimaiyum

http://tamil.thehindu.com - PâratitâcaIiI paraparappâIa tiraippayaGam.

http://tamilengine.forumta.net - PâratitâcaI vâ;kkai
http://www.dinamani.com/editorial_articles - Pâratiyum PâratitâcaIum
http://www.koodal.com - Pâvçntar PâratitâcaIiI tiraittami;.
http://www.sangatham.com - PâratitâcaI, Pâratiyâr pâmâlai.
http://www.tamilheritage.org - katar irâmmiGappâmmu
http://www.yarl.com/ - PâratitâcaIum Periyârum.
https://groups.google.com - Pâvçntar pâratitâcaI tam'maip pa__i e;utiya pâmal.
https://ta.wikibooks.org/wiki - PâratitâcaI vâ;kkai..
Koventhan,T. (1994). *Pâvçntam.* Chennai: Koventhan Publications.
Murugusuntharam. (2014). *Intiya ilakkiya ci_pika7 varicaiyil PâratitâcaI.* Chennai: Sahitya Akademi Publications.
Nyanasegaran. (2005). *Pârati mutal kaIimo;i varai.* Chennai: Kadarkuthirai Publications.
Sabethajoseph. (2009). *Puramcikkaviñar pâratitâcaI 100*. Chennai: Nakkiran Publications.
Seyalapathi,Su. (2004). *Pâratitâcal pamaippuka7il Tami;uGarvu*. Chennai: The Parker Publications.
Varatharasan,Mu.(1992), *Tami; Ilakkiya Varalâ_u.* New Delhi: Sahitya Akademic.

# பாரதிதாசனின் தலைமைத்துவப் பண்புகள்

## Leadership qualities of Bharathidasan / Barathidasan's Leardership qualities

**முனைவர் க.சில்லாழி**

Assistant Professor Dr.K.Silllalee[1]

***Abstract***

Bharathidasan is a great poet who lived for the development of the Tamil people and Tamil language. He created pieces of literature with perpetual quality and fame. He introduced new genres in Tamil literature. He was called a revolutionary Poet, because of his radical ideas. He did not merely write but lived what he wrote. This takes him to the summit of the leadership quality. The Paper delves deep into the leadership qualities of Bharathidasan in his works.

Key Words : Bharathidasan, Leadership Qualities, Poetry

### முன்னுரை

தமிழ் அன்னை எத்தனையோ புலவர் பெருமக்களை ஈன்றெடுத்த போதும் அவர்களுள் ஒருசிலர் மட்டுமே மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்றவர்களாக விளங்குவதை மறுக்க இயலாது. தமிழ் இலக்கிய வரலாற்றில் தன்னிகரற்ற பெரும் பாவலர்களாக விளங்கக்கூடிய புலவர்கள் யாவரும் (தொல்காப்பியர், நக்கீரர், திருவள்ளுவர், ஔவையார், இளங்கோவடிகள், கம்பன், பாரதியார்) மிகச் சிறந்த தலைமைத்துவப் பண்புகளையும் உடையவர்களாக விளங்கியிருப்பது அவர்களின் படைப்பிலக்கியங்கள் வாயிலாகவும், வாழ்க்கை வரலாற்றினை ஆய்வு செய்வதன் மூலமாகவும் தெளிவுபட அறிய முடிகின்றது. அத்தகைய ஒப்பற்ற கவிகளுள் புரட்சிக்கவி பாரதிதாசனும் தனித்துவம் சிறந்த தலைமைத்துவப் பண்புகளும் உடையவராகவே காணப்படுகின்றார். பாவேந்தர் தமது தமிழ்ப் புலமையிலும் கவி வளத்திலும் யாருக்கும் ஒப்புவமையாகார். அது போலவே இவரிடம் குடிகொண்ட தலைமைத்துவப் பண்பும் இவரின் புகழுக்கு முக்கியக் காரணமாக விளங்குன்றது.

பாவேந்தரிடம் குடிகொண்ட தலைமைத்துவப் பண்புகள் யாவும் இவருடைய படைப்பிலக்கியங்களில் நிறைவாகவே காணப்படுகின்றன. அதே வேளையில் சொல்லொன்று செயலொன்று என்றில்லாமல் தமது படைப்பிலக்கியங்களில் வெளிப்படும் தலைமைத்துவப் பண்புகளை தமது வாழ்க்கையிலும் கடைபிடித்து வாழ்ந்தவர் பாவேந்தர். பாவேந்தரிடம் விளங்கிய தலைமைத்துவப் பண்புகளை தலைமைத்துவக் கோட்பாட்டினை முன்னிறுத்தி ஆய்வு செய்து விளக்கப்படுத்தும் நோக்கிலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தலைமைத்துவம்

தலைமைத்துவப் பண்பு என்பது ஓர் ஆற்றல் மிக்க கலை. இது சமூகவியலில் உள்ள மிக முக்கியமான நிலைப்பாடு ஆகும் (Chemers, 1997, p.1). தலைமைத்துவப் பண்பானது

[1]The author is an Assistant Professor in the Department of Modern languages, University Tunku Abdul Rahman, Malaysia. silllalee@yahoo.com

ஒவ்வொருவரிடமும் உள்ளதாகவும் மேலும் இது பிறக்கும் போதே ஒருவரிடமிருக்கும் தனித்துவப் பண்பாகவும் அறியப்படுகிறது. ஒருவர் பிறந்து வளரும் சூழல், அவருக்குக் கிடைக்கப்பெறும் வாய்ப்புகள், அவர் பெற்ற அறிவுத்திறம் போன்ற கூறுகளே ஒருவரது தலைமைத்துவமானது எத்தகைய உச்சத்தை அடையும் என நிர்ணயிக்கப்படுகின்றது (Murray, 1966, p.18). பொதுவில் தலைமைத்துவம் என்றவுடன் ஆசிரியர், கதாநாயகன், ஆட்சியாளர் அல்லது அரசியல்வாதி ஆகிய இம்மூவருமே ஒருவரது மனதில் தலைவர்களாக மிளிர்வதுண்டு. ஆசிரியரானவர், ஒரு மனிதனின் பிள்ளைப் பருவத்திலேயே ஆளுமையின் அடிப்படையில் தனது தலைமைத்துவப் பண்பை நிலைநிறுத்துகின்றார். கதாநாயகனானவர் தனது செயற்கரிய செயல்களால் தலைமைத்துவப் பண்பு மிக்கவராக மக்கள் மனதில் இடம் பிடிக்கின்றார். ஆட்சியாளர் அல்லது அரசியல்வாதிகள் தங்களின் அதிகார பலத்தாலும், தங்களின் ஆதரவாளர்களின் செல்வாக்கை முன்னிறுத்தியும் தங்களைத் தலைவர்களாக நிலைபெறச் செய்கின்றனர் (George Manning & Kent Curtis, 2007, p.3). மேலும், வேபர் எனும் மேலை நாட்டு அறிஞர் (Max Weber) ஒரு தலைவர் என்பவர் மூன்று நிலைகளில் தோற்றம் காண்பதாகக் குறிப்பிடுகின்றார். அவை *(1947,* p.*376):*

| | | |
|---|---|---|
| i) பரம்பரை | - | பரம்பரையாக வாரிசுகளுக்கு வழங்கப்படும் பதவி. (மன்னர் பாரம்பரியம் இந்த முறையை உடையது) |
| ii) தனித்துவ ஆளுமை | - | ஒருவர் தம்மிடம் உள்ள தனித்துவத்தால் (வீரம், அறிவு, மக்களைக் கவர்தல், தியாகம் போன்றவை) தலைவராதல். |
| iii) சட்டம் அல்லது விதிமுறை | - | சட்டத்தின் விதிப்படி அதிகாரத்தை முன்னிறுத்தித் தலைவராதல். |

இவ்வாறு மூன்று நிலைகளில் ஒருவர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட இவர்களிடம் முழுமையாகத் தலைமைத்துவப் பண்புகள் நிலைபெற்றிருக்கும் என்று கூறுவதற்கில்லை.

தலைமைத்துவம் என்பது பொதுவில் மக்களை அல்லது ஒரு சமூகத்தினரைத் தங்களின் கொள்கையின் பால் கவர்ந்திழுத்து அக்கொள்கையை அடைய வேண்டி அதனைப் பின்பற்றுவோரை வழிநடத்திச் செல்லும் ஆற்றல் எனப் பொருள் கூறப்படுகின்றது (Chemers, 1997, p.1). இவ்வாறு மக்களின் மனதில் தலைவர்களாக நிலைபெற நினைப்பவர்கள் தங்களின் இலக்கு என்ன என்பதில் தெளிவுடையவர்களாக இருத்தல் வேண்டும் என்பது தலைமைத்துவப் பண்பில் முக்கியக் கூறாகக் கருதப்படுகின்றது. மேலும் தலைவனானவன் தனது கொள்கை, அதற்கான இலக்கு ஆகிய இரண்டையும் தம்மைப் பின்பற்றும் மக்களின் மனதில் இவை அவர்களுக்கான கொள்கை, இலக்கு என ஐயுறவின்றி முழுமையாக நம்பிக்கை கொள்ளச் செய்தல் வேண்டும் (Jacobs, 1990, p.281). இதுவல்லாது தாம் வழிநடத்திச் செல்லும் பாதையில் தம்மைப் பின்பற்றுவோரிடத்தில் எழுகின்ற சந்தேகங்களைக் களைந்து, அவர்களுக்கு வரும் தொல்லைகளில் இருந்து அவர்களைக் காத்து, அவர்களுக்குத் தொடர்ந்து தன்முனைப்பையும் நம்பிக்கையையும் கொடுத்து இலக்கை அடைவது என்பது ஒருவரை வெற்றிமிக்க தலைமைத்துவப் பண்புடையவராக நிலைநிறுத்தும் (Department of the Army, 1999. pp.1-2).

மேலும், தலைவர்களால் வகுக்கப்படுகின்ற கொள்கைகளும் அதற்கான இலக்கும் பொதுநலத்தையும் மக்களுக்கான முக்கியத்துவத்தையும் முன்னிறுத்தி அமையப் பெறுதல் ஒரு நல்ல தலைமைக்குச் சான்றாகும். இவ்வாறு பொதுநலத்தை முன்னிறுத்தி அமையப்பெறும் தலைமைத்துவமானது மிக்க வலிமையுடையதாக விளங்குவதோடு, மக்களுக்கு உத்வேகத்தைக் கொடுத்து தியாக உள்ளத்துடன் போராடவும் வழிவகுக்கும் (Jacobs, 1990, p.281). அதுமட்டுமன்றி, தலைவனானவன் மக்களோடு சேர்ந்து இலக்கை அடைவதற்காகக் கைகோர்த்து உழைப்பவனாகவும் இருத்தல் வேண்டும். அவனே நல்ல தலைவன் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றான். இது அரசியல் ஆட்சி எனத் தொடங்கி

குடும்பத் தலைமைத்துவம் வரையில் பொருந்தும் (Bernard, 1985, 150). இதுவே நல்ல தலைமைத்துவமாகப் போற்றப்படுகின்றது.

## தலைமைத்துவக் கோட்பாடு (Theory of Leadership)

தமது தலைமைத்துவத்தின் பால் ஈர்ப்புகொள்ளச் செய்தல், தம்மைத் தலைவராக ஏற்றுப் பின்பற்றும் ஒரு மக்கள் கூட்டத்தைக் கொண்டிருத்தல் ஆகிய இரண்டையும் உடையவரையே தலைவர் அல்லது தலைமைத்துவப் பண்புடையர் எனத் தலைமைத்துவக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. இவ்விரண்டு அடிப்படைத் தகுதிகளையும் அடையப்பெற்ற ஒருவர் மூன்று நிலைகளில் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். அவை (Murray, 1966, p.15):-

i. தனித்துவத்தினால் தலைவராதல்

ii. தகுதியின் அடிப்படையில் தலைவராதல்

iii. சூழ்நிலையின் காரணத்தால் தலைவராதல்

ஆகும். மேற்கண்ட மூன்று நிலைகளில் ஒருவர் தலைவராக நிர்ணயிக்கப்பட்ட போதும், இவ்வாறு தலைவர்களானவர்கள் அனைவரும் வரலாற்றில் இடம்பிடித்த ஆற்றல் மிக்க தலைவர்களாக விளங்குவர் என்று கூறுவதற்கில்லை. காரணம் இவ்வாறு தலைவர்களாகும் அனைவரிடத்திலும் தலைமைத்துவக் கோட்பாடு குறிப்பிடும் தலைமைத்துவப் பண்புகள் யாவும் முழுமையாக இருந்திருக்க வாய்ப்பில்லை. இச்சிந்தனையின் அடிப்படையில் ஒருவர் மிகச்சிறந்த தலைவராக மிளிர்வதற்குத் தலைமைத்துவக் கோட்பாடு சில முதன்மையான தலைமைத்துவப் பண்புகளை முன்வைக்கின்றது (Manning & Curtis, 2007, pp.29-31).

| | | | |
|---|---|---|---|
| 1) | அறிவுடைமை | - | எத்தகைய சூழ்நிலையையும் அறிவாலும் திறனாலும் எதிர்கொண்டு ஏற்ற காரியத்தை செம்மையாகச் செய்து முடித்தல். |
| 2) | நிலைத்தன்மை | - | தாம் கொண்ட கொள்கையைப் பின்பற்றுவதில் சூழ்நிலை, உணர்ச்சிகள், சிக்கல்கள் போன்ற எதற்கும் அசைந்து கொடுக்காது நிலையாக முன்னோக்கிச் செல்லுதல். அதே வேளையில் தற்போதைய சூழ்நிலை மாற்றங்களை உற்று கவனித்து (அறிவியல் & தொழில்நுட்பம்) அதன் போக்கிலேயே காரியங்களை ஆற்றி வெற்றி காணுதல். |
| 3) | பொதுநலம் | - | தாம் எடுக்கும் எந்த காரியமும் சற்றும் சுயநலமில்லாமல் பொதுநலத்தைப் பேணுவதாக அமைதல் வேண்டும். பிறர் மீது பரிவு கொள்ளுதல் வேண்டும். |
| 4) | தன்னம்பிக்கை | - | எதையும் சாதிக்க முடியும் எனும் அசைக்க முடியாத மன உறுதி. |
| 5) | எழிற்சி | - | சோர்வின்றி உத்வேகத்தோடு வீறு கொண்டு முன்னோக்கிச் செல்வதோடு மக்களையும் அதே வேகத்தோடு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லுதல். |
| 6) | ஆளுமை | - | தனது தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்ட நிலையில் தனித்துவமாகக் காட்சி தந்து கவர்தல். |
| 7) | துணிவு | - | எந்தச் சோதனைகளையும் கண்டு அஞ்சாமல் முன்னேறுதல். |

இத்தகைய தலைமைத்துவப் பண்புக் கூறுகளை உடைய தலைவைகள் மிகச் சிறிய சமுதாயத்தின் வழிகாட்டிகளாக இருந்தாலும் கூட மக்கள் மனதில் நிலையான தலைவர்களாக வாழ்வர் என இக்கோட்பாடு இயம்புகின்றது (maxwel, 2008, p.33). மேலும், இத்தகைய பண்புகளால் உருவான தலைவர்களே கொள்கையுடைமை, செயலாற்றுதல், சூழலைப் புரிந்து கொள்ளல், தூரநோக்குடைமை, பொதுவுடைமைச் சிந்தனை ஆகிய ஐந்து தலைமைத்துவ பொதுச் சட்டங்களின்படி மக்களை வழிநடத்துவர் எனப்படுகின்றது (Hemphill, 1949, pp.7-8).

## அறிவுடைமை

அறிவுடைமை தலைமைத்துவத்தில் தலையாயப் பண்பாகக் கருதப்படுகின்றது. எந்த ஒன்றனையும் திட்டமிடுவதற்கும் செயலாற்றுவதற்கும் அறிவுடைமை மிக அவசியமாகும். இதுவே சிந்தனைக்கு வித்திட்டு செயலாக்கத்திற்கு இட்டுச் செல்லும். வள்ளுவப் பெருந்தகை அறிவுடைமை பற்றிக் குறிப்பிடும் போது அறிவுடையோர் அழிவிலிருந்து காப்பவராவும் (குறள்: 421), எதிலும் சிரத்தையும் நுட்பமும் உடையவராகவும் (குறள்: 424), உலகத்தோடு ஒட்ட ஒழுகக் கூடியவராகவும் (குறள்: 426), எதிர்காலத்தை அறிந்த தூர நோக்குச் சிந்தனையுடையவராகவும் (குறள்: 427-429) விளங்குவர் எனக் குறிப்பிடுகின்றார். இவை அனைத்தும் தலைமைத்துவப் பண்புடையோருக்குச் சாலப் பொருந்தும். மேலும், அறிவோடு ஒன்றனைச் செயல்படுத்தும் திறமையும் இருக்கும் போதுதான் அந்த அறிவினால் நன்மை விளைகின்றது.

அறிவுடைமை எனும் தலைமைத்துவப் பண்பானது பாவேந்தரிடத்தில் இளமைக்காலம் தொட்டே நிறைவாகக் காணப்படுவது ஆய்வின் வழி அறியப்படுகின்றது. பாவேந்தர் கல்வி கேள்விகளில் சிறந்தவர். அதிலும் கெட்டிக்காரர் என்றே கூற வேண்டும். இவர் தனது 16 வது வயதில் கால்வே கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருந்த போது மூன்று ஆண்டுகள் பயில வேண்டிய இளங்கலைப் பட்டப்படிப்பை இரண்டு ஆண்டுகளிலேயே நிறைவு செய்தார். அதோடு அந்தக் கல்லூரியில் முதன்மை மாணவராகவும் தேர்ச்சி பெற்றார். இதுவே இவரின் அறிவின் தனித்துவத்திற்குச் சான்று (முருகுசுந்தரம், 2014, p.9).

மேலும், பாரதிதாசன் நிரவியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய போது இவர் 18 வயதே நிரம்பியவராக இருந்த காரணத்தால் நிரவி ஊர் மக்கள் இவரை ஒரு பொருட்டாக மதித்ததே கிடையாது. ஒருமுறை அவ்வூரில் தமிழில் ஆழ்ந்த புலமையுடைய இராமசாமிப் புலவர் என்பவர் பாரதிதாசனை ஏளனமாக எண்ணி அவரின் தமிழ்ப்புலமையைச் சோதிப்பதற்காக பெரியபுராணத்தில் திருஞானசம்பந்த புராணத்திலிருந்து உமையம்மை, மங்கையர்க்கரசி ஆகிய இருவருள் சம்பந்தரிடத்தில் தாய்மையுள்ளத்தில் சிறந்தவர் யார் எனக் கேட்டுள்ளார். அதற்குப் பாவேந்தர், உமையம்மையானவள் சம்பந்தர் அழுத பின்னர் தான் பால் கொடுத்ததாகவும் மங்கையர்கரசியாரோ சீர்காழியில் சம்பந்தர் அழுத அந்த கடந்த காலக் காட்சியைச் செவிமெடுத்ததும் அவரது கொங்கைகள் விம்மிப் பால் சுரந்தன என்றும் அதனால் மங்கையர்க்கரசியாரே சிறந்த தாயுள்ளம் கொண்டவர் எனப் பதிலளித்து அப்புலவரை வியக்கச் செய்தார். பாரதிதாசனின் ஆழ்ந்த அறிவுடைமைக்கு இந்நிகழ்வும் சிறந்த சான்று (முருகுசுந்தரம், 2014, p.11).

இதைப் போலவே தாம் எடுக்கும் எந்த காரியத்தையும் திறமையுடன் தூரநோக்குச் சிந்தனையுடன் செயல்படுத்தும் பண்பும் பாவேந்தரிடம் இருந்தமை அறியப்படுகின்றது. பாரதிதாசன் 1962ஆம் ஆண்டு அனைத்துலகத் தமிழ்க்கவி மன்றத்தைத் தோற்றுவித்து அதன் தலைவரானார். அதனைத் திறம்படவும் வழிநடத்தினார். அம்மன்றமானது உலகக்

*கவிஞர்கள் யாவரையும் ஒன்றிணைக்கும் மன்றமாக அமைய வேண்டும் எனத் தமது தூரநோக்குச் சிந்தனையை அப்போதே பதிவு செய்தவர் பாவேந்தர் (கோவேந்தன், 1994,* p.*214). இதுவல்லாது, இந்தித் திணிப்பால் தமிழின் ஆளுமை தமிழ்நாட்டில் வீழ்ச்சி காணும் என்பதை உணர்ந்த பாவேந்தர் அதனைத் தடுப்பதற்கான போராட்டத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் (சபாபதி, 1990,* p.*35).*

*இத்தகைய செயல்கள் யாவும் பாவேந்தரின் அறிவுடைமைக்குத் தக்க சான்றுகளாக அமைவதோடு அவரின் தலைமைத்துவப் பண்பை செவ்வனே வெளிப்படுத்துவதையும் உணர்த்துகின்றது.*

## நிலைத்தன்மை

*நிலைத்தன்மையானது ஒருவர் தம்முடைய கொள்கையில் நிலைபெயராது உறுதியாக நிற்கும் குணத்தைக் குறிக்கின்றது. எத்தகைய சோதனைகள் வந்தாலும் உறுதியுடன் முன்னேறிச் செல்லும் ஆற்றலை உடையவரே நிலைத்தன்மை உடையவராவார். மேலும் தற்போதைய சூழ்நிலை அறிவியல், தொழில்நுட்பம், அரசியல், சமூகவியல் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு உலகியலின் போக்கிலேயே காரியங்களைச் செயல்படுத்தி வெற்றி காணும் தன்மையும் இப்பண்பில் அடங்கும்* (Manning & Curtis, 2007, p.30).

*பாரதிதாசனிடத்தில் இந்தத் தலைமைத்துவப் பண்பு இருந்தமையும் அவை பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்பட்டமையும் ஆய்வின் வழி அறியப்படுகின்றது. பாரதிதாசன் தொடக்கத்தில் ஆத்திகராக இருந்தவர். இவரது குடும்பமும் வீரசைவ சமயப் பாரம்பரியத்திலும் வள்ளலார் கொள்கையிலும் தோய்ந்த குடும்பம் (முருகுசுந்தரம், 2014,* p.*8). ஆனால் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட பின்னர் நாத்திகரான புரட்சிக்கவி தமது இறுதி மூச்சு உள்ளவரை அக்கொள்கையிலிருந்து மாறவில்லை. மேலும் 1933ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் கலந்து கொண்டு அங்கு வைக்கப்பட்டிருந்த வருகையாளர் பதிவேட்டில் 'நான் ஒரு நிரந்தரமான நாத்திகன்' என எழுதிக் கையெழுத்திட்டுப் பதிவு செய்தார் (கோவேந்தன், 1994,* p.*210).*

*பாரதிதாசன் தம்மை முழுமையாகப் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் கரைத்துக் கொண்ட போதிலும், தமது பெயரைப் பாரதிதாசன் என்றே பேணி வந்தார். இது சுயமரியாதை இயக்கத்தினரால் சாடப்பட்டது. பாரதி எனும் பார்ப்பனனுக்கு தாசன் எனும் அடிமையாக பாரதிதாசனைக் குற்றம் சட்டினர். ஆனால் பாரதிதாசனோ 'சாதியத்திற்கு எதிர்ப்பாகப் பாரதியைப் போல் குரல் கொடுத்தவர் யாருமில்லை ஆதலால் அவருக்குத் தாம் தாசன்தான்' எனத் தனது நிலைத்தன்மை மாறாது உறுதியாகத் தமது நிலைப்பாட்டில் நின்றார்* (http://www.dinamani.com/editorial_articles).

*பாரதிக்கு தாசனாக இருந்த போதும் பாவேந்தர் தனது கொள்கையில் இருந்து சற்றும் நிலை பெயராதவராகவே விளங்கியவர். பாரதிதாசன் நாத்திகர், தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தியவர், இந்தித் திணிப்பை எதிர்த்தவர். ஆனால் பாரதிதாசனின் குருவான பாரதியோ இறைநம்பிக்கையாளர், இந்திய ஒருமைப்பாட்டுக் கொள்கையாளர், சமஸ்கிருத மொழியின் பால் எதிர்ப்பு குணமற்றவர் (ஞானசேகரன், 2005,* p.*9). ஆயினும் கூட பாரதிதாசன் தனது கொள்கைகளில் பின்வாங்காதவர். அதனால்தான் பாரதியைப் போலவே பாரதிதாசனும் தன்னிகரற்றுப் புகழ்படைத்தார்.*

*பொதுவில் ஒருவருடைய தாசனாக மற்றொருவர் மாறினால் இவர்களுக்கென்று தனித் தன்மையோ நிலைப்பாடோ இல்லாமல் போய்விடுதல் நிகழக் கூடும். ஆனால் தாசனானவரிடம் தனித்த நிலைத்தன்மை இருப்பின் தாசனும் தம் தலைவனைப் போல தனித்துவத்துடன் விளங்கக் கூடும். இராமாயணத்தில் இராமபிரான் அக்காவியத்தின் தன்னிகரற்ற நாயகனாக விளங்கினார். ஆனால் அதே காவியத்தின் இடையில் தோன்றிய இராமனின் தாசானுதாசனாகிய அனுமனும் இராமனைப் போலவே தனித்துவத்துடன் மிளிர்ந்தார். இராமனைப் போலவே வழிபடு தெய்வமாக மக்கள் மனதில் நிலைபெற்றார் (இராமாயணம், சுந்தரகாண்டம்). இதற்கு அனுமனிடம் குடிகொண்ட தனித்த நிலைத்தன்மையே அடிப்படையாகியது என்று கூறுவது பொருத்தமாகும். அது போலவே பாவேந்தரும் பாரதிக்குத் தாசனாகத் தன்னை வரித்துக் கொண்டாலும் தனது நிலைத்தன்மை எனும் தலைமைத்துவப் பண்பில் மிளிர்ந்ததால் வரலாற்றில் தனித்த இடைத்தைப் பிடித்தவராகின்றார்.*

*பாரதிதாசன் தமது கொள்கைகளைப் பல்வேறு இலக்கிய வடிவில் புனைந்து மக்களிடம் விழிப்புணர்ச்சியைத் தோன்றச் செய்தார். ஆயினும் திரைப்படத்துறை மக்களிடையே மிகச்சிறந்த தகவல் பரப்புச் சாதனமாக விளங்கியதை மறுத்தாரில்லை. அப்போதைய காலத்தில் ஏற்பட்ட புதிய தொழில் நுட்ப வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு மக்களிடம் தமது கொள்கைகளைப் பரப்பும் பணியிலும் முயற்சிகளை மேற்கொண்டார் (முருகுசுந்தரம், **2014**,* p.*92*). *பொதுவில் தாம் அறியாத தமக்குப் பழக்கமில்லாத புதிய துறையில் ஈடுபட யாரும் அஞ்சுவது இயற்கையே. ஆனால் தமது கொள்கையை மக்களிடம் சேர்ப்பிப்பதற்காக எதனையும் எதிர்கொண்டு போராடும் நிலைத்தன்மையும் தற்கால வளர்ச்சியினை உள்வாங்கிக் கொண்டு அதன் போக்கில் செயல்பட்டு வெற்றி காணும் பண்பும் பாரதிதாசனிடம் இருந்தமை அவரின் தலைமைத்துவப் பண்பிற்கு முத்தாய்ப்பாய் அமைந்தது எனலாம்.*

**பொதுநலம்**

*ஒரு தலைவனானவன் தாம் ஆற்றுகின்ற எத்தகைய காரியமும் தன்நலத்தை எண்ணிச் செய்வதாக அல்லாமல் பொதுநலத்தையும் தம்மைச் சர்ந்தவர்களின் முன்னேற்றத்தையும் குறித்து ஆற்றுவது மிகச்சிறந்த தலைமைத்துவப் பண்பாகும். ஆகவே தலைமைத்துவப் பண்புடையவர் வகுக்கின்ற கொள்கைகளும் அதற்கான திட்டங்களும் பொதுநலத்தை முன்னிறுத்துவதாக அமைதல் வேண்டும்* (Hemphill, 1949, p.8). *பாரதிதாசனின் வாழ்க்கையானது தமிழ், தமிழர் முன்னேற்றம் எனும் இரு பெரும் பொதுநலச் சிந்தனையை முன்னிறுத்தியே செலுத்தப்பட்டுள்ளது (சபாபதி, **1990**,* pp.*32–33*). *இவருடைய படைப்புகளே இவற்றிற்குத் தக்க சான்றுகளாகின்றன.*

*இதுவல்லாது சாதியத்திற்கு எதிரான இவரது கொள்கைப் பிடிப்பு (இராஜுᵉ, **1990**,* p.*70*), *தேச சுதந்திரத்திற்கான இவரது போராட்டம், காந்தியத்திற்கு உறுதுணையாக நின்ற வீரம் (அருணாசலம், **2004**,* p.*116*), *பொதுவுடைமைக் கொள்கையில் இவர் கொண்ட பிடிப்பு (வரதராசன், **1992**,* p.*352*) *என இவரது வாழ்க்கையில் எங்கும் பொதுச் சிந்தனை அல்லாமல் தன்னநலப்போக்கைக் காண இயலவில்லை.*

**சாதி ஒழிந்திடல் ஒன்று நல்ல**
**தமிழ் வளர்த்தல் மற்றொன்று**
**பாதியை நாடு மறந்தால் மற்ற**
**பாதி துலங்குவதில்லை**

*(பாரதிதாசன் கவிதைகள், பாரதி உள்ளம்: 1-4)*

எனும் பாடல் வரிகள் பாரதியின் மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு அடிப்படையாகும் பொதுநலச் சிந்தனையைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றது.

பாரதிதாசனுக்கு 1964ஆம் ஆண்டு ஞானபீட விருது வழங்கப்படப் போவதாக முன்மொழியப்பட்டது. அதற்கான பரிசுத் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படவிருந்தது. அப்பரிசுத்தொகை கிடைக்கப்பெற்றால் அதைக் கொண்டு ஒரு அச்சு இயந்திரம் வாங்கி மேலும் பல தமிழ் இலக்கியங்களை அச்சிட்டுத் தமிழ் வளர்ப்பேன் எனப் பாரதிதாசன் தம் மனைவியிடம் கூறியதாகக் குறிப்புண்டு (சபீதாஜோசப், 2009, p.110). இதுதான் பாரதிதாசனின் பொதுநலச் சிந்தனை. தமிழுக்காக எதனையும் செய்யும் பொதுவுடைமைச் சிந்தனை.

இவ்வாறு பொதுநலத்தை மையமிட்டே தமது வாழ்க்கையைச் செலுத்திய பாரதிதாசனை ஒரு முறை பொதுவுடைமைக்கு எதிர்ப்பானவர் எனப் பொதுவுடைமை இயக்கத்தினர் குற்றம் சாட்டிய போதும் அதனால் மனம் தளராமல் தமக்கே உரிய தலைமைத்துவப் பண்பினால் அதனையும் தனது பேனாவின் மை கொண்டு முறியடித்தார் பாவேந்தர். ‘பொதுவுடைமைக்குப் பகைவனா? நான்’, என்ற கவிதையை இயற்றினார். இக்கவிதையின் வழி தமது நிலைப்பாட்டைப் பாரதிதாசன் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டினார்.

**“பொது வுடைமைக்குப் பகைவனா? நான்?**
**பொதுவுடைமைக் காரர் எனக்குப் பகைவரா?**
**இல்லவே இல்லை, இரண்டும் சரியில்லை.**

**பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத் தீ**
**என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து**
**கொழுந்துவிட் டெரிந்து தொழிலாள ரிடத்தும்**
**உழைப்பாள ரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்**
**மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரோ?**

**சிங்கார வேலர் முதல் சீவா வரையில்**
**அங்காந் திடுவர் என் பாட்டினுக்கே**
**சுப்பையாவின் தொடர்பும் தோழமையும்**
**எஸ்.ஆர்.சுப்பிர மணியம் இணைப்பும் பிணைப்பும்**
**எப்பொழுதும் எனை லெனினால் ஸ்டாலினால்**
**புதுமை கொணர்ந்த பொதுமை நாட்டை**
**மதுத் தமிழாலே மடுக்கும் என்பாட்டு”**

இப்பாடல் வரிகளின் மூலம் பொதுவுடைமைக்கும் தமக்கும் உள்ள ஆழமான பிணைப்பைக் கவிஞர் உணர்த்துவதோடு தமது மனதில் உள்ள கோபத்தையும் நயமாக வெளிப்படுத்துகிறார். கவிஞருக்கே உரிய தனித்துவம் இது. இவ்வாறு தனது வாழ்க்கையின் பல சூழல்களிலும் சோதனைகளிலும் தனது பொதுவுடைமச் சிந்தனையின் மூலம் தன்னிடம் இருந்த தன்னிகரில்லாத் தலைமைத்துவப் பண்பில் மிளிர்ந்தவர் பாவேந்தர்.

## தன்னம்பிக்கை

பாரதிதாசனிடம் மனவலிமை மிக அதிகம். தன்னால் எதையும் சாதிக்க முடியும் எனும் தலைத்துவப் பண்பு இவரிடம் சிறந்திருந்தமை பல நிகழ்வுகளின் மூலம் வெளிப்படையாகவே காண முடிகின்றது. பாரதியைத் தமது குருவாகக் கொண்டவர்

பாரதிதாசன். தமது கவிதை நடையில் மாற்றம் உண்டானதற்கும் தம்முடைய கவிதை வளம் பெறுவதற்கும் பாரதியே காரணமானவர் என்பதை,

**"பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்**
**காடு முழுதும் கண்டபின் கடைசியாய்**
**சுப்பிர மண்ய பாரதி தோன்றினன்**
**பாட்டுக்குப் புதுமுறை புதுநடை"**

(பாவேந்தர் பாரதிதாசன் தம்மைப் பற்றி எழுதிய பாடல்: *39-42*, https://groups.google.com)

எனும் கவிதையின் வழி பாரதிதாசனே கூறுவது இவ்விடம் சுட்டத்தக்கது. ஆயினும் கூட பாரதியை விட பாரதிதாசனின் தமிழ் இலக்கண இலக்கிய ஆளுமை மேம்பட்டது. ஒருமுறை புதுச்சேரி அரவிந்தர் ஆசிரமத்தில் இருந்த பிரஞ்சு மொழி அறிஞர்கள் பிரஞ்சு மொழியில் உள்ள இலக்கிய வளமையைப் போலத் தமிழிலும் உள்ளதா எனப் பாரதியாரைக் கேட்ட போது, பாரதியாரால் இதற்குச் சரியான விளக்கம் கொடுக்க இயலாமல் போனது. இதனைப் பாரதிதாசனிடம் பாரதியார் கூறிய போது, பாரதிதாசன் தமிழில் பிரஞ்சு மொழியை விட அதிகமான இலக்கியச் செல்வம் உள்ளதென்று சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் ஆகியவற்றிலிருந்து உதாரணங்களை எடுத்துக் காட்டி பிரஞ்சு இலக்கியவாதிகளின் வாதத்தை முறியடித்து வெற்றி கண்டார் (http://www.dinamani.com/editorial_articles). பாரதி தமது குருவாக இருந்தாலும் கூட அவரால் முடியாதது தம்மாலும் முடியாது என்றில்லாமல் தனது தன்னம்பிக்கையால் பிரஞ்சு இலக்கிய வாதிகளை வென்று காட்டிய பாரதிதாசனின் தன்னம்பிக்கை இவ்விடம் போற்றத்தக்கது.

இது போல பாரதிதாசனின் தன்னம்பிக்கைக்கு மற்றொரு சான்றானதுதான் தமிழியக்கப் பாவியம். மறைமலையடிகள் ஒருமுறை 'பாரதியும் கவிஞனல்ல பாரதிதாசனும் கவிஞனல்ல. இவர்களின் கவிதைகளில் தனித்தமிழ் எங்கு உள்ளது. மற்ற மொழிக்கலப்பில் எழுதுபவர்களை எவ்வாறு கவிஞர் என்பது' எனக் கருத்துரைத்துள்ளார். இதனைக் கேட்ட பாரதிதாசன் ஓர் இரவில் இயற்றிய படைப்புத்தான் தமிழியக்கம் (வரதராசன், *1992*, p.*349*). இது பாவேந்தரின் கவித்துவத்திற்கு மட்டும் சான்று அல்ல. அவரது தன்னம்பிக்கைக்கும் தக்கதொரு எடுத்துக்காட்டு.

ஒருவர் தானறிந்த துறையில் துணிந்து ஈடுபடுவது பெரிய காரியம் அல்ல. ஆனால் தானறியாத துறையிலும் ஒருவர் முயற்சி மேற்கொள்வதற்கு அசாத்திய தன்னம்பிக்கை வேண்டும். பாரதிதாசனின் திரைப்படத்துறைப் பிரவேசம் இத்தகையதே. பாரதிதாசன் சில படங்களில் பாடலாசிரியராகவும் வசனகர்த்தாவாகவும் பணியாற்றிய அனுபவமுடையவராயினும் திரைப்படத்துறையில் முழுமையான அனுபவமுடையவரன்று. ஆயினும் தனது சிந்தனைகளையும் கொள்கைகளையும் மக்களிடம் கொண்டு சேர்த்து அவர்களை விழிப்படையச்செய்யத் திரைப்படத்துறை மிகச்சிறந்த சாதனமாக உருவாகியிருப்பதை உணர்ந்த பாவேந்தர் அந்தத் துறையிலும் துணிவுடன் தன்னம்பிக்கையுடன் ஈடுபட்டார் (முருகுசுந்தரம், *2014*, p.*92*). திரைப்படத்துறையில் பாவேந்தர் மிகப்பெரிய வெற்றி அடையவில்லை என்ற போதிலும் அவரது தன்னம்பிக்கை இவ்விடம் போற்றத்தக்க பண்பாக அமையப்பெறுகின்றது.

## எழுச்சி

தலைமைத்துவப் பண்பில் எழுச்சி எனும் பண்பானது ஒருவரை மக்கள் தலைவனாக அங்கீகரிக்கச் செய்யும் வல்லமையுடையது. எழுச்சி மிக்க குணமுடையவன்

சோர்வதில்லை. இத்தலைமைத்துவப் பண்பாளன் உத்வேகத்தோடு வீறு கொண்டு முன்னோக்கிச் செல்வதோடு மக்களையும் அதே வேகத்தோடு இலக்கை நோக்கி அழைத்துச் செல்லும் ஆற்றலுடையவன் (Manning & Curtis, 2007, pp.30). தலைவர்களாக இருப்பவர்கள் எல்லோரிடமும் இந்த எழுச்சியைக் காண இயலாது. விவேகானந்தரிடம் இத்தகைய எழுச்சி இருந்ததினால்தன் அவரால் இந்து சமயத்தை மேற்கத்திய நாடுகளில் ஒளிவீசச் செய்ய முடிந்தது. காந்தியிடன் இருந்த எழுச்சி பாரத தேசமெங்கும் சுதந்திர வேட்கையைத் தூண்டச் செய்தது. நெல்சன் மண்டேலாவிடம் இருந்த எழுச்சி கருப்பினத்தவரை வீறு கொண்டு எழச் செய்தது. இவர்களைப் போல பாரதிதாசனிடம் குடிகொண்ட எழுச்சி தமிழுக்குத் தன்னிகரற்ற பெருமையைத் தேடித்தந்தது.

பாரதியார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பாரதிதாசன் இயற்றிய பாடல் 'எங்கெங்கு காணினும் சக்தியடா...'

**எங்கெங்கு காணினும் சக்தியடா;தம்பி**
**ஏழு கடல் அவள் வண்ணமடா!அங்குத்**
**தங்கும் வெளியினிற் கோடியண்டம்அந்த**
**தாயின் கைப்பந்தென ஓடுமடாஒரு**
**கங்குலில் ஏழு முகிலினமும்வந்து**
**கர்ச்சனை செய்வது கண்டதுண்டோ?எனில்**
**மங்கை...**
**வாளைச் சுழற்றும் விசையினிலேஇந்த**
**வைய முழுவதும் துண்டு செய்வேன்...'**

எனும் பாடலில் வரும் வரிகளில் பாரதிதாசனின் எழுச்சி மிளிர்வதைக் சிறப்பாகக் காண முடிகின்றது. பாவேந்தரின் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு சங்கே முழங்கு' எனத் தொடங்கும் பாடலில் வரும் 'எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே...', 'பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால் சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு...', 'ஆண்மை சிங்கத்தின் கூட்டமென்றும்

சிறியோர்க்கு ஞாபகம் செய் முழங்கு சங்கே...', 'வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள்...' 'வெங்குருதி தனில்கமழ்ந்து வீரஞ்செய்கின்ற

தமிழ் எங்கள் மூச்சாம்...' என வருகின்ற வரிகள் யாவும் தள்ளாத வயதில் இருப்பவரையும் வீறு கொண்டு எழச் செய்யும் எழுச்சி மிக்க வரிகள்.

பாவேந்தரின் எழுச்சி மிக்க வரிகள் தாம் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கு தமிழ் இலக்கியத்தின் மூலம் பெரும் வெற்றியைத் தந்தது. தமிழ் மக்களையும் ஈர்த்தது. சாதியத்திற்கு எதிர்ப்பான பெரியாரின் போராட்டத்திற்கு பாரதியின் எழுச்சி மிக்க இலக்கியப் படைப்புகள் அளப்பரிய பங்களித்தன (வரதராசன், 1992, p.352). 1930ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சஞ்சீவி பர்வதத்தின் சாரல் எனும் பாவேந்தரின் கவிதை நூலானது முழுக்க முழுக்கப் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளைப் பிரதிபலிப்பனவாக அமையப் பெற்றன. இக்கவிதை நூலில் பார்ப்பன எதிர்ப்பு, புராண இதிகாச மறுப்பு, சாதி ஒழிப்பு, மூட நம்பிக்கைகளுக்கு எதிர்ப்பு போன்ற கருத்துகள் எழுச்சியுடன் முன்வைக்கப்பட்டுள்ளதைக் காணலாம் (அருணாசலம், 2004, p.199).. இவ்வாறு பாரதிதாசனிடம் குடிகொண்டிருந்த எழுச்சிக்காகத்தான் பாரதிதாசன் திராவிட இயக்கத்தினரால் புரட்சிக்கவி எனப் பட்டம் சூட்டப்பட்டார் (முருகுசுந்தரம், 2014, pp.106-107).

*பாரதிதாசனிடம் குடிகொண்டிருந்த இந்தப் பேரெழுச்சியே பிற்காலத்தில் இவரை அடியொற்றிப் பல இலக்கியவாதிகள் தோன்றக் காரணமானது. பாவேந்தரைக் குருவாகக் கொண்டு உருவானவர்களுள் கவிஞர் சுரதா (பாரதிதாசன் மீதுகொண்ட பற்றால் இராசகோபால் எனும் தன் இயற்பெயரை சுரதா - சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார்), வாணிதாசன், சாலை இளந்திரையன், குருவிக்கரம்பை சண்முகம், பொன்னடியான் போன்றோரைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். ஒரு தலைமைத்துவப் பண்பு மிக்கவர் அப்பண்பினைத் தன்னோடு இருத்திக் கொள்ளாமல் தமக்கும் பின்னர் வருபவர்களையும் தலைமைத்துவம் உடையவர்களாக உருவாக்க வேண்டும்* (Murray, 1966, p.58). *அந்த வகையில் பாரதிதாசனிடம் குடிகொண்ட எழுச்சி மிக்க கவிதை வளமே இவரைப் போல ஆற்றல் மிக்க கவிஞர்களை உருவாக்கிய நிகழ்வானது பாரதிதாசனின் தலைமைத்துவப் பண்பிற்கு மகுடம் சூட்டுகின்றது.*

## ஆளுமை

*ஒரு தலைவனானவன் தாம் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தனது தனித்துவத்திலிருந்து நிலை பெயராமல் மற்றவர்களை வழிநடத்திச் செல்லுதலே அவனை ஆளுமையுடையவன் எனக் காட்டும். இதில் வெளித்தோற்றம், கொள்கை, செயல்பாடு என எல்லாவற்றிலும் மற்றவர்களை விட மேம்பட்ட நிலையில் தனித்துவமாகக் காட்சி தந்து கவர்தல் என்பது முக்கிய அம்சம்* (Manning & Curtis, 2007, p.31). *அந்த வகையில் பாரதிதாசனின் தோற்றப் பொலிவே தனித்துவம் மிக்கது. நேரிட்ட நடை, நிமிர்ந்த பார்வை, தூய்மையான ஆடை, வீறு கொண்ட பேச்சு என எல்லாவற்றிலும் யாருடைய பாணியையும் பின்பற்றாத போக்கு பாரதிதாசனிடம் காணப்படும்.*

*பாரதிதாசன் புதுவை சூயர்கூப் வீதித் தொடக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய போது ஒரு நாள் மாணவர்களுக்குப் பரிமாறப்பட்ட உணவில் சாம்பார் மிகவும் கசப்பாக இருந்ததை அறிந்த பாரதிதாசன் சமயற்காரனைக் கடிந்து கொண்டதோடு, அப்போதே மாணவர்களை வரிசையாக அழைத்துக் கொண்டு கல்வி அதிகாரியைச் சந்தித்து முறையிட்டார். பாவேந்தரின் இந்த ஆளுமைப் பண்பைப் பாராட்டிய அதிகாரி உரிய நடவடிக்கையையும் மேற்கொண்டார் (முருகுசுந்தரம், 2014,* p.*13). மற்ற ஆசிரியர்களைப் போல அல்லாமல் தம்மைச் சுற்றி நடக்கும் செயல்களுக்கு உடனடி நிவாரணம் காணும் இந்த ஆளுமை மிக்க தலைமைத்துவப் பண்பே பாரதிதாசனை வரலாற்றில் உயர்த்தி நிறுத்தியது.*

*இது போலப் பல போராட்டங்களிலும் தனது ஆளுமைப் பண்பை நிலைநாட்டியுள்ளார் பாரதிதாசன். 1956ஆம் ஆண்டு தேவிகுளம் பீர்மேடு ஆகிய பகுதிகளைத் தமிழகத்தோடு இணைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஒரு நாள் பொது வேலை நிறுத்தமும் கடையடைப்பு எனும் அறப்போராட்டமும் நடைபெற்றது. புதுவையில் நடந்த போராட்டத்திற்குப் பாவேந்தர் தலைமைதாங்கினார். அப்போது ஒர் உணவுக்கடை மட்டும் திறந்திருந்ததால் அதனை அடைப்பதற்காகப் பாரதிதாசன் ஊர்வலமாகச் சென்றார். ஊர்வலம் செல்லக் கூடாது எனும் தடையுத்தரவு இருந்ததால் அதிகாரிகள் பாரதிதாசனைத் தடுக்க முயற்சி செய்தும் பாரதிதாசன் தனது ஆளுமைப் பண்பால் அதிகாரிகளுக்குத் தக்க பதிலளித்து அந்தக் கடையையும் மூடுமாறு செய்தார் (சபீதாஜோசப், 2009,* p.*107).*

*பாரதிதாசன் கவிதைக்காகவே 1947ஆம் ஆண்டு குயில் இதழைத் தொடங்கினார் (வரதராசன், 1992,* p.*349). ஆயினும் இதன் நிர்வாக ஆசிரியர் டி.என்.ராமன் அவ்விதழைப் பாரதிதாசனின் குரலாகப் பதிப்பிக்காமல் தனது எண்ணப்படி பதிப்பித்ததால் குயில் இதழ் கவிதை இதழ் எனும் நிலைப்பாட்டிலிருந்து மாற்றம் கண்டது. மேலும் ஜூலை மாதம்*

*1947ஆம் ஆண்டு வெளியீடு கண்ட இதழில் பாரதிதாசனின் பங்களிப்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டு டி.என்.ராமன் தனக்கான முக்கியத்துவத்தை நிலைநிறுத்தும் வண்ணம் அவ்விதழை வெளியீடு செய்தார். இந்தக் கருத்து வேறுபாடு காரணமாகாக டாக்டர் ஏ.கிருஷ்ணசாமியின் உதவியுடன், பாரதிதாசனின் மகன் மன்னர்மன்னனின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் குயில் புதிய இதழாக முழுக்க முழுக்க பாரதிதாசனின் குரலாகப் பதிப்பிக்கபட்டது. இதனால் பாரதிதாசன் வழக்கிலும் இழுக்கப்பட்டார். ஆனால் எதற்கும் பின்வாங்காத பாரதிதாசன் குயில் இதழைத் தனித்துவத்துடன் பதிப்பித்தார். பிற்காலத்தில் சென்னைக்குக் குடிபெயர்ந்த பின்னரும் இப்பணி தொடரந்தது (சபீதாஜோசப், 2009,* pp.*114-115). முன் வைத்த காலைப் பின் வைப்பதில்லை என்பது ஆளுமையில் ஒரு கூறு எனும் பார்வையின் அடிப்படையில் குயில் இதழும் பாவேந்தரின் ஆளுமைப் பண்பின் வெளிப்பாட்டில் நிறைவான சான்றாகவே அமைகின்றது.*

## துணிவு

*துணிவு எனும் பண்பானது தலைமைத்துவப் பண்புகளில் மிகவும் முக்கியத்துவம் உடையது. தலைமைத்துவத்தில் துணிவு எனும் பண்பை உடையவர் எந்தச் சோதனைகளையும் கண்டு அஞ்சாமல் முன்னேறும் ஆற்றலுடையவராக விளங்குவர். எடுத்துக் கொண்ட காரியத்தில் மனம் தளராமலும், எதிலும் சபலம் கொள்ளாமலும், அச்சுறுத்தல்களைக் கண்டு பின்வாங்காமலும் முன்னேறிச் செல்லும் போக்கு ஆகியன இப்பண்பினால் விளையும் நன்மைகளாகும்* (John Maxwell, 2008, p.33).

*பாரதிதாசனின் வாழ்க்கையில் அவர் எதற்கும் அஞ்சியது இல்லை. எத்தகைய சோதனைகளையும் மனத்துணிவோடு எதிர்கொண்டவர்.*

***'உச்சிமீது வானிடிந்து வீழு கின்ற போதினும்,***
***அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே'***

*(பாரதியார் கவிதைகள்: 18-19)*

*எனும் பாரதியின் வரிகளை உள்ளத்தில் ஏற்றியவர் பாவேந்தர். இதற்கு உதாரணமாக எத்தனையோ சம்பவங்கள் பாரதிதாசனின் வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளன. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மக்களிடையே சுதந்திர வேட்கையைத் தூண்டிய பாரதியார், வ.வே.சு., பர்.வரதராசுலு, அரவிந்தர் போன்றோர் புதுவையில் மறைந்திருந்த போது அவர்களுக்குப் பாரதிதாசன் புகலிடம் அளித்தது, காவலர்களின் தேடுதல் வேட்டை குறித்த தகவல்களை அவர்களுக்குத் தந்து காப்பாற்றியது, பாரதியாரின் 'இந்தியா' எனும் பிரசுரத்தை பிறர் அறியாதவாறு அச்சிட்டது போன்ற துணிகரச் செயல்களில் ஈடுபட்டவர் பாவேந்தர்* (https://ta.wikibooks.org/wiki).

*பாரதிதாசனின் குடும்பம் இறை நம்பிக்கையிலும், சமயப் பண்பாட்டுக் கூறுகளிலும் தோய்ந்த குடும்பம். இத்தகைய பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் வளர்ந்தவராயினும், பெரியாரின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டபின்னர் தான் மட்டுமன்றித் தமது குடும்பத்தினரும் காலம் காலமாகப் பின்பற்றி வந்த சமய நம்பிக்கைகளுக்கும் பாரம்பரியமான பழக்கங்களுக்கும் முழுக்குப் போட்டார் பாவேந்தர். தமது குடும்பத் திருமணங்களில் தாலியைத் தவிர்த்தார் (முருகுசுந்தரம், 2014,* p.*13). மேலும், 1933ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் வைக்கப்பட்டிருந்த வருகையாளர் பதிவேட்டில் 'நான் ஒரு நிலையான நாத்திகன்' எனப் பதிவு செய்து கையெழுத்திட்டார் (கோவேந்தன், 1994,* p.*210). இதற்கெல்லாம் மிகுந்த மன உறுதி வேண்டும். ஒரு தலைவனானவன் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கினால்தான்*

அக்கொள்கையானது தம்மைப் பின்பற்றுவோரிடத்தும் சென்று சேரும் எனும் கருத்தில் பாரதிதாசன் மிகத் தெளிவுடையவராக இருந்துள்ளார் என்பதை இந்நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன.

திராவிடக் கழகத்தில் பாரதிதாசன் இருந்த காலத்தில் இவருடைய பாரதிதாசன் எனும் பெயர் குறித்து திராவிடக் கழகத்தாரால் விமர்சிக்கப்பட்டது. பாதிதாசன் என்றால் பாரதி என்ற பார்ப்பனனுக்கு அடிமை எனப் பொருள்படுவதால் இப்பெயர் ஏற்புடையதல்ல எனப் பலராலும் விமர்சிக்கப்பட்டது. ஆனால் பாவேந்தர் இவ்விமர்சனங்களைக் கண்டு சற்றும் அஞ்சாமல் பாரதியைப் போல சாதியத்திற்கு எதிப்புக்குரல் கொடுத்தவர் யாருமில்லையாகையால் அவருக்கு அடிமை என்பது தமக்குப் பெருமை என்றே கூறிச் சற்றும் அச்சமின்றி அனைத்துக் கேலிகளையும் முறியடித்தார் (http://www.dinamani.com/editorial_articles). இதுவல்லாது பாரதியார் திராவிட இயக்கக் கொள்கைக்கு மாறான ஆத்திகர் எனத் திராவிட இயக்கத்தினர் குற்றம் கூறிய போதும் பாரதியின் சிந்தனைகளை பாவேந்தர் உயர்த்தியே பேசியுள்ளார். ‘சென்னையில் பாரதி இறந்தார். ஆனால் என்னுள் வளர்ந்து வந்த பாரதி அன்பு இறந்ததா? இல்லை. பாரதியின் அருமை பெருமைகளை எடுத்துக் கூறத் தயங்குவதில்லை. அதனால் ஒரு சாராரின் எதிர்ப்பு இன்று வரை நீங்கியதில்லை. இதற்காக நான் அஞ்சியதும் இல்லை. அஞ்சப்போவதும் இல்லை. பாரதி பற்றிப் பேச எனக்குத்தான் தெரியும். அவரைப் பற்றிப் பேச என்னை விடத் தகுதி இந்த நாட்டில் எவனுக்கும் இல்லை’ என பாரதிதாசன் எழுதியுள்ளார் (தினத்தந்தி, *6-5-1963* – http://ilakkiyapayilagam.blogspot.my). மற்றொரு சம்பவத்தில், திராவிடக் கழக நிகழ்ச்சி ஒன்றில் மேடையில் பேசிய ஒருவர் பாரதியாரைப் பற்றித் தேவையற்ற விமர்சனங்களைக் கூறிய போது பேச்சாளர் தாம் அங்கம் வகிக்கும் திராவிடக் கழகத்தைச் சார்ந்தவர் என்று தயங்காமல் அவரை அந்த மேடையிலேயே கண்டித்துள்ளார் பாவேந்தர். இந்தத் துணிவு பாவேந்தரின் உள்ள உறுதிக்குத் தக்க சான்று.

மற்றொரு சூழலில், வளையாபதி திரைப்படத்தில் தாம் எழுதிய சில வசனங்களை தமக்குத் தெரியாமலேயே திரைப்படக் குழுவினர் மாற்றியதற்காக மாடர்ன் தியேட்டர்ஸ் தமக்களித்த நாற்பதாயிரம் ரூபாய் பணத்தைத் திருப்பிக் கொடுத்ததோடு அவர்களுடன் ஒப்பந்தமாகியிருந்த மேலும் நான்கு படங்களையும் உதறித் தள்ளிவிட்டுத் துணிவுடன் வெளியே வந்தார் பாவேந்தர். இவ்வாறு பாரதிதாசனின் துணிவு மனப்பான்மைக்கு நிறைய உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்தத் துணிவே அவரின் தனித்துவத் தலைமைப் பண்பிற்கு வலு சேர்த்தது எனலாம்.

## முடிவுரை

பாரதிதாசன் உண்மையில் எந்தக் கட்சிக்கும் தலைவரில்லை. ஆட்சியாளரும் இல்லை. அவர் பாவேந்தர். ஆனால் அவரிடம் குடிகொண்ட தலைமைத்துவப் பண்பானது அவரது படைப்புகளுக்கு வலு சேர்த்து அவரின் புகழைத் தமிழ் மக்களின் மனதில் நிலைபெறச் செய்துள்ளது. அவர் மறைந்து ஆண்டுகள் பல கடந்த போதும் அவரின் புகழ் இன்றும் நிலைபெற்றுள்ளது. பாரதிதாசன் அடைந்ததைப் போன்ற நிலையான புகழை ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தவர்களும் அடைந்தனரா என்பது சந்தேகமே. சிந்தனை, சொல், செயல் என எல்லாவற்றிலும் தெளிந்த சிந்தனையும், தான் கொண்ட கொள்கையை மன உறுதியுடன் பேணும் பண்பும், செயற்கரிய செயல்களைச் செய்யும் வல்லமையும் பாவேந்தரிடம் இருந்தமையால்தான் பெரியார், அண்ணா முதலான திராவிடத் தலைவர்கள் யாவரும் அன்புடன் அரவணைத்துப் போற்றும் மேன்மைமிகு தலைவராகப் பாரதிதாசன் மிளிர்ந்தார். மக்களின் அன்பைப் பெற்றுப் புதுவையின் சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

*இன்று பாரதிதாசன் பெயரால் விருதுகள், சாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், இயக்கங்கள் என எத்தனையோ உருவாக்கப்பட்டுவிட்டன. பாரதிதாசனுக்காகவே மாநாடுகளும் அனைத்துலகக் கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. இவரது படைப்பிலக்கியங்கள் முனைவர் பட்ட ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. இத்தகைய புகழுக்கு அவரின் படைப்பிலக்கியங்களே மூல காரணங்களாக முன்வைக்கப்பட்ட போதிலும் இவரது தலைமைத்துவம் மிக்க பண்பட்ட வாழ்க்கையே இத்தகைய ஆளுமை மிக்க படைப்புகள் தோன்றுவதற்குப் பக்க பலமாக விளங்கின என்பதனை மறுக்க இயலாது. அந்த வகையில் பாவேந்தர் மக்கள் மனதில் தனது தலைமைத்துவப் பண்புகளால் தலைசிறந்த தலைவனாகவே என்றும் வாழ்கிறார்.*

## Bibliography


Arunasalam,Mu. (2004). *Rucôvum PâratitâcaIum*. Chennai: The Parker Publications.

Bernard, M., Bass. (1985). *Leadership and Performance Beyond Expectations*. New York: Free Press.

Chakkaravarthi Rajagopalacchari. (2008).*IrâmâyaGam.* Chennai: Vanathi Publications.

Chemers, M., Martin. (1997). *A Integrative Theory of Leadership*. New Hersey: Eribaum

Department of the Army. (1999). *Army Leadership: Be, Know, Do*. Washington DC: Author.

Hemphill, K., John. (1949). *Situation Factors in Leadership*. Columbus: The Ohio State University.

http://ilakkiyapayilagam.blogspot.my.

http://www.dinamani.com/editorial_articles - Pâratiyum PâratitâcaIum.

https://groups.google.com - Pâvçntar PâratitâcaI tam'maip pa__i e;utiya pâmal.

https://ta.wikibooks.org/wiki - PâratitâcaI vâ;kkai.

Jacobs, T., Owens & Elliot Jaques. (1990). "Military Executive Leadership" in (Eds) Kennath E., Clark & Miriam B., Clark. *Measure of Leadership*. Pp.281-295. New Jersey: Leadership Library of America.

Koventhan,T. (1994). *Pâvçntam.*Chennai: Koventhan Publications.

Manning George & Curtis Kent. (2007). *The Art of Leadership*. New York: McGraw-Hill.

maxwell, John. (2008). *The 21 Indispensable Qualities of A Leader*. Kuala Lumpur: PTS Professional.

Murray, G., Ross. (1966). *New Understanding of Leadership*. New Yrk: Association Press.

Murugusuntharam. (2014). *Intiya ilakkiya ci_pika7 varicaiyil PâratitâcaI.*Chennai: Sahitya Akademi Publications.

Nyanasegaran. (2005). *Pârati mutal kaIimo;i varai*. Chennai: Kadarkuthirai Publications.

Bharathidasan. (2006). *PâratitâcaI kavitaika7*. Vol.2. Chennai: Manivasagar Publications.

Pâratiyâr. (1991).*Pâratiyâr kavitaika7*. Chennai: Seeni Visvanathan Publication.

Rajoo. (1990). "Pâvçntar pâratitâcaI kavitaika7il iIave;ucciyum camutâyap putumaiyâkkamum", *PâratitâcaIiI nû__âGmu niIaivuk karuttaraEka malar.* pp.66- 77. Kuala Lumpur : Department of Indian Studies Publications.

Sababathy,V. (1990). “PâratitâcaIum tami;uGarvum”,*PâratitâcaIiI nû__âGmu niIaivuk karuttara Eka malar*. pp.31-52. Kuala Lumpur : Department of Indian Studies Publications.

Sabethajoseph. (2009). *Puramcikkaviñar pâratitâcaI 100*. Chennai: Nakkiran Publications.

*Tirukku_a7.*

Varatharasan,Mu.(1992), *Tami; Ilakkiya Varalâ_u*. New Delhi: Sahitya Akademic.

Weber, Max. (1947). *The Theory of Social and Economic Organization*. New York: Free Press.

# திரைவானில் பாவேந்தர்

**க.துரியானந்தம் - K.துரியானந்தம்[1]**

***Abstract***

Cinema is a branch of Science, a past time and has become a part and parcel of life. Cinema is a boon to the society if utilized in the right and creative way. The origin of Cinema was without dialogue and later converted with characters speaking scripts. According to the South Indian Cinema the first movie was 'Keesagavatham' released in 1916. The first Tamil Film with dialogue was 'Kalidas' released on the 31st of March 1931. With this historical background, this Paper talks about Bharathidasan's entry, contribution and merits in the Tamil Cinema.

Key Words : Bharathidasan, Tamil Cinema, Contribution, Effects

## முன்னுரை:

அறிவியல் வளர்ச்சியின் ஒரு கூறுதான் திரைப்படம். மக்களின் பொழுதுபோக்கு அம்சமாக உருவாகி அவர்களின் வாழ்க்கையில் ஒன்றாகிவிட்டது திரைப்படம்.

திரைப்படங்களால் அளப்பறிய பல நன்மைகள் உண்டு. அதை மட்டும் மிகவும் சரியான முறையில் கையாண்டால் மக்களுக்கு அதன் வழியாக எவ்வளவோ நன்மைகள் செய்யலாம்.

திரைப்படம் முதலில் ஊமைப்படமாகத்தான் வந்தது. பிறகுதான் பேசும்படமாக மாறியது. தென்னகத்தைப் பொறுத்தவரை 1916–ஆம் ஆண்டு வெளிவந்த ''கீசக வதம்'' என்ற ஊமைப்படம் தான் தென்னிந்தியாவில் இருந்து வெளிவந்த முதல் திரைப்படம்.

1931–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31–ஆம் நாள் ''காளிதாஸ்'' என்ற படம்தான் தமிழில் முதன் முதல் வெளிவந்த பேசும்படம். அதைத் தொடர்ந்து தமிழில் பல படங்கள் வெளிவந்தன.

## படவுலகில் பாரதிதாசன்

ஆசிரியராகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்த பாரதிதாசன் முறையாகத் தமிழ் கற்றவர். தன் உணர்ச்சிமிக்கக் கவிதைகள் மூலம் புகழ் பெற்றார். பாரதியாரின் அன்பைப் பெற்று அவர் தொண்டர் ஆனார். பாரதியின் புதுவை வாழ்வில் பாரதிதாசனுக்கும் இடம் உண்டு.

கனக சுப்புரத்தினமாக இருந்தவர் பாரதியின் தாசனாகி பாரதிதாசன் ஆனார். பாரதியின் மறைவிற்குப் பிறகு தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையை ஏற்றுக் கொண்டு அவர் தொண்டர் ஆனார்.

கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை என்று இலக்கியத் துறையின் பல்வேறு வகைகளில் ஈடுபட்டதைப் போலவே பாவேந்தர் திரைப்படத் துறையிலும் ஈடுபட்டார். அதிலும் தன் முத்திரயைப் பதித்தார்.

---

[1]The author is a student of the great Tamil scholar Ki.Va.Jaganathan

பாவேந்தர் படவுலகிற்கு வந்த காலம். தமிழ்ப் படவுலகம் சரியான தயாரிப்பில்லாமல் ஏதோ ஒரு வகையில் இருந்தது. அக்காலத்தில் வந்த தமிழ்த் திரைப்படங்களின் உரையாடல்களும் பாடல்களும் மிகவும் நகைப்பூட்டுவனவாகவே இருந்தன.

அக்காலத் தமிழ்த் திரைப்படங்கள் எப்படி இருந்தன என்பது பற்றி பாவேந்தர் பாரதிதாசன் ஒரு பாடல் எழுதியுள்ளார்.

**என்தமிழர் படம் எடுக்க ஆரம்பஞ் செய்தார்**
**எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக**
**ஒன்றேனும் தமிழர் நடை உடை பாவனைகள்**
**உள்ளது வாய் அமையவில்லை உயிர் உள்ளதில்லை**
**ஒன்றேனும் தமிழர் அருமை உணர்த்து வதாயில்லை**
**ஒன்றேனும் உயர் நோக்கம் அமைந்ததாயில்லை**
**ஒன்றேனும் உயர் நடிகர் வாய்ந்தது வாயில்லை**
**ஒன்றேனும் வீழ்ந்தாரை எழுப்புவதாயில்லை**

என்று இப்படிப் பாடுகின்றார் பாவேந்தர். இப்படியிருந்த தமிழ்த் திரை உலகில்தான் பாவேந்தர் அடி எடுத்து வைத்தார்.

''கலை மனிதனின் மனதைப் பண்படுத்த வேண்டும். அதுவே கலையின் பயனாக இருக்க வேண்டும்'' – அதுவே பாரதிதாசனின் கலை பற்றிய கோட்பாடு. அக்கோட்பாட்டைத் தன் எழுத்தில் கொண்டு வந்தார் பாவேந்தர்.

பாவேந்தர் திரையுலகில் நுழையக் காரணமாய் இருந்தவர் பாரதி அன்பர் எழுத்தாளர் வ.ரா. வ.ரா. உட்பட சில பாரதி அன்பர்கள் ஒன்று சேர்ந்து ''இராமானுஜர்'' என்ற படத்தை உருவாக்க முன்வந்தனர். புதுவையில் பாரதிதாசனுடன் ஏற்பட்டிருந்த நட்பின் காரணமாகவும் அவரது புலமையின் காரணமாகவும் வ.ரா. பாரதிதாசனை, இராமனுஜர் படத்திற்குப் பாடல்கள் எழுத அழைத்தார். நண்பரின் வேண்டுகோளை ஏற்று பாரதிதாசன் பாடல்கள் எழுதச் சென்னைக்கு வந்தார்.

1938–ஆம் ஆண்டு வெளிவந்த இராமானுஜர் படம் தோல்வி அடைந்தது. கல்கி 2.10.1938–இல் வெளிவந்த ஆனந்த விகடனில் அப்படத்தை மிகவும் கடுமையாக விமர்சனம் செய்திருந்தார். அப்படம் தான் பாவேந்தர் படவுலகில் நுழையக் காரணமாக இருந்தது.

ஆனால் இராமானுஜர் படம் வெளிவருவதற்கு முன்பே டி.கே.எஸ். சகோதரர்கள் தயாரித்து, பாவேந்தர் பாடல்கள் எழுதிய ''பாலாமணி'' அல்லது ''பக்காத் திருடன்'' என்ற திரைப்படம் 1937–ஆம் ஆண்டு வெளிவந்தது.

பாலாமணி படத்திற்கான விளம்பரத்தில் பாலாமணிக்குப் பாடல் சேர்த்தவர் புதுவை ஸ்ரீ பாரதிதாசன். படம் நன்றாக இருக்கிறது என்பதற்கு வேறென்ன காரணம் வேண்டும்'' – என்று விளம்பரம் செய்திருந்தார்கள்.

பாவேந்தர் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியதால் புகழ் பெறவில்லை. அவர் புகழ் பெற்ற கவிஞராக இருந்த காரணத்தாலேயே படங்களுக்குக் கதை வசனம் பாடல்கள் எழுத வாய்ப்புகள் அவரைத் தேடி வந்தன.

அக்காலத்தில் ஒரு பாடலுக்கு ஆயிரம் ரூபாய் ஊதியம் பெற்ற கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் மட்டுமே.

திராவிட இயக்க இலக்கியப் படைப்பாளர்களுள் முதன் முதலில் திரைப்படத் துறைக்குள் நுழைந்தவர் பாரதிதாசனே ஆவார்.

பாரதிதாசனுக்கு நிரம்ப இசை அறிவு உண்டு. காட்சிகளுக்கு ஏற்பப் பாடல்கள் எழுதுவதில் வல்லவர்.

பாலாமணி படத்தில் போலி மனிதர்களைப் பற்றி இப்படி ஒரு பாடல் எழுதியுள்ளார்.

**''பேசுவதோ உயர் திருவாசகம் நேராய்**
**பீர் பிராந்தி ஒயின் புட்டிகள் ஜோராய்**
**ஆஸி முதலிய கிளாவர் துருப்புடன்**
**ஆடுதன் ஜாக்கியைப் போடெனக் குஷியாய்''**

என்று எழுதி உள்ளார்.

வளையாபதி படத்தில் சில இடலங்களில் உரையாடலை இசை வடிவிலேயே எழுதியிருக்கிறார்.

''கடற்கரையில் பிள்ளைகளைக் கண்டோமே! பிள்ளைகளைப் பெற்ற உள்ளத்தைக் கண்டோமே! அவ்வுள்ளத்தில் பொங்கும் சுகந்த வெள்ளத்தைக் கண்டோமே! அது போல எள்ளளவு பாக்கியம் நமக்குண்டா? என் முக வாட்டத்திற்குக் காரணம் கேட்கின்றாயே கண் இருந்தும்''

இப்படிச் செல்கிறது உரையாடல்.

## பாவேந்தரின் கண்டிப்பு

பாவேந்தர் கதை வசனம் பாடல்கள் எழுதிய படங்கள் மொத்தம் பத்து. இதில் காளமேகம், ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி, சுபத்ரா, சுலோசனா, பொன்முடி, வளையாபதி ஆகியவை வெளிவந்தன.

பாரதியார் குமரகுருபரர், பாண்டியன் பரிசு, முட்டாள் முத்தப்பா - இவை படமாக எடுக்க முயன்றும் வெளிவரவில்லை.

பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய திரைப் படங்கள்.

1. வரலாற்றுக் கதைகள்
2. கற்பனை வரலாற்றுக் கதைகள்
3. சமூகக் கதைகள்
4. காப்பியக் கதைகள்
5. புராணக் கதைகள்

என ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

அவரது பாடல்களிலோ, உரையாடல்களிலோ அவரது அனுமதி இல்லாமல் மாற்றவோ நீக்கவோ சம்மதிக்க மாட்டார். தேவைப்பட்டால் அவரே மாற்றிக் கொடுப்பார்.

''வளையாபதி'' திரைப்படத்தில் அதன் இயக்குநர் டி.ஆர்.ரகுநாத், பாவேந்தர் எழுதிய உரையாடல்களில் சிலவற்றை அவரின் இசைவு பெறாமலேயே மாற்றி விட்டார். இதை

*அறிந்த பாவேந்தர் வெகுண்டு அப்பட நிறுவனத்துடன் செய்திருந்த ஒப்பந்தத்தையே ரத்து செய்துவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டார். பின் அந்நிறுவனமான மாடர்ன் தியேட்டர்ஸ் வாசற்படியை மிதிக்கவே இல்லை.*

*படவுலகில் பீடுடைய எழுத்தாளராக இருந்தார் பாவேந்தர் பாரதிதாசன்.*

## பாவேந்தர் திரை உலகிற்கு வரக்காரணம்

*பாவேந்தர் பாடல்களோ உரையாடல்களோ எழுதும்போது உதவியாளர்களை வைத்துக் கொள்ளும் வழக்கம் கிடையாது. ஒரு படத்திற்குக் கதை வசனம் எழுதும்போது அதே நினைவாகவே இருப்பார். தயாரிப்பாளருக்கோ இயக்குநருக்கோ எந்தத் தொந்தரவும் கொடுக்கமாட்டார். தன் சுயகௌரவத்தையும் விட்டுத்தர மாட்டார்.*

*பகுத்தறிவுக் கொள்கை உடைய பாரதிதாசன் புராணப் படங்களுக்கு ஏன் கதை உரையாடல் பாடல்களை எழுதினார்?*

*இவ்வினாவிற்கு விடையைப் பாவேந்தர் இப்படிக் கூறினார்.*

*‘‘திரைப்படத்துறை ஓர் ஆற்றல் வாய்ந்த துறை. நல்ல கருத்துக்களை மக்களிடம் எளிதில் பரப்ப முடியும். அதன் மூலம் பணம் வந்தால் சென்னையின் மைய இடத்தில் ஓர் அறிவாலயத்தை நிறுவ வேண்டும். தலை சிறந்த தமிழ் நூல்கள் அங்கிருக்க வேண்டும். உலக மொழிகளில் அவை மொழி பெயர்க்கப்பட வேண்டும். அதே போல் உலகின் சிறந்த இலக்கியங்கள் எல்லாம் தமிழில் தரப்பட வேண்டும். அந்த ஆசையில்தான் இந்தப் படத்துறையில் ஈடுபடுகின்றேன்’’ என்றார்.*

*சமூக சீர்திருத்தத்திற்குத் திரைப்படக் கலையை ஒரு கருவியாகக் கையாள வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணினார். அக்கொள்கையில் அவர் வெற்றியும் பெற்றார். திராவிட இயக்கத்தினர் இவர் கொள்கையை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர்.*

*அவர் எழுதிய பல பாடல்களை அவர் மறைவிற்குப் பிறகும் திரைப்படங்களில் பயன்படுத்திக் கொண்டனர். பாவேந்தரின் கதை, வசனம், பாடல்களால் தமிழ்த் திரை உலகம் புத்தொளி பெற்றது.*

## சொந்தப் படத் தயாரிப்பு

*பாவேந்தர், ‘‘பாண்டியன் பரிசு’’ காவியத்தைத் தாமே திரைப்படமாகத் தயாரிக்க முடிவு செய்தார். அதற்காக ‘‘பாரதிதாசன் பிக்சர்ஸ்’’ என்ற படக் கம்பெனியை* **14.10.1960** *அன்று ஆரம்பித்தார். எவ்வளவோ முயற்சி செய்தும் அவரது எண்ணம் ஈடேறவில்லை.*

*திரை உலகில் அவர் பழகி இருந்தும் அவ்வுலகத்தின் உண்மை உருவை அப்போது தான் உணர்ந்தார். பொருள் நஷ்டம், மனக் கஷ்டம் என்று பல வகைகளிலும் இன்னலுற்றார். தன் இயல்பான குணங்களை அடக்கிக் கொண்டே செயல்பட்டார். ஆனாலும் பாண்டியன் பரிசு திரைப்படம் கனவாகிப் போனது; உடல்நலம் சீரழிந்தது.*

*பிறகு தன் ஆசான் மகாகவி பாரதியாரின் வாழ்க்கையைத் திரைப்படமாக்க முயன்றார். அது அவருடைய இலட்சியங்களில் ஒன்று. உடல்நலம் குன்றியிருந்த போதும் பாரதியார் படத்திற்கான திரைக்கதை வசனங்களை எழுதினார். அப்படத்தின் இறுதிக் காட்சியை எழுதிய இடம் அரசு பொதுமருத்துவமனை. அக்காட்சியை எழுதிய அன்றே அவர் இயற்கை எய்தினார்.*

அவரது மறைவிற்குப் பிறகு அக்கவிஞரின் அக்கனவு ஏதோ ஒரு வகையில் நிறைவேறியது.

எங்கும் எதற்கும் வளையாத மனிதராகவே பாவேந்தர் வாழ்ந்தார். திரை உலகிலும் அப்படியே இருந்தார்.

**முடிவுரை**

எழுத்துத் துறையில் அவர் கைப்படாத பிரிவே இல்லை. இலக்கியத் துறையைப் போலவே திரைத்துறையிலும் கதை, திரைக்கதை, வசனம், பாடல் என்று எல்லாப் பிரிவிலும் ஈடுபட்டுப் பிரகாசித்தார்.

தமிழறிவு இல்லாமல் திரைப்படம் நாடகம் முதலியவற்றுக்குக் கதை, உரையாடல், பாடல் எழுதுவது தவறு என்பது பாவேந்தர் பாரதிதாசனின் கருத்தாகும். எழுதும் முன் குறைய படிக்க வேண்டும் என்பார்.

ஏறு போல் பீடு நடை போட்ட பாவேந்தர் சொந்தமாகப் படம் எடுக்க ஆரம்பித்து நொந்து நூலாகிப் போனார். கவலைகள் அவரது உடல் ஆரோக்கியத்தைக் கெடுத்தன. அதனால் அவர் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைப் பலனின்றி ***21.4.1964*** அன்று இயற்கை எய்தினார்.

தமிழ்த் திரை உலகைப் புதுப்பித்த பாரதிதாசன் ஓர் எழுத்தாளன் எப்படி கம்பீரமாக இருக்க வேண்டும் என்று திரைப்படத் துறையிலும் வாழ்ந்து காட்டினார்.

## Bibliography

Bharathithasan. (2006). *Pâratitâcal Kavitaika7*. Chennai: Manivasagar Publication.
Ilango,S.,S. (2012). *Pâvçntar PâratitâcaI-Tiraittami;*. Chennai: Pari Nilayam.
Mannar Mannan. (1986) *Karuppuk KuyiliI Neruppuk Kural*. Muthu Publication.
Mannar Mannan. (2000) *Pâmmup Pa_avaika7*. Chennai: Meiyappan Publication.
Sayabu, M., Maraikayar. (2014). *Pamavulakil PâratitâcaI*. Chennai: Gangai Book Centre.

# மொரீசியசில் தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பாவேந்தர் பாரதிதாசனின் தொடர்பும் தாக்கமும் - ஒரு பார்வை

# Impact and connectionof Pavendar Bharadasan in the development of Tamil language and literature in Mauritius – An Overview

**முனைவர் கே. சொர்ணம்** / O.S.K / Dr.Sornum,O.S.K[1]

***Abstract***

Bharathidasan, the great luminary in the horizon of Modern Tamil Literature was not merely a disciple of Subramania Bharathi, the National poet of India but an institution. His literary works are best documents of modern Tamil Renaissance. They bear social relevance and instructive values. The rich and varied materials enshrined in his poetic creations impelled many scholars to undertake various research projects on the various aspects of his literary contributions which were mainly aimed at enrichment of the Tamil language and culture and creation of a better world for mankind. Translations of Bharathidasan's works are being attempted in view to make known to the literary world of his existence in the 20th century with a mission and message, heralding a new epoch in the history of Indian literature. The relevance of the literary works of the great poet has been significant and had a positive impact in Mauritius and countries of the Tamil diaspora. In Mauritius, Bharathidasan has prompted a Tamil Renaissance in the 1960s. Local poets like Rajaretnum Sangeelee and Ponsamy Tiroumalechetty have emerged. Poems of Bharathidasan have their place in the Tamil textbooks of the primary and secondary schools. However, they are also present in the Diploma and degree programmes offered by the MGI and UOM. The Department of Tamil studies has already embarked on a Ph.D. research project on the works of Bharathidasan. This Paper will highlight the impact of Bharathidasan's works and influence on the Tamil people in Mauritius and their relevance in the academic field. An analysis of the various prescribed texts of the poet and the teaching of the same will be conducted.

*Key Words : Bharathidasan Poems, Impact, Relevance on Mauritian Tamils, Education and Media*

## முன்னுரை

பாட்டுத் திறத்தால் உலகத்தைப் பாலித்திட மகாகவி சுப்பிரமணிய பாரதியார்,

**" தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**
**பரவும்வகை செய்தல் வேண்டும் "*(பாரதியார் கவிதைகள், ப. 112)***

என்று மனவுறுதியுடன் பாடியுள்ளார். இந்த அறைகூவலை ஏற்றுச் செயலாற்றுவோர் வரிசையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமை இடம் வகிக்கின்றார். தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் நலத்திற்கும் பாரதியார் கொண்டசிந்தனைச் செல்வாக்கைக் காட்டிலும்

[1]The author is The Head of School, Indian Studies, Mahatma Gandhi Institute, Mauritius. jsornum@gmail.com

பாவேந்தரின் சிந்தனைச் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது (ச.சு. இராமர் இளங்கோ,1995). புரட்சிக் கவிஞர் தமிழரிடம் தமிழுணர்வைத் தட்டி எழுப்பி மேலோங்கச் செய்யும் வண்ணம்,

**" எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காததமிழென்று சங்கே முழங்கு ! " (பாவேந்தர்: சங்க நாதம்: ப. 87)**

என்று மேடைதோறும் முழங்கினார். தமிழ் மொழி வளர்ச்சி, தமிழின வளர்ச்சி, தமிழ்ப் பண்பாட்டுவளர்ச்சி முதலிய கொள்கைகளைக் குறையாத கவித்துவத்தோடு பாடல்களைப் புனைந்து வழங்கிப் புதியதொரு பொற்காலத்தை உருவாக்க முனைந்தார். இவருடைய செல்வாக்கும் செயல்பாடுகளும் உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களிடையில், குறிப்பாகத் தமிழாசிரியர்களிடையேபரவிக்கிடப்பதைக் காணலாம்.

தமிழகத்திலிருந்து 2500மைல்களுக்குப்பால் இந்திய மாக்கடலின் நடுவினில்சிறு குத்துவிளக்காய் விளங்கும் கவின் மொரீசியசில் குடிகொண்ட தமிழர்கள் தமிழ் மொழி, பண்பாடு என்ற இரண்டினையும் பேணிக் காப்பதில் அரிது முயன்று செயலாற்றுகின்றனர். இந்த நாட்டில் தமிழியல் வளர்ச்சிக்குப் பாவேந்தரின் தொடர்பும்தாக்கமும் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைச் சிறிதளவு பார்ப்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## மொரீசியசில் மொழிக் கொள்கை

மொரீசியசு பல்வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த மக்கள் குடியேறிய ஒரு வானவில் நாடு.மொரீசியசு நாட்டுக்கெனச் சொந்தம் பாராட்ட எந்த இனமும் கிடையாது. எல்லா இனமக்களும் அயல் நாடுகளிலிருந்து வந்தனராகையால் அவர்கள் தத்தம் தாய்மொழிகளை உடன்கொணர்ந்தனர்.தற்பொழுது, ஆட்சிக்கு ஆங்கிலம், உறவுக்கு பிரெஞ்சு, உயிருக்கு அவரவர் தாய்மொழி. இதுவே மொரீசியசு அரசின் கொள்கை. ஆனால், எங்கும் எதிலும் கிரியோல் மொழி கொடி கட்டிப் பறக்கிறது (இரா. கனகரத்தினம்,1980). ஆக அரசுப் பள்ளிகளில் ஒரு மொரீசியசு தமிழ் மாணவன் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகியவற்றைக் கட்டாயம் படிக்க வேண்டும். மேலும் தமிழை விருப்பப் பாடமாகக் கற்கின்றான்.

## தமிழ் கற்றல் / கற்பித்தல் நிலை

பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் தமிழர்கள் பெரும்பாலோருக்கு நாட்டுப் பொது மொழியான கிரியோல் மொழியே தாய் மொழியாக விளங்குகிறது. இன்று தமிழர்கள் தமிழ் மொழியை ஒரு முன்னோர் மொழியாகவும் சமூகப் பண்பாட்டு மொழியாகவும் பயின்று வருகின்றனர். மொரீசியசில் கல்வி பயிற்றும் மொழியாகஆங்கிலம் ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலையில், தேசியக்கல்வித்திட்டத்தில் தொடக்கநிலை முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் இரண்டாம் மொழியாகத்தான் பயிற்றுவிக்கப்படுகிறது. மற்ற இந்தியமொழிகளைக் கற்கும் வசதிகள் போன்றே தமிழ் மொழிக்கும் வழங்கப்படுகின்றனஎன்பது குறிப்பிடத்தக்கது.

## அரசுப்பள்ளிதொடக்கநிலையில்

அரசுப் பள்ளிகளில்1954முதல் தமிழை ஒரு துறையாக மாணவர்கள் படிக்கத் தொடங்கினார்கள். (சு. இராசாராம்) அப்பொழுது தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் இயற்றிய நூல்களே மொரீசியசில் பள்ளிப் பாடநூல்களாக அமைந்தன. அவற்றுள் 'தமிழ்4' என்ற பாடநூலில் இரண்டாம் பாடமாகப்'பாரதிதாசனார்' என்ற பாடம் இருந்தது. இதுவே மொரீசியசில் முதன்முதலில் பள்ளிகள் அளவில் பாவேந்தர் அறிமுகமான காலமாகும்.

எழுபதுகளில்தான் மொரீசியசில் எழுதப்பட்ட பாடநூல்கள் புழக்கத்தில்வரத் தொடங்கின. அந்தக் காலம் தொடங்கி, ஐந்தாம் மற்றும்ஆறாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூல்களில் பாரதியார் அல்லது பாரதிதாசன் மீது எழுதப்பட்ட கருத்துணர்தல் பகுதிகளாகப் பாடங்கள் அமைந்து வந்தன. இன்றுள்ள2015 ஆண்டு ஐந்தாம் வகுப்பிற்கான தமிழ்ப் பாடநூலில் பாரதிதாசன் என்ற தலைப்பினைக் கொண்ட பாடம் ஒன்றுஉள்ளது.

## அரசுப்பள்ளி உயர்நிலையில்

1977ஆண்டுமுதல் உயர்நிலைப் பாடத்திட்டத்தின் அடிப்படையில் எழுதப்பெற்ற இரண்டாம் படிவத் தமிழ்ப் பாடநூலில்“பாவேந்தர் பாரதிதாசன்” என்ற தலைப்பில் ஒரு பாடம் அமைந்துள்ளது. நான்காம் படிவப் பாடநூலில் பாரதிதாசன் இயற்றிய”தமிழ் வளர்ச்சி” என்ற தலைப்புள்ள கவிதை மூன்றாம் பாடமாகவிளங்குகின்றது.

ஐந்தாம் படிவம் வரையில் உள்நாட்டுப் பாடத்திட்டத்தைப்பின்பற்றுவர். ஆனால், மேல்நிலையில், குறிப்பாக, எச்எஸ்சி (HSC) அல்லது ஏ.லவல் (A LEVEL) படிக்கின்ற மாணவர்கள்காம்பிரிஜ் பல்கலைக்கழகம் (Cambridge University) வரையறுத்த பாடத்திட்டத்தைப் பின்பற்றுவார்கள். அந்தப் பாடத்திட்டத்தில் வரும் இலக்கியப் பகுதிகளில் பாரதிதாசன் பாடல்கள் எப்பொழுதுமே இடம் பெறுகின்றன. கடந்த பத்தாண்டுகள் காலக்கட்டத்தில் பாரதிதாசன் பாடல்கள் வரையறுத்தப்பெறும் விவரம் கீழ்வருமாறு காண்க.

| ஆண்டு | கவிதைகள் | அடிகள் |
|---|---|---|
| 2004–2004 | தமிழின் இனிமை<br>எழுதாக் கவிதை | 40<br>40 |
| 2005–2010 | புத்தகசாலை<br>கானல் | 40<br>40 |
| 2011–2013 | தமிழின் இனிமை<br>மயில் | 40<br>40 |
| 2014 | தென்றல்<br>வானம்பாடி<br>மயில் | 40<br>18<br>40 |
| 2015–2016 | தென்றல்<br>வானம்பாடி<br>எது கலை? | 24<br>18<br>32 |

## மாலைப்பள்ளி நிலையில்

மொரீசியசில் அரசுப்பள்ளிகளைத் தவிர, தமிழ்ச் சமூகப் பண்பாட்டுக் குழுக்கள் நடத்திவருகின்ற மாலைப்பள்ளிகளிலும் தமிழைப் பயிலும் வாய்ப்புண்டு. அந்தப் பள்ளிகளில் பயிலும் தமிழ்மாணவர்களுக்குத் தனிப்பட்ட பாடத்திட்டங்கள்வகுக்கப்பட்டுள்ளன. அங்கு, தொடக்கநிலை மற்றும் உயர்நிலை அளவில் தமிழ் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஏறக்குறைய ஐம்பது மாலைப்பள்ளிகளுக்கு உறுதுணையாக விளங்குவது“அகில மொரீசியசு தமிழ்த்தேர்வுக் குழு” என்ற அமைப்பாகும். இந்த அமைப்பு தயாரித்த பாடத்திட்டத்தில் இலக்கியப் பிரிவு என்று தனியாக வைக்கப்பட்ட மறுமலர்ச்சிப் பாடல்கள் வரிசையில் பாவேந்தர் பாரதிதாசன் பாடல்கள் இடம்பெறுவதுண்டு. அவற்றைக் கீழ்வரும் கட்டத்தில் காண்க.

| வகுப்பு | கவிதை | அடிகள் |
|---|---|---|
| முதல் படிவம் | தமிழ் வாழ்க | 10 |
| இரண்டாம் படிவம் | தமிழ்த் தொண்டு | 16 |
| நான்காம் படிவம் | இன்பத் தமிழ் | 16 |

அரசுப்பள்ளிகளில் மேல்நிலையில் தமிழ்ப் படிக்க வாய்ப்பு இல்லாதகுறையினைத் தீர்க்கும் நோக்கில், 1974 ஆண்டு தொடங்கி 1977 ஆம் ஆண்டு வரை அகில மொரீசியசுதமிழ்த்தேர்வுக் குழுவின் ஏற்பாட்டினால், சென்னை மாணவர் மன்றம் மலேசியாவில் இருப்பது போலவே, மொரீசியசுக்கென்றே நடத்திய 'தமிழ் மணி' என்ற பட்டத்தேர்வுக்கான பாடத்திட்டத்தில் 'புரட்சிக் கவி' மற்றும்'குடும்ப விளக்கு' என்ற பாவேந்தரின் கவிதைகள் பாடப்பொருளாக அமைந்திருந்தன.

மொரீசியசில் உள்ளமாலைப்பள்ளிகளின்பட்டியலில் 'பாரதிதாசன் பள்ளி'யும் இடம்பெறுகிறது. அப்பள்ளியில் பயில்கின்ற மாணவர்கள் தொடக்கநிலை மற்றும் உயர்நிலை வகுப்புகளைச் சேர்ந்தவர்கள்.

## மகாத்மா காந்தி நிறுவன நிலையில்

மகாத்மாகாந்தி நிறுவனம் சான்றிதழ், பட்டயம், இளங்கலை, முதுகலை, ஆய்வு, ஆசிரியப் பயிற்சி முதலிய வகுப்புகளிலும் தமிழைப் பயிலும் வாய்ப்பு அளிக்கிறது.

ஆசிரியர் பயிற்சி வகுப்புப் பாடத்திட்டத்தில், இலக்கிய அறிமுகம் என்னும் ஓர் அலகு (Module) உண்டு. இந்த அலகில் வரும் தமிழ்க் கவிஞர்கள் வரிசையில் பாவேந்தர் பாரதிதாசனும் அறிமுகம்பெறுகிறார்.

Advanced Certificate in Education (ACE) என்ற பணியிடை வகுப்பு தொடக்கநிலைத் தமிழ் ஆசிரியர்களுக்கு நடத்தப்படுகிறது. இந்த வகுப்பில் வரும் இலக்கியப் பகுதியில் பாவேந்தர் இயற்றிய 'எழுதாக் கவிதை', 'இன்பத் தமிழ்' என்ற கவிதைகள் பாடப்பொருளாக அமைந்துள்ளன.

தமிழியல் பட்டய வகுப்பில் (Diploma in Tamil Studies) மாணவர்கள் இக்காலக் கவிதைகள் என்ற அலகில் தெரிந்தெடுக்கப்பட்ட பாவேந்தர் கவிதைகள் இடம்பெறுகின்றன. காப்பிய இலக்கியம் என்ற அலகில் 'பாண்டியன் பரிசு' என்ற குறுங்காப்பியம் பாடப்பொருளாக அமைந்துள்ளது.

தமிழில்இளங்கலைப்பட்ட வகுப்பில் (B.A. (Hons) TAMIL) இக்காலக்கவிதைகள் என்ற அலகில் தெரிந்தெடுக்கப்பட்ட கவிதைகளில் பாரதிதாசன் கவிதைகள் பாடப்பொருளாக அமைந்துள்ளன. மேலும் காப்பிய இலக்கியம் என்ற அலகில்'வீரத்தாய்' என்றபாவேந்தரின்குறுங்காப்பியம் பாடப்பொருளாக அமைந்துள்ளது.

மொரீசியசில் பாவேந்தருடைய கவிதைகளைத் தேர்வுக்காகக் கற்றவர்கள் பலராவர். மகாத்மா காந்தி நிறுவனத்தில் பட்டய வகுப்பு மாணவர்கள் சிறு ஆய்வுகள் மேற்கொள்ள இருக்கிறார்கள்.2013 ஆம் ஆண்டில் பட்டய வகுப்பில் படித்த மாணவி புவனம் பிமாது,"பாரதிதாசன் படைத்த அழகின் சிரிப்பு என்னும் கவிதையில் இயற்கை" என்ற

*தலைப்பைக் கொண்டு ஆய்வு செய்து ஒப்படைத்தாள். அதே ஆண்டில் மாணவி கலையரசி சொர்ணம், "புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படைத்த வீரத்தாய் ஒரு பொதுப் பார்வை" என்ற தலைப்பில் சிற்றாய்வு செய்து ஒப்படைத்தாள். 2010 ஆம் ஆண்டில் இளங்கலைப்பட்ட மாணவியான இலட்சுமி வேங்கடசாமி'பாரதியார் மற்றும் பாரதிதாசன் குறுங்காப்பியங்களில் பெண் ஒரு சீர்திருத்த நோக்கு" என்ற தலைப்பில் ஆய்வினை மேற்கொண்டு ஆய்வேடு ஒன்றை ஒப்படைத்தாள். இவ்வாறு மாணவர்களும் பாவேந்தர் பற்றிய ஆய்வுகளில் ஈடுபடுகின்றனர்.*

## ஆசிரியர் பணிக்கு முன்மாதிரி

*தமிழைக் கசடறக் கற்ற பாவேந்தர் 18ஆம் வயதில் தமிழாசிரியர் பணியை ஏற்றார். அவர் தமிழாசிரியர் பணிக்குப் பெருமை சேர்த்த பெருந்தகையாளர்.பாவேந்தர் பாரதிதாசன் புதுச்சேரியில் ஆட்சி செய்த பிரெஞ்சு அரசாங்கத்தில் தமிழாசிரியர் பணியேற்றுச் சுமார் முப்பது ஆண்டுகள் பணிபுரிந்தவர். அவரிடம் தமிழ் பயின்ற மாணவர்கள் குழுவில் குறிப்பிடத்தக்கவர் கவிஞர் வாணிதாசன் என்பவர் ஆவார். பாவேந்தரின் ஆசிரியர் பணியைக் குறித்து,*

***" கவியரசர் தமிழ்ப்பாடம் நடத்தும் முறையே ஒரு தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்; மிகவும் தெளிவாகவும் இனிமையாகவும் அவர் பாடம் நடத்துவார் "***

*என்றுகவிஞர் வாணிதாசன் போற்றியுள்ளார்.(முருகுசுந்தரம், 1980).1970இல் மொரீசியசில் பாவேந்தரின் புகழ் பரவத் தொடங்கியது. தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய பேராசிரியர் அ.புட்பரதம் அவர்கள் மாணவர்களுக்குப் பாவேந்தரை அறிமுகப்படுத்தும் வகையில் அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளையும் ஒரு சில பாடல்களையும் பாடமாக விளக்கினார். இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குக் கவிதைகளை வாசிப்பதில் ஊக்கம் அளித்தார்.தமிழாசிரியர்களுக்குத்தமிழ்ப் பண்பாட்டறிவும் தேவை. அதை நிறைவேற்ற, இலக்கியப் பாடப்பகுதியாகப் பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டது.*

*1973ஆண்டில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் மாபெரும் கலைவிழா நடைபெற்றது. அந்த விழாவின்கலைநிகழ்ச்சியில் பாவேந்தரின்*

***'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட***
***போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்***
***பொதுஉடைமைக் கொள்கை திசை எட்டும் சேர்ப்போம்***
***புனிதமோடு அதை எங்கள் உயிர் என்று காப்போம்'***
***(பாவேந்தர் கவிதைகள்,1994)***

*என்ற பாடலையும்,*

*" வாழ்வினில்செம்மையைச் செய்பவள் நீயே*

***மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே***
***வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே***
***வீரனின் வீரமும் வெற்றியும் நீயே "(பாவேந்தர், இசையமுது,1975)***

*என்ற பாடலையும் மாணவர்கள் அனைவரும்கூட்டமாக நின்று இசையுடன் பாடினார்கள்.*

*எழுபதுகளில் மொரீசியசில் ஒருவிதமான தமிழ் மறுமலர்ச்சி தோன்றியது. பல ஊர்களிலும் நடைபெற்ற பள்ளிஆண்டு நிறைவுவிழாக்களின்போது உரையாற்றுவோர்*

*பாவேந்தரின்தமிழ் மொழி மற்றும் இனப்பற்று குறித்துத் தவறாமல் மேடையில் எடுத்துக் கூறுவார்கள்.இதனால் தமிழாசிரியர்களிடமும் மாணவர்களிடமும் புத்துணர்வு ஏற்பட்டது.*

## பாரதிதாசன் கல்வி நிலையம்

*பாரதிதாசனின் தமிழ்ப் பணியின் சிறப்பும் புகழும் மொரீசியசு தமிழாசிரியர்களிடம்நல்ல தாக்கத்தை உண்டாக்கின. நல்லாசிரியர்திரு இரவிந்திர செங்கண்ணா அவர்கள் தலைமையில் நாட்டின் வடக்குப்பகுதியில், தமிழ் மாணவர்களுக்குத் தமிழைச் சொல்லிக் கொடுப்பதற்குப்'பாரதிதாசன் கல்வி நிலையம்' ஒன்றை நிறுவினார். திறமையான தமிழாசிரியர்களை உருவாக்கும் உன்னதப் பணியைச் செய்து வரும் இக்கல்விநிலையம் தனது கலைத்திட்டத்தில் தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பண்பாட்டுக் கூறுகள் போன்றவற்றை இணைத்துள்ளது. தமிழ்மொழியை இன்றளவும்மொரீசியசு மண்ணில் நிலைபெறச்செய்யும் அரிய பணியைச் செய்து வருகிறது.*

*சென்ற ஆண்டு, சூன் திங்கள், **28** ஆம் நாளன்று மொரீசியசில் பாரதிதாசனின்**125** ஆண்டு நினைவு விழாவோடு பாரதிதாசன் கல்வி நிலையத்தின் வெள்ளி விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம்மலேசியாவிலிருந்துபேராசிரியர் மன்னர்மன்னன் அவர்கள் மொரீசியசுக்கு வருகை தந்துள்ளார்.*

*"இத்தரணியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பல்வேறு இக்கட்டான நிலைகளிலும்தங்களுடைய மொழியையும் பண்பாட்டையும் மறவாது இது போன்றவிழாக்களை நடத்தி வருவது பெருமைக்குரியது. இதைத் தான் புரட்சிக் கவி பாரதிதாசனும் விரும்பினார்." (வெள்ளி விழா மலர், ப.17)*

*என்று கூறி, விழா ஏற்பாட்டுக் குழுவினரை வாழ்த்தினார்.பாவேந்தர் மகனார்மன்னர்மன்னன் பேரன் பாரதியோடு விழாவில் கலந்து கொண்டார். அவர் நிகழ்த்தியவாழ்த்துரையில் "கல்வியே நம் விளக்கு என்னும் கருத்துரையை எடுத்து உரைத்துத்தம் வாழ்நாள் எல்லாம் கல்வித்தொண்டு ஆற்றிய பாவேந்தர் திருப்பெயரில் பாரதிதாசன் கல்வி நிலையம் உருவாக்கித் தளராத தமிழ்த்தொண்டு ஆற்றி வருவது போற்றற்குரியதாகும்."(வெள்ளி விழா மலர், **2015**,ப.**11**)*

*என்று மனமகிழ்ந்து பாராட்டினார்.*

## ஊடகத்தில் பாவேந்தர்

*மொரீசியசில் பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் ஊடகம்வாயிலாகத் தாக்கம் கொண்டுள்ளன. ஒருசில சிறப்பிதழ்களிலும் பாரதிதாசன்பற்றிய கட்டுரைகளும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.வானொலியில் தமிழ்த் திரைப்படப்பாடல்கள் நிகழ்ச்சி வாயிலாகப் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள்தமிழ் மக்களிடத்தில் பரவலாயின. வானொலியில் 'இலக்கியப் பேழை' என்ற தலைப்பில் வாரந்தோறும் நிகழ்ச்சிகள் அளிக்கப்படுகின்றன. அந்த நிகழ்ச்சிகளுள் பாரதிதாசன் பிறந்த நாள், மணந்த நாள், மறைந்த நாள் ஆகிய மூன்று நாட்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகள் அளிக்கப்பட்டன. இந்த அரியபணியில் சிறந்து விளங்கியோர் திரு சுப்பையாபொன்னன் மற்றும் திரு கதிர்வேல் சொர்ணம் என்பவராவர். பல தமிழ்ப் பள்ளி விழாக்களின்போது தமிழில் உரையாற்றுவோர்பாவேந்தரின் கவிதைகளில்வரும் வரிகளை மேற்கோளாக எடுத்துக் கூறுவார்கள். காட்டாக, 'சங்க நாதம்'*

*என்ற கவிதையில் வரும் கவிதை வரிகளை அடிக்கடிஎடுத்துக் கூறுவார்கள். அவர் இயற்றிய வாழ்த்துப் பாடல்களைக் கலை நிகழ்ச்சிகளில் இசைக் கலைஞர்கள் மேடையில் பாடுவார்கள்.*

*மொரீசியசில் பணியாற்றுகின்ற தமிழாசிரியர்கள் பலர் பாவேந்தர் மீது பேரன்பும் பெருமதிப்பும் கொண்டவர்கள்.1985 ஆம் ஆண்டில் பல ஆண்டுக் காலமாகத் தமிழாசிரியர் பணியில் சிறந்து விளங்கி,முதுநிலைமேற்பார்வையாளர் பதவியிலிருந்து உயர்திரு பொன்னுசாமி கணேசன் அவர்கள் ஓய்வுபெற்றதைக் குறித்து, மாண்புமிகு கல்வி, கலைகள், பண்பாட்டு அமைச்சர் உயர்திரு ஆறுமுகம் பரசுராமன் தலைமையில் மாபெரும் விழா எடுக்கப்பட்டது. அவ்விழா நிகழ்ச்சியில் தமிழாசிரியர்கள் மகிழ்ந்து வாசித்து வழங்கிய பாராட்டுரை கீழ்வருமாறு,*

***" தமிழ்என்னும் மனவிளக் கேற்றடா நாட்டில்!***
***தமிழரின் நெஞ்சமாம் அழகான வீட்டில்***
***அமுதென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியே***
***அறமென்று கொள்ளடா செந்தமிழ்ப் பணியை***
***தமிழ்என்னும் உணர்வினைச் சேரடா எங்கும்***
***தமிழரின் ஆட்சியே உலகெலாம் தங்கும்***
***இமையேனும் ஓயாது தமிழுக் குழைப்பாய்***
***இன்பமே அதுவென்று தமிழுக் குழைப்பாய் "***
***பாவேந்தர், தமிழ்த் தொண்டு***

*சிலதிருமண அழைப்பு மடல்களிலும் வாழ்த்துரைகளிலும்பாவேந்தரின் வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதுண்டு.*

***"விடிந்தால் திருமணம்! விண்ணின் நிலவு***
***வடிந்தஇன் றிரவுமணப்பெண் வருவதால்***
***வாழ்த்தி நீங்கள் வரவேற்பதற்கும்,***
***காலை மலர்ந்ததும் கவின்மண வறையில்***
***மாலையிட்ட மனங்கள்தமை***
***'வாழ்க' என்று வாய் மலர்ந்திடவும்***
***உடனேயாம் பிரிந்திடும் உணவுண் ணுதற்கும்***
***வந்தருள் புரிக, வந்தருள் புரிக !"***
***பாவேந்தர்.***

## அறிஞர்களின் மீது தாக்கம்

*சிறந்த கல்வியாளரும் எழுத்தாளருமான இராமு சூரியமூர்த்தி என்றபெரியார் பாரதிதாசனுடைய கவிதைகளால்மிகவும் ஈர்க்கப்பட்டார். இவர் பாரிஸ் மாநகரில் நடந்தேறிய பாரதிதாசனுடைய நூற்றாண்டு விழா மலரில் ஒரு கட்டுரையைப் பிரெஞ்சு மொழியில் எழுதினார். பாவேந்தர் தமிழ்த்தாயைஉயர்த்திப் போற்றும் மாண்பினையும் திராவிட இனத்துக்கு ஒரு தாயகம் வேண்டும் என்ற கொள்கையினையும் அறுதியிட்டுப் போற்றியுள்ளார்.* "Son allergence a la MØre Tamoule fut telle qu'il prouva laLÙgitimitÙdu concept d'un Ùtat Dravidien" *(பாரதிதாசன் நூற்றாண்டு விழா மலர், பாரிஸ், 1994).*

*பாவேந்தருடைய கவிதைகளை மிகவும் ஆர்வத்துடன் கற்ற பேராசிரியர் பொன்னுசாமி திருமலைச்செட்டி அவர்கள்'புரட்சிக் கவி' என்ற குறுங்காப்பியத்தைத் தழுவி அதே பெயரில் ஓரங்க நாடகம் ஒன்றை இயற்றி, மேடையில் நடிக்க வைத்தார். அது நாடகப்போட்டி விழாவில் முதல் பரிசு பெற்றது.*

## மொழிப்பெயர்ப்பியல் பணி

*ஒவ்வொரு மொழியிலும் இலக்கிய உருவாக்கம் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டு வருகிறது.பரந்த கல்வி அறிவு வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு முக்கிய கருவியாகும்.பல கல்வி நிறுவனங்களில் மொழிபெயர்ப்புத்துறை முக்கியம் வாய்ந்த துறையாக வளர்கின்றது.*

***‘தாயெழிற் றமிழை என்றன்***
***தமிழரின் கவிதை தன்னை***
***ஆயிரம் மொழியிற் காண...’***
***(பாவேந்தர் கவிதைகள், 1994; ப. 85)***

*வேண்டும் என்றுஅவாவுற்றார்புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.தமிழ் மொழியின் சிறப்பினை அயலவர் உணர மொழிபெயர்ப்பே சிறந்த கருவி என்பது அவருடைய திண்ணமான கருத்தாகும். பேரறிஞர் அண்ணா திட்டமிட்டபடி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மொழிபெயர்க்கும் பணியைச் செவ்வனே மேற்கொண்டு வருகிறது. தெரிந்தெடுக்கப்பட்ட பாரதிதாசன் கவிதைகள்பலமொழிகளில் மொழிபெயர்க்கப்படுகின்றன. புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம் பாவேந்தரின் படைப்புகளில் பலவற்றை மொழிபெயர்த்து நூல் வடிவில் கொண்டுவந்துள்ளது.*

*மொரீசியசில்தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பியலின்பங்குகுறிப்பிடத்தக்கது. திருக்குறள், பாரதியார் பாடல்கள், ஔவையார் போன்ற நீதி நூல் ஆசிரியர்களுடைய பாடல்கள் ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் மொழிபெயர்க்கும் பணி தொடங்கியது.அந்தப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.*

*மகாத்மா காந்தி நிறுவனத்தில் தமிழ்த் துறையைச் சேர்ந்த திருவாட்டி உமாதேவி அழகிரி பாரதிதாசனுடைய ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கவிதைகளைக் குறித்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு பட்டமும் பெற்றுள்ளார்.. அண்மையில்ஒருசில பாரதிதாசன் கவிதைகளைப் பிரெஞ்சு மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார்.எங்கள் தமிழ்* (Notre tres chere Langue Tamoule), *புதியதோர் உலகம்செய்வோம்* (Le Surgissement d’un Nouveau Monde) *அழகின் சிரிப்பு* (La Muse de Beaute) *ஆகிய கவிதைகள் பாரதிதாசன் கல்வி நிலைய வெள்ளி விழா மலரில் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது தெரிந்தெடுக்கப்பட்ட பாரதிதாசன் கவிதை தொகுப்பு ஒன்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பணியில் இறங்கியுள்ளார். இதுபோன்ற அறிவு வளர்க்கும் மொழிபெயர்ப்பு நடவடிக்கைகளால் மொரீசியசில் பாவேந்தரின் தொடர்பும் தாக்கமும்மேன்மேலும் நிற்கும்.*

## வழிகாட்டும் ஆசான்

*‘பாரதிதாசன் தமிழின் உயர்வுக்குப் பாடினார்; தமிழர் உயர்வுக்குப் பாடினார்; துறைதோறும் தமிழ் வளம்பெற, நலம்பெற வழி பல காட்டினார்’ (மெய்யப்பன்,1994)*

*தமிழிலக்கியத்தின் பெரும்பகுதி பாட்டு வடிவம் கொண்டதாகும். இலக்கியத்தை நன்றாகக் கற்பதற்கும், பாட்டு எழுதுவதற்கும்இலக்கணம் மிகவும் தேவை என்று வற்புறுத்தியுள்ளார்பாவேந்தர்.*

***“கல்லாதான் ஒட்பம் கழியநன்றாயினும்***
***கொள்ளார் அறிவுடையார்”*** *(குறள் 404 )*

என்றவள்ளுவர் வழிநின்ற தமிழ் மொழியையும் இலக்கியத்தையும் ஐயம் திரிபறக் கற்றலுக்குப் பாவேந்தர் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார்.அவருடைய கல்விப் புலமையின் காரணமாக அவர் பெயரில் ஒரு பல்கலைக்கழகம்நிறுவப்பட்டுள்ளது.தாமே ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக விளங்கினார்.

தமிழியக்கத்தின் ஊற்றுக் கண்ணாகத் திகழ்ந்த பாவேந்தர், தமக்குப் பின் தோன்றிய கவிஞர்களுக்குத் தமிழுணர்வினை ஊட்டிக் கலங்கரை விளக்கம்போல வழிகாட்டினார். இதனால் இவருக்குப் பின் பல கவிஞர்கள் தோன்றி தமிழ்க் கவிதை உலகிற்கு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்கின்றனர். பாவேந்தர் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டதைப் போன்றே பாவேந்தர் பின்பற்றி சுரதா( சுப்புரத்தினதாசன்) என மாற்றிக் கொண்டவர்

**முடிவுரை**

'எங்குப் பிறப்பினும் தமிழின் தமிழனே' என்ற கொள்கையைத் தீவிரமாகக் கடைப்பிடித்து வாழ்ந்தார் பாவேந்தர். அவருடைய தளராத இனப்பற்றும் ஆழ்ந்த மொழிப்பற்றும் மொரீசியசில் காணக்கிடக்கும் தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சியில் கலந்துநிற்கும் அளவிற்கு நிறைந்த தாக்கத்தை உண்டாக்கின.மொரீசியசில் தமிழ்கற்பித்தலின் பல நிலைகளில் அமைந்திருக்கும் பாடத்திட்டங்களில் தமிழ் இலக்கணமும் பாரதிதாசன் கவிதைகளும் பாடமாக இடம்பெறுகின்றன.

தமிழ் மொழியை எல்லாப் பாமரமக்களும் மிக எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலே, உலக மக்கள் அனைவரும் தமிழ் மொழியை விருப்புடன் படிக்கும் வகையிலே நூல்கள் பல இயற்ற வேண்டும் என்ற பாவேந்தரின் அறிவுரையை மனதில் கொண்டு படைப்பிலக்கிய துறையைவளர்க்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

'பாரதிதாசனை உலக மாபெரும் சமூகச் சீர்திருத்தக் கவிஞர்களுள் ஒருவராகவே மக்கள்எப்பொழுதும் மதிப்பார்கள். அவர் அயல் நாட்டில் பிறந்திருந்தால் தம் வாழ்நாளிலேயே 'நோபல்' பரிசினைப் பெற்றிருப்பார்' என்று பேராசிரியர் மயிலைச் சிவமுத்து அவர்கள் கூறுவதில் எள்ளளவும் ஐயம் இல்லை.

**Bibliography**

All Mauritius Tamil Examination Syndicate Souvenir Magazine.(2013).

http://www.cie.org.uk/programmes-and-qualifications/cambridge-international-as-and-a- level.

*Pâratiyâr kavitaika7*. (1994). Chennai: New Century House.

*Pâvçntar pâratitâcal*. (1994). Chennai: manivasagar Publications.

Murugusuntharam. (1980). *Arumpuka7 mommukka7 malarka7*. Chennai: agaram Publications.

Paventhar. (2004). *Tava_il_i e;uta*. Chennai: Nam Tamilar Publications.

*Pâvçntar Pâratitâcalnû__âGmu vi;â malar*. (1992). Paris.

*Pâratitâcal kalvi nilaiyam ve77i vi;â malar*. (2015). Mauritius.

Kanagarathinam,Ira.(1980). *Morîciyacu tîvil eEka7 Tami;ar*. Sri Lanka: Sunnagam.

Murugan,V, (1994). (Trans) *Selected Poems of Barathithaasan*. Chennai: International Institute of Tamil Studies.

Paventhar. (1975).*Icaiyamutu*. Chennai: Pari Nilayam Publications.
Rasaram.Su.(1991). *Morîciyacu Tami;arum Tami;um*, Thanjavur: Tamil University.

# புரட்சியாளராய் வாழ்ந்த பாவேந்தர்

**உதவிப் பேராசிரியர் ச.கருத்தான்** / Assistant Professor S.Karuthan[1]

*Abstract*

It is obvious that Pavender lived a life of reformation with the names Pavender, Puduvai Kuil, Puratchi Kavingar and Ezhuchi Kavingar. After Mahakavi Bharathi, Bharathidasan claimed with the merits of Literature. In his poetry, there has always been a life and emotions. His Cine songs and the other literary forms always have an unique form and thought. Because radical thought means thinking differently with some corrective measures. This Paper deals with how Bharathidasan's ideas and literature brought out his radicalism.

Key Words : Bharathidasan, Radicalism, Revolution, Cine Songs, Poetry.

## முன்னுரை

*பாவேந்தரென்றும், புதுவைக்குயிலென்றும், புரட்சிக் கவிஞரென்றும், எழுச்சிக் கவிஞரென்றும் இன்னும் எத்தனை எத்தனையோ சிறப்புப் பெயர்களைக் கொண்டு திகழ்ந்த பாரதிதாசன், மகாகவி பாரதிக்குப் பின்னர் தமிழ்க் கவிதையுலகில் தன்னிகரற்ற தனிப்பெரும் கவிஞராக விளங்கிப் பெருஞ்சாதனை படைத்தார் என்பதில் சந்தேகமேயில்லை.*

## புரட்சியாளர் பாவேந்தர்

*எழுத்தாளனாக இருந்தாலும் சரி, கவிஞனாக இருந்தாலும் சரி, அவன் எதைப் பற்றி எழுதுகின்றானோ அவன் அதுவாகவே மாறிவிடவேண்டும். அப்போதுதான் அவன் எழுத்திலும் படைப்பிலும் உயிரோட்டமிருக்கும். பாரதிதாசனின் எந்தக் கவிதையை எடுத்துக் கொண்டாலும் சரி, பிற்றைநாளில் அவர் பகுத்தறிவு இயக்கத்திற்கு வந்தபோதும் சரி, ஆரம்ப காலக்கட்டங்களில் காந்தியடிகளின் தூய தொண்டராக இருந்து,*

**"கதரணிவீர் என்றுரைத்த**
**காந்தி யண்ணல் ஆணை - எழிற்**
**காந்தியண்ணல் ஆணை - அதைக்**
**கருதிடுவீர் அது உமக்கு**
**நாரதனார் வீணை"**

*என்றும்,*

**இன்னல் செய்தார்க்கும் இடர்செய்திடாமல்**
**இராட்டினம் சுற்றென்று சொல்லும் எங்கள்**
**ஏதமில் காந்தியடிகள் அறச்செயல் வெல்லும் - வெல்லும்**

---

[1]The author is a lecturer in the Thiruchy National College, Tamil Nadu, India. (Please Provide his email)

- வெல்லும்

***கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்***
***கழறுகின்றேன் அதைக்கேளே - நீவிர்***
***கதரணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்***
***தூளே - தூளே - தூளே***

*என்றும் எழுதி வந்த அவர் அப்போது பாரத நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு வந்தார். மேலும்,*

***"அன்னியர் நூலைத் தொடோம்" என்ற சேதி***
***அறைந்திட டா புவி முற்றும் - எங்கள்***
***அறுபது கோடித் தடக்கைகள் ராட்டினம்***
***சுற்றும் - சுற்றும் - சுற்றும்***
***இன்னும் சொல்லாது பிறர் செய்யும் சூழ்ச்சிகள்***
***என்று சொல்லிப் புயம் தட்டு - அட***
***யானையின் மேல் வள்ளுவா சென்று நீ பறை***
***கொட்டு - கொட்டு - கொட்டு***

*என்றெல்லாம் பாடிய கவியரசர் கதர்த் தொழிலைக் கைவிட்டநிலை ஒன்று வந்தபோது வேதனையுடன் இவ்விதம் பாடி மீண்டும் கதர்த்தொழிலில் ஈடுபடத் தூண்டினார்.*

***காய் நினைத்துக் கனியிழக்கும்***
***கதை மறப்பீர் நீரே - அந்தக்***
***கதி நினைத்து வறுமை யென்னும்***
***கனல் அவிக்க வாரீர்!***

***என்று பாடிய பாவேந்தர், கொடிய வறுமை நீக்கவும், கொத்தடிமைத்தனத்தைப் போக்கவும் பாடிப்பாடி உணர்ச்சியூட்டிய வண்ணமிருந்தார். பாரதிதாசனார் தாம் எழுதிய கவிதைகளில் ஒன்றிப்போனார் என்பதில் சந்தேகமேயில்லை. அதனால்தான் அவருடைய கவிதைகள் உயிரோட்டமுள்ளதாக இன்றும் உள்ளன.***

*1930ம் ஆண்டு புதுவையில் அச்சிடப்பட்ட "பாரதிதாசன் பாடல் தொகுதி"யில் இடம்பெற்ற ஒரு பாடலில்*

***தேர் நின்ற வீதிச் செயபேரிகை முழங்கப்***
***போர் நின்ற வீரர்குலம் பூத்த நிலம் - பார் நின்று***
***அடல் வளர்த்துப் பாரத நற் புத்திரன் நான் ஆக***
***உடல் வளர்த்த நாடு என் உயிர்!***

*என்று ஆரம்ப காலக்கட்டத்திலேயே உணர்ச்சி பொங்க எழுதியவர் பின்னாளில் எவ்விதம் எழுதியிருப்பார் என்பதை நாம் கூறவேண்டியதே இல்லை.*

***"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்***
***தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!***
***தமிழுக்கு நிலவென்று பேர் இன்பத்***
***தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்"***

*என்ற பாடலை இசைத்தட்டு மூலம் கேட்கும்போது ஒவ்வொருவரும் புளகாங்கிதம் அடைவர் என்பது திண்ணம். அவ்வளவு இனிமை தரும் வரிகளாக உள்ளன என்பதில் சந்தேகமே இல்லை. நமக்குள்ளே ஒருவிதப் புத்துணர்வைப் பொங்கச் செய்யும் அற்புதமான*

பாடலாக "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று தொடங்கும் பாடல் அமைந்துள்ளது.

நாம் தாய்மொழியாம் தமிழ் பற்றி இவ்வளவு அற்புதமான முறையில், கேட்கக் கேட்க இன்பத் தேன் நம் காதுகளில் வந்து பாய்ந்து நம்மைப் புத்துணர்வும் பூரிப்பும் கொள்ளும் முறையில் பாடிக் களித்த பாரதிதாசனார் பாடிய தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் நம்மை எவ்வளவு இன்புறச் செய்கிறது என்பதை,

**வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே**
**மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே**
**வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே**
**வீரரின் வீரமும் வெற்றியும் நீயே**
**தாழ்ந்திடும் நிலையினில் உனை விடுப்பேனோ**
**தமிழன் எந்நாளும் தலைகுனிவேனோ**
**சூழ்ந்தின்பம் நல்கிடும் பைந்தமிழ் அன்னாய்**
**தோன்றுடல் நீ: உயிர் நான் மறப்பேனோ**
**செந்தமிழே உயிரே நறுந்தேனே**
**செயலினை மூச்சினை உனக்களித்தேனே!**
**நைந்தாயெனில் நைந்துபோகும் என் வாழ்வு**
**நன்னிலை உனக்கெனில் எனக்கும் நானே**
**முந்தைய நாளினில் அறிவும் இலாது**
**மொய்த்த நன் மனிதராம் புதுப்புனல் மீது**
**செந்தாமரைக் காடு பூத்ததுபோலே**
**செழித்த என் தமிழே ஒளியே வாழி!**

என்ற இந்தக் கவிதை வரிகள் மூலம் நம் தமிழ்த்தாயை சிறப்பாகப் போற்றிப் புகழ்கிறார்.

இவ்விதம் நம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது பற்றுதல் கொண்ட இப்பெரும்புலவர் தாய்நாட்டுப் பற்றும் மிகவுடையவராகத் திகழ்ந்தார் என்பதை நாடு நன்கறியும்.

நாட்டுப்பற்று மிகக் கொண்டிருந்த நம் புரட்சிக்கவிஞர் யாருக்கும் அஞ்சாமலும், துணிந்து எதையும் செய்யும் பேராற்றலையும் கொண்டு திகழ்ந்தார். அப்போது புதுச்சேரியைப் பிரெஞ்சு நாட்டினர் ஆண்டு வந்தனர். நம் நாட்டில் விடுதலைப்போராட்டம் தீவிரமாக நடைபெற்று வந்தது. அத்தகைய ஒரு பெரும் போராட்டம் புதுச்சேரியிலும் நடக்காத வண்ணம் பிரெஞ்சு அரசாங்கத்தினர் தீவிரமாகக் கண்காணித்து வந்தனர். முக்கியமாக அரசு ஊழியர்கள் யாரும் கதர் உடையும், காந்திக்குல்லாவும் அணியக்கூடாது என்பது பிரெஞ்சு அரசாங்கத்தின் கடுமையான ஆணையாகும்.

இவ்விதமாக ஆணையிருந்தாலும் கூட, அதைத் துளியளவும் பொருட்படுத்தாமல் நமது கவிஞர் கதராடையணிந்தும், காந்திக் குல்லாவைத் தலையில் வைத்துக் கொண்டும் செல்வது தான் வழக்கம். இவ்விதம் இருந்து வந்த நிலையில் பிரெஞ்சுக் கல்வித்துறைத்தலைவர் விடுமுறை நாள் ஒன்றில் தம்முடைய வீட்டில் வைத்து ஆசிரியர்கள் அனைவரையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார். இவ்விதம் ஏற்பாடு செய்ததோடு மட்டுமின்றிக் குறிப்பிட்ட பகுதியிலுள்ள ஆசிரியர்கள் அனைவரும் கட்டாயமாகக் கூட்டத்திற்கு வரவேண்டுமென்று சுற்றறிக்கையும் விடப்பட்டது.

அவ்வாறு விடப்பட்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் குறித்த நாளில் அனைவரும் கல்வித்துறைத் தலைவரின் வீட்டில் சென்று அமர்ந்திருந்தார்கள். அவ்வாறு

சென்றமர்ந்திருந்த ஆசிரியர்களில் புரட்சிக் கவிஞர் மட்டும் கதராடையும், காந்திக்குல்லாவும் அணிந்தவராய் அமர்ந்திருந்தார். இவ்விதமாகக் கதருடையில் வந்திருந்த புரட்சிக் கவிஞரைப் பார்த்த மற்ற ஆசிரியர்கள் இவ்விதம் அடம்பிடித்த வண்ணமிருக்கிறாரே, கல்வித்துறைத் தலைவர் பார்த்தால் சுப்புரத்தினத்தின் சீட்டைக் கிழித்து வீட்டிற்கு அனுப்பி விடுவாரே என்று பயந்தவர்களாய், அவரிடம் "சுப்புரத்தினம், நீ உன் கதராடையை மாற்றுவதற்கு விருப்பப்படாவிட்டால் வீட்டிற்காவது போய்விடு இல்லாவிட்டால் துரை உன்னை வேலையிலிருந்து அனுப்பிவிடுவார்" என்று அச்சுறுத்திப் பார்த்தார்கள். அவருடைய ஆசிரிய நண்பர்கள் என்ன சொல்லியும் கவிஞர் கேட்கவே இல்லை. "என்னதான் நடக்கும், நடக்கட்டுமே" என்று எண்ணி எழுந்து போகவே இல்லை.

இவ்விதம் அவர்கள் பேசிக்கொண்டிருந்த வேளையில் கல்வித்துறைத் தலைவரான துரை தம் மனைவியுடன் அங்கு வந்தவர், கவிஞரை நீண்ட நேரம் ஏற இறங்கப் பார்த்துவிட்டு உள்ளே சென்றுவிட்டார்.

இவ்விதம் அவர் பார்த்து விட்டுச் சென்றதும் அந்த ஆசியர்களில் கவிஞரைத் தவிர அனைவரும் பயந்து போனார்கள். அதன்பின்னர் பயந்திருந்த அவர்கள் கவிஞரிடம் "சுப்புரத்தினம், பார்த்தாயா? துரை எதற்காக உள்ளே சென்றிருக்கிறான் தெரியுமா? உமக்கு "டிஸ்மிஸ்" ஆர்டர் எழுதிக்கொண்டு வரத்தான் போயிருக்கான், அதற்கு முன்னால் நீ அவன் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேள், இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும்" என்று சொல்லிப்பார்த்தார்கள். அப்போதும் அவர் எதுவும் பேசாமல் இருந்தார்.

"நீ அவரிடம் சென்று தயவாகப் பேசி மன்னிப்புக் கேட்காவிட்டால் எங்கள் பாடும் சிக்கலாகிவிடும் பார்த்துக்கொள்" என்கிறார்கள். இவ்விதம் கூறிய பின்னரும் பாரதிதாசனார் அது பற்றி எதுவுமே பேசாமலிருந்தார். துரை என்ன பண்ணுகிறாரென்று பார்ப்போம் என்று எண்ணிய வண்ணமிருந்தார்.

நாம் இவ்வளவு தூரம் சொன்ன பிறகும் சுப்புரத்தினம் அமைதியாக இருக்கிறாரே என்று எண்ணியவா;கள் வேதனைப்பட்டார்கள்.

சிறிது நேரத்தில் துரை தமது மனைவியுடன் ஆசிரியர்கள் இருக்கும் இடத்திற்கு வந்து அவரைச் சுட்டிக்காட்டி "இதோ பார் இந்த ஆசிரியரை! கதர் ஆடையும், கதர் குல்லாவும் அணிந்து எவ்வளவு கம்பீரமாக இருக்கிறார்! இவைகளை அணியக்கூடாது என்று கூறியும், இவர் அணிந்துள்ளார். இவர் தன் வேலை போவதைப் பற்றிக்கூடக் கவலைப்படாமல் எதற்கும் அஞ்சாமல் என் எதிரிலேயே உட்கார்ந்திருக்கிறார்! இவருடைய நாட்டுப்பற்றையும், அதைவிடவும் இவரிடமுள்ள நல்ல மனவுறுதியையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்" என்று கூறிய பின்னர்தான் அந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் மனநிம்மதி ஏற்பட்டது.

எதுவந்தாலும், எத்தகைய துன்பங்கள் வந்தாலும் எதிர்கொள்ள வேண்டும் என்ற கவிஞரின் மனவுறுதியை நாம் பாராட்டித் தான் தீரவேண்டும்.

பாவேந்தருக்குப் "புரட்சிக்கவிஞர்" என்ற பட்டம் பிற்காலத்தில் கொடுக்கப்பட்டதென்றாலும் அவர் இளமையிலிருந்தே புரட்சியாளராகவே திகழ்ந்திருக்கிறார் என்பதற்கு இந்நிகழ்ச்சி மிகச்சிறந்த சான்றாகும்.

தேசிய இயக்கத்தின் முன்னோடிக் கவிஞராக மகாகவி பாரதியார் விளங்கினாரென்றால் திராவிட இயக்கத்தின் தன்னிகரற்ற கவிஞராகப் புதுவை தந்த நம் கவிஞர் போற்றிப் புகழப்பட்டு வந்தார் என்று கூறலாம்.

*மகாகவி பாரதியாருக்குப் பின்னால் புகழ்பெற்ற கவிஞர்களாகச் சிறந்து விளங்கிய கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை ஆகியோருக்கு முன்னரே கதர் இராட்டினப் பாட்டு, தாயின் மணிக்கொடி, தீண்டாமை ஒழிப்பு தொடர்பான பாடல்களையும், பக்திப் பாடலான சுப்பிரமணியசுவாமி துதியமுது போன்ற பாடலையும் பாடிப் பெரிதும் போற்றப்பட்டு வந்தார். அதன்பின்னர் திராவிட இயக்கத்தில் ஈடுபட்ட அர்த்தமற்ற சமயச் சடங்குகள் பற்றி தாக்கி எழுதியும், பேசியும் வந்தார். அதேநேரத்தில் தாய்மொழியாம் தமிழை அழிக்க எந்த சக்தி வந்தாலும் அதை அழித்திடவும் முனைந்து நின்றார்.*

*திருக்குறளுக்குப் புதிய உரை படைத்த இவர் பாரதியாருக்குப் பின்னர், பைந்தமிழ் உலகம் பாராட்டிப் போற்றும் வண்ணம் தமது இறுதி மூச்சு உள்ளவரை எழுதிய வண்ணமிருந்தார். எத்தனையோ திரைப்படங்களுக்குக் கதை, வசனம், பாடல்கள் எழுதிய இவர் திரைப்படப் பாடலாசிரியர் சிலருக்கு பாடல் எழுதும் முறையைக் கற்றுக்கொடுத்தார். அதாவது அடிப்படை இலக்கணத்தை அவர்களுக்குப் போதித்தார்.*

*தாய்மொழியாம் தமிழ்மொழியின் உயர்வே தன்னுயர்வு என்று எண்ணியவராய் முதலில் அதன் உயர்வுக்காகப் பாடுபட முன்வந்தார். அந்தப் பெருமுயற்சியில் இடையூறுகள் பல பற்பலவாறு வந்தன. அவைகளையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் பாடுபட்டு வந்த பாரதிதாசனார் தம்முடைய முயற்சியில் வெற்றி கண்டு மனநிம்மதியும் கொண்டார்.*

## பெண் விடுதலை

*“மேலைநாடுகளில் பெண் ஒருவனால் மனைவியாகப் பார்க்கப்படுகிறாள்; கிழக்கில் அவள் எப்பொழுதும் தாயாகவே போற்றப்படுகிறாள். இந்தியாவில் பெண் என்பவள் நம் கண்களுக்கு தரிசனம் தரும் தெய்வம். அவள் தன் முழு வாழ்க்கையையும் தாய்மைக்கே அர்ப்பணிக்கிறாள்” என்பார் சுவாமி விவேகானந்தர். ஆனால் இத்தகு பெருமைமிக்க பெண்ணினம் சமூகத்தில் படும் இன்னல்கள் மிகப்பலவாகும்.*

*மலையில் விளையும் சந்தனம் மார்பில் பூசி மகிழ்பவர்களுக்கே குளிர்ச்சியைக் கொடுக்கும்; கடலில் விளையும் முத்து அணிந்து மகிழ்பவர்களுக்கே அழகினைக் கொடுக்கும்; யாழிலிருந்து எழும் இசையானது கேட்டு மகிழ்பவர்களுக்கே இனிமையைத் தரும். அதுபோலவே பெண்ணும் பிறந்த வீட்டிற்குப் பயன்படமாட்டாள் என்றும், முத்தும் சந்தனமும் போன்று பெண்ணும் ஒரு நுகர்பொருள் என்கிற ஆதிக்கச் சிந்தனையின் ஆணிவேர் அறுபடாத காலத்திலேயே,*

***“பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம் என்கின்றீரோ***
***மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை”***

*என்று ஆவேசமாயக் கேட்டும்,*

***“பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு***
***மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே”***

*என்றும் அறுதியிட்டுக் கூறியவர் புரட்சிக் கவிஞரே. பெண்களை நமது சுயநலத்திற்காக அடக்க அடக்க நாம் அடிமைகளாகத்தான் போய்விடுவோம்; நாம் எழுச்சிபெற முடியாது. நல்ல குடும்பம் அமைந்து அதன்பின்னர் பிறக்கும் பிள்ளைகளும் பெருமையுடன்*

சிறந்துவிளங்க வேண்டுமானால் முதலில் பெண்ணடிமை தீர வேண்டும். சமூகத்தில் பெண் எழுச்சிபெற வேண்டுமெனில் பெண் கல்வி அவசியம் என்பதை,

**"மலைவாழை அல்லவோ கல்வி**
**வாயார உண்ணுவாய் போ என் புதல்வி"**

என்று மிக அழகாக எடுத்துரைக்கிறார். ஆண்களால் உருவாக்கப்பட்ட மதங்களும், சாத்திரங்களும், சட்டங்களும், இலக்கியங்களும் பெண்களுக்கு அடிமை விலங்கு பூட்டியே அழகு பார்த்தன. சிந்தனையாளர்களும், தத்துவ ஞானிகளும் கூட பெண்களை அழகுப்பதுமைகளாக மட்டுமே பார்த்தனர் என்பது ஒரு கசப்பான உண்மையாகும். "போகத்துக்காகவே படைக்கப்பட்ட பொதுவுடைமைப்பொருள் என்பது தான் சாக்ரடீசின் சிந்தனை; "ஒன்று ஆள்வதும், மற்றொன்று ஆளப்படுவதும் இயற்கையின் நியதி. எனவே தான் ஆண் ஆள்கிறான், பெண் ஆளப்படுகிறாள்" என்று விளக்கம் தந்து ஆணாதிக்கத்தை ஆராதனை செய்தவர் அரிஸ்டாடில். கிரேக்கத்தில் பேச்சுக்கலையில் பெயர் பெற்ற டெமஸ்தனிஸ் "சட்டப்பூர்வமான வாரிசுகளை வயிற்றில் சுமக்கவும், வீட்டைப் பராமாரிக்கவும் ஒருத்தியை மனைவியாக்குவோம். அழகுமிக்க மகளிருடன் காதலில் ஈடுபடுவோம்" என்று தன் வாழ்காலச் சமூகத்தின் காம நுகர்வுக்கு வழிக்கதவு திறந்து வைத்தான். ஆனால் புரட்சிக்கவிஞர்,

**"ஊமையென்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்**
**ஆமை நிலைதான் ஆடவர்க்கு உண்டு"**

என்று பாடி பெண்ணுரிமையைப் பற்றி சமூகத்திற்கு அறிவுறுத்துகிறார். பெண்களை ஊமையாக்கி, அவர்களைப் பேசவிடாமல் முடக்கிவைப்பதால் சமூகம் தான் முடங்கிப்போகும் என்பதை அறிவுறுத்துகிறார்.

## முடிவுரை

அதேநேரத்தில்,

**"தனித்து வரும்போது**
**கெட்ட தறுதலை கண்வைத்தால்**
**இனிக்க நலங்கூறு பெண்ணே!**
**இல்லாவிடில் தாக்கு!**
**உமியல்ல மாதர் வலக்கை**
**தீயோர் உடம்பை இடிக்கும் உலக்கை"**

என்று பெண்களுக்கும் அறிவுறுத்துகிறார். இவ்வாறு மொழிப்பற்று, நாட்டுப்பற்று, பெண் விடுதலை ஆகிய அனைத்து நிலைகளிலும் ஒரு புரட்சியாளராகவே பாவேந்தர் வாழ்ந்து வழிகாட்டியுள்ளார் என்பதை அறியலாம்.

## Biblography


Bharathithasan. (2006). *Pâratitâcal Kavitaika7*. Chennai: Manivasagar Publication.

Koventhan, T. (1994). *Pâvçntam.* Chennai: Koventhan Publication.

Murugusuntharam. (2014). *Intiya Ilakkiya Ci_pika7 Varicaiyil PâratitâcaI*. Chennai: Sahitya Academy.

Sabithajoseb. (2009). *Puramcikkaviñar PâratitâcaI 100*. Chennai: Nakkiran Publication.

Seyalapathy, S. (2004). *PâratitâcaI Pamaippuka7il Tami;uGarvu*. Chennai: The Parker.

# திரையிசைப் பாடல்களில் பாவேந்தர்

**முனைவர் இரா.இளையராஜா** / Dr.R.Ilayaraja[1]

***Abstract***

Pavender Bharathidasan shimmered among the Tamil writers. He was the Lighthouse for many creators. He was a source of inspiration to many Tamil Poets. He was a multifaceted personality and proved his mettle in Drama, Poetry, Short Story, Essays, etc. Apart from these; his contribution in Cine Songs is noteworthy which took his versatility to great heights. He made Film songs into a powerful medium to show how Tamil language shines among the other languages of the world. He brought out almost all the tenets like Valour, Love, Politics, Society, Culture and Religion through his Cinema Songs. His inate idea of bringing out reform in the Tamil society is also sensed in his Lyrics. This Paper deals with all the aspects with suitable examples.

Key Words : Bharathidasan, Cine Songs, Powerful Medium, Reforms

## முன்னுரை

தமிழ்ப் படைப்பாளிகளின் உள்ளங்களில் கலங்கரை விளக்கமாக வெளிச்சம் தந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். அவருடைய கவிதைகள் கவிஞர்களின் எண்ணத்தைத் தூண்டும் எழுதுக்கோலாக எழுச்சி பெற்றவை. தமிழினத்தின் கருவூலப் பெட்டகமாகமாகத் திகழ்வது இவரது படைப்புகளாகும். கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை எனப் பன்முகக் களங்களில் பாரதிதாசன் பயணம் செய்தாலும், இவரின் திரையிசைப் பாடற் சிந்தனைகளை இக்கட்டுரையில் நோக்குவோம்.

## திரையிசைப் பாடலின் வலிமை

‘ஒரு படைப்பாளி தன்னுடைய கவிதைகளை நூலாக வெளியிடும்போது, பல ஆயிரம் பேர் வாசிப்பர். இதில் இடம்பெறும் கவிதைகளோ அல்லது கவிஞரின் திரையிசைப் பாடல்களோ சினிமாவில் இடம் பெறும்போது லட்சோப லட்சம் மக்களைச் சென்றடைகிறது. பல தலைமுறைகளைக் கடந்து ஒலிக்கிறது. இந்த வல்லமை திரையிசைப் பாடல்களுக்கு உண்டு.

## தமிழ் சினிமா மீதான கோபம்

தமிழ் சினிமாவின் தொடக்கம் – தமிழோடு தெலுங்கு கலந்து பேசப்படும் உரையாடல்கள் இடம் பெற்றன. புராண இதிகாச கதைகளை மையப்படுத்தி தொடக்க கால சினிமாக்களாக காளிதாஸ், ஹரிஷ்சந்திரா, ராமாயணம், சாவித்திரி, பிரகலாதா... போன்ற திரைப்படங்கள் வெளிவந்தன.

---

[1]The author is a lecturer in the Hindustan Arts and Science College, Tamil Nadu, India.

*இச்சூழலைக் கண்டு விரக்தியடைந்த பாரதிதாசன், 1938இல் வெளிவந்த 'பாரதிதாசன் கவிதைகள்' எனும் கவிதைத் தொகுப்பில் 'தமிழ் நாட்டின் சினிமா' என்ற தலைப்பில் தன் கோபத்தை பதிவு செய்துள்ளார்.*

***என் தமிழர் படமெடுக்க ஆரம்பஞ் செய்தார்***
***எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக!***
***ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்***
***உள்ளதுவாய் அமைக்கவில்லை, உயிர் உள்ளதில்லை!***
***ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதா இல்லை!***
***ஒன்றேனும் உயர்நோக்கம் அமைந்ததுவா இல்லை!***
***ஒன்றேனும் உயர்நடிகர் வாய்ந்ததுவா இல்லை!***
***ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதா இல்லை!***
*என்று மனக்குமுறலை வெளிக்காட்டியுள்ளார்.*

*திரையிசைப் பாடல் எழுதி புகழ்ப் பெற்ற கவிஞர்கள் உண்டு. ஆனால் தன் கவிதையால் மக்கள் மனங்களை வென்றவர் பாரதிதாசன். இவர் திரையிசைப் பாடலின் மீது கவனம் செலுத்தத் தொடங்கியவுடன் பல விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டது. 'உண்மைக் கவிஞனிடம் கவிஞனுக்கு வேண்டிய கற்பனையும் படைப்புத் திறனும் சேர்ந்து, இந்த மனிதப் பண்புகளும் பல மடங்கு அதிகம் இருக்கும். அவன் சுதந்திரமாக இருப்பான். சமூகம் என்ன நினைக்கும் எப்படிச் சிரிக்கும் என்றெல்லாம் அஞ்சமாட்டான். பாரதிதாசன் அத்தகைய உண்மைக் கவிஞர். அவரது கம்பீரமான வாழ்வும் கவிதையும் அதற்குச் சான்று.'2*

## புகழ் பெற்ற பாடல்களும் - ஆர்வம் காட்டாமையும்

*திரைப்பாடல் எழுதினால் அதிக சன்மானம் பெறலாம் என்று கருதாமல், தன்மானத்தோடு வாழ்ந்தவராக பாரதிதாசன் திகழ்ந்துள்ளார். கலைஞர் மு.கருணாநிதி போன்ற பலரும் பாவேந்தரைத் தேடிப் போய்ப் பாட்டெழுதுமாறு கேட்டுக் கொண்டதுண்டே தவிர இவராகப் போய் யாரிடமும் வாய்ப்புக் கேட்டதாக வரலாறு கிடையாது. அதற்காக அவர் அலைந்ததில்லை.3 இந்தக் கொள்கையோடு விளங்கிய பாரதிதாசனின் பாடல்கள் பல. மக்கள் மனங்களில் நீங்கா இடம் பிடித்த சில குறிப்பிடத் தகுந்தப் பாடல்களாக*

***தமிழுக்கும் அமுதென்று பெயர்***
***துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து இன்பம்***
***சங்கே முழங்கு***
***மலை வாழையல்லவோ கல்வி***
***சித்திரச் சோலைகளே***

*போன்றவைகளைக் குறிப்பிடலாம்.*

*'திரைப்படங்களுக்குப் பாடல் எழுதுவதிலே புரட்சிக் கவிஞருக்கு உற்சாகமில்லை. மற்றவர்கள் வற்புறுத்தலுக்காக ஏதோ எழுதினார். பாடல்கள் எழுத உட்காருவார். இரண்டு வரிகள் எழுதுவார். உடனே ஏதாவது இலக்கியப் பேச்சுத் தொடங்கும். சுவையோடு பேசிக் கொண்டிருப்பார். பாடல்களைப் பற்றி யாராவது நினைவு படுத்துவார்கள் அது தானே கெடக்குதுப்பா, எழுதினால் போச்சு சினிமாப் பாட்டு தானே' என்று சொல்லிவிட்டு மீண்டும் பேச்சைத் தொடங்குவார்.4 என்று தமிழ் நாடகத் தந்தை என்று போற்றப்படும் தி.க.சண்முகம் பாவேந்தரின் நிலையைப் பதிவு செய்துள்ளார்.*

### இசையமுது

*'இசையமுது' என்ற பெயரில் இசைப் பாடல்கள் அடங்கிய நூலாக படைத்துள்ளார். பாரதிதாசனின் கவிதை, இசைப்பாடல் தொகுப்புகளில் இருந்த பாடல்களை எடுத்து திரைப்படங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

### எம்.ஜி.ஆர். திரைப்படத்தில் பாரதிதாசன் பாடல்கள்

*பாரதிதாசன் மறைவிற்குப் பிறகுதான் அவருடைய பாடல்கள் தமிழ் சினிமாவில் பரவத் தொடங்கின.*

*பாரதிதாசனைப் பல ஆண்டுகள் கண்டு கொள்ளாமல் இருந்த திரை உலகம் அவரது மறைவிற்குப் பின் சற்றே விழித்துக் கொண்டு கடைசி அஞ்சலியாக அவரது சில பாடல்களைத் தத்தெடுத்துக் கொண்டது. பெரும்பாலும் எம்.ஜி.ஆர் தான் ஒரு சில பாரதிதாசன் பாடல்களைத் தன் படத்தில் சேர்த்துக் கொண்டார்.5 அவை,*

*என் தங்கை (1952) - காதல் வாழ்விலே*

*பல்லாண்டு வாழ்க (1975) - புதியதோர் உலகம் செய்வோம்.*

*நான் ஏன் பிறந்தேன் (1972) - சித்திரச் சோலைகளே*

*சந்திரோதயம் (1966) - அறிஞர் தம் இதய ஓடை*

*கலங்கரை விளக்கம் (1965) - சங்கே முழங்கு*

*போன்ற படங்களில் பாவேந்தரின் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.*

*இப்படங்களைத் தவிர பராசக்தி (1952), பணம் (1952), ரத்தக் கண்ணீர் (1954), பஞ்ச வர்ணக்கிளி (1965), ஓர் இரவு (1951) போன்ற திரைப் படங்களில் பாவேந்தர் பாடல்கள் எழுதியுள்ளார்.*

### காதல் உரிமை

*சாதி, மதம், இனம், மொழிகளைக் கடந்து எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் இரண்டு மனங்கள் ஒன்றாக இணையும் போது தோன்றுவது காதலாகும்.*

*இதைதான் ஆதித் தமிழன் கணியன் பூங்குன்றனார் 'யாயும் யாயும் யாராகியரோ' என்று பாடி சாதி மறுப்புத் திருமணத்திற்கு விதைப் போட்டார்.*

*சாதீயமும், சமூகமும், மதமும், கோத்திரங்களும், ஜோதிடங்களும் பல்வேறு விதமான இன்னல்களைக் காதல்களுக்கு நேரிடையாகவும், மறைமுகமாவும் கலாச்சார சீரழிவுகளை தோற்றுவிக்கிறது. இந்நிகழ்வுகளை பாவேந்தர் 'பெற்ற மனம்' என்ற படத்தில்,*

*''''''நாம் இருவர் சம்மதித்தால் எந்த நாய்தான் நம்மைத் தடுக்கும். சாமிக்கும் வேலையில்லை, சடங்குகள் காசைப் பிடுங்கிடவும் முடியாது. சாதிமதம், பல சாத்திரம் கோத்திரம் ஜோதிடம் எதையும் நம்பாதே அந்தச் சேதி எல்லாம் பழைய போதை*

***பாதகம் வரும் என்று பஞ்சாகங்கம் பார்க்காதே***
***நீ தானே என் வாழ்வின் வித்து***
***அடி நான் தானே உன் காதல் சொத்து6*** P*120*

*என்ற பாடலடிகளால் கண்டிப்பதோடு, காதலின் வலிமைக்கு வழி சொல்கிறார்.*

*மேலும்,*

*தீண்டாமை ஒழிப்பு, சாதிக் கொடுமை, ஆரியர் - திராவிடர் நிலை, பெண்ணுரிமை, குழந்தை மணம், விதவைகள் துயர், தொழிலாளர் நலன், மூடப்பழக்க வழக்கங்கங்களைச் சாடும் பெரியாரின் கொள்கையால் தன்னை ஈடுப்படுத்திக் கொண்டே பாவேந்தர்.*

***சாதிகள் இல்லை மதம் மக்கட்கு அவின்***
***கடவுள் நம்பிக்கை - தன்னம்பிக்கைக்கு எதிர்ப்பு***
***சாதிப்பற்று, சமயப்பற்று, கடவுள் நம்பிக்கை***
***இவை ஒழிய வேண்டும், ஒழியாத வரை***
***மக்கள் முன்னேற்றமில்லை.7***
***நீ புரட்சியைத் தூண்டு, புரட்சி செய் என்று வீரமுழக்கமிடுகிறார்.***
***பெண் கல்வி உரிமை***

*பெண்களை எளிய பொருளாக, அற்பப் பொருளாகக் கருதும் இச்சமூகத்தில், வாழ்வும் இல்லாமல், வளர்ச்சியும் இல்லாமல் முடங்கிக் கிடக்கும் மாதர்கள் மதிப்பு மிக்கவராக உயர 'பெண் கல்வி' அவசியம் என்று எண்ணுகிறார் பாவேந்தர்.*

***'படியாத பெண்ணாய் இருந்தால் - கேலி***
***பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்!***
***கடிகாரம் ஓடுமுன் ஓடு - என்***
***கண்ணல்ல! அண்டை வீட்டுப் பெண்களோடு***
***கடிதாய் இருக்கும் இப்போது - கல்வி***
***கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!***
***கடல் சூழ்ந்த இத்தமிழ் நாடு - பெண்***
***கல்வி பெண் கல்வி என்கின்ற தன்போடு' 8***

*எனும் பாடல் வரிகளை ரங்கோன் ராதா (1956) திரைப்படத்தில் பதிவு செய்துள்ளார்.*

*பிறந்த பெண் தன்னைப் பெற்ற தந்தை, கட்டிய கணவன், ஈன்ற மகனுக்கு அடிமையாகிறாள். இது தொன்று தொட்டு வரும் வழக்கமாகும். இந்த அடிமை நிலையை உடைப்பது பெண் கல்வியாகும்.*

*தன்னைத் தானே சுற்றும் கடிகாரம் பிறருக்கு நேரத்தை சுட்டிக்காட்டும். தன் குடும்பத்தையே சுற்றும் பெண் கல்விகற்றால், இச்சமூகமே உயரும் என்று உள்ளடக்கம் தந்துள்ளார்.*

**ஜன நாயக உரிமை**

*எளியவர் - வலியவர் வேறுபாடு இல்லாமல் அனைவரும் சமத்துவ உரிமையுடன் இயங்குவதே ஜன நாயகம் ஆகும்.*

*ஜன நாயகத்தைப் பண நாயகம் விழுங்குவதும், எளியவரை வலியவர் வெல்வதும், வாடிக்கை நிகழ்வது வேடிக்கையாக தொடர்கிறது.*

*1966இல் வெளியான மணிமகுடம் திரைப்படத்தில் எத்தனையோ எதிர்ப்புக்களுக்கிடையே*

அவன் ஒரு நாட்டுக்கு மன்னன். முடியாட்சியை மக்களாட்சியாக மாற்றிட வேண்டும் எனும் காதலை மையமாக கொண்ட படத்தில் பாவேந்தர் எளியோர்க்கும் சரிநிகர் நீதி கிடைக்க வேண்டும். அநீதி இழைப்பவர்களிடம் வேங்கையாக வீரமுழக்கமிடுகிறார் பாவேந்தர்.

***வலியோர் சிலர் எளியோர் தமை***
***வதையே புரிகுவதா?***
***மகராசர்கள் உலகாளுதல்***
***நிலையாம் எனும் நினைவா?***
***கொலைவாளினை எடடா, மிகு***
***கொடியோர் செயல் அறவே***
***குகை வாழ் ஒரு புலியே - உயர்***
***குணமே விய மனிதா***
***தலையாகிய அறமே புரி***
***சரிநீதி உதவுவாய்***
***சமமே பொருள் ஜனநாயகம்***
***எனவே முரைசறைவாய்!9***

'சங்க நாதம்' என்ற தலைப்பில் பாரதிதாசன் பாடல் தொகுதியில் இடம் பெற்ற இந்தக் கவிதை மறக்க முடியாத திரைப் பாடலாக கலங்கரை விளக்கல் என்ற படத்தில் உருப் பெற்றிருக்கிறது.

***சங்கே முழங்கு! சங்கே முழங்கு! சங்கே முழங்கு***
***எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்***
***மங்காத தமிழென்று சங்கே முழங்கு***
***எங்கள் பகைவர்கள் எங்கோ மறைந்தார்***
***இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு10***

என்பதாகும்.

இன்பத் தமிழ் என்ற தலைப்பின் கீழ் உள்ள இக்கவிதை, 1965இல் வெளிவந்த பஞ்சவர்ணக்கிளி திரைப்படத்தில் தமிழுலகமே மயங்கும் மெட்டில் தமிழின் சிறப்பை பாவேந்தர் பட்டியலிடுகிறார்.

***'தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்***
***தமிழ் எங்கள் வளமிக்க உனமுற்ற தீ...' 128***

'எழுத்துப் பத்திரிகையும் இரத்தக் காட்டேரி போல கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை சம்பந்தப்பட்டவரை விடாது' என்பார் புதுமைப்பித்தன்.11 இக்கருத்து தன் லட்சியமாகக் கொண்டு தமிழுலகம் மேன்மையுறப் பல நல்ல கருத்துக்களைத் திரைப்படங்களில் பதிவு செய்துள்ளார் பாவேந்தர்.

## Bibliography

Bharathidasan. (1993). *PâratitâcaI Pâmalka7*. Chennai: New Century Book House.

Vamanan. (2000). *PâratitâcaI Tiraippâmalka7*. Chennai: Manivasagar Publication.

Rajendran, P.,L. (2008). *EI Pârvaiyil PâratitâcaI*. Chennai: Sellammal Publication.

Krishnamorthi, K. (2000). *Pâratitâcal Vâ;kkai Varalâ_u*. Chennai: Tamil Nadu Political Research Centre.

Senthalai Gauthaman, N. *Pakutta_ivu Iyakkattil Pâratitâcal*. Coimbatore: Sulur Arivuneri Publication.

# பாரதிதாசன் கவிதைகளில் பொருளியல் வாதம்

## Materialism in the poems of 'Pavender' Bharathidasan

**கிங்ஸ்டன் பால் தம்புராஜ்** Kingston Paul Thamburaj[1]
**கார்த்திகேஸ் பொன்னையா** Karthiges Ponniah[2]

***Abstract***

The aim of this Paper is to explain the usage of materialism in the poems written by the poet 'Pavender' Bharathidasan. He is a revolutionary, social reformer and path breaking poet. He stirred emotions and a sense of self respect among Tamils though his writings. His literary creations incorporate many elements. This Article seeks to address the usage of Materialism theory in his poems. The materialism theory deals with the physical matter that is the only or fundamental reality and that all beings and processes and phenomena can be explained as manifestations or results of matter. Thus, this Paper shed light on how 'Pavender' Bharathidasan succeeded in implementing the elements of materialism theory in his poetic works.

**Key words** : Bharathidasan, Materialism, History, Nature, Arts and Literature

### முன்னுரை

'பாவேந்தர் பாரதிதாசன்', தொடக்கத்தில் முருக வழிபாடு மீது ஈடுபாடு கொண்டு பின்பு சீர்திருத்தவாதியாய்ப், பகுத்தறிவாதியாய் மாறினார். அவரது கவிதைகளில் சீர்திருத்த வேட்கையையும், நாட்டுப்பற்றையும் தமிழுணர்வையும் நாம் காணலாம். 'பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், சேரதாண்டவம், அழகின் சிரிப்பு , குடும்ப விளக்கு, குறிஞ்சித் திரட்டு கண்ணகி புரட்சிக் காப்பியம், சஞ்சீவி பர்வதத்தின் சாரல், மணிமேகலை வெண்பா, காதல் நினைவுகள் , கழைக் கூத்தியின் காதல், இளைஞர் இலக்கியம், சௌமியன், இசையமுது இரண்டு தொகுதிகள், நல்ல தீர்ப்பு, தமிழியக்கம், இருண்ட வீடு, திருக்குறள் உரை' ஆகியவை இவரது படைப்புகள் ஆகும். தமிழ்மொழி, இயற்கை, சீர்திருத்தம், இல்லறமாண்பு, பொதுவுடைமை, சமத்துவம் ஆகியவை இவரது பாடுபொருள்கள் ஆகும். உணர்சிகளை உணர்ச்சிகளாகவே முன்னிலைப்படுத்தாமல் அக்கருத்துக்களைச் சிந்தனையின் தாக்கமாகவே பாவேந்தர் பாரதிதாசன் வெளிப்படுத்தியுள்ளார். உள்ளுணர்வு, அறியும் ஆற்றல், கவனம், மன உணர்வு அல்லது உணர்ச்சி வேகம், இயல்பு, ஊக்கம், மூளையின் செயல்பாடுகள், ஆளுமை, நடத்தை மற்றும் உள்ளார்ந்த தொடர்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் பொருள் முதல் வாத கருத்துக்களை எவ்வாறு தனது கவிதைகளில் பதிவு செய்துள்ளார் என்பதை ஆய்வதே இக்கட்டுரை.

[1]The author is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjug Malim, Malaysia. fkingston@gmail.com
[2]The author is a Lecturer in the Education University of Sultan Idris, Tanjug Malim, Malaysia. kartheges@fbk.upsi.edu.my

## பொருளியல் வாதக் கோட்பாடு

*பொருள் முதல்வாதம் என்பது பொருளை முதன்மையாகக் கொண்டு பகுத்தாராய்தலைக் குறிக்கிறது. பொருள் என்பது சமூகத்தைக் குறிக்கிறது. நாம் வாழும் சமூகம் உற்பத்தி சக்திகளாலும் அவற்றிற்கு இடையேயான உறவுகளாலும், சிந்தனைகளாலும் உருவாக்கப்பட்டுள்ளது.*

**பொருள் முதல்வாதத்தின் பிரதானக் கூறுகள்:**

*•பொருள் என்பதே அடிப்படையானது; கருத்து என்பது பொருளால் தீர்மானிக்கப்படுவதே என்று கூறுகிறது.*

*•சமூக ஒழுக்கம், சட்டம், நீதி, வழமை போன்ற அனைத்துமே பொருளைப் பிரதிபலிப்பனவாகும்.*

*உதாரணமாக மன்னர் காலத்தில் நீதியானது எனக் கருதப்பட்ட பல விடயங்கள் இன்றைய சமூகப் பொதுப் புத்தியால் அநீதியானதாகக் கருதப்படுகின்றன. அன்றைய பொருள் இப்போது மாற்றமடைந்து விட்டது.*

*“சமூக வாழ்க்கை தீர்மானிக்கும் சிந்தனை முறை வளர்ச்சி பெறுகிறது. அதன் வளர்ச்சியின் ஒரு புள்ளியில் அது சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. அது பொருளை மாற்றும் வலிமை பெறுகிறது. இவ்வாறு தாம் சமூகமாற்றம் நிகழ்கிறது”. (தர்மராஜன், 1987, ப.10) என்று கூறுகிறார்.*

## பொருளியல் வாதத்தின் நான்கு படி நிலைகள்

*பொருளியல் வாதத்தை நான்கு படிகளாக வகுக்கலாம் என்று (அப்பாதுரை,2003,ப.122) அவர்கள் மொழி வளம் என்ற நூலில் குறித்துள்ளார். அவை முறையே,*

1. *இயற்கையின் மலர்ச்சியே உயிர் வளர்ச்சி*
2. *உயிர் வளர்ச்சியின் மலர்ச்சி மனித இன நாகரிகம்*
3. *மனித இன நாகரிகத்தின் மலர்ச்சி மொழி*
4. *மொழி வளர்ச்சியின் மலர்ச்சியே இலக்கியம்*

*இந்த நான்கு பொருளியல்வாதப் படிகளையும் பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகளில் பொருத்திப் பார்ப்பதே இக்கட்டுரையாகும்.*

## இயற்கையின் மலர்ச்சியே உயிர் வளர்ச்சி

*உலகம் என்பது உயிர்கள் உள்ளடங்கியது. உயிரிகளுக்கு நீர் மூலப்பொருள். ‘நீரின்றி அமையாது உலகு’ (திருக்குறள் 20) என்பது தமிழரின் அறிவுக் கோட்பாடு. இந்த நீரும் வான்மழையின் மூலமே பெறுகின்றது இவ்வுலகு என்கிறார் திருவள்ளுவர். அறிவும் உணர்ச்சியும் இணைந்த மனித வாழ்வில் இயற்கையை உணர்ந்தவர்கள்தான் கவிஞர்கள். “இயற்கை மனிதனுக்குப் புதிராய், இறையாய், தாயாய், தோழனாய்ப் பல தோற்றங்கள் காட்டியிருப்பதை அறியமுடிகிறது”.(நசீம்தின், 1991:1) சங்க இலக்கியங்களில் நாம் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் என்பதை முதல் பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்ற பகுப்பின் மூலம் நாம் அறியலாம். சங்க இலக்கியங்களுக்குப் பின்னர்*

தோன்றிய இலக்கியங்கள் இயற்கையை அழகியல் நோக்கில் வர்ணித்ததைக் காணலாம். “பெருங்காப்பியம் இலக்கணமாக மலை, கடல், நாடு, நகர், ஆறு பருவங்கள், கதிரவன் தோற்றம், சந்திரனின் தோற்றம் ஆகியவற்றைப் பற்றிய வருணைகளைக் கொண்டிருக்க வேண்டும்“ (திருஞானசம்பந்தம், 2007:19) என்று தண்டியலங்காரம் குறிப்பிடுகின்றது. இந்நோக்கில் புதுக்கவிதைகளும் இயற்கையைப் பற்றி பாடுகிறது. பாரதிதாசனும் இயற்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தனது பாடல்களைப் படைத்தார். பாரதிதாசன் இயற்கையின்பால் நம்பிக்கை கொண்டவர். கண்ணில் காணும் காட்சிகளைக் கவிதையாக வடிப்பவர். இயற்கையில் தான் கண்டு அனுபவித்து ஆனந்தம் அடைந்தற்குக் காரணமான ஒவ்வொரு பொருளைப் பற்றியும் பாரதிதாசன் தனது கவிதைகளில் படைத்துள்ளார். இயற்கைப் பொழுதுகளான காலைப் பொழுது, மாலைப் பொழுது, இரவு நேரம் ஆகியவைகளைக் குறித்துத் தனது கவிதைகளில் பாடியுள்ளார். பாவேந்தர் பாரதிதாசன் இயற்கையைப் பாடுவதில் சிறந்தவராக விளங்கினார்.

“தமிழிலக்கிய மரபு கண்டிராத புதுமைப் புரட்சியை அழகின் சிரிப்பு மூலம் செய்கிறார் பாவேந்தர். இயற்கையைப் பற்றிய விளக்க வர்ணனை இயக்கமுடையதாகவும் இயக்கமின்றியும் அமைதலுண்டு. இவ்விரு நிலைகளையும் பாரதிதாசன் அழகின் சிரிப்பில் காணலாம்.

- இயற்கை அளிக்கும் காட்சியழகில் ஈடுபட்டுச் சித்தரிப்பது.
- இயற்கையை உவமையில் பயன்படுத்துவது
- இயற்கையைப் பயன்படுத்திக் குறிப்பாகக் கருத்தைத் தெரிவிப்பது.
- இயற்கையை மானிட வாழ்வுடன் இணைத்துக் காட்டுவது
- இயற்கையின் வாயிலாக அரிய நீதிகளையும் பெரிய உண்மைகளையும் தெரிவிப்பது”

(பாலசுப்பிரமணியன்:1983:1)

**விரிந்த வானே வெளியே எங்கும்**
**விளைந்த பொருளின் முதலே**
**திரிந்த காற்றும் புனலும் மண்ணும்**
**செந்தீ யாவும் தந்தோய்**
**தெரிந்த கதிரும் நிலவும் பலவாச்**
**செறிந்த உலகின் வித்தே**
**புரிந்த உன்றன் செயல்கள் - எல்லாம்**
**புதுமை! புதுமை! புதுமை!**

(பாரதிதாசன் கவிதைகள் இயற்கைச் சிறப்பு 1)

உலகின் வித்தாக எல்லாம் புதுமையாக இருக்கிற, இந்த இயற்கை, ஆற்றலுக்கும் அழகுக்கும் ஊற்றுக்கண்ணாய் இருக்கிறது. குறிப்பாக, உற்பத்திக் கருவிகளும் மனித உழைப்புத் திறனும் வளர்ச்சி பெற்றிருக்காத காலப் பகுதிகளில் இயற்கையின் ஆற்றலே மனித உணர்வின் ஊற்றுக்கண்ணாக இருந்தது; தொடர்ந்து, தொழில் குழும முதலாளித்துவம், சந்தைப் பொருளாதாரம், உலகமயமாக்கல், முதலியவற்றின் காரணமாக இயற்கையையும் சுற்றுப்புறச் சூழல்களையும் சீரழிக்க முயற்சிகள் நடந்தாலும் இன்னும் இயற்கையின் ஆற்றலும், உள்பொதிந்து கிடக்கும் அதன் அழகும் அவற்றின் தேவையும்

*மனித குலத்தினால் உணரப்பட்டு வருகிறது என்று இயற்கையின் சிறப்பை உணர்த்துவதன் மூலம் இயற்கையின் மலர்ச்சி தான் உயிர் வளர்ச்சிக் காரணியாகும் என்று உரைக்கிறார் பாவேந்தர் பாரதிதாசன்.*

## உயிர் வளர்ச்சியின் மலர்ச்சி மனித இன நாகரிகம்

*கடலின் ஆழங் காண்பதுவும் தமிழ் நாட்டின் நாகரிக ஆழங் காண்பதுவும் ஒன்று (நடராஜன் 1947: 2) தமிழர்களின் நாகரிகத்தைக் கணக்கிட முடியாது.*

***"ஆதி மாலமல நாபிக் கமலத்த னுதித்***
***தவன் மரீசி யெனு மண்ணலை யளித்த பரிசும்"***

*(கலிங்கத்துப்பரணி)*

*என்னும் கலிங்கத்துப் பரணி மக்கட் படைப்புத் தமிழகத்தில் நிகழ்ந்ததாகக் கூறுகின்றது. "வழங்குவதுள் வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி" (திருக்குறள்:955) என்னும் திருக்குறள் உரையில் பரிமேலழகர் "பழங்குடி தொன்றுத்தொட்டு வருகின்ற குடி என்று பொருள் கூறுகின்றார். ஓர் இன மக்களினது நாகரிகத்தின் உயர்வினையும், அம் மக்களின் பண்புகளையும் அம் மக்களால் போற்றி வளர்க்கப்படும் கலைகளைக் கொண்டும் அளவிட இயலும். தமிழர் மிகவும் தொன்மை வாய்ந்த ஓர் இனத்தைச் சார்ந்தவர்கள் பாரம்பரியப் பெருமை உடையவர்கள். உலக நாகரிகங்களில் இடம் பெறத்தக்க உயர்ந்த நாகரிகத்தை உடையவர்கள். இந்த நில உலகு தோன்றிய காலத்திலேயே தமிழ் இனம் தோன்றிவிட்டது. மனித வாழ்வை உருவாக்கியதே தமிழ்மொழி என்று தமிழினத் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக்கிறார். ஆதி மனிதன் தமிழன் தான் அவன் மொழிந்ததும் செந்தமிழ் தான் என்றும் குறிப்பிடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன். மேலும்,*

***புனல் சூழ்ந்து வடிந்து போன***
***நிலத்திலே புதிய நாளை***
***மனிதப் பைங்கூழ் முளைத்தே***
***வகுத்தது மனித வாழ்வை***

*(அழகின் சிரிப்பு: தமிழ் முதல் பாடல் வரிகள் :16 )*

*கடல் சுழ்ந்த இந்த உலகத்தில் நிலத்திலே பிறந்த முதல் மனிதர்கள் பிறந்தது தமிழ் பேசும் மரபில் பிறந்தவர்களாகிய நாம் என்று குறிப்பிடுகிறார். இதன் மூலம் உயிர் வளர்ச்சியின் மலர்ச்சி தான் மனித நாகரிகம் என்பதையும் அந்த முதல் நாகரீகத்தை வளர்த்தவர்கள் தமிழர்கள்தான் மனிதர்களின் முன்னோடி என்பதை உறுதிப்படுத்துவதுடன் உயிர் வளர்ச்சியின் மலர்ச்சி மனித இன நாகரிகம் என்பதைத் தனது கவிதையின் மூலமாகத் தெளிவுப்படுத்தியுள்ளார் பாவேந்தர் பாரதிதாசன்.*

## மனித இன நாகரிகத்தின் மலர்ச்சி மொழி

*"இனிமையும் நீர்மையுந் தமிழெனலாகும்" என்னும் பிங்கலச் சூத்திரமும் தமிழுக்கு இனிமை என்று பொருள் கூறுகின்றது.*

***கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோடமர்ந்து***
***பண்ணுறத் தெரிந்தாய்ந்த விப்பசுந்தமிழ்ஏனை***
***மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிப்போல்***
***எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ'***

*(திருவிளையாடற் புராணம்)*

*என்று ஆன்றோர் கூறிய பொருள் சிற்சில மொழிகளை ஒப்பிட்டு நோக்குவார்க்கும் இனிது விளங்கும். பண்டைக் காலந் தொட்டு நூல் வழக்கினும் உலக வழக்கினும் திருத்தமடைந்து மக்களறிவின் முதிர்ச்சிக்குப் பெரிதும் உதவி செய்வனவாய்ப் போதரும் பழைய மொழிகள் சிலவேயாம். இப்பழைய மொழிகளுள் தமிழ் மொழியை ஒழிந்து ஒழிந்தவற்றிற் பெரும்பாலானவை உலக வழக்கின்றி இறந்தொழிந்தன. தீஞ்சுவை விளைக்கும் முப் பழத்தினும் இனிய மெல்லிய ஓசை இன்பம் வாய்ந்த செந்தமிழ் மொழியோ எத்தனையோ ஆயிரம் ஆண்டுகள் கழிந்தும் தன்னிளமை கெடாதாய்க் கழிபெரு மகிழ்ச்சியோடு உலவி வருதலை உற்று நோக்குங்கால் அதனை வழங்கி வந்த நன்மக்கள் எவ்வளவு நாகரிகம் உடையவர்களாய் இருந்திருக்க வேண்டுமென்பதை அறிகின்றோம்" (கந்தையா பிள்ளை, 1934:61).*

*உலகின் பண்பட்ட மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ்மொழியினை அதன் பண்பு அடிப்படையில் பகுத்துப் பெயரிட்டு அழைக்கும் மரபு காணப்படுகிறது. அது இயல் இசை நாடகம் என மூன்றாக வகுக்கப்பட்டு 'முத்தமிழ்' எனப் பண்டைத் தமிழரால் போற்றி வளர்க்கப்பட்டுள்ளது. "திங்களோடும் செழும் பருதி தன்னோடும் விண்ணோடும் உடுக்களோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்" என இயற்கைப் பொருள்கள் தோன்றிய காலமே தமிழ்த் தோற்றத்தின் காலம் என்று குறிப்பிடுகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.*

*அறிவு இல்லாமல் மொய்த்துக் கிடந்த மனிதக் கூட்டம் என்ற வெள்ளத்தின் மேலே செந்தாமரைக் காடு பூத்ததுபோல் மொழி பூத்தது என்கிறார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.*

**முந்திய நாளினில் அறிவும் இலாது**
**மொய்த்தநன் மனிதராம் புதுப்புனல் மீது**
**செந்தாமரைக் காடு பூத்தது போலே**
**செழித்த என் தமிழே ஒளியே வாழி**

*(பாரதிதாசன் இசை அமுது தொகுதி 1, தமிழ் :1)*
*(மொய்த்த = நெருங்கிய , புனல் = நீர்)*

*மொழி மனிதனுக்குக் கிடைத்த ஒப்பற்ற கருத்துப் புலப்பாட்டுக் கருவியாகும். மொழியில் எழுத்து, பேச்சு என்று இரு வழக்குகள் உள்ளன. உலக மொழிகளில் சில மொழிகள் பழமையும் இலக்கிய வளமும் உடையன. அச்சில மொழிகளில் தமிழும் ஒன்று. மனித நாகரிகத்தின் மலர்ச்சி மொழி என்பது உறுதியாகிறது.*

## மொழி வளர்ச்சியின் மலர்ச்சியே இலக்கியம்

*காலமயமாக்கலில் இந்தப் பிரபஞ்சத்தில் மனித ஆன்மாவிற்கு வழங்கப்பட்ட பாத்திரத்தை அழகூட்டுவது இந்த மெய்யியல் கருத்துருக்களே. இந்தச் சமூகத்தின் நன்மை தீமைகளை விளக்க எல்லையற்ற ஒரு வெற்றிடம் தேவைப்படுகிறது. இச் சமூகத்தில் ஒரு கவிஞனின் கற்பனை நம்பிக்கை பயம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை அகலப்படுத்தி அவற்றை வரலாற்றில் வெளிப்படுத்துவதன் மூலம் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதுடன் அதனை ஒளி பெறவும் செய்ய முடியும். மனிதனின் முதலும் இறுதியுமான அறிவே கவிதை. இது மனிதனின் இதயத்தை அழகுறக் காட்டுகிறது. இது வாழ்வின் அமைப்பை மிக எளிய முறையில் விளக்கக்கூடிய ஒன்றாகும். இது மனிதனின் இன்ப துன்பங்களையும், வீரம் போர், நாட்டின் அமைதி, தெருக் கலவரங்கள் மற்றும் போராட்டங்கள் அனுபவங்கள் எழுச்சியான கருத்துருக்கள், உள்ளுணர்வுகள் இவற்றின் மூலமாகவும் கவிஞர்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்* (Hebert J.C. Grierson 1921:14 ).

*“சங்க இலக்கியங்களின் சால்புமிக்க அகப்பாடல்களுக்குப் பின்னர், இனிய எளிய தமிழில், கற்பார் நெஞ்சம் கனியும் வகையிலும், பெண்மையின் மென்மையும் மேன்மையும் மிளிரும் வகையிலும்; தமிழ்க்காதலின் தகைமையை உணரும்வகையிலும் மலரினும் மெல்லிய காதலின் சிறப்பை உணர்வோவியங்களாய்த் தீட்டிய பாவலர் பாரதிதாசன் மட்டுமே. மழலைச் செல்வங்களுக்கும் சிறுவர் சிறுமியர்க்கும் இருபால் இளைஞர்க்கும் முதியோர்க்கும் என அனைத்து அகவையினர்க்கும் கவிதை படைத்த கவிஞர் முதன்முதலாக முதியோர் காதல் ஓவியம் தீட்டிய கவிதைக் கலைஞர் அவர். வாழ்வின் எல்லாப் பருவங்களையும் மனிதரின் அனைத்து நிலைகளையும் வாழ்க்கை வட்டத்தில் கருதிப் பார்க்கக்கூடிய அனைத்துக் கருப்பொருள்களையும் பாடிய பாவலர் அவர் மட்டுமே. தமிழியக்கம், திராவிட இயக்கம், பொதுவுடைமை இயக்கம் எனும் இருபதாம் நூற்றாண்டின் முதன்மை வாய்ந்த மூன்று இயக்கங்களுக்கும் கொள்கை முரசாகத் திகழும் எழுச்சிவாய்ந்த போர்ப் பாடல்களை யாத்தவர் அவர் மட்டுமே. வறுமை, அறியாமை, மூடநம்பிக்கை, சமயக்காழ்ப்புணர்வு, உயர்சாதிச் செருக்கு, சாதிவெறி முதலான சமூகப்பிணிகளை முன்னிறுத்திப் பாரதிதாசன் பாடிய பாடல்கள் இந்தியத் திருநாட்டுக் கவிஞர்களுள் அவர் தலையாய கவிஞர் என்பதற்குச் சான்றுரைக்கும் சமூக ஆவணங்கள் எனல் மிகையன்று” என்று முனைவர் மறைமலை இலக்குவனார் கூறுகின்றார்.* www.akaramuthala.in

## முடிவுரை

*பாரதிதாசன் ஒரு முற்போக்குச் சிந்தனையாளன். பொதுவுடைமைச் சிந்தனையை விரிவாக விளக்கமாகத் தமிழில் தந்த பெருமை இவரையே சாரும். சிக்கலான மனித வாழ்வை, மனித அனுபவத்தை வர்க்க நோக்கில் எளிமைப்படுத்தி அவர்களின் தோற்றம், நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கு, மொழியின் வளர்ச்சி அதனோடு இலக்கியத்தின் வளர்ச்சி என்று நுணுக்கமாக ஆராய்ந்துள்ளார் பாவேந்தர் பாரதிதாசன். இலக்கியத்தை ஓர் அறிதல் முறையாக ஏற்றுக்கொண்டு வாழ்க்கை அனுபவத்தை இலக்கியம் எவ்வாறெல்லாம் வெளிப்படுத்துகின்றது என்பதைப் புரிந்துகொள்ளவும், சமூகத்தின் மீதான தனது உறவைப் புரிந்துகொள்ளவும், இவரது படைப்புகள் நமக்கு உதவுகின்றன. அவரது அனுபவங்கள் தாம் அறிவின் தோற்றுவாய். ஒருவருடைய உணர்வுகள், எண்ணங்கள், காத்திர உணர்வுகள் அனைத்தையும் கருத்து எனும் வகைப்பாட்டிற்குள் அடக்குவார். (ரகுராஜன் ப.கு **2011:71)** ஆனால் பாரதிதாசனின் படைப்புகள் அனைத்தும் பகுத்தறிவுச் சிந்தனையின் வாயிலாகப் பொருள் முதல் வாதத்தினை உணர்ந்து படைத்துள்ளார் என்பதனைப் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளின் மூலம் அறியலாம்.*

## Bibliography


Appathurai,Ka. (2003). *Mo;i va7am*. Chennai: Pumpukar Publications.

Hebert J.C. Grierson ed. (1921). *1886-1960 Metaphysical Lyrics Poems of the 17th century*. Oxford: The Clarendon Press.

Kanthaiya Pillai,Na.Ci. (1934). *Tami;akam*. Madras: Orrumai Office Publications.

Maraimalai Ilakkuvanar. “Pâvçntar pâratitâcaI”, www.akaramuthala.in/modern literature /katturai/ “Pâvçntar pâratitâcaI).

Nadarajan,S. (1947). *Tami;aI mâmci* . Colombo: Ilainyan Publications.

Nasemthin,P. (1991). ‘Pâvçntar pâratitâcaIum iya_kaiyum’, *Journal of Tamil Studies*, IITS, Madras.

Palasubramanian,C. (1983). ‘PâratitâcaIum cu__uc cu;al vi;ippuGarvum’ ,*Journal of Tamil Studies*, IITS, Madras.

Ragurajan,Pa.Ku. (2011). *Mârkciya tattuvamum navîIa a_iviyalum*. Chennai: Parathi Books Publications.

Tharmarajan,Na. (1987). *Varalâ__up poru7 mutalvâtam eI_âl eIIa?*. Chennai: New Century Books House.

Thirunyasambanthan,Ca.š (2007). *TaGmiyalaEkâram te7ivurai*. Thiruvaiyaru: Kathir Publications.

*Tirukku_a7*. (2012). Chennai: Saratha Publications.

# பாரதிதாசனின் பொதுவுடைமைச் சிந்தனைகள்

## Communist ideals of Bharathidasan

**இராஜேந்திரம் பெருமாள்** / Rajendram Perumal[1]

***Abstract***

The Twentieth Century offered two great Tamil Poets, Bharathi and Bharathidasan to the world of literature. Bharathi raised the Tamils from the chains of bondage. Bharathidasan made efforts to liberate the society from Superstitions, the problem of Castes, Feminism, etc., through the philosophy of Periar. He also highlighted the sense of Tamil language, Widow remarriage, child marriage, equality in education and reforms in the Tamil society. This Article probes into such an idea and how Bharathidasan brought out these with both literary and language flavours.

Key Words : Bharathidasan, Socialist Thoughts, Reforms, Tamil Society

*தமிழ் இலக்கிய வரலாற்றில் தோன்றிய ஒப்பற்ற கவிஞர்களுள் ஒருவரென விளங்குபவர் பாவேந்தர் பாரதிதாசன். இவரது படைப்புகள் தமிழின்பத்தை மட்டும் ஊட்டுவனவாக அல்லாமல் தமிழ்ச் சமுதாயத்தின் விழிப்புணர்விற்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டுவதாகவும் அமையப்பெற்றுள்ளன. இச்சிந்தனையின் அடிப்படையில் பாரதிதாசன் கவிதைகளில் பொதுவுடைமைச் சிந்தனைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை ஆய்வு செய்வதாகவே இக்கட்டுரை வரையப்பெற்றுள்ளது.*

Keywords: *பாரதிதாசன், பொதுவுடைமைச் சிந்தனை, சமுதாயம்.*

### முன்னுரை

*இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தோன்றிய தனிப்பெருங்கவிஞர்கள் பாரதியாரும் பாரதிதாசனும் ஆவர். பாரதியாரின் வழியில் தனது கவிதைகளை இயற்றித் தமிழக மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டியவர் பாரதிதாசன் எனலாம். சாதி சமயப் பிணக்குகளாலும், பெண்ணடிமை, மூடநம்பிக்கைகள் போன்றவற்றாலும் அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயத்தைப் பெரியாரின் பகுத்தறிவுக் கருத்துக்களால் திருத்த முயன்று வெற்றியும் பெற்றவர் பாரதிதாசன்.*

*பகுத்தறிவுவாதத்தை முன்வைத்துச் சாதி சமய பேதங்களால் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தன்மானம் கொண்ட சமுதாயமாக மாற்றிட நாட்டின் மூலை முடுக்கெல்லாம் சென்று, கல்லடி பட்டும் செருப்படி பட்டும் தன்னுடைய பாதையிலே தொடர்ந்து சென்று சமுதாயத்தை மாற்றிய பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றித் தன் பாடல்கள் வழியாகச் சமுதாயத்தை மாற்றியமைக்க முனைந்தவர் பாரதிதாசன்.*

---

[1]The author is a Post Graduate Research Student in the Education University of Sultan Idris, Tanjug Malim, Malaysia.rajendramperumal@yahoo.com

*இவரின் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள் முதலிடம் பெறுகின்றன. மொழியுணர்வு, பெண்ணடிமை, கைம்பெண் மறுமணம், குழந்தை மண ஒழிப்பு, சாதி சமய மறுப்பு, பொதுவுடைமை, அனைவருக்கும் கல்வி, தொழிலாளர் நலன் இவற்றுக்குள் பகுத்தறிவையும் புகுத்தித் தமிழ்ச் சமுதாயத்தைச் சீர்திருத்திய பாதையில் அழைத்துச் சென்றுள்ளார் கவிஞர்.*

*இந்தக் கட்டுரை கவிஞரின் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பற்றிப் பேசவிருக்கின்றது. மேற்கூறிய பல காரணங்களால் அடிமைப்பட்டுக் கிடந்த சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளால் முன்னேறும் வாய்ப்பு இழந்து கிடந்தது. சிந்திக்கக் கூடத் திறமையற்றுக் கிடந்த இந்தச் சமுதாயத்தைக் கண்டு கொதித்தெழுந்த சமுதாயப் பற்றாளர்கள் மக்களிடையே உரிமைகள் வழங்குவதில் பாகுபாடு இருக்கலாகாது என்று பேசியும் பாடியும் எழுதியும் வந்துள்ளனர்.*

*1917ஆம் ஆண்டு உருஷ்யாவில் நிகழ்ந்த புரட்சியின் காரணமாகப் பொதுவுடைமைக் கொள்கை உருவானது. இதன் தாக்கம் உலகின் பல பாகங்களில் புரட்சியைத் தோற்றுவித்தது. தமிழகத்தில் பெரியாரின் பொதுவுடைமைக் கொள்கை பரவியது. சமுதாய ஏற்றத்தாழ்வை ஒழிக்கப் பொதுவுடைமைக் கருத்துக்களால் மட்டுமே இயலும் என்பதை உணர்த்தினார் பெரியார்.*

## பொதுவுடைமையின் முக்கியத்துவம்

*பெரியாரின் வழியில் பாரதிதாசனும் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பினார் என்பதனை அவரின் பாடல்களே உணர்த்துகின்றன.*

***பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்***
***புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்.***

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:112)*

*பொதுவுடைமைக் கொள்கையை எல்லா மூலை முடுக்குகளுக்கும் பரப்புவோம் என்றும் அதனை உயிராகக் காப்போம் என்றும் பொதுவுடைமையின் முக்கியத்துவத்தைப் பாரதிதாசன் வலியுறுத்துகின்றார்.*

*சங்க காலம் தொட்டே பொதுவுடைமைக் கருத்துக்கள் தமிழ்ச்சமுதாயத்தில் நிலவி வந்திருப்பதைக் கணியன் பூங்குன்றனாரின், "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடல் காட்டுகிறது. அதன்பின் வந்த பாரதியார் பொதுவுடைமைக் கருத்துக்களைப் பாடியுள்ளமையைத் தன் நாள்மலர்கள் என்ற நூலில் பாரதிதாசன்,*

***பாரதி பாட்டில் பற்றிய பொதுவுடைமைத் தீ***
***என்றன் பாட்டு நெய்யால் வளர்ந்து***
***கொழுந்துவிட்டெரிந்து தொழிலாள ரிடத்தும்***
***உழைப்பாள ரிடத்தும் உணர்வில் உணர்ச்சியில்***
***மலர்ந்து படர்ந்ததை மறுப்பவர் யாரே?***

*(பாரதிதாசன், 'நாள்மலர்கள்' ப:65)*

*என்று கூறியிருப்பதன் வழியும் அறிய முடிகிறது.*

## பொதுவுடைமை நாடு

*பொதுவுடைமைக் கருத்துக்களைப் பாரதிதாசன் தனது தனிப் பாடல்களில் மட்டுமல்லாமல் குறுங்காப்பியங்களின் வழியும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.*

தமிழ்நாட்டினைப் பொதுவுடைமை நாடாக உருவாக்க வேண்டும் என்ற தன் எண்ணத்தினை 'வீரத்தாய்' காவியத்தின் இறுதியில் சுதர்மன் மணிபுரி நாட்டைப் பொதுவுடைமை நாடாகப் பிரகடனப்படுத்துவதைக் காணலாம்.

**எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்**
**எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!**

(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:55)

தனது மற்றொரு காப்பியமான 'புரட்சிக்கவி'யின் முடிவிலும் நாட்டு மக்கள் கிளர்ந்தெழுந்து மன்னர் ஆட்சியை ஒழித்து மக்கள் ஆட்சியை மலரச் செய்யுங்கால்,

**செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டா ருக்கே**
**நவையின்றி யெய்துதற்குச் சட்டம் செய்தார்!**
**நலிவில்லை! நலமெல்லாம் வாய்த்த தங்கே!**

(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:44)

என்று மன்னனே முந்திக்கொண்டு அறிவிப்பதாகக் காட்டுகின்றார்.

கவிஞருடைய பொதுவுடைமை பற்றிக் கூற வந்த டாக்டர் மு.கோவிந்தசாமி தனது 'பாரதிதாசன் கவித்திறன்' என்ற நூலில், "பல குறிக்கோள்கள் இருப்பினும் காவியம் ஒவ்வொன்றுக்கும் ஒப்பற்ற குறிக்கோள் ஒன்றும் இருக்கும். இவர் காவியம் பலவற்றினும் பொதுவுடைமை அவ்வொரு குறிக்கோளாக இருக்கிறது." (கோவிந்தசாமி,1979.142) என்று பொதுவுடைமையைப் பற்றிக் கூறியுள்ளது சிந்திக்கத்தக்கது.

## உலக ஒற்றுமைக்குப் பொதுவுடைமை

பொதுவுடைமைக் கொள்கையை நிலைநாட்ட நினைக்கும் ஒவ்வொருவரும், மக்கள் அனைவரும் சமமானவர்களே என்றும் உடைமைகள், உரிமைகள் அனைத்தும் அனைவருக்கும் பொது என்ற கருத்தையும் முன் வைக்கின்றனர். பாரதிதாசனோ உலக ஒற்றுமையைப் பற்றிக் கூறும்போது,

**தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு**
**சம்பாத்தியம் இவையுண்டு தானுண் டென்போன்**
**சின்னதொரு கடுகுபோல் உள்ளம் கொண்டோன்**
**தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன்!**

என்று கூறி,

**தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்**
**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே**
**சண்டையில்லை தன்னலம் தான் தீர்ந்த தாலே.**

(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:97)

சுயநலமாகத் தன் பெண்டு பிள்ளைகளைக் காப்பது மட்டுமே தன் கடமையாகக் கொண்டவனுடைய உள்ளம் கடுகு போன்றது என்றும் தன் தெருவில் உள்ளவர்க்கும் அவனால் எந்தப் பயனும் இல்லை என்றும் கூறுகின்றார். தூய உள்ளம் கொண்டவனுடைய

*குணம் பற்றிக் கூற வந்த பாரதிதாசன் அவனது உள்ளம் தன் மக்களை வேறுபாடு பார்க்காமல் காக்கும் தாயுள்ளம் போன்றது என்கின்றார். இதனையே வள்ளுவரும்,*

***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா***
***செய்தொழில் வேற்றுமை யான். (குறள் 972)***

*பிறப்பினால் அனைவரும் சமம் என்றும் செய்யும் தொழில் காட்டும் திறமையினால் மட்டுமே வேறுபாடு காண முடியும் என்றும் கூறுகின்றார். இதனால் பிறப்பினால் உயர்வு தாழ்வு பார்ப்பது மூடத்தனம் என்பதை இவண் எடுத்தோதுகின்றார்.*

## சமுதாய மக்களிடையே பொதுவுடைமை

*சமுதாய மக்களிடையே ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்று கூற வரும் கவிஞர், தாமும் தம் சுற்றத்தார் மட்டுமே வாழ்வதற்கு இந்த உலகம் என்று நினைப்பது தீமைக்குத் துணையாக அமையும் என்றும் கூறுகின்றார். பாவேந்தர் பாரதிதாசன் இன்று உலகில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் சமயமே என்பதனை, இக்கவிதை வழி கூறுகின்றார்.*

***கடவுள் கடவுள் என்றெதற்கும்***
***கதறுகின்ற மனிதர்காள்***
***கடவுள் என்ற நாமதேயம்***
***கழறிடாத நாளிலும்***
***உடமையாவும் பொதுமையாக***
***உலகுநன்று வாழ்ந்ததாம்;***
***'கடையர்' 'செல்வர்' என்ற தொல்லை***
***கடவுள்பேர் இழைத்ததே***

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:98)*

*பாண்டியன் பரிசு என்ற குறுங்காப்பியத்தில் வீரப்பன் வாயிலாக,*

***சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்!***
***சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை***
***வெருட்டுவது பகுத்தறிவே! இல்லை யாயின்***
***விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்.***

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு பக்:99)*

*விடுதலை பெற்றும் நலம் பெறாத நிலையைக் கூறி வருந்துகின்றார். ஏழைகளை ஏழைகளாகவே இருக்கச் செய்ய எண்ணும் செல்வர்களை விரட்ட பகுத்தறிவாளர்களே வேண்டும் இல்லையென்றால் விடுதலை பெற்றும் ஏழை எளியோருக்குக் கிடைப்பதொன்றும் இல்லை.*

***எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான***
***இடம்நோக்கி நடக்கின்ற திந்த வையம்***

*(பாரதிதாசன், பாண்டியன் பரிசு பக்:99)*

*ஆகவே, பொதுவுடைமைக் கொள்கையை அமல்படுத்துவதே சாலச் சிறந்தது. செல்வர்கள் வறியோரை வாட்டி வதைத்துச் சம்பாதிக்கும் செல்வம் அனைத்தையும் பகிர்ந்தளிக்கத் தாமே முன்வருவது நல்லது என்று கூறுகிறார்.*

**உலகினில் மக்கள் எலாம்சமம் என்பாய்;**
**துயருறத் தாழ்ந்தார் உள்ளார் என்று**
**சொல்லிடுந் தீயரைத் தூவென் றுமிழ்வாய்!**

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:102)*

*என்று உலகளாவிய சமத்துவத்தைப் பேசுகின்றார். உலக மக்கள் யாவரும் ஒன்றே. ஏழையென்றும் செல்வரென்றும் பிரித்து அடிமைப்படுத்தி, துயரத்தை அனுபவிக்கப் பிறந்தவர்கள் ஏழைகள் என்று கூறி அவர்களின் இரத்தத்தை உறிஞ்சிப் பிழைக்கும் செல்வர்களைக் காரி உமிழும்படிக் கூறுகிறார் கவிஞர். விழிப்புணர்வு பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். 'உலகம் உன்னுடையது!' என்ற தம் கவிதையில்,*

**பிரிவிலை எங்கும் பேதமில்லை**
**உலகம் உண்ணஉண்! உடுத்த உடுப்பாய்!**
**புகல்வேன்; 'உடைமை மக்களுக்குப் பொது'**
**புவியை நடத்துப் பொதுவில் நடத்து!**

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:108109)*

*கவிஞர், உயர்வு தாழ்வு, சாதி மத பேதம், செல்வர் வறியவர் என்ற வேறுபாடு அனைத்தும் இல்லாத சமுதாயம் அரும்ப வேண்டும் என்று விரும்புகிறார். அனைவருக்கும் இந்த உலகம் சொந்தம். இதனைக் குறுகிய மனம் கொண்டவருக்கு உணர்த்த விரும்புகிறார் கவிஞர். அதற்கு,*

**புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்.**
**பொதுஉடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**
**புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்.**

*(பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள் பக்:112)*

*என்று தன்னுடைய உள்ளத்தில் எழும் அவாவினை உலகறியச் செய்ய விழைகிறார்.*

## முடிவுரை

*செல்வர்கள் தனி உடைமை பேசுவதாலும் அதற்கேற்பக் குறுகிய எண்ணத்தோடு செயல்படுவதாலும்தான் ஏழைகள் ஏழைகளாகவே அவதியுறுகின்றனர். உழைக்கும் வர்க்கத்தினர் உழைத்துழைத்து ஓடாய்த் தேய்கின்றனர். ஒரு வேளை உணவுக்கும் அல்லலுறுகின்றனர். இதனை மாற்ற வேண்டுமானால் பொதுவுடைமைக் கொள்கை நிலைநாட்டப்பட வேண்டும், அக்கொள்கை திசையெட்டும் பரவ வேண்டும் அதனை உயிராகக் கருதிப் போற்ற வேண்டும் என்றும் அவர் விழைவதை அவரது கவிதைகளில் காணலாம். தனி மனித ஆட்சி ஒழிந்து மக்களாட்சி மலர்ந்து எல்லார்க்கும் எல்லாம் என்ற பொதுமை உணர்வு தழைத்தோங்க வேண்டும் என்பது அவரின் வேட்கையாகும். எல்லார்க்கும் எல்லாம் என்னும் பொதுவுடைமைக் கொள்கை சமுதாயத்தில் நிலவும் நாளே மனித உரிமை நிலவும் நாளாகும் என்ற கருத்தை முன் வைக்கின்றார் கவிஞர்.*

## Bibliography

Govinthasamy,Mu. (1979). PâratitâcaI kavitti_aI.Chennai: Pari Nilayam Publications.
Gurusamy,Ma.Pa. (2007). Puramcikkavi. Chennai: New Century Books House.
Neduncheliyan,Ira. (1992). Tirukku_a7 te7ivurai. Chennai: Navalar Nedunchelian Education Foundation.
Nilamani,K.P. (2006). Tantai periyâr.Chennai: Leo Publications.
PâratitâcaI. (1978). Nâ7 malarka7. CheIIai: Pûmpukâr Publications.
PâratitâcaI. (1984). PâGmiyaI paricu. CeIIai: Pâri nilaiyam.
PâratitâcaI. (1992). PâratitâcaI kavitaika7. CheIIai: Shri Hindu Publications.
Selvarasan,Ma. (1991). PâratitâcaI oru puramcik kaviñar. Chennai: Pari Nilayam Publications.

# பாரதிதாசனின் பெண்கல்விச் சிந்தனையும் இன்றைய பெண்களின் கல்விச் சிந்தனையும் ஓர் ஆய்வு

## Woman Education Thought of Bharathidasan and Today's Women's Educational Thought: A Study

**பார்வதி வெள்ளைச்சாமி** / Parvati Vellaiccami[1]

***Abstract***

The revolutionary Poet Pavender Bharathidasan excels among the poets of the Twentieth Century. During his time, the male chauvinist society treated women as slaves and deprived them from the basic rights in the society. Bharathidasan's poetry was a reaction to this and paved the way for many reforms in the social upliftment of women in the society. This has become evident in the 21st Century. This Paper researches how Pavender's poetry and ideas brought about progress in the status of women. In particular, women education is a favourite idea of Pavender. It is evident that by comparing the past and present; Pavender's works converted the condition of women to betterment.

Key Words : Bharathidasan, Women Education, Women Thoughts and its importance.

### முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞராக பாரதியாருக்கு அடுத்த நிலயில் பாரதிதாசன் தோன்றினார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பல்வேறு சமுதாயம் சார்ந்த கருத்துகளைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அதில் குறிப்பாகப் பெண்களின் விடுதலையைப் போற்றியும் பல பாடல்களைப் புனைந்துள்ளார். இக்கட்டுரையில் பெண்கல்வியின் அவசியம், இளமைப் பருவத்தில் கல்வி கற்பதன் அவசியம், கல்வியினால் பெண்கள் வாழ்வில் ஏற்படும் முன்னேற்றம், அதன் பயன்கள், கற்ற பெண்களுக்கும் கல்லாத பெண்களுக்கும் இடையே காணும் வேறுபாடுகள், பல்வேறு கல்வித்துறைகளில் பெண்களின் ஈடுபாடு, தொழிற்கல்வி கற்பதன் அவசியம் மற்றும் சமத்துவக் கல்வி போன்ற தகவல்கள் ஆராய்ந்து வழங்கப்படுள்ளன. பாரதிதாசன் காணும் பெண்கல்வியின் சிந்தனையையும் 21ஆம் நூற்றாண்டுப் பெண்களின் கல்விச் சிந்தனையையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பெண்கல்வியின் அவசியம்

இந்நவீன உலகில் கல்வி மனித வாழ்க்கையில் இன்றியமையாததாக விளங்குகிறது. கல்வி தனி மனிதனை மட்டுமின்றி ஒரு சமுதாயத்தையே அறிவார்ந்த சமுதாயமாகவும்

---

[1]The author is a Ph.D candidate in The Department of Indian Studies, University of Malaya, Malaysia.vathi721@gmail.com

*பண்புள்ள சமுதாயமாகவும் மாற்றவல்லது. இம்மாற்றத்திற்கேற்ப ஆண் பெண் இரு பாலரும் கல்வியின் அவசியத்தை உணர வேண்டும். குறிப்பாக, பெண்கள் கல்வி கற்பது மிக அவசியம். ஏனெனில், குடும்பத் தலைவியாக விளங்கும் அவள்தான் தன்னுடைய குழந்தைகளின் அறிவுக்கும், பண்பாட்டிற்கும் அடித்தளம் அளிப்பவள். இந்த உலகின் நன்மையைப் பேணுவதற்கும் எதிர்காலச் சந்ததிகளை உருவாக்கவும் பெண்களுக்குக் கல்வி மிக அவசியமான ஒன்றாகும் (ந. திலகவதி, 1995:71).*

*பாரதிதாசனும் தமது குடும்ப விளக்கு எனும் கவிதையில் குடித்தனம் பேணவும், மக்களைப் பேணவும், உலகினைப் பேணவும் மற்றும் கல்வியைப் பேணவும் பெண்களுக்குக் கல்வி அவசியம் வேண்டும் எனப் பாடுகின்றார் (பாரதிதாசன், 1977: 69). அதே சமயத்தில் ஒரு வீட்டில் உள்ளவர்களிடம் கல்வி அறிவு இல்லை என்றால் அந்த வீடு செல்வத்தையும், புகழையும் இழப்பதுடன் தீராத பழிக்கும் ஆளாகும் என்பதை பாரதிதாசன்*

**"எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்ட வீடென்க"**

*என்று 'இருண்ட வீடு' காவியத்தின்வழி பறைசாற்றுகின்றார் (பாரதிதாசன், 1974: 46).*

**பெண்களுக்குக் கல்வி வேண்டும்
குடித்தனம் பேணுவதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
மக்களைப் பேணுவதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்
உலகினைப் பேணுவதற்கே
பெண்கட்குக் கல்வி வேண்டும்**

*(பாரதிதாசன், குடும்ப விளக்கு 2)*

*நம் அறியாமையை அகற்றக்கூடிய கல்வியைக் கற்றவர்கள் மட்டுமே கல்வியாளர்கள் பட்டியலில் இடம் பெறுகின்றனர். எவ்வாறு கண்களுக்குக் கல்வி முகவரி போன்று அமைந்துள்ளதோ அதுபோன்று பெண்களுக்கும் கல்வி இன்றியமையாததாகும். கல்வியின் அவசியத்தைத் திருவள்ளுவர் தமது குறளில்*


**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.**

*(குறள், 393)*

*எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.*

*பெண்கள் கல்வி கற்பதன் மூலம் பல்வேறு பலன்களை அடைகின்றனர். தற்காலப் பெண்கள் பெரும்பாலோர் கல்வியின் அருமையைப் புரிந்து கொண்டு கல்வி கற்றபிறகே திருமணம் புரிகின்றனர். ஒரு பெண் கல்வி கற்பதன் மூலம் தன்னைத் திருத்திக் கொள்வதுடன் தீய செயல்களில் இருந்தும் பாதுகாத்துக் கொள்கின்றாள். திருமணத்திற்குப் பின் கணவனுடன் புரிந்துணர்வுடன் நடந்து குடும்பத்தை வழிநடத்துகின்றாள். அத்துடன், உறவினர்கள் மத்தியில் ஒருங்கிணைப்பை உருவாக்குகிறாள். கட்டொழுங்கை மட்டும் பிள்ளைகளுக்கு வழங்கிய பெண்களைவிட இக்கால பெண்கள் பிள்ளைகளுக்குச் சற்று சுதந்திரம் வழங்கி நண்பர்களைப்போல் பழகி அவர்களின் அன்றாட பிரச்சனைகளைக் களையும் திறமையைக் கொண்டுள்ளனர். அதுமட்டுமின்றி, கல்வி அறிவினால் தாங்கள்*

*பெற வேண்டிய உரிமைகளையும் திறமையாகப் பெற்றுக் கொள்கின்றனர் (சுமைய்யா* http://www.islamkalvi.com). *கீழ்க்காணும் வரைபடம் பெண்கல்வியினால் ஏற்படும் பயன்களைப் பிரதிபலிக்கிறது.*




## கல்வி முன்னேற்றம் தரும்

*பெண்கள் வேலை செய்து என்ன செய்யப்போகிறார்கள்? அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு? போன்ற பெண்ணடிமைக் கருத்துகள் பலவறாகத் தோன்றின (செல்வி திருச்சந்திரன், 1993:9). அதனை எதிர்த்துப் பெண்களின் கல்விக்கு முட்டுக்கட்டையாக இருந்த காலத்தைப் பழித்தார் பாரதிதாசன். பெண்கள் கல்வி கற்பதால் வீடு, தெரு, ஊர், மாவட்டம் பின் நாடு எனப் படிப்படியாக முன்னேற்றம் காணும் என்பது பாவேந்தரின் எண்ணம். கல்வி கற்காத பெண் வாயிருந்தும் ஊமையானவள் எனக் கொதித்தெழும்புகிறார். நாட்டு முன்னேற்றத்தில் ஈடுபாடு கொண்ட பெண்கள் நிறைந்த நாடு வளர்ச்சி அடையும். அத்தகைய பெண்களை உருவாக்க வேண்டும் என்று பாரதிதாசன் எண்ணினார் (நா. மணிமாறன், 1990: 67-68). செந்தமிழ் நாடு, பெண் கல்வியால் சீரும் சிறப்பும் எய்தும் என்பது பாரதிதாசனின் அசையாத நம்பிக்கை அவருடைய நம்பிக்கையை புரட்சி பாவலர்*

***"படியாத பெண்ணினால் தீமை! என்ன***
***பயன்விளைப் பாள்அந்த ஊமை***
***நெடுந்தமிழ் நாடெனும் செல்வி நல்ல***
***நிலைகாண வைத்திடும், பெண்களின் கல்வி!"***

*(பெண்கல்வி, இசையமுது 1)*

*என்று பாடியுள்ளார்.*

## இளமைப் பருவத்தில் கல்வி கற்க வேண்டும்

*கல்வியைக் கற்கும் சிறந்த பருவம் இளமைப் பருவம். இளமையில் கற்கும் கல்வி பசுமரத்தாணி போல் மனத்தில் நன்கு பதியும். அதனால்தான் ஔவையும் 'இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து எனக் கூறினார். கல்வி கற்பதுதான் முதல் கடமை அதை இளமைப் பருவத்திலே கற்பது அதைவிடச் சிறப்பு என்று ஔவையார் கூறிய 'இளமையில் கல்' எனும் கருத்தைத் தாய் மகளிடம் கூறுவதாகப் பாரதிதாசன் தம் கவிதையில் படைத்துள்ளார். இளமையில் கற்கும் அவசியம் இங்கு நமக்கு நன்கு உணர்த்தப்படுகிறது. இளமை சென்றபின் கற்கும் கல்வி மனத்தில் நிலைத்து நிற்காது. இளமைப் பருவத்தில் மனிதனுக்கு நினைவாற்றல் ஓங்கி நிற்கும் என்பதைப் பெண்கள் உணர வேண்டும் எனப் கவிஞர் கருத்துரைக்கின்றார் (இலமா. தமிழ்நாவன், 1993:81).*

*ஒரு குழந்தை தாயின் கருவில் இருந்து வளரும்போதே அதன் மூளை வளர்ச்சியும் வளர்கின்றது. ஆகையால், அக்குழந்தை அறிவார்ந்த சிந்தனை உடையதாகவும், புத்திக் கூர்மையாகவும் ஞானத்துடனும் திகழ்கிறது* (Siti Khariah Mohd Zubir, 2015:130). *அக்குழந்தையின் அறிவு வளர்ச்சிக்குப் பெற்றோர் உணவு முறை, கல்வி முறை, குடும்ப உறவு மற்றும் குழந்தை வளர்ப்பு போன்ற அம்சங்களில் கவனம் செலுத்த வேண்டும்* (Ani Hj Omar, 2012:79). *அறிவாற்றல் சிந்தனையோடு வளரும் குழந்தைகள் அறிஞராகவும் வல்லுநராகவும் திகழ்வர். அத்துடன், தன்னைச் சார்ந்த நாட்டிற்கும் உலகிற்கும் ஆக்ககரமான செயல்களைப் புரிந்து பெருமை ஈட்டித் தரும் என்பது சிந்தையாளர்களின் கருத்து* (Mohd. Yusof Hasan, 2004:38). *ஆக்ககரமான சிந்தனையை அடைய வேண்டுமாயின் பெண்கள் கல்வி கற்பது மிக அவசியம். பாரதிதாசனின் நம்பிக்கையை இக்காலப் பெண்கள் நடைமுறைப்படுத்தி வருகின்றனர் என்றே கூறலாம்.*

*இளமைப் பருவத்தில் கற்ற கல்வியுடன் நில்லாது பல்கலைக்கழகமும் சென்று பெண்கள் மேற்கல்வியைத் தொடர வேண்டும். 'கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு' என்ற பழமொழியை நினைவில் கொண்ட பெண் தன் பிள்ளையைப் பல்கலைக்கழகம் செல்லும் அளவு கல்வி கற்கத் துணை நிற்பாள். தன் மகள் படித்த பெண்ணாகத் திகழ ஆசைப்படும் தாயைப் பற்றி 'கல்விக் கழகமதை நோக்கி' எனப் பாரதிதாசன் எழிலுறப் பாடியுள்ளார். (அன்னையின் ஆவல், இசையமுது 2). பல்வேறு துறைகள் இருப்பினும் தமக்கு ஏற்ற துறையைத் தேர்ந்தெடுத்து அல்லும் பகலும் கல்வி கற்று உயர் பதவியில் பெண்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நிறையச் சம்பாதித்து ஆணுக்கு நிகர் தலை நிமிர்ந்து கல்வி கற்ற பெண்ணாகத் திகழ வேண்டுமென்பதே புரட்சிப் புலவரின் வற்றாத எண்ணம் (தமிழ் செல்விராசா, 1995:166).*

*இன்றைய பெண்கள் அறிவியல் மற்றும் தொழில்துறையிலும் ஆண்களுக்குச் சமமாக சாதனை புரிந்துள்ளனர். அதுமட்டுமின்றி, பல்வேறு துறைகளில் தங்களை ஈடுபடுத்தி வெற்றியடைந்துள்ளனர். விண்வெளித்துறையில் கல்பனா சாவ்லா, அரசியலில் இந்திரா*

*காந்தி முதல் இன்றைய முதல்வர் வரை. பொதுச்சேவையில் அன்னை தெரசாவில் தொடங்கி இன்றைய மேதா பட்நாகர், அருந்ததிராய் போன்றோர் வரை. சங்க மற்றும் இலக்கியத் துறையில் சாதித்துள்ளார்கள். உலகளாவிய நிலையில் உள்ள அனைத்துப் பெண்களும் உயர்க்கல்வி கற்றுப் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்துள்ளதையும் காணலாம்* (http://www.ssivf.com).

## கல்விக்கு முக்கியத்துவம்

*பெண்களின் கடமை பிள்ளைகளுக்குக் கல்வியின் முக்கியத்துவத்தைப் புரிய வைக்க வேண்டும். அணிகலன்மீது மோகம் கொண்டு அதுதான் நாகரிகம் என எண்ணம் கொண்டு கூறும் பெண்ணிடம் தாய் கல்வி கற்பதன் அவசியத்தை எடுத்துரைக்கிறாள். கல்வி கற்பதுதான் பெண்ணின் அணிகலன் என்று, 'கெம்புக்கல் வைத்த நகை தீராத புண்' என்றும் அறிவுறுத்துகிறாள் (பாரதிதாசன், இசையமுது 2). நன்கு கல்வி கற்ற பெண்களை இந்த நாடு அன்போடு தன் கண்ணில் ஒற்றிக் கொள்ளும் என்றும் கல்விதான் அழகு என்றும் அதுவே அழியாச் செல்வம் என்றும் தெளிவாக விளக்கப்படுத்துகிறாள். கல்வியை விலைபோட்டு வாங்க முடியாதென்பதைப் பெண்பிள்ளைகளுக்கு உணர்த்துதல் அவசியம். தவறாமல் பள்ளிக்கு அனுப்புவது பெற்றோரின் கடமை என்றும் போலி நாகரிகத்தைவிட்டு வெளியே வருமாறு தாய் மொழிவது போன்று புரட்சிப் புலவர் தம் கவிதைவழி கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு உணர்த்துகின்றார் (மணிமாறன்,1996 :81).*

*கல்வி கற்கும் வயதில் ஆண் பெண் இருபாலருக்கும் காதல் உணர்வு ஏற்படுவது உண்டு. இளஞர் பருவத்தில் ஏற்படும் இக்காதல் கல்வி கற்பதற்கு இடையூறாகிவிடும். அதிலிருந்து தப்பிக்கும் பிள்ளைகள் மிகக் குறைவு என்றே கூறலாம். கசடறக் கற்க வேண்டிய கல்வி காதலால் பாழ்பட்டுப் போகும் என்று இவ்வாறு புலவர் பாடுகின்றார்.*

**"பள்ளிக்குச் செல்லுமொரு செந்தமிழ்ப் பாக்கியத்தை**
**அள்ளிப் பெண்முற் போக்கில் ஆறாத கொள்ளி**
**வைக்க எண்ணாதே"**

*(பாரதிதாசன், காதல் பாடல்கள்)*

*கல்வி கற்கையில் எவ்வகை இடையூறுகளையும் பொருட்படுத்தாது தம் இலக்கை அடையப் பெண்கள் முயல வேண்டும். முற்போக்கைத் தரும் பெண் கல்வியைப் பாழ்படுத்தி விடாதீர் என்று கோரிக்கை விடுவதாகத் தமது கவிதையைப் படைத்துள்ளார் பாரதிதாசன். இதன் மூலம் கல்வி கற்ற பெண்களை முற்போக்கு சிந்தனை உடையவர்களாகவும் முடிவெடுக்கும் திறன் கொண்டவர்களாகவும் உருவாக்க முடியும் என்பது திண்ணம் (ப. சசிகலா, 2007:127128).*

*அறிவு தொடர்புடைய மன வளர்ச்சி கொண்டுள்ளவர்களை அறிவாற்றல் கொண்டவர்கள் எனக் கருதுகிறார் சிந்தனையாளர் புளூம். அவரின் கூற்றுபடி அறிவாற்றல் சிந்தனையாளர்கள் புதிய சிந்தனைகளைக் கையாள்பவர்களாகவும் எதிர்நோக்கும் சிக்கல்களுக்கு ஆக்கப்பூர்வமாக முடிவினை எடுப்பதில் தனித்தன்மை வாய்ந்தவர்களாகவும் திகழ்வர்* (Benjamin Bloom, 1956:1-2). *இக்காலப் பெண்கள் கல்வி கற்பதன்வழி இதுபோன்ற முற்போக்குச் சிந்தனையுடன் திகழ்வதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.*

## கற்ற பெண்களும் கல்லாத பெண்களும்

*அறிவுடைய சமுதாயத்தை உருவாக்கப் பெருந்துணை புரியும் சாத்தியம் கல்வி பெற்ற அறிவுடைய பெண்களால்தான் முடியும் என ஆணித்தரமாகக் கூறுகின்றார் பாரதிதாசன்.*

*கல்வி கற்ற பெண்கள் வானில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருப்பதுபோல குடும்பத்திலும் சமுதாயத்திலும் மின்னிக்கொண்டே இருப்பார்கள். ஏனெனில், பெண்களுக்கு ஆண்களைவிடப் பொறுப்பும் நல்லெண்ணமும் அதிகம். படித்த பெண்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியை மட்டுமின்றி அவர்களின் நடவடிக்கைகளிலும் அக்கறை செலுத்துவர் (நா. மணிமாறன், 6970) பிள்ளைகளின் அறிவு வளரத் தூண்டுகோலாக இருப்பார்கள். 'சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்' அல்லவா? தங்கள் குழந்தைகளின் அறிவைப் பெருக்க அனைத்து ஆவணங்களையும் செய்வார்கள். பிள்ளைகளின் கூரிய அறிவும் சீரிய ஒழுக்கமும் கெடாதவாறு படித்த பெண்கள் கண்காணிப்பதால், பாரதிதாசன் கல்வியுடைய பெண்கள் 'திருந்திய கழனி' என்று அழகுறப் பாடியுள்ளார் (இ. தமிழ்நாவன்,1993: 91).*

*பெண்கள் படித்திருந்தால் குடும்ப நிர்வாகம் சீராகவும் செம்மையாகவும் இருப்பதுடன் எதிலும் ஏமாறாத விழிப்புணர்வு ஏற்படும் (மு. அதுல்கறீம், 1980:196). இன்றைக்கு ஏலச்சீட்டு என்று ஒன்றை நடத்தி மோசம் செய்வோரை ஊடகம் பத்திரிகைகள் வழியாக அறிகிறோம். இவ்வாறான விபரீதத்திலிருந்து தப்பிக்கப் பெண் கல்வி மிகமிக அவசியம். குழந்தை வளர்ப்புக்கலைக்கும் பெண் கல்வி அவசியம். குடும்பத்தில் உள்ள வயதானவர்களைப் பராமரிப்பதற்குப் பெண் கல்வி அவசியம். பெண் கல்வி என்பது ஒரு பக்குவமாகும் (மு ஹிதாயத்துல்லாஹ், 2013* http://www.mudukulathur.com).

*புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கல்வி இல்லாத பெண்களால் சமுதாயத்தில் அறியாமைதான் நிறையும் என்ற கருத்தை முன் வைத்துள்ளார். பெண்களுக்கு அவர்களின் நிலையை உணர்த்துகிறார் (தமிழ் செல்விராசா, 1995:165166).*

**'கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் !
அந்நிலத்தில் புல் விளைந்திடலாம் ! நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை !'**

*(குடும்ப விளக்கு, விருந்தோம்பல்)*

*கல்வி அறிவு இல்லாத பெண்களின் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகள் தவறான வழிக்குச் சென்றாலும் வியப்படைவதற்கில்லை. அவர்களைப் பேணிக்காத்துக் கல்வியின் அவசியத்தை உணர்த்தும் அறிவும் கிடையாது; பள்ளிக்குச் செல்லும் தம் பிள்ளைகளுக்குத் துணையாக கல்வி சிந்தனையை ஊட்டும் முயற்சியும் கிடையாது. ஆண் பிள்ளையோ அல்லது பெண் பிள்ளையோ அவர்களை நல்ல ஒழுக்கமுடைய பிள்ளைகளாக வளர்க்கவும் தெரியாது (இ. தமிழ்நாவன்,1993: 8990). கல்வி அறிவற்ற பெண் எந்நேரமும் தன் குடும்பப் பணிகளிலே ஈடுபடும் எண்ணத்தையே கொண்டிருப்பாள். சிலர் சதா தொலைக்காட்சி நாடகத்தில் மூழ்கியிருப்பர். தங்களைச் சுற்றி நடக்கும் சம்பவங்களைப் பற்றி அறிந்து கொள்ளாமல் கிணற்றுத் தவளைபோல் வாழ்க்கை நடத்துகின்றனர். களர் நிலத்தில் புல்தான் முளைக்கும் அதுபோல் கல்லாத பெண்ணின் பிள்ளைகளும் சமுதாயத்திற்கு உதவாத பிள்ளைகளாகத்தான் திகழ்வர். பெரும்பாலும் இத்தகைய பிள்ளகள்தான் இளைஞர் பருவத்தில் போதைப் பித்தர்களாக உருவெடுக்கின்றனர்.*

*கல்வி அறிவற்ற பெண்கள் தினசரி வாழ்க்கையில் பல இன்னல்களையும் ஏமாற்றங்களையும் சந்திக்கின்றனர். அத்துடன், தங்களையும் தீய செயலில் இருந்து தற்காத்துக் கொள்ளத் தெரியாது. கல்லாமையினால் தான் பெற்ற பிள்ளைகள் அனுப்பும் கடிதத்தைக்கூட படித்துப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் சில தாய்மார்கள் உள்ளனர். அதுமட்டுமின்றி, போக்குவரத்து வாகனங்கள் எந்த ஊருக்குச் செல்கிறதென்று படித்துப்*

புரிந்து கொள்ள முடியாத நிலையிலும் உள்ளனர். இந்நிலையை உலகில் வாழும் பெரும்பாலான பெண்களும் எதிர்நோக்குகின்றனர். அதுமட்டுமின்றி, கல்லாமை உலகளாவிய நிலையில் பசி, பஞ்சம், பட்டினி இவற்றோடு சம்பந்தப்பட்டுள்ளது. இதன் காரணமாகச் சாதி, மதம், இனம், மொழி சார்ந்து கலவரங்களும் தோன்றுகின்றன. நாட்டின் ஸ்திரத்தன்மையும் சார்புத் தன்மையும் பாதிக்கப்படுகிறது. இப்பிரச்சனையைக் களைவதற்குக் கல்வி எனும் சக்தி தேவைப்படுகிறது (க. இராமச்சந்திரன், 1994: 86-87).

இதனால் கல்வி கற்காத அனைத்துப் பெண்களும் தங்கள் பிள்ளைகளை நல்வழியில் வளர்க்கவில்லை என்பது கிடையாது. பெரும்பாலான சமுதாயப் பிரச்சனைகள் கல்வி கல்லாத பெற்றோர்களின் குடும்பங்களில் நிகழ்வதைக் கண்கூடாக்கக் காண முடிகிறது. வறுமையின் காரணத்தால் இத்தகைய நிலை ஏற்படுகிறது. இதற்கு அடிப்படைக் காரணம் கல்வி அறிவு இல்லாததே ஆகும். பெண்கள் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் கட்டிக்காப்பவர்கள். எந்த மகன் முதலில் தாயால் கற்பிக்கப்படுகின்றானோ அவன் மட்டுமே கடவுளை அறிவான்" என்று விவேகானந்தர் கூறுகிறார். கல்வி கற்ற பெண்களே சிறந்த அறிஞர்களை உருவாக்க முடியும். அதனால் பெண்கள் தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் அறிவுறுத்துகின்றார் (தெ. வாசுகி, 2015: 67).

கல்வி கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் இடையே காணும் வேறுபாடுகள் கீழ்க்காணும் அட்டவணையில் சுருக்கமாக வழங்கப்பட்டுள்ளன.

| எண் | கற்ற பெண்கள் | கல்லாத பெண்கள் |
|---|---|---|
| 1 | அறிவுடைய சமுதாயத்தை உருவாக்குவர். | அறியாமையுடன் திகழ்வர். |
| 2 | பொறுப்பு, நல்லெண்ணம் அதிகம். | பிள்ளைகளின் கல்வி அவசியத்தை உணர மாட்டார். |
| 3 | தீய செயலில் இருந்து தற்காத்துக் கொள்வர். | தங்களைத் தீய செயலில் இருந்து தற்காத்துக் கொள்ளத் தெரியாது. |
| 4 | பிள்ளைகளின் கல்வி, நடவடிக்கையில் அக்கறை செல்லுத்துவர். | பிள்ளைகள் ஒழுக்கமற்று திரிவர். |
| 5 | பிள்ளைகளின் அறிவை வளர்க்கும் தூண்டுகோளாக விளங்குவர். | குடும்ப பணியில் மட்டும் அக்கறை செலுத்துவர். |
| 6 | அறிவைப் பெருக்க ஆவணங்கள் செய்வர். | பல இன்னல்களை எதிர்நோக்குவர். |
| 7 | சுய ஒழுக்கத்தைப் பேணிக் காப்பர். | சுலபமாக ஏமாற்றக் கூடும். |
| 8 | குடும்ப நிர்வாகம் சீராக அமையும். | குடும்ப நிர்வாகத்தச் சீர்படுத்தத் தெரியாது |
| 9 | கணவன் மனைவி புரிந்துணர்வு இருக்கும். | கணவன் மனைவி புரிந்துணர்வு குறையும். |
| 10 | விழிப்புணர்வுடன் திகழ்வர். | ஏழ்மை நிலையில் வாழ்க்கை நடத்துவர் |

## பல்வேறு கல்வித் துறைகள்

இன்றைய காலக்கட்டத்தில் விஞ்ஞானம் உலகையே தன் வசப்படுத்தி உள்ளது. 21 ஆம் நூற்றாண்டுக் கல்வி என்பது கணினி உலகக் கல்வி என்றே குறிப்பிடத்தக்கதாகும். காலத்திற்கேற்ற இக்கல்வியைப் பயில்வதே அனைவரின் கடமையாகும். மருத்துவம், பொறியியல், கணினி, கணிதம், வணிகம், இலக்கியம், வரலாறு என்று பல துறைகளில் இன்று பெண்கள் தங்கள் மேற்கல்வியைப் பயில்கின்றனர் (மகாலெட்சுமி, 2007:242). அவரவர்களின் நாட்டத்திற்கேற்பப் பெண்கள் துறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் வசதியும் அமைந்துள்ளது. இத்தகைய மாற்றம் பெரும் சிறப்பைத் தருகின்றது. இதன் முக்கியக் காரணம் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் பெண்கல்விக்குச் செய்த புரட்சிகள் என்றே கூறலாம்.

இன்றைய சூழ்நிலையில் அரசாங்கக் கல்விக்கூடங்கள் மட்டுமின்றி தனியார் நிறுவனங்களும் கல்வி மற்றும் கைத்தொழில் பயிற்சிகள் போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தந்துள்ளன. அவர்களின் கல்வி கடன் சுமைகளைப் போக்கும் வண்ணம் பெண்கல்வி ஊக்குவிப்பு சிறப்புத்திட்டத்தின்வழி உயர் கல்வி நிதி வழங்கப்படுகிறது. இதன்வழி பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைச் சுலபமாக மேற்கல்வி பயில வழிவகுக்கின்றனர். கல்வி கற்ற சமுதாயத்தை உருவாக்கும் எண்ணம் கொண்டு அரசாங்கம் மக்களுக்காக இதுபோன்ற வசதிகளை ஏற்பாடு செய்துள்ளது (ஜெய்புனிஷா ஜெகபர், 2013 http://www.mudukulathur.com).

அதே வேளையில் சிறப்புப் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வி பயில கல்வி உதவி தொகையும் வழங்குகிறது. பெண் மாணவிகள் அதிகமானோர் அரசாங்கத் தேர்வுகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுச் சாதித்துள்ளனர். சுதந்திரம் பெற்ற பின்னர் அரசாங்கம் எடுத்துக்கொண்ட பல்வேறு முயற்சிகள் நிமித்தம் பெண் கல்வி உயிர்மீட்சி அடைந்தது (வசந்தா சுத்தானந்தம், 2011, http://www.vallamai.com). அதனால் தமிழகத்தில் ஆண்களின் கல்வி வீதத்தைக் காட்டிலும் பெண்களின் வீதம் அதிகரித்திருப்பதை 2001ம் ஆண்டுகளில் எடுக்கப்பட்ட கணக்கீடுகள் தெரிவிக்கின்றன. 22% விழுக்காடாக இருந்த பெண்களின் கல்வி 2001ஆம் ஆண்டில் 55%ஆக அதிகரித்துள்ளதே இதற்குச் சான்று, அதாவது ஆண்களின் கல்வி வளர்ச்சி 11.72 சதவீதம் என்றும் பெண்களின் கல்வி வளர்ச்சி கிட்டத்தட்ட 15%ஆகவும் அதிகரித்துள்ளதை இக்கணக்கீடு நமக்குத் தெரிவிக்கின்றது Leonsheela, 2012 (http://eluthu.com/kavithai/75319.html).

## தொழிற்கல்வி

பாரதியாரும் பாரதிதாசனும் பெண்கள் தொழிற்கல்வியைக் கண்டிப்பாகக் கற்க வேண்டும் என வலியுறுத்தினர். வாணிகத் தொழிலைச் சார்ந்த அனைத்துத் தொழில்களையும் ஆண்கள்தான் செய்யவேண்டும் பெண்கள் அதில் ஆர்வம் செலுத்தக் கூடாது என்ற எண்ணத்தைப் புரட்சிப் பாவலர் உடைத்தெறிந்தார். பொறியியல் கல்லூரி, செவிலியர் பயிற்சி நிலையம், உடற்பயிற்சி கல்வி நிலையம் என அரசு சார்பிலும் தனியார் சார்பிலும் கல்வி நிறுவனங்கள் இக்காலக்கட்டத்தில் பெருகி உள்ளன. பெண்கள் தங்களுக்கு விருப்பமான தொழிலைத் தேர்ந்தெடுத்து அதன் தொடர்பான கல்வியை மேற்கொள்கின்றனர். தனித்து வாழும் தாய்மாரும் கூட வீட்டிலேயே துணி தைப்பது, கைவினைப் பொருள்கள் தயாரித்தல் சிகை அலங்காரம் போன்ற தொழிலைக் கற்று வருமானம் ஈட்டுகின்றனர். பின்னர், சுயமாக ஒரு கடையைத் திறந்து தொழிலை விரிவாக்கம் செய்கின்றனர். இதற்குக் காரணம் பெற்றோர்கள் அவர்களுக்கு அளித்த அடிப்படைக் கல்வி

அறிவாகும். கல்வி கற்றிருப்பதால் பெண்கள் இதுபோன்ற ஆக்ககரமான முடிவை எடுத்து வாழ்க்கையில் முன்னேறுகின்றனர். வேலை செய்யும் பெண்கள் வீட்டின் இரு கண்கள் போன்றவர்களாவர் எனக் கவிஞரும் பெண்களைப் பாராட்டுகிறார் (த. பெரியாண்டவன், *1995: 182*).

**கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் !**
**கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் !**

என்று நாமக்கல் கவிஞர் தம் கவிதையில் குறிப்பிட்டுள்ளதுபோல ஒவ்வொரு பெண்ணும் தொழிற்கல்வி கற்பது மிக மிக அவசியமாகும்.

## சமத்துவக் கல்வி

ஆண்களுக்கு உரிய எல்லாக் கல்வித்துறைகளும் பெண்களுக்குப் பொருந்துமா என்ற கருத்து வேறுபாடு பல வருடங்களாக இருந்து வந்தது. இதன் காரணமாகப் பெண்கல்விக்கு முட்டுக் கட்டை இடப்பட்டது எனக் கூறலாம். ஆண்கள் கற்கும் எல்லாக் கல்வியும் பெண்களும் கற்க சம உரிமை உண்டு. பெண்களும் அறிவில் சிறந்தவர்கள் எனக் கவிஞர் கூறுகிறார் (பி.எல் முத்தையா, *1991: 99*). பெண்களுக்காக வகுக்கப்படும் குடும்பக்கலையை ஆண்கள் கற்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால், ஆண்களுக்கே உரிய படைக்கல்வியைப் பெண்களும் பயில்கின்றனர். இக்காலத்துப் பெண்கள் பலர் கல்லூரிகளில் படைப் பயிற்சியை மேற்கொள்கின்றனர். அத்துடன், காவல் அதிகாரி போன்ற பல்வேறு துறைகளில் கொடி கட்டிப் பறக்கின்றனர் (மு.வரதராசன், *1998: 162-163*). குடும்பத்திற்கு மட்டும் பணிபுரிந்த பெண்கள் இன்று நாட்டின் அமைதி காக்கவும் சுபிட்சத்திற்கும் தங்களை அர்ப்பணிக்கின்றனர்.

தமிழ் நாட்டில் ஒரு காலத்தில் அம்மையராகப் போற்றப்பட்ட பெண்கள் பின் பெண்ணடிமைக்கு ஆளாயினர். வேத காலத்தில் பெண்கள் உரிமை பெற்றிருந்தார்கள். சங்க காலத்திலோ அப்பெண்கள் உரிமையின்பம் நுகர்ந்தார்கள். கம்பர் காலம் வரைகூட பெண்ணுரிமைக்குப் பெருங்கேடு நிகழவில்லை. பெண்கல்வி மறுப்பு அல்லது பெண்கள் கல்வி கற்பதற்குத் ஊறு விழைந்தது பின்னைய காலம்தான் எனக் கூறுகிறார் திரு. வி. கலியாணசுந்தரனார் (*1994: 43*). இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய பாரதியார், பாரதிதாசன் போன்ற கவிஞர்களின் புரட்சியால்தான் இருபத்தோராம் நூற்றாண்டுப் பெண்களும் கல்வி பயிலும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை.

## முடிவுரை

பாரதிதாசன் பெண்கல்விபற்றிக் கூறிய அறிவுரைகள் எல்லாக் காலத்திற்கும் பொருந்துவனவாக அமையும். இன்றைய கல்வி முறையில் பெண்களின் ஆதிக்கம் தழைத்தோங்கி நின்றாலும் பல பெண்கள் கல்வி கற்பதைச் சுமையாகவே கருதுகின்றனர். இந்நிலையை மாற்றம் செய்தால்தான் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் காண முடியும். பெண்கள் கல்வி கற்று வீட்டிற்கும், நாட்டிற்கும் மற்றும் சமுதாயத்திற்கும் பெருமை சேர்ப்பதைக் கடமையாகக் கொள்ள வேண்டும்.

## Bibliography

AbdulKarim,Mu. (1980). *Pâratitâcal pâmmut ti_am.* Chennai: Vanathi Publications.

Ani Haji Omar. (2012). 'Teori SPB4L/SPB4K : Pengaplikasiannya dalam Kajian Akademik.' Paper presented at the Seminar Teori dan Kritikan Sastera Malaysia, Kuala Lumpur.

Bharathidasan. (1974). *IruGma vîmu*. CheIIai: Pâri Nilaiyam.

Bharathidasan. (1977). *Kumumpa vi7akku* (Vol.2).Chennai: Pari Nilayam Publications.

Bloom, B. (1956). *Taxonomy of Educational Objectives:The Classification of Educational Goals*. New York: Longmans, Green.

http://eluthu.com/kavithai/75319.html

Hidayathullah,Mu. (2013). PeG kalviyiI avaciyam. doi:http://www.mudukulathur.com

Jaypunishah Jegabar. (2013). PeG kalviyum camutâya muIIç__amum. doi:http:/www.mudukulathur.com

Kaliyanasuntharanar,V. (1994). *Cîrtiruttam allatu i7amai viruntu (2nd. Ed.).* CeIIai: Pûmpukâr Publications.

Leonsheela. (2012). 'PeGkalvi' cutantirattukku muIIum piIIum.'

Mahaletchumi. (2007). *Vâ;viyal kû_uka7-va7arnilai nôkku peGGiyam. Vâ;viyal a_aEka7.* Chennai: Kalainyan Publications.

Manimaran,Na. (1990). *Pâvçntar oru vimive77i*. Chennai: Vetri Publications.

Manimaran. (1996). *Pâratitâcal peruñcittiraIâr pâmalka7-ôr oppâyvu.*Chennai: Vidiyal Publications.

Mohd Yusof Hasan. (2004). *Pembinaan Paradigma Pemikiran Peradaban Melayu*. Universiti Pendidikan Sultan Idris: Tanjong Malim.

Mutthaiya,P.L. (1991). *Pâvçntarukkup puka; añcali.* Chennai: New Century Books House.

Nanjil Nila Mathavan. (2012). *Pâratiyum putumaip peGGum Pârati paImukap pârvai* (Vol,1): CheIIai: Semmuthai Publications.

Nirmala Mogan. (2009). Pâvçntar pâratitâcaIiI peG muIIç__ac cintaIaika7. doi:http://www.tamilauthors.com

Periyandavan,Tha. (1995). 'Puramcik kaviñariI i7aiñar ilakkiyam.' In, Kumari AIantaI (Ed.), *CintaIaip PaGGaiyil Pâratitâcal*. (Vol. 3). Chennai: Vanathi Publications.

Periyar E.V. Ramasamy. (1974). *Periyâr E. Ve. Irâ. CintaIaika7*. Thirucchi: Cinthanaiyalar / Thinker Institute.

Ramacchanthiran,Ka. (1994). *Va_umai oru tamaiyalla.*CheIIai: Narmata Publications.

Sasikala,Pa. (2007). *PeGGiya kammamaippum, kammavi;ppum. Vâ;viyal a_aEka7*. CheIIai: Kalainyan Publications.

Selvi Thirucchanthiran. (1993). *PeGGamimaiyiI parimâGaEka7um peGGurimaiyiIvi7akkamum.* CheIIai: Woman education, research Institution Publication.

Siti Khariah Mohd Zubir. (2015). 'Pembangunan Sahsiah Belia dan Teori SPB4K',*Novel Nisah Haron Jurnal Melayu,* 1(14).

Sumaiya.PeGkalviyil mukkiyattuvam. doi:http://www.islamkalvi.com)

Sutthananantham,Va.Tha. (2011). PeGkalvi. doi:http://www.vallamai.com

Tamil Selvirasa. (1995). 'Tami;aka ma_umalarccikkup pâvçntariI paEka7ippu.' In, Kumari AIantaI (Ed.), *CintaIaip PaGGaiyil Pâratitâcal* (Vol. 3): CheIIai: VâIathi Publications.

Tami;navaI, I. (1993). *Puramci pâvalarum peG vimutalaiyum*. CheIIai: Ambhal Publications.

Tilakavati. (1995). 'PâratitâcaIil maIitam.' In Kumari AIantaI (Ed.), CintaIaip PaGGaiyil Pâratitâcal ( Vol. 3): CheIIai: Vanathi Publications.

Varatharasan,Mu. (1998). *Kalvi* (2nd. Ed.). Chennai: Pari Nilayam Publications.

Vasugi,T. (2015). ‘Cuvâmi VivçkâIantar Makâkavi Pâratiyâr kû_um peGka7ukkâIa a_ivuraika7.’ *Journal of Tamil Peraivu*. (Vol.2,pp.64-70).

*Woman Education Promotion Plan*. doi:http://www.ssivf.

# பாவேந்தர் பாரதிதாசனின் தமிழ்த் தேசியம்

## Tamil Nationalism of Pavendar Bharathidasan

**இணைப் பேராசிரியர் டாக்டர் வே.சபாபதி**
Associate Professor Dr.V.Sababathy[1]

***Abstract***

Bharathidasan and Tamil are inseparable. In fact, Tamil language operated Bharathidasan. He did not consider Tamil as a language; but treated it as his life. He had a strong belief that Tamil language is the life source of the Tamils; without which the Tamil race is dead. It is because of this, he constantly injected into the minds of the Tamil people the sense of the language. This Paper discusses these sentiments as the Tamil Nationalism of Pavender and how he culls out the ideas through language, race and country.

Key Words : Nationalism, Tamil Feeling, Tamil Race, Tamil Nadu, Tamil Music, Unique Tamil

### 1.0 முன்னுரை

தமிழ்க்கவிதை உலகு இருபதாம் நூற்றாண்டில் கவிப்பிரம்மாக்கள் இருவரால் உய்வடைந்தது. அவர்களுள் ஒருவர் அகன்ற பாரதத்தின் விடுதலைக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்துக்கொண்ட தேசியக்கவிஞர் மகாகவி சி.சுப்ரமணிய பாரதியார்; மற்றொருவர் பாரதியாரின் கவிதாமண்டலத்தின் வழிதோன்றிய பாவேந்தர் பாரதிதாசன். முன்னவர் அரசியல் விடுதலைக்கும் பின்னவர் சமுதாய விடுதலைக்கும் பாடுபட்டவர்கள் ஆவர். பாரதியினிடத்தில் மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டவர் பாரதிதாசன். இருவருள் ஒருவர் குரு; மற்றொருவர் சீடர் ஆகிய நிலைகளில் இருந்தவர்கள் ஆவர். பாரதியைக் குருவாகக் கொண்டு கவிதையுலகில் நெடிது வளர்ந்தவர் பாரதிதாசன். பாரதியாரின் தாக்கத்தைப் பெற்றதனால், அவர் பாடல்களுக்குத் தம்மைத் தாசனாக்கி, கனகசுப்புரத்தினம் என்கிற தம் இயற்பெயரைப் பாரதிதாசனாக்கிக் கொண்டவர். கவித்துவத்திலும் கற்பனை வளத்திலும் மகாகவி பாரதியாருக்கு நிகரானவர் பாரதிதாசன் ஒருவரே எனில் மிகையில்லை. தமிழ்க்கவிதை வரலாற்றில் புரட்சிக்கவிஞர் என்றால் அது பாரதிதாசன் ஒருவரையே குறிக்கும்.(பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவிஞர், ப.ப.*1115)* பாரதிக்குப்பின் பாரதிதாசன் ஈடும் எடுப்பும் அற்ற பெரும் புரட்சிக்கவிஞராய்த் திகழ்ந்தார். தமிழர்தம் மொழி, இனம், நாடு ஆகியவற்றின் உயர்வுக்காகத் தமிழ்த்தேசியம் காணப் பாடுபட்டவர் பாரதிதாசன்.

### 2.0 பாரதிதாசனின் தனித்தன்மைகள்

பாரதியாரைக் குருவாகக் கொண்டிருந்தாலும் தமக்கான கொள்கையிலும் சிந்தனைப் போக்கிலும் அவரை முழுமையாகப் பாரதிதாசன் பின்பற்றினாரில்லை. காலப்போக்கில்

---

[1]The author is an Associate Professor in The Department of Indian Studies, University of Malaya, Malaysia. sabavenu@um.edu.my

கவியுலகில் தமக்கெனத் தனிக்கொள்கைகளையும் சிந்தனைகளையும் சுயமாக வகுத்துக்கொண்டு, சுதந்திரமாகப் பாடும் வல்லமை பெற்றுத் தனித்து விளங்கினார். குறைந்த காலங்களே இவ்வுலகில் வாழ்ந்திருந்த தம் ஆசான் மகாகவி பாரதியார் தொட்டுப் பாடியவற்றை எல்லாம், மக்கள் மத்தியில் அவை ஆழமாகச் சென்றடைய வேண்டும் எனும் பெருநோக்கில் பாரதிதாசன் அவற்றை அதிகமாகவும் அழுத்தமாகவும், ஆவேசமாகவும் உணர்ச்சி பொங்கவும், அனல் தெறிக்கவும் ஓங்கிக் குரல் கொடுத்துப் பாடினார். அதனால்தான் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதைகளில் தோற்றம் பெற்ற புதிய செல்நெறிகளை அறிமுகப்படுத்திய பாரதியார் தொடக்கமாகவும் அவற்றைத் தீவிர இயக்கப்போக்கில் பாடிக்குவித்த பாரதிதாசன் இயக்கமாகவும் போற்றப்படுகின்றனர்.

பாரதியின் மறைவுக்குப்பின் பாரதிதாசன் பகுத்தறிவுப் பகலவனாம் தந்தை பெரியாரிடத்தில் மிகுந்த மதிப்பும் ஈடுபாடும் கொண்டு அவருடைய பகுத்தறிவுக் கொள்கைகளிலும் சுயமரியாதைக் கருத்துகளிலும் தோய்ந்து, அவற்றை முழுமையாகப் பின்பற்றினார்.(தமிழ்க்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், ப.ப.62–72) அதன் விளைவாக அவர் ஒரு பகுத்தறிவுக் கவிஞராகவும் தமிழகத்திற்கும் தமிழ் மக்களுக்கும் தேவையானதை மிகுதியாகப் பாடிக்குவித்த கவிஞராகவும் ஆனார். அவ்வகையில் நீண்ட தமிழ்க்கவிதை வரலாற்றில் தமக்கெனத் தனியிடத்தைப் பெற்று உலகத் தமிழர்களின் உள்ளங்களில் பாரதியாருக்குப் பிறகு நீங்கா இடம் பிடித்து ஒப்பற்றக் கவிஞராகப் பாரதிதாசன் திகழ்கின்றார். இன்று தமிழகத்தில் மட்டுமல்லாது அயலக நாடுகளிலும் அவர் பெயரில் பரம்பரைக் கவிஞர்கள் சிறப்பாக இயங்கிக் கொண்டிருப்பதானது உலகத் தமிழர்களின் மத்தியில் அவருடைய தாக்கத்தையும் பெற்றுள்ள செல்வாக்கையும் காட்டுவதாய் உள்ளன.

## 3.0 தமிழ்த் தேசியம் - விளக்கம்

தேசீயம் என்னும் சொல்லை ஆங்கிலத்தில் nationalism, patriotism ஆகிய சொற்களுக்கு இணையாகக் குறிப்பிடப்பிடலாம். தேசீயம் என்ற சொல்லுக்கு நாட்டுப்பற்று, தேசபக்தி, தேசாபிமானம் என்று பொருள் கூறலாம். இது மொழி, இனம், நாடு, பண்பாடு, மக்கள் நலம் ஆகியவற்றின் மொத்த வடிவம் எனலாம். (பாரதிதாசனும் தமிழியமும், பக்.2) இவற்றின் மீது கொண்டுள்ள பற்று, பக்தி, பிடிப்பு, மதிப்பு, மரியாதை, ஈடுபாடு என்று பலவாறாகக் குறிப்பிடலாம். எனவே, ஒரு நாட்டிற்கும் இனத்திற்கும் மொழிக்கும் உரிய தனித்த சிந்தனைகளையும் மரபுகளையும் அவையேற்படுத்துகிற உணர்வு, பெருமிதம் ஆகியவற்றையும் உள்ளடக்கியது தேசீயம். ஒரு மொழி, இனம், நாடு ஆகியவற்றின் தொன்மை, சிறப்பு, தனித்தன்மை ஆகியவற்றை நன்குணர்ந்து, அவற்றை உயர்த்தும் நோக்குடைய ஒருவரைத் தேசீயவாதி எனலாம். இந்தத் தேசியத்தைத் தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்தவர் பாரதியே.(பாரதிதாசன் தனித்தன்மை, பக்.14) அவ்வகையில் தமிழ்த் தேசீயம் எனும் போது தமிழர் இனம், மொழி, நாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய பெருமித உணர்வு என்றும் அவ்வுணர்வால் அவற்றின் எழுச்சிக்கும் உயர்வுக்கும் பாடுபடுதல் அல்லது போராடுதல் என்று மேலும் விளக்கலாம்.

அவ்வகையில் பார்க்கும்போது பாவேந்தர் பாரதிதாசன் ஒரு தமிழ்த் தேசியவாதியாகக் காட்சியளிக்கின்றார்.(பாரதிதாசன் தனித்தன்மை, பக்.11) தமிழ்மொழியைத் தமிழினத்தின் ஒன்றுபடுத்தும் சக்தியாகவும் தமிழினத்தின், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் ஆற்றல்மிக்க கருவியாகவும் அவர் கண்டார். அதனால், அவருடைய பேச்சு, மூச்சு, எண்ணம், செயல், கனவு அத்தனையிலும் தமிழே குடி கொண்டிருந்தது. தம் இறுதி மூச்சு உள்ளவரை தமிழுக்காகவே வாழ்ந்தார். தமிழ் எழுச்சிக்கும் தமிழர்களின் உயர்வுக்கும் மாபெரும் தூண்டுகோலாகவும் உந்துசக்தியாகவும் ஆக்கசக்தியாகவும்

விளங்கினார். இதனை அவருடைய பெருவாழ்வும் அவருடைய கவிதைப் படைப்புகளும் சான்று பகர்கின்றன. எனவே, அவற்றை நினைவுகூரும் வகையில் பாரதிதாசனின் தமிழ்த்தேசீயம் எனும் தலைப்பிலான இக்கட்டுரை அமைகின்றது.

## 3.1 தமிழ்த் தேசீயத்திற்கான காரணங்கள்

### 3.1.1 பாரதியிடமிருந்து பெற்ற தமிழுணர்வு

பழந்தமிழ் இலக்கியங்களை முறையாகக் கற்றிருந்த பாரதிதாசனிடம் தமிழுணர்வு இயல்பாகக் காணப்பட்டது. எனினும், பாரதியின் தொடர்பு அந்தத் தமிழுணர்வு அவர் உள்ளத்தில் மேலும் ஆழமாக வலுபெறுவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். பாரதத்தின் விடுதலையைத் தம் வாழ்நாளின் முதன்மை வேட்கையாகக் கொண்டிருந்த பாரதியார், தம் கவிதைகளின் மையப்புள்ளியாக அதனையே கொண்டிருந்தார். காலத்தின் சூழலையும் தேவையையும் கருத்திற்கொண்டு, அதற்கேற்பத் தம் பாடல்களின் பாடுபொருள்களை அவர் வரையறுத்துக் கொண்டார். அதனால், பாரதி மிகுதியும் இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாட்டையும் இந்திய விடுதலையையும் வலியுறுத்திப் பாடினார். எனினும், பாரதி தம் இனத்தையும் தம் மொழியையும் பற்றிச் சிந்திக்கத் தவறவில்லை. பன்மொழி கற்றிருந்த அவர் தமிழின் ஒப்பற்ற தன்மையையும் மேன்மையையும் நன்குணர்ந்த காரணத்தால், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்று பாடி, தமிழர்களைத் தமிழின் வளர்ச்சிக்காகப் பாடுபடத் தூண்டினார். தம் ஆசான் பாரதி தமிழின் சிறப்பைப் பெருமிதம் பொங்கப் பாடியதானது பாரதிதாசனின் உள்ளத்தில் தமிழ்க்கனல் தோன்றிப் பரவுவதற்குத் துணைபுரிந்தது எனலாம்.

பாரதியின் அடிச்சுவட்டில் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாரதிதாசனும் பெருமிதம் பொங்கப் பாடினார் எனலாம். பாரதி, பாரதிதாசன் ஆகியோரைத் தொடர்ந்து கவிஞர்கள் பலரும் தமிழின் சிறப்பைப் பற்றிப் பாடினர். எனினும், கவிதை இலக்கியத்தைப் பொருத்தவரையில் பாரதிதாசன் அளவிற்குத் தமிழின் சிறப்புகளை எடுத்துரைத்த கவிஞர் வேறு யாருமிலர். அவரே மற்றவர்களிலும் அதிகமாகவும் ஆழமாகவும் தமிழின் மாண்பு, தமிழின் சுவை, தமிழின் வீறு எனப் பல கோணங்களில் தமிழைப் பாடிக் குவித்தார். அந்த அளவிற்குத் தமிழுணர்வு அவரை ஆழமாகப் பற்றியிருந்தது. கரைபுரண்டோடிய பாரதிதாசனுடைய தமிழுணர்வை விளக்கத் 'தமிழியக்கம்' எனும் அவருடைய கவிதை நூலொன்றே போதுமானது.

### 3.1.2 இனமானவுணர்வும் சுயமரியாதையும்

பாரதியின் மறைவுக்குப்பின் பாரதிதாசன் தந்தை பெரியாரோடு அதிகம் பழக நேர்ந்தது. குறிப்பாக, **1928** இல் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். அதன் பின்னர், அவரது தீவிர கவனம் முழுக்கத் தமிழின் பாலும் தமிழினத்தின் பாலும் தன்மானத்தின்பாலும் திரும்பி, தீவிரத் தமிழுணர்வாக மாறிற்று. (தமிழ்க்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள், பக்.62) அதன் விளைவு தமிழக விடுதலையைப் பற்றிச் சிந்திக்கும் வரைக்கும் அஃது அவரை இட்டுச் சென்றது. தீவிரத் தமிழுணர்வால் உந்தப்பட்டு இனம், மொழி சார்ந்த பாடல்களை ஆவேசமாகவும் உணர்ச்சி பொங்கவும் பாடினார். தளராத் தமிழுணர்வு இறுதி மூச்சு உள்ளவரை அவரை இயக்கி, மிகச் சிறந்த தமிழ்த்தேசியவாதியாக உலகுக்கு அடையாளங் காட்டியது. தமிழ் சார்ந்த இனம், நாடு, மக்கள், இலக்கியம், வரலாறு, பண்பாடு, நாகரிகம், மரபு, வாழ்வியல்முறை ஆகியவற்றுக்குத் தம் காலத்தில்

ஏற்பட்ட சவால்களையும் சிக்கல்களையும் களையவும் தமிழைத் தழைத்தோங்க வைக்கவும் மீதமுள்ள வாழ்நாள்களில் அவர் தீவிரக்கவனம் செலுத்தினார். எனவே, தமிழுணர்வே பாரதிதாசனைத் தமிழ்த்தேசியவாதியாக்கி இயக்கியது.

### 3.1.3 மொழிப்போர் பெருகவைத்த தமிழுணர்வு

பாரதிதாசனின் தமிழுணர்வு பெருகியதற்கும் தமிழ்த்தேசியம் வலுபெற்றதற்கும் மத்திய அரசால் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்தித் திணிப்பும் அதனால் தமிழகத்தில் வெடித்த மொழிப்போராட்டமும் ஒரு காரணம் ஆகும். இருபதாம் நூற்றாண்டின் முப்பதுகளின் பிற்பகுதியில் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போராட்டம் அறுபதுகளில் குறிப்பாக 1965 இல் உச்சத்தைத் தொட்டது. இந்தியைப் பரப்ப வேண்டி, தமிழை அழிக்கவும் முடக்கவும் எத்தனித்த வேளையில் தமிழை உயிரென நினைத்திருந்த பாரதிதாசனிடம் தமிழுணர்வு பீறிட்டெழுந்தது. தமிழை அழிக்கமுயலும் சிலருடைய போக்கைக்கண்டு மனம் பதைத்தார். அதன் விளைவாக ஆவேசமாகத் தமிழுணர்வுப் பொங்கப் பாடல்களைப் பாடினார். 'திருந்தாத் தமிழருயிர் வாழ்வதினும் இறத்தல் நன்றே" என்றார். (தமிழியக்கம், பக்.8) 1965 இல் மொழிப்போர் அதன் உச்சத்தைத் தொட்டதற்குப் பாரதிதாசனின் பாடல்களும் ஒரு காரணம் எனலாம். "மொழிப்போரே வேண்டுவது, தொடக்கஞ் செய்வீர், வெல்வீர், மொழிப்போர் வெல்க!"(தமிழியக்கம், பக்.52) என்று மொழிப்போருக்குத் தார்மீக ஆதரவு தந்து பாடியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது.

தமிழின் பெருமையைக் குலைக்க தீயசக்திகள் வெளியிலிருந்து வெளிவருவதைப் பாரதிதாசன் உணர்ந்தார். குறிப்பாகத் தமிழின் வளர்ச்சிக்கு மிகப்பெரிய மருட்டலாய் இருப்பது மத்திய அரசின் கட்டாயத் திணிப்பான இந்தியே என்பதை உணர்ந்து, அந்தத் திணிப்பைக் கடுமையாக எதிர்த்துப் பாடினார். (பாரதிதாசன் நூற்றாண்டு நினைவுக் கருத்தரங்க மலர், பக்.39) அரசியல் செல்வாக்கினால் காலடி எடுத்து வைக்கும் எந்தவொரு அயல்மொழியும் சொந்தமொழியை அழித்துவிடும் எனும் காரணத்தால் இந்தியின் மேல் தீராத கோபமும் வெறுப்பும் கொண்டார். இந்தியை எதிர்த்து இவர் எழுதியுள்ள பாடல்கள் அவ்வளவும் உணர்ச்சியைத் தட்டி எழுப்புபவை ஆகும்.

***"தமிழரின் மேன்மையை இகழ்ந்தவ னைஎன்<br>தாய் தடுத் தாலும் விடேன்<br>எமை நத்து வாயென எதிரிகள் கோடி<br>இட்டழைத்தாலும் தொடேன்"(இசையமுது, பக்.41)<br>"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் - நீங்கள்<br>எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!<br>செந்தமிழ்க்குத் தீமை வந்தபின்னும் - இந்தத்<br>தேகமிருந்தொரு லாப முண்டோ?***

........................................................................

***சிங்கமென்றே இளங் காளைகளே - மிகத்<br>தீவிரம் கொள்ளுவீர் நாட்டினிலே!<br>பங்கம் விளைத்திடில் தாய்மொழிக்கே - உடற்<br>பச்சை ரத்தம்பரி மாறிடுவோம்!***

*(பா.பு.பெ.கவிதைகள். பக்.164)*

பாவேந்தரின் தமிழ்த்தேசியத்தை மொழி, இனம், நாடு எனும் மூன்று பெரும் பிரிவுக்குள் அடக்கலாம். அதாவது பாரதிதாசனுக்குத் தமிழ் என்றால் மேற்குறித்த மூன்றும் அவர் சிந்தையில் தோன்றின. அதேபோன்று மேற்குறித்த மூன்றையும் நினைக்கின் தமிழே

அவர் நினைவில் தோன்றியது. அவர் தமிழைக் கருத்துரைக்கப் பயன்படும் வெறும் கருவியாக மட்டும் பார்க்கவில்லை. மாறாக, தமிழைத் தமிழரின் வாழ்வை ஒன்றிணைத்து இயக்கும் உயிர்ப்பொருளாகக் கண்டார். அதனால்தான் பெண்ணிடமிருந்து கிடைக்கின்ற இன்பத்தைவிடத் தமிழ் தரும் இன்பம் மிகப் பெரியது என்று வருணித்துள்ளார்.

**"மங்கை ஒருத்தி தரும் சுகமும் - எங்கள்**
**மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்"**

*(பா.பு.பெ.கவிதைகள். பக்.164)*

கேட்கும் ஒலிகள், பார்க்கும் கலைகள் யாவும் தமிழாக இருக்க வேண்டுமென ஆசைப்படுகின்றார். "ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம்; ஒளி என்பதெல்லாம் தமிழ்க்கலைகளாம்!" என்று பாடுவதிலிருந்து இதனை அறியலாம்.(இசையமுது, பக்.39) சுருங்கக் கூறின் அவருக்குத் தமிழ் எல்லாமாகத் தோன்றியது; எல்லாம் தமிழாகத் தோன்றியது என்பதே பொருத்தமானதாக இருக்கும். இனி, இம்மூன்றும் ஒவ்வொன்றாக விளக்கப்படுகின்றன.

## 4.0 மொழியுணர்வு

பாரதிதாசனின் தமிழத்தேசீயத்தில் தலையாயதாகவும் மேலோங்கியும் காணப்படுவது தமிழ்மீது கொண்ட தளராப்பற்று. ஒரு மொழியின் தன்மை, அதன் தொன்மை, தனித்தன்மைகள், அதன் வளர்ச்சி குறித்த சிந்தனைகளை உள்ளடக்கியதாக இந்த மொழியுணர்வு உள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் மக்கள் மத்தியில் மொழியுணர்வு மிகுந்துள்ளது என்றும் இருபதாம் நூற்றாண்டிற்கு முன்னர் இலக்கியங்களில் குறிப்பாகக் கவிதைகளில் மொழியுணர்வு கையாளப்பட்டதற்கும் இருபதாம் நூற்றாண்டில் கையாளப்பட்டதற்கும் அடிப்படையிலேயே வேறுபாடுகள் காணப்படுகின்றன என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.(1) முன்னால் தமிழைக் கன்னித்தமிழ், செந்தமிழ், நற்றமிழ், பைந்தமிழ், தண்டமிழ், வண்டமிழ், தீந்தமிழ் என்று பலவாறாகப் புகழப்படும் நிலைதான் மிகுதியாகக் காணப்பட்டது. ஆனால் இருபதாம் நூற்றாண்டில் தமிழைத் தமிழரின் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வைத்துப் பார்க்கப்படும் நிலையும் தமிழின் வளர்ச்சியே இனத்தின் வளர்ச்சி எனப் பார்க்கப்படும் நிலையும் காணப்படுகின்றது. மொழியின் மூலமாகவே ஓர் இனத்திற்கு விழிப்புணர்வு, ஒற்றுமையுணர்வு, முன்னேற்றம், வளர்ச்சி, சிறப்பு போன்றவை பார்க்கப்பட்டன. இதற்கு முன்னோடியாக இருந்தவர் பாரதியார். பாரதி தொடங்கியதைப் பாரதிதாசன் மொழியுணர்வுடன் தமிழைத் தமிழர் வாழ்வோடு பின்னிப் பிணைத்துள்ள நிலையில் ஏராளமாகப் பாடி வைத்துள்ளார். தமிழ், தமிழன், தமிழ்நாடு எனும் உணர்வுகளை மிக ஆழமாகத் தம் பாடல்கள்வழி வெளிப்படுத்தினார். "தமிழுயர்ந்தால் தமிழ்நாடு தானுயரும் அறிவுயரும் அறமும் ஓங்கும்"(தமிழியக்கம், பக்.44) என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார் பாரதிதாசன். அதனால், தமிழை வாழும் நெறியாக, அனைத்துமாகக் கருதி தமிழோடு ஒன்றியிருந்தார் பாரதிதாசன்.

## 4.1 மொழியே உயிர்

மொழி ஓர் இனத்துக்கு உயிராக இருக்க வேண்டும் என்கிறார் பாரதிதாசன் உயிரை ஓம்புவதற்கு மனிதர்கள் பலவாறாக முயல்வதுபோல, தமிழைத் தமிழன் உயிராகக் கருதினால்தான் அதன் வளர்ச்சிக்கு அவனால் பாடுபட முடியும் என்று பெரிதும் நம்பினார். எனவே, தமிழர்கள் தங்கள் மொழியினை உயிராகக் கொண்டு வாழவேண்டும் என்றும் தமிழுக்கு எந்த வசையும் வந்து விடக்கூடது என்றும் பல பாடல்களில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

***"........................................................ -தமிழை***
***என்னுயிர் என்பேன் கண்டீர்!(தொகுதி 1, பக்.87)***
***"இன்பத் தமிழ் எங்கள்உயிருக்கு நேர்!" (தொகுதி 1, பக்.88)***
***"தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே - வெல்லுந்***
***தரமுண்டு தமிழருக்கிப்புவி மேலே (தொகுதி 1, பக்.94)***

***"செங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ்***
***எங்கள் மூச்சாம்!'(தொகுதி 1, பக்.100)***
***"செந்தமிழே! உயிரே! நறுந் தேனே***
***செயலினை மூச்சினை உனக்களித் தேனே!"(இசையமுது 1, பக்.34)***
***"உமையொன்று வேண்டுகின்றேன்! மாசில்லாத***
***உயர் தமிழை உயிர்என்று போற்று மின்கள்!***

*(தொகுதி 1, பக்.34)*

## 4.2 தமிழ் இயற்கையின் படைப்பு

*இந்த ஞாலத்தின் இயற்கையை மட்டுமே பாடுவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட தொகுப்பு நூல் அழகின் சிரிப்பு. இத்தொகுப்பில் இயற்கைகளை ஒவ்வொன்றாய்ப் பாடிய கவிஞர் இயற்கையோடு இயற்கையாக ஞாலத்தில் முதலில் தோன்றிய ஓர் அற்புத மொழி தமிழ்தான் என்று பெருமிதம் தோன்றப் பாடுகின்றார். அக்கவிதையில் 'முதலில் உண்டானது தமிழ்' எனும் தலைப்பில்,*

***"புனல்சூழ்ந்து வடிந்து போன***
***நிலத்திலே 'புதிய நாளை'***
***மனிதப்பைங் கூழ்மு ளைத்தே***
***வகுத்தது! மனித வாழ்வை***
***இனியநற் றமிழே நீத்தான்***
***எழுப்பினை!"***

*(அழகின் சிரிப்பு, பக்.61)*

*என்று கூறும்போது தமிழில் காணப்படும் இயற்கைத் தன்மையைக் காட்டுகின்றார்.*

## 4.3 தமிழே தாய்

*தாய்மொழியான தமிழைப் பாரதிதாசன் தாயாக உருவகித்துப் பல பாடல்கள் பாடிப் போற்றியுள்ளார். தாயாக உருவகித்ததோடு அதனை வணங்கவும் உறுதிமொழிகள் எடுத்துக் கொள்ளவும் செய்கின்றார்.*

***"தமிழே உனக்கு வணக்கம்!***
***தாய்உன் புகழ்இந்த உலகில் மணக்கும்"***
***"இமைநேரமும் உனைமறக்க மாட்டோம்***
***எம்கடன் ஆற்றாமல் இறக்க மாட்டோம்***
***அமுதத் தமிழை துறக்க மாட்டோம்***
***அடிமையை ஒப்பினால் சிறக்க மாட்டோம்"(குயில் பாடல்கள், பக்.119)***
***"வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே***
***மாண்புகள் நீயே என் தமிழ்த்தாயே***

***வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே***
***வீரனின் வீரமும், வெற்றியும் நீயே***

*(இசையமுது, பக்.34)*

## 4.4 தனித்தமிழ்

பாரதிதாசனிடம் காணப்பட்ட மிகுந்த தமிழுணர்வானது அவரிடம் தனித்தமிழ் ஆர்வம் தழைப்பதற்கும் காரணமாயிருந்தது. தமிழ்ச்சொற்களை வடமொழி கடன் வாங்கிய உண்மையை ஆராய்ந்து வெளிப்படுத்திய மறைமலை அடிகளாரைப் பாரதிதாசன், "ஆரியச் சொற்கள் இந்நாட்டில் உற்றதும், அத்தமிழ்ச் சொற்களின் உதவி பெற்றதும் வாரியணண் ஆயாய்ந்த உண்மையை வழங்கிய திருக்கை சிவந்த வள்ளல்" என்று போற்றினார்.(தேனருவி, ப.ப.91) அவரின் அடியொற்றி பாரதிதாசன் எழுதிய 'வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?' எனும் கட்டுரைத்தொடர் அவருடைய தனித்தமிழ் ஆர்வத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும். இக்கட்டுரைத்தொடர் 'குயில்' இதழில் 1958 இல் எழுதப்பட்டது. "தனித்தியங் கும்தன்மை தமிழினுக் குண்டு" (இசையமுது 1, பக்.38) என்று தமிழ் பிறமொழிக் கலப்பில்லாமல் இயங்கும் தன்மை கொண்டது என்பதையும் உறுதிப்படுத்தினார்.

## 4.5 தமிழ்க்கல்வி

தமிழ்க்கல்வியை எய்திடச் செய்தலே தமிழ் மக்களின் அனைத்துத் துன்பத்தினைப் போக்கும் சிறந்த வழி என்று பாரதிதாசன் கருதினார். தமிழ்க்கல்வி என்பது தமிழைப்பற்றிய கல்வி என்ற பொருளில் இல்லாமல், தமிழ்வழியான கல்வி என்ற விரிந்த பொருளிலேயே பாரதிதாசன் குறிப்பிடுகிறார். இன்பத்தமிழ் படித்தால் துன்பங்கள் நீங்கும்; நெஞ்சில் சுகம் தோன்றும்; தூய்மையும் வீரமும் வளரும் என்கிறார்.

***"தமிழ்க்கல்வி தமிழ்நாட்டில் கட்டாயம்***
***என்பதொரு சட்டம் செய்ய!"(தமிழியக்கம், பக்.20)***
***"கனிதமிழை எல்லார்க்கும் தமிழகத்தில்***
***கட்டாயம் கற்கஜந் தாண்டின் திட்டம்***
***கடிதினிலே அமைத்திட்டால் தொல்லை யுண்டா?"***

*(நாள்மலர்கள், பக்.57)*

தமிழ் கற்றால் தமிழர்களின் வாழ்வு தழைக்கும் என்று உறுதியுடன் நம்பினார்.

***"இன்பத் தமிழ்க்கல்வி யாவரும், கற்றவர்***
***என்றுரைக்கும் நிலை எய்திவிட்டால்***
***துன்பங்கள் நீங்கும், சுகம்வரும், நெஞ்சினில்***
***தூய்மை யுண்டாகிவிடும் வீரம்வரும்"***

*(தொகுதி 1. பக்.93)*

அரசியல்வாதிகளைப் பார்த்து, "எல்லாரும் தமிழ்கற்க என் செய்தீர்?"(தமிழியக்கம், பக்.20) என்று ஆவேசத்தோடு கேட்கிறார். பிறகு, எல்லா வசதிகள் கிடைத்தும் தமிழ் படிக்காதார்க்குத் தண்டனை அளிக்க வேண்டும் என்கிறார். "கல்வி நல்காக் கசடர்க்குத் தூக்குமரம் உண்டு" என்று கூறுவதிலிருந்து அவர் வலியுறுத்தும் தமிழ்த் தேசியத்தை அறிந்துகொள்ள முடிகின்றது.

## 4.6 தமிழ் வளர்ச்சி

*“இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்” எனும் பாரதியைப் பின்பற்றிப் பாரதிதாசனும் தமிழ் வளர்ச்சி குறித்துச் சிந்தித்துள்ளார். காலத்திற்கேற்ப எத்தகைய வளர்ச்சியைத் தமிழ்மொழி பெற்றிருக்க வேண்டும் என்பதனைப் பல இடங்களில் குறித்துள்ளார் பாரதிதாசன். குறிப்பாக, தமிழ் அறிவியல் வளர்ச்சியைப் பெறவேண்டும் என்று வலியுறுத்தினார். ‘தமிழ் வளர்ச்சி’ எனும் தலைப்பில்*

**“எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்**
**இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்**
**வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக**
**விளைந்துள்ள எவற்றினுக்கும்பெயர்களெல்லாங் கண்டு**
**தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து**
**செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்”**

*(தொகுதி 1, பக்.95)*

*என்று எவ்வாறெல்லாம் தமிழ் வளர்க்கப்பட வேண்டும் என்பதைக் காட்டுகின்றார். மேலும், வளர்ச்சியடைந்த மொழிகளுள் தமிழும் இருக்க வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்.*

*“முன்னேறும் மொழிகளிலே தமிழ்மொழியும்*

*ஒன்றெனவே மொழியே னோநான்!(தமிழியக்கம், பக்.40)*

## 4.7 தமிழிலக்கியக் காதல்

*தமிழின் தொன்மையையும் மாண்பையும் அறிந்துகொள்ளத் தமிழர்கள் பழந்தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து கற்றுணர வேண்டும் என்கிறார் பாரதிதாசன். தமிழறியாத தமிழ் மக்களின் நிலையுணர்ந்து வாடியும் சாடியும் உள்ளார்.*

**“பாட்டின் சுவையறிய மாட்டாரோ நந்தமிழர்**
**பாட்டின் சுவையறியும் பாக்கியந்தான் என்றடைவார்?” *(தொகுதி 2, பக்.78)***
**“தமிழறியான் சுவையே காணான்! *(தமிழியக்கம், பக்.20)***

*பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப்படித்தல் வாழ்வில் மேன்மையைக் கொண்டுவரும் என்கிறார்.*

**“நல்ல கவியினிமை நம்தமிழர் நாடுநாள்**
**வெல்ல வருந் திருநாள்”*(தொகுதி 2, பக்.79)***

*பழந்தமிழ் இலக்கியங்களுள் செவ்வியல் இலக்கியமாம் சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவை அவருடைய உள்ளத்தில் பெரும் தாக்கத்தினை உண்டு பண்ணின எனலாம். சங்க இலக்கியங்களுள் ஒன்றான குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றுக்கு எளிய விளக்கங்கள் தந்திருப்பதனை இசையமுது தொகுதி இரண்டில் காணலாம். அதேபோன்று திருக்குறளைப் பாரதிதாசன் போற்றிய அளவுக்கு வேறு எந்தக் கவிஞரும் போற்றவில்லை. தமிழினத்தின் வழிகாட்டியாகத் திருவள்ளுவரைக் கொண்டார்.*

*செவ்வியல் இலக்கியங்கள் தோன்றிய சங்ககாலமே பாரதிதாசனுக்குத் தமிழர்களின் பொற்காலமாகத் தோன்றுகின்றது.*

***"இந்த மாநிலம் முழுதாண் டிருந்தார்***
***இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர்***
***அந்த வாழ்வுதான் எந்தநாள் வரும்?***

*(இசையமுது 1, பக்.39)*

*என்று சங்ககாலத்தில் தமிழகம் எல்லாவற்றிலும் தழைத்திருந்தது என்றும் மன்னர்கள் மக்கள் மனமறிந்து வாழ்ந்தனர் என்றும் அக்காலம் மீண்டும் திரும்பவர வேண்டும் என்றும் ஏங்கியிருந்தார் பாரதிதாசன். அந்தப் பொற்காலத்தைத் தமிழ்கள் மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றார்.*

## 4.8 தமிழ்க் கொள்கைகள்

*பாரதிதாசனின் தமிழ்த்தேசியத்தின் ஒரு பகுதியாக தமிழ்க்கொள்கைகளை அடையாளங்கண்டு வலியுறுத்தியனையும் குறிப்பிடலாம். உண்மையான தமிழ்க் கொள்கைகள் என்பவை யாவை என்பதனைத் தம் கவிதைகளில் பல இடங்களில் காட்டிச் சென்றுள்ளார். அறத்தை நாடுவதும் அதன் திறத்தைப் பாடுவதும்தான் தமிழ்க்கொள்கைகள் என்கிறார்.(பன்மணித்திரள், பக்.66) சாதிமத நம்பிக்கைகள் தமிழ்க்கொள்கைகள் அல்ல என்கிறார்.*

***"சாதிமதம் தமிழ்இல்லை - அந்தச்***
***சாதிமதத் தைத்தமிழ் கொள்வது மில்லை"(பன்மணித்திரள், பக்.68)***
***"கெஞ்சல் இறைஞ்சல் தமிழ்க்கொள்கை இல்லை"(பன்மணித்திரள், பக்.67)***

*தமிழர்கள் உழைப்பில் நம்பிக்கை கொண்டும் நல்லறிவை வளர்த்தும் புதியநிலை தேடுதலையும் தமிழின் கொள்கைகளாகக் காட்டுவதானது (பன்மணித்திரள், ப.ப.6768) அவருடைய தமிழ்த்தேசியத்தின் பரந்துபட்ட நிலையைக் காட்டுகின்றது.*

## 4.9 தமிழிசை

*பாரதிதாசன் வலியுறுத்திய தமிழ்த்தேசியத்தில் தமிழிசையும் ஒரு கூறு ஆகும். இவர் தமிழிசைப் பற்று நிரம்பியவராக இருந்தார். தமிழ் எல்லாத் துறைகளிலும் பல்கிப்பெருக வேண்டும் என்ற அவாவினால் இவர் தமிழில் இசைப்பாடல்கள் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். தமிழிசை வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட தமிழிசை இயக்கத்தை ஆதரித்து வளர்த்தவர்களுள் பாரதிதாசனும் ஒருவர் ஆவார். அதன் விளைவாக அவர் இசையமுது தொகுதி 1,2, தேனருவி ஆகிய இசைப்பாடல் நூல்களை வெளியிட்டார். இந்நூல்கள் அவரது தமிழிசை மீதுள்ள தளராப் பற்றைக் காட்டுவனவாக உள்ளன. தமிழிசைக்காக அவர் ஆவேசமாகக் குரல்கொடுத்துள்ள பாங்கைப் படித்தால் மெய் சிலிர்க்கும்!*

***"சங்கீத மெலாம் தகத்தகாயத் தமிழ்"(தொகுதி 1, பக்.102)***
***"இலங்குதமிழ் மொழியினிலே பாடல் இல்லை***
***என உரைத்தால் அறையுங்கள்! தமிழமைப்பு***
***நலமுள்ள இசைக் கொவ்வா தென்பார் வாலை***
***நறுக்குங்கள், இசைக்கு மொழி வேண்டாமென்னும்***

***விலங்குகளை வளையுங்கள்"(நாள்மலர்கள், பக்.61)***
***"செந்தமிழில் இசைப்பாடல் இல்லையெனச்***
***செப்புகின்றீர் மான மின்றிப்***
***பைந்தமிழில் இசையின்றேல் பாழுங்கிணற்றில்***
***வீழ்ந்துயிரை மாய்த்த லன்றி***
***எந்தமிழில் இசையில்லை, எந்தாய்க்கே***
***உடையில்லை என்ப துண்டா? (தமிழியக்கம், பக்.37)***

## 4.10 தமிழ்க் காதல்

*காதல் மனிதகுலத்தின் ஆதாரச் சுருதியாகத் திகழ்வது ஆகும். அது இனம், மொழி, சமயம், அந்தஸ்து ஆகியவற்றைக் கடந்தததாகக் கூறுவர். தமிழ்த்தேசியத்தில் ஊறிப்போன பாரதிதாசனுக்குக் காதலும் தமிழாக, தமிழர் காட்டும் நெறியாக, வாழ்வாக இருக்க வேண்டும் எனும் கருத்தினைக் கொண்டிருந்தார். "காதலெலாம் தமிழ் கனிந்த சாறு!"(தொகுதி 1, பக்.102) என்று தமிழர்கள் தமிழுணர்வு கொண்டவர்களையே விரும்பினால்தான் அக்காதலும் மணக்கும், சிறக்கும் என்கிறார். ஆதலால், காதலும் தமிழர்களுக்குள்ளேயே ஏற்படவேண்டும் என்பதே பாரதிதாசனின் பெருவிருப்பமாகும். காதலுக்கு மொழி வேறுபாடானது தடையேற்படுத்துவதை,*

**"காதல் ததும்பும் கண்ணா ளன்றனைக்**
**கோதை ஒருத்தி கொச்சைத் தமிழால்**
**புகழ்ந்தா ளென்று, பொறாமல் சோர்ந்து வீழ்ந்தான்!"**

*(தொகுதி 1, பக்.102)*

*என்று காட்டுகின்றார். அவருடைய காவியங்களிலும் இதனைக் காட்டியுள்ளார். "அழகும் பண்பும் தழையக் கிடப்பினும் பழகுதமிழ் அறியாப் பாவை தமிழருக்கு உயிரில்லாத உடலே அன்றோ!" (தமிழ் வாழ்வு, காதல் நினைவுகள்) என்று கூறுவதானது காதல் செய்வதற்கு மொழி ஒருமைப்பாடு இன்றியமையாதது என்பதை வலியுறுத்துகின்றது.*

## 5.0 இனவுணர்வு

*பாரதிதாசனின் தமிழ்த்தேசியத்தில் தமிழினம் சார்ந்த சிந்தனைகளும் அடங்கியுள்ளன. தமிழ் இனம் என்ன நிலையில் இருக்கின்றது, அது எத்தகைய உன்னத நிலையை அடைய வேண்டும். அதற்காகத் தமிழர்கள் செய்யவேண்டியவை பற்றிய சிந்தனையில் விளைந்தவற்றைப் பல பாடல்களில் காட்டியுள்ளார். இன முன்னேற்றமே முழுக்க முழுக்க அவர் உள்ளத்தில் நிறைந்திருந்தது.*

*தமிழ் இனத்தில் தாம் பிறந்தமைக்கு மிகவும் பெருமைப்படுகின்றார். ஏனெனில்,*

***"ஆதி மனிதன் தமிழன் தான்***
***அவன்மொ ழிந்ததும் செந்தமிழ்த்தேன்!***
***மூதறிஞர் ஒழுக்க நெறிகள்***
***முதலிற் கண்டதும் தமிழகந்தான்!***

*எனும் காரணத்தால் பெருமை கொள்கிறார். ஆனால், அவர் காலத்தில் தமிழ் மக்கள் வாழ்வில் இன்பம் காணாது துன்பத்திலும் இழிநிலையிலும் இருந்ததைக் கண்டு மனம் வேதனைப் ப்பட்டார்.*

***“இன்னலிலே தமிழ் நாட்டினி லேயுள்ள***
***என்தமிழ் மக்கள் துயின்றி ருந்தார்***
***அன்னதோர் காட்சி இரக்கமுன் டாக்கியென்***
***ஆவியில் வந்து கலந்த துவே”(:ஒகுதி 1, பக்.91)***
***“நாயினும் கீழாய்ச் செந்தமிழர் நாட்டார்***
***நலிவதை நான் கண்டும்***
***ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி***
***உழைத்திட நான் தவறேன்”(திராவிட நாடு, 28.06.1942)***
***“தமிழ்நாட்டில் தமிழன்நிலை எத்துறை நோக்கிடினும்***
***தலைகுனியத் தக்கவாம் எவர் அறியார் இதனை!((நாள்மலர்கள், பக்.112)***

## 6.0 நாட்டுணர்வு

*பாரதிதாசனின் தமிழ்த்தேசியத்தில் தமிழ் நாடு சார்ந்த உணர்வும் சிந்தனையும் அடங்கியுள்ளன. தமிழ் என்ற அளவிலே தமிழ் மண்ணின் மீது மிகுந்த பற்று கொண்டிருந்தார். “தமிழ்நாடு தமிழருக்கென்றே இந்தச் சகத்தில் முழக்கிடு முரசே” இசையமுது 1, பக்.37)என்று தமிழ் நாடு தமிழருக்கே என்று முழங்கியவர் பாரதிதாசன். தமிழ் மண்ணில் பிறந்ததற்குப் பெருமைப்படுகிறார். காரணம் தமிழ் நாடு மானம் ஒன்றையே பெரிதென எண்ணி வாழும் நாடு என்று குறிப்பிடுகிறார்.*

***“தமிழ் நாடுதான் மேலான நாடு***
***தமிழர்க் கெல்லாம் மற்றவை காடு”((இசையமுது 2, பக்.38)***
***“முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதின்றி***
***மூச்சுப் பெரிதில் லைகாண்”(தமிழச்சியின் கத்தி, பக்.52)***
***தமிழ் நாட்டின் அதிகாரம் தமிழனிடம் இல்லை என்பதை,***
***“தமிழ்நாட்டின் அதிகாரம் தமிழனிடம் இல்லை”(நாள்மலர்கள், பக். 112)***

*என்று கூறி வேதனைப்படுவதோடு ,*

***“தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில்***
***முதலமைச்சராய் வருதல் வேண்டும்”(தமிழியக்கம், பக்.19)***

*என்று அதற்குப் பரிகாரமும் கூறுகின்றார். தமிழ் ஆட்சியாளரால்தான் தமிழ் மீளும், தமிழன் தலைநிமிர்வான், தமிழ்நாடு முன்னேற்றம் காணும் எனும் நம்பிக்கை கொண்டிருந்தார். வீழ்ச்சியுற்ற தமிழ் நாடு எழுச்சிபெற வேண்டுமாயின் அதற்குரிய ஒப்பற்ற மருந்தாகத் தமிழைக் குறிப்பிடுகின்றார். தமிழ் நாடு எல்லாத் துறைகளிலும் முன்னேற்றங்காண விரும்பியதை அவருடைய பல பாடல்களில் காணலாம்.*

## 7.0 தொகுப்புரை

*ஆக்கமும் ஊக்கமும் குன்றியிருந்த தமிழர்க்குப் புத்துயிர் அளிப்பதற்குப் பாரதிதாசன் தமிழ்த்தேசீயம் கண்டார். அவர் கண்ட தமிழ்த்தேசீயம் மிக விரிந்தது. மிகுந்த தமிழுணர்வால் அனைத்தும் அவர்தம் கண்களுக்குத் தமிழாகவே தெரிந்தது. தமிழ் வழியாகவே அனைத்தையும் பார்த்தார். அவர் தமிழுக்குத் தந்த இடத்தை வேறு எந்தக் கவிஞரும் தரவில்லை; அதை உளங்கொளத் தக்கவாறு வேறு எவரும் பாடவுமில்லை. தமிழை உயர்த்தினால் தமிழர் உயர்வர்; தமிழ் தாழ்ந்தால் தமிழர் வீழுவர் என்பதைத் தாரகமந்திரமாகக் கொண்டு செயற்பட்டார். தமிழருக்குத் தமிழுணர்வு பொங்கியெழச் செய்ய நாளெல்லாம் பாடுபட்டார். அதனால் அவருடைய பாடல்களில் தமிழுணர்வு மேலோங்கிக் காணப்பட்டது. அவை படிப்பாரின் நாடிநரம்புகளில் தமிழுணர்வை ஊடுருவச் செய்யும் எனில் மிகையில்லை.*

## Bibliography

Arivoli,A. (1990) *Pâratitâcal taIittaImai*. Chennai: Manivasagar Publications.

Balasupramanian,C. (1981).*Vâ;aiyami vâ;ai*.Chennai: Pari Nilayam Publications.

*Bharatidasan - Critical Perspectives*.(1991). Madurai: Madurai Kamaraj University.

Govinthasamy,Mu. (1979) PâratitâcaI kavitti_aI. Chennai: Pari Nilayam Publications. (4th Edition)

Ilavarasu,Ira. (2002) *PâvçntariI ulakanôkku*. Thiruchi:Bharathidasan University Publications.

*PâratitâcaI nû__âGmu karuttaraEka niIaivuk karuttaraEka malar*. (1990).Kuala Lumpur: Department of Indian Studies Publication.

Selvarasan,Ma. (1980) *PâratitâcaI kaIalka7*.Chennai: Pari Nilayam Publications.

Subasuchanthirabosu,Pe. (1991). *PâratitâcaIum tami;iyamum.* Thiruchi: Subaliga Publications.

Subbumanian,Sa. (1990) Pâvçntar nôkkil…. Pondichery: Nanmoli Publications.

Vengadasalam,M.S. (2008) PâratitâcaIiI puka;pe__a kavitaika7. Bharathidasan University Publications.(2nd Edition).

Yogesuwaran, P. (1985).*Tami;kkavitaika7il camutâyac cikkalka7*. Chennai: Nila Publications.